சிந்தனையாளர் வரிசை: 6

சிந்தனையாளர்

அரிஸ்டாடில்

எழுதியவர் கிருஷ்ணன்பாலா



பிரேமா

பிரசுரம்

சென்னை-24

விலை ரூ. 1—4—0

271
3362
27.9.82
PRESENTED BY V. PR. PL. M. KASIVISVANATHAN CHETTIAR PAGANERI.
PRESENTED BY V. PR. PL. M. KASIVISVANATHAN CHETTIAR TO THIRUVALLUVAR LIBRARY, PAGANERI.
YOUNG MEN CHETTIARS' TAMIL ASSOCIATION, PAGANERI
ACL-TPD 00130

பிரேமா பிரசுரம்—31

முதற் பதிப்பு : ஜூலை, 1955
சகல உரிமைகளும் பெற்றது

முன் வெளிவந்தவை :

1. சிந்தனையாளர் டார்வின்
   எழுதியவர்: ஜெகசிற்பியன்
2. சிந்தனையாளர் பிளேட்டோ
   எழுதியவர் : அரு. ராமநாதன்
3. சிந்தனையாளர் கார்ல் மார்க்ஸ்
   எழுதியவர் : ரா. தணலன்
4. சிந்தனையாளர் ரூஸோ
   எழுதியவர் : கோமேதகவேலு
5. சிந்தனையாளர் பிராங்ளின்
   எழுதியவர் : அரு. ராமநாதன்-
   மார்கரெட் கஸின்ஸ்

7—12 ——?

அச்சிட்டோர் :
பிரேமா ஆர்ட் பிரிண்டர்ஸ்,
சென்னை—24.

...RRARY AUTHORITY, RAMNAD

சிந்தனையாளர் வரிசை

தயாரிப்பு — அரு. ராமநாதன்

6

சிந்தனை ஏன் எனச்
சிந்தித்தவர்....

சிந்தனையாளர் அரிஸ்டாடில்

எழுதியவர் : கிருஷ்ணன் பாலா   சித்திரங்கள் : ஜு. எம். அலி

பொருளடக்கம்

முதற் பகுதி

சிந்தனை ஏன் ?

பூர்வகதை

வாழ்க்கை வரலாறு

இரண்டாம் பகுதி

[சிந்தனை விளக்கமும் நூற்சுருக்கங்களும்]

பாகம் ஒன்று : அறிவியல்

பாகம் இரண்டு : ஞானஇயல்

பாகம் மூன்று : ஒழுக்கவியல்

பாகம் நான்கு : அரசியல்

பாகம் ஐந்து : தர்க்கவியல்

பாகம் ஆறு : கலை இயல்

அரிஸ்டாடிலின் மணிமொழிகள்

கலைச்சொற்களைப்பற்றி

சிந்தனை ஏன்?

"நான் சிந்திக்கிறேன்; அதுவே என் வாழ்வு"
— டெஸ்கார்டஸ்

மனிதன் தோன்றிப் பத்து லட்சம் வருஷங்கள் ஆகின்றன. எழுதும் கலை தோன்றிச் சுமார் ஆறுயிரம் ஆண்டுகள் இருக்கலாம். எழுதும் கலை தோன்றிச் சுமார் முப்பது நூற்றுண்டுகள் கழிந்த பிறகு, சிந்தனைகள் தோன்றலாயின. தோன்றியவை வளர்ந்து, பெருகிக் கப்பும் கிளையுமாகச் செழித்து அடர்ந்து விசும்பின.

சிந்தனைகள் என்றால், விஞ்ஞானம் சம்பந்தமான பிரச்னைகளை நான் குறிப்பிடவில்லை. மற்றவைகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தால், விஞ்ஞானம் நேற்றுப் பிறந்த குழந்தை. தவிர, "இன்னதுதான் செய்யவேண்டும், மனிதன் உய்ய விரும்பினால்" என்பன போன்ற மதக் கோட்பாடுகளையும், சிந்தனை என்ற சொல்லால் நான் குறிக்கவில்லை. தேர்ந்து தெளிந்து ஐயந்திரிபற நிரூபிக்கப்பட்ட விஷயங்கள் விஞ்ஞானத்தின் சாதனைகள். நிரூபிக்க முடியாத விஷயங்களை அது அப்படித்தான் என்று அடித்துக் கூறுவது மதநூல்களின் பரம்பரைச் சொத்துகள். இவை இரண்டுக்குமிடையில், பல்வேறு பிரச்னைகள் தத்துவ ஞானிகளின்

உள்ளத்தில் தோன்றி வளர்ந்திருக்கின்றன. இன்னும் தோன்றிக் கொண்டுமிருக்கின்றன. இவற்றையே 'தத்துவம் (Philosophy)' என்று அழைக்கிறார்கள்.

மனிதன், சிறியதொரு முக்கியமல்லாத கோளத்தில் வசிக்கும் சக்தியற்ற ஜீவனா? அல்லது மனித வாழ்வின் பயன் அளப்பரியதா? வாழும் வகையில், உயர்வகை, கீழ்வகை என்ற பாகுபாடு உண்டா, அல்லது அவை வெறும் பேச்சுத்தானா? ஞானம் என்று ஒன்று இருக்கிறதா? இவை போன்ற கேள்விகள் தத்துவ ஞானிகளது சிந்தனைக்குட்பட்டிருந்தவை; இருப்பவை. இவற்றிற்குப் பரிசோதனை சாலையில் விடை காண முடியாது. மதக் கோட்பாடுகள் கூறும் விடைகளோ, "நான் சொல்கிறேன்—நீ கேட்டுக்கொள்" என்ற அதிகாரத் தோரணையில் இருக்கின்றனவே யன்றி, தர்க்க ரீதியாக இல்லை. இந்தக் கேள்விகளுக்கு விடை காணுவதே, தமது பிறவிப்பயனென உலகத்துச் சிந்தனையாளர்கள் பலர் கருதினார்கள்; கருதிச் சிந்தித்துக் கொண்டுமிருக்கிறார்கள்.

மனிதன் சிந்திக்கத் தொடங்கியது முதல், மக்களது நடவடிக்கைகள், அறிஞர்களின் சிந்தனைப்போக்கை ஒட்டியே இருந்து வந்திருக்கின்றன. முற்காலத்திலும் சரி; தற்காலத்திலும் சரி; இந்த உண்மை பொருந்தும். ஒரு நாட்டைப்பற்றியோ, அல்லது ஒரு குறிப்பிட்ட சகாப்தத்தைப் பற்றியோ அறிந்துகொள்வதற்கு, அந்த மக்களுடைய தத்துவத்தையும், சிந்தனைகளையும் அறிந்துகொள்ளத்தான் வேண்டும்.

தவிர, உலகின் சிந்தனையாளர்கள் பலரையும் பற்றிப் படித்து அறிந்துகொள்வதால், நாம் நமது கருத்துகளின் மேல் வைத்திருக்கும் பிடிவாதப் பிடிப்பும் தளரும். சில கருத்துக்களை நாமனைவரும் ஒப்புக் கொண்டு, அவைதான் பொது அறிவு என்று கூறுகிறோம். மற்றவர்கள் வேறு கருத்துக்கள் கொண்டிருக்கலாம் என்றும், நமது கருத்துக்களே ஒரு காலத்தில் சிந்தனையாளர்களின் வெறும் ஊகமாகத்தான் இருந்தவை என்றும் நாம் தெரிந்துகொள்ள வேண்டும். சமாதானத்தின் முதல்படியே அதுதான்.

தனி மனிதனும் சரி; ஒரு தேசமும் சரி—வருங்காலத்துக்குத் திட்டம் வகுத்தாக வேண்டும். பகுத்தறிவுடன் இதைச் செய்ய வேண்டுமானால், சிந்தனைகளைப்பற்றிய சரித்திர அறிவு சிறிதேனும் இருக்க வேண்டும். கடந்தகால அனுபவத்தை வைத்துக்கொண்டு, எப்படியோ, ஏதோ செய்துவிட்டால், வருங்காலத்தை 'அவன்' கவனித்துக்கொள்கிறான் என்போர் சிலர். "உலகமே ஒரு இயந்திரமாகிவிட்டது; நாம் இப்போது என்ன செய்தாலும், நடப்பது நடந்தே தீரும்" என்போர் சிலர். ஆனால், 'வருங்காலம் நம்மைப் பொறுத்தே இருக்கிறது. உருவாகும் சரித்திரத்தில் நாமும் ஒரு பிரிவுதான்' என்ற கருத்தே, செய்கைக்குத் தூண்டுகோலாக இருக்கும். சிந்தனைகளைப் பற்றிய அறிவு, இதற்குத் துணை செய்யும்.

விஞ்ஞானம், கைப்பற்றப்பட்ட பிரதேசம்; தத்துவமோ, இன்னும் கண்டறியாத விரிந்துகிடக்கும் வனப் பிராந்தியம். விஞ்ஞானம் அறிவு தரும் பள்ளி. தத்துவம், ஞானம் அளிக்கும் உலகம். முறைகளைக் கண்டறிந்து, செய்முறைகளை நிர்ணயிப்பது விஞ்ஞானம். அவற்றை

விமர்சனம் செய்து, அவற்றின் பலன்களை ஒருமைப்படுத்துவது சிந்தனையாளரின் பணி. ஒவ்வொரு சிந்தனையாளரும், இன்றைக்கும் உலகம் கடைப்பிடித்துப் பயன்பெறக்கூடிய உண்மைகளைக் கூறிச் சென்றிருப்பது, ஊன்றிப் பார்த்தால் தெரியும். ஒரு அரிஸ்டாடிலுக்கோ, எமர்ஸனுக்கோ, மார்க்ஸுக்கோ நேர்ந்த அனுபவங்கள், பல்லாயிரக் கணக்கான மக்களுக்குத் தினமும் நேர்கின்றன. ஆனால், நிதர்சனமான சம்பவங்கள் இசைக்கும் நுண்ணொலி, ஒரு அரிஸ்டாடிலுக்கோ, எமர்ஸனுக்கோ, மார்க்ஸுக்கோ தான் கேட்கும். அவைதான் சிந்தனைகளுக்குத் தூண்டுகோல். அந்தத் தூண்டுகோல் எட்டாத மக்கள், சிந்தனைகளையேனும் உணர்வது அவசியம்.

சுமார் இரண்டாயிரத்து நான்கு நூறு ஆண்டுகளுக்கு முன் தோன்றிய அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கின. நவீனச் சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகிறார். சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்!

உலகங்களின் படைப்பு, இயக்கங்களின் குறிக்கோள், கடவுள், கலை, கவிதை, காதல், ஜனப்பெருக்கம், சமுதாயம், அரசியல், அணு ஆராய்ச்சி, ஆத்மீக ஆராய்ச்சி, பௌதிகம், தாவரம், உயிரின நூல், தர்க்க சாஸ்திரம்...என்று அவர் சிந்தனைக்குட்படும் பொருள்கள் கணக்கிலடங்கா. அவற்றுள் சில, இன்றைய விஞ்ஞான வளர்ச்சியின் முன்னும், நாகரிக முன்னேற்றத்தின் முன்னும் சிலருக்குப் பிடிக்காமலிருக்கலாம். ஆனால் அவருடைய அவசியமோ தரமோ அதனால் குறைந்துவிடாது.

மழை எங்கும்தான் பெய்கிறது. எல்லாவற்றின் மீதும் தான் பெய்கிறது. முத்துச் சிப்பியின் மேல் பட்டால்தான் முத்து. ஆனால், ஒரு வித்தியாசம்—முத்தின் மதிப்பைச் சந்தேகிப்பார் இல்லை!

அரிஸ்டாடில்
[தோற்றம் : சுமார் கி. மு. 384, மறைவு : கி. மு. 322]



பூர்வ கதை

"நாடா கொன்றோ, காடா கொன்றோ,
அவலா கொன்றோ, மிசையா கொன்றோ,
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை, வாழிய நிலனே!"

—புறநானூறு.

உலக சரித்திரம், மனித சமுதாயத்தின் சரித்திரம், கலைகளின் சரித்திரம், நாகரிகத்தின் வளர்ச்சி—இவற்றில் எதை எடுத்துக்கொண்டாலும் கிரேக்க தேசத்தின் பெயர் முன்னிற்கிறது. "தத்துவமே கிரேக்க நாட்டில்தான் பிறந்தது" என்கிறார் தற்காலச் சிந்தனையாளரான பெர்ட்ராண்ட் ரஸ்ஸல். எந்த ஒரு சிந்தனையாளரைப் பற்றித் தெரிந்துகொள்வதற்கு முன்பும், அவர் இருந்த சூழ்நிலை, அவரது நாட்டின் மண் வாசனை ஆகியவைகளை அறிந்துகொள்ளுதல் மிகவும் அவசியம். இல்லாவிட்டால், ஒரு தொடர்கதையை இடையிலிருந்து படிக்க ஆரம்பிப்பது போலத்தான். அதனால்தான், கிரேக்க தத்துவ ஞானி அரிஸ்டாடிலைப் பற்றிச் சொல்வதற்கு முன்பு இந்தப் பூர்வ கதை.

"கிரேக்க தேசம்" என்று இங்கு நான் குறிப்பிடுவது, கிரீஸ் நாட்டைத் தவிர, க்ரிட் (Crete) தீவு, மாஸிடோனியா, ஏபிரஸ், தாஸிலி போன்ற சார்ந்த பிரதேசங்களையும் உள்ளிட்டதாகும். கிரீட் தீவில், கி. மு. 2500 முதல் 1400 வரையில், கலைத்தேர்ச்சி மிகுந்ததோர் நாகரிக சமுதாயம் இருந்தது. வர்த்தகத் துறையிலும் கிரீட் தீவுதான் முன்

ஞேடியாக இருந்ததென்று கூறுகிறார்கள். எழுத்துக்கலையும் கிரீட் வாசிகளுக்குத் தெரிந்தே இருந்தது. அவர்களிடையே சச்சரவேதும் கிடையாது. கடலே அவர்களுக்குப் பாதுகாப்பு. அரணற்ற நகர்களில் நாகரிகம் கொழித்தது. கிரீட்டின் நாகரிகம் கிரீஸிற்குப் பரவி அங்கு நிலைத்தது. பிறந்த இடத்தில் இந்த நாகரிகம் மங்கத் தொடங்கியதும், புகுந்த இடத்தில் புத்தொளி பெற்று ஒளிர்ந்தது. இந்தச் சந்தர்ப்பத்தில் தான் முக்கியமான சில சமுதாய மாறுபாடுகள் ஏற்பட்டன. ஐயோனியர்கள் (Ionians), ஏகியர்கள் (Acheam) டோரியர்கள் (Dorians) என்ற வகுப்பினர் கிரீஸிற்குள் புகுந்து குடியமர்ந்தனர். கிரீஸிலிருந்தவர்கள் சிலர், திரை கடல்கடந்து திரவியம் தேடலாயினர். ஆசியா மைனர், சிஸிலி, போன்ற இடங்களில் புதிய நாகரிகம் பரவலாயிற்று. இதுதான் கிரேக்க நாகரிக வளர்ச்சியின் தொடக்கம். சரித்திரப் பிரசித்தி பெற்ற ஏதென்ஸ் நகரின் எழுச்சி இதன் பிறகு ஏற்பட்டது. நாகரிகத்துடன் போர்வலிமையும் வளரலாயிற்று.

பிரதான கிரீஸ் நாடு, பெரும்பாலும் மலைப்பாங்கானது. ஆயினும், கடலோரமாகச் செழிப்பான சமவெளிப் பகுதிகளும் உண்டு. ஆனால், இவை ஒவ்வொன்றுக்குமிடையே மலைகள் வழி மறைக்கும். எனவே, கடலை அடுத்து, தனித்தனி சிறு நகர்களைச் சுற்றிலும் மக்கட் செறிவு அதிகமாக இருந்தது. ஒரு நகரத்துக்கும் மற்ருெரு நகரத்துக்குமிடையே எளிதான தொடர்பு கிடையாது. மக்கள் கலப்பையையும் கடலையும் நம்பி வாழ்ந்தார்கள். அவர்களது நிலம், நகரம், அண்மையிலுள்ள கடல்—இதுதான் அவர்கள் உலகம். நகரங்களுக்கிடையே தொடர்பு இல்லாமற் போகவே, ஒவ்வொரு நகரமும் ஒரு தனி ராஜ்யமாயிற்று. சின்னஞ்சிறிய நாட்டிற்குள் பல மன்னர்கள் அரசு செலுத்தி வந்தார்கள்.

சமுதாய வாழ்க்கையும், ராஜ்யத்துக்கு ராஜ்யம்—அதாவது நகரத்துக்கு நகரம்—வேறுபடும். பயிர்த்தொழிலையே அதிகம் சார்ந்திருக்கும் நகரங்களில், மக்கள் சாதாரணமாகச் சீமான்களாக இருக்கமாட்டார்கள். குடும்பத்துடன் அனைவரும் உழைத்தாக வேண்டும். ஆனல், வர்த்தகமும், தொழில் முறைகளும் மலிந்த சில நகரங்களில், ஒரு சிலர், பலரை அடிமைகொண்டு வேலை வாங்கிப் பணத்தில் புரண்டனர். "மாரிதான் சிலரை வரைந்து பெய்யுமோ?" என்ற கேள்விக்கு அப்போதே வித்திடப்பட்டு விட்டது.

நகரங்களில் மன்னர் ஆட்சி இருந்தது; இல்லாவிடில் பரிபூரணக் குடியாட்சி இருந்தது. எகிப்து, பாபிலோனியா இவற்றைப்போன்று, வரம்பிலா முடியாட்சி அங்கே இல்லை. மன்னனுக்கு ஆலோசனை கூற 'ஆன்ருேர் சபை' உண்டு. காவலனேயாயினும், வழக்கத்தை மீறி ஒன்றும் செய்ய முடியாது. அதனுல், கொடுங்கோலர் இல்லையென்று கூறிவிட முடியாது. ஒரு சில செல்வந்தர்களைத் தன் சார்பில் வைத்துக் கொண்டு, மன்னவர் தமதிச்சைப்படி ஆண்டனர். தங்க, வெள்ளிச் சுரங்கங்களைச் சொந்தமாக உடைய மன்னவர் பாடு வேட்டைதான்! அதிலும் அப்போதுதான் நாணய முறை கண்டுபிடிக்கப்பட்டிருந்தது. மன்னர் ஆட்சி இப்படி என்ருல், குடியாட்சி என்பது, மக்கள் அனைவரும் ஆட்சி முறையில் பங்குகொள்ளும் முறை! மக்கள் என்ருல், அடிமைகளும் பெண்களும் உள்ளிட்டவர்கள் அல்ல!

இனி, கிரேக்கக் கலையைக் குறித்தும், நாகரிகத்தைப் பற்றியும், ஒரு சிறிது பார்க்கலாம்.

எழுதும் கலை முதன் முதலில் பக்குவமடைந்தது கிரேக்கர்களிடம் தான். எகிப்தியர்கள் முதன் முதலில் படங்களின் மூலம் கருத்துக்களைப் பொறித்து வந்தார்கள். நாட்கள் செல்லச் செல்ல, படங்கள், முழு வார்த்தைகளையன்றி, தாம் குறிப்பிடும் பொருள்களின் முதல் அசையைக் குறிப்பனவாயின. ஃபோனீஷியர்கள், எழுத்துக்களைக் கண்டுபிடித்தார்கள். கிரேக்கர்கள், ஃபோனீஷியர்களிடமிருந்து எழுத்துக்களைக் கற்றுக்கொண்டு, தமது மொழிக்கேற்ப அவற்றை அமைத்துக் கொண்டார்கள். அதற்கு முன்னதாக உயிர் எழுத்துக்களே இல்லையென்றும், கிரேக்கர்கள்தான் முதன்முதலில் உயிரெழுத்துக்களைக் கண்டுபிடித்தவர்களென்றும் சரித்திரம் பகர்கிறது. இத்துடன், எழுதும் கலையே புத்துயிர் பெற்றது. இதையடுத்து, கிரேக்க நாகரிகமே புது வடிவம் கொண்டெழுந்தது.

கிரேக்க நாகரிகம் மெதுவாக ஊர்ந்து, நகரத் தொடங்கியது. சிற்றோடை, பெரிய ஓடையாகிக் காட்டாறு மாகியது. ஓடிய ஆறு நன் முத்துக்களைக் கொண்டு சேர்த்தது. அவற்றில் பெரியதொரு முத்து, மகாகவி ஹோமர் (Homer). ஹோமரது கவிகளில், கிரேக்க நாகரிகத்தையே நாம் உணர்கிறோம். அவரது பாடல்கள், வெறும் சொற்பின்னல் மட்டுமல்ல ; நாட்டின் இதய ஒலி.

ஹோமரின் கவிகள் பல கடவுள்களைக் குறிப்பிடுகின்றன. சமுதாயத்தின் முன்னேற்றத்துக்கென பல மதச் சடங்குகள் நடைபெறுவது வழக்கமாக இருந்தது. பனிக்காலம் தொடங்கிவிட்டால், மக்கள் ஞாயிறைத் துதிக்கத் தொடங்குவார்களாம். சூரியன் மேலும் "தொலைவில் சென்று, திரும்பியே வராவிட்டால்? ( ) வசந்த காலத்துக்கு வேறு பண்டிகை; வேனிற்காலத்துக்கு மற்றொரு கொண்டாட்டம். கடவுளர் சிலசமயம் நரபலி கேட்பதும் உண்டு. ஆனால் ஒன்று. எந்தப் பண்டிகையாயினும், சமுதாயம் முழுவதும் சேர்ந்தே அதைக் கொண்டாடுவது வழக்கம். 'நான்', 'எனது' என்பதெல்லாம் 'அவன்' முன் இல்லை……

கிரேக்க தேசம் முழுவதிலும் பல நகர-ராஜ்யங்கள் வியாபித்திருந்தன என்று கண்டோம். செல்வத்திலும், ஆட்சிமுறையிலும் இவை ஒன்றுடனொன்று வேறுபட்டிருந்தது போலவே நாகரிகத்திலும் கலைத் தேர்ச்சியிலும் பலதரத்தவையாக இருந்தன. ஒவ்வொன்றுக்கும் ஒரு தனிச் சிறப்பு உண்டு. இந்தத் தனிச் சிறப்புக்களின் சத்தெல்லாம் திரண்டது கிரீஸின் மாண்பு. "கண்டு, கேட்டு, உண்டு, உயிர்த்து, உற்று அறியும் ஒண்டொடியாக" இருந்தாள் கிரீஸ் எனும் நாகரிக மங்கை.

ஆனால், வனப்பும் செழிப்பும் இருந்தென்ன? கலையும் களிப்பும் இருந்தென்ன? நகரங்களுக்குள் அமைதியில் நம்பிக்கையில்லை. தங்களுக்குள் பூசலிட்டுக்கொண்டே இருந்தார்கள். இன்று ஏறிய கை நாளை தாழ்வதும், தாழ்ந்த கை உயர்வதும் சாதாரணம். பெர்ஸியர்கள், கார்த்தஜியர்கள் போன்ற அன்னியர் ஆபத்தைத் தவிர இந்தக் கோலம். ஓரே நாட்டைச் சேர்ந்தவர்கள் என்ற எண்ணமே இல்லாமல் நகரங்கள்

பூசலிட்டுக் கொண்டன. ஆனால், இந்தப் பூசல்களால் கலை வளர்ச்சியோ, சிந்தனைப் போக்கோ தடைப்படவில்லை. சமரின் வெறியிடையேயே சிந்தனை மலர்கள் பூத்துப் பொலிந்தன. அவற்றின் தரத்தை ஒரு சிறிது பார்க்கலாம்.

தத்துவ சிந்தனைகளின் பிறப்பிடம் மிலிடஸ் (Miletus) என்ற நகரத்தில்தான் என்று கூறுகிறார்கள். அந்த ராஜ்யத்துச் சிந்தனையாளரில் முதல்வர் தேல்ஸ் (Thales) என்பவர். (சுமார் கி. மு. 600). தேல்ஸ், எகிப்தில் ஆராய்ச்சிச் சுற்றுப்பிரயாணம் மேற்கொண்டு க்ஷேத்திர கணித சாஸ்திரத்தைக் கற்றுக்கொண்டு வந்து தாய்நாட்டில் பரப்பினாராம். தொலைவில் வரும் கப்பல் எவ்வளவு தூரத்தில் இருக்கிறது என்பதைக் கரையோரத்தில் இரண்டு இடங்களிலிருந்து எப்படிக் கணக்கிட்டுக் கண்டுபிடிப்பதென்றும், ஒரு கட்டிடத்தின் உயரத்தை அதன் நிழலின் நீளத்தைக்கொண்டு கண்டுபிடிக்கும் விதமும் அவருக்குத் தெரியுமாம்.* தத்துவார்த்தமாக அவருடைய முடிவு "எல்லாப் பொருள்களுக்கும் தண்ணீர்தான் ஆதி காரணம்-எழுத்திற்கு அகரம் போலே" என்பதுதான். காணும் பொருள் ஒவ்வொன்றிலும் இறைவன் உள்ளான் என்பதும் அவரது சித்தாந்தம். தேல்ஸ் விட்டுச் சென்ற நூலின் இழையை அனக்ஸமாண்டர் (Anaxemander) எடுத்துக்கொண்டார். இவரது சிந்தனைகள், முன்னவரதை விட அதிக் சுவாரஸ்யமானவை. அவர் கூறுவது இதுதான் :— "உலகம், தண்ணீர், நெருப்பு, மண் போன்று பல பொருள்களால் ஆனது. ஒவ்வொன்றும் ஒவ்வொரு கடவுள். ஒவ்வொன்றும், தனது பகுதியை விஸ்தரிக்க இடைவிடாது முயலுகிறது. ஆனால், ஏதோ ஒரு சக்தி, ஒவ்வொன்றையும் அந்தந்த விகிதத்திலேயே வைத்திருக்கிறது." இவற்றில் எந்த ஒரு பொருளிலிருந்தாவது பிற பொருள்கள் உண்டாகியிருந்தால், மூலப்பொருள், பிறவற்றை வெற்றிகாண முடிந்திருக்கும். அப்படியில்லாமலிருப்பதால், தேல்ஸ் கூறியபடி, "எல்லாம் தண்ணீரிலிருந்து வந்தது" என்று கொள்ளமுடியாதென்பது அனக்ஸிமாண்டரின் கூற்று. இந்த சிந்தனைகளைத் தவிர, அவருக்கு விஞ்ஞானத்திலும் பற்று உண்டு. முதன்முதலில் தேசப்படம் போடும் முறையைக் கண்டவர் அவரே. பூமி உருளை வடிவம் என்று அவர் கூறினார். மிலிடஸில் இவருக்கு அடுத்தபடி தோன்றிய அனக்ஸிமீனஸ் (Anaxemenes), உலகத்தின் வடிவம் குறித்தும், எல்லாப் பொருள்களின் மூலப்பொருள் என்ன என்பது பற்றியும் சிந்தித்தார்.

மிலிடஸ் சிந்தனையாளர்களான இம் மூவரும், கிரேக்க தத்துவத்தின் முதல் படியாவார்கள். "இவர்கள் செய்தது-சாதித்தது, முக்கியமல்ல ; செய்ய யத்தனித்ததுதான் முக்கியம்" என்கிறார் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல். இதற்கு அடுத்தபடியைக் காண நாம், இத்தாலியின் தென் பகுதியிலிருந்த நகர ராஜ்யங்களுக்குச் செல்ல வேண்டும். இந்த நகரங்களின் சிந்தனைகளில் விஞ்ஞானமும், தர்க்கரீதியும் குறைவு. மத சர்ச்சைகள் அதிகம்.

தெற்கு இத்தாலியிலிருந்த கிரேக்க நகரங்கள், ஸைபேரிஸ், க்ரோடன் என்பன. இவற்றிலும் வர்த்தகம் கொழித்துச் செல்வம்

---

* பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் : மேற்கத்திய சிந்தனைகளின் வளர்ச்சி."

செழித்திருந்தது. இவற்றில்தான் கிரேக்க சிந்தனைகளின் 'இரண்டாம் படி' ஏற்பட்டது. அதை ஏற்படுத்திய அறிஞரின் பெயர், பிதாகரஸ் (பத்தாம் வகுப்பில் கணக்குப்பாடம் படித்தவர்களுக்கு இந்தப் பெயர் ஒரு சிம்ம சொப்பனம்!) கணித சாஸ்திரக் கலைக் கழகம் ஒன்றைத் தொடங்கிய இவர், மிகக் கூர்ந்த அறிவாளி என்று சரித்திரம் பகர்கிறது.

"எல்லாப் பொருள்களும் எண்களே" என்றவர் பிதாகரஸ். எண்களின் வர்க்கம் (Square), கனம் (Cube) என்றெல்லாம் நாம் பேசுகிறோம். அவற்றை முதலில் கண்டவர் பிதாகரஸே. பிதாகரஸ் கணித சாஸ்திரி மட்டுமன்று; தத்துவஞானியும் கூட. அவர் பெயரால் நிறுவப்பட்ட மதம் நெடுநாட்கள் நிலைத்திருந்தது. அவரது மதக் கோட்பாடுகளில் முக்கியமானவை என்ன தெரியுமா? அவரைக்காய் (Beans) தின்னக் கூடாது; இரவு வேளையில் (விளக்கு வெளிச்சத்தில்) கண்ணாடி பார்க்கக் கூடாது!

கிரேக்க சிந்தனைகளில் மூன்றாவது படி, ஹெராக்ளிடஸ் (Heraclitus) என்பவரால் கட்டப்பட்டது. ஹெராக்ளிடஸுக்கு மனித குலத்தின் மீதே நம்பிக்கை கிடையாது. மக்கள், தமது நன்மைக்கான செயல் புரியுமாறு தூண்டுவதற்குக் கண்டிப்பும், அதிகாரமும்தான் தேவை என்பது அவரது சித்தாந்தம். "மாட்டைத் தடிகொண்டுதானே மேயுமிடத்திற்கு ஓட்டவேண்டியிருக்கிறது?" என்பது அவர் கேள்வி. போர் வேண்டும் என்று நம்பினார். எதிர்பார்க்கக் கூடியதுதான். "போர்தான் மக்களின் தந்தை; மனித குலத்தின் அரசன். அந்த அரசன்தான் சிலரை தேவ இனமாகவும், சிலரை வெறும் மனிதர்களாகவும், சிலரைச் சுதந்திர மக்களாகவும், வேறு சிலரை அடிமைகளாகவும் ஏற்படுத்தியவர்" உலகத்தின் மூலப்பொருள் 'அக்கினி' என்றார் அவர். நீரும், நிலமும், காற்றும் அதிலிருந்து தோன்றியவையே. "இப்படிப்பட்ட உலகின் ஓயா மாறுதல்கள் சகஜம்; அவற்றை நான் நம்புகிறேன்" என்பது அவர் முடிவு.

கிரேக்க சிந்தனைகளின் நான்காம்படி. ஏதென்ஸ் நகரில் ஆரம்பமாகிறது. கி. மு. 490, 480ம் ஆண்டுகளில், ஏதென்ஸ், பெர்ஸியர்களைத் தோற்கடித்தவுடன், அந்நகரின் செல்வாக்கு ஓங்கியது.

சிரஞ்சீவிச் சிந்தனையாளர்களான ஸாக்ரடிஸ், பிளேட்டோ, அரிஸ்டாடில் ஆகிய மூவரையும், ஈன்றெடுத்து உலகினுக்களித்தது ஏதென்ஸ் நகரமே ஆகும்! இதுதான் இரக்க சிந்தனைகளின் நான்காவது—கடைசிப்—படி.

இந்தப் படிக்கு அஸ்திவாரக்கல் நாட்டியவர்கள், ஸோஃபிஸ்ட்கள் (sophists) என்ற ஆசிரியர்-கோஷ்டியினர். ஸோஃபிஸ்ட் என்றால் சாதாரணமாகப் பேராசிரியர் (புரபஸர்) என்று கொள்ளலாம். மக்களுக்கு வாழ்வில் பயன்படக்கூடும் என்று தாங்கள் கருதும் விஷயங்களை இளைஞர்களுக்குக் கற்றுத் தருவதைத் தொழிலாகக் கொண்டவர்களே இவர்கள். இதற்கெல்லாம் பொதுக்கல்லூரிகள் எதுவும் கிடையாது. பணவசதி உள்ள இளைஞர்களுக்கே இந்த வசதி கிடைக்கும். எனவே செல்வர்களுக்கிடையே இந்த ஆசிரியர்களுக்குச் சிறப்புண்டு.

இவர்கள் போதித்த கொள்கைகள் தான் என்ன? "எந்த விஷயத்துக்கும் அளவு கோல் மனிதன்தான். மனித விமர்சனத்துக்கு அப்பால், என்றும் எவ்விடத்தும் உண்மை யெனக் கொள்ளக்கூடிய விஷயமே உலகில் இல்லை" என்பது இத்தகைய பேராசிரியர்களில் ஒருவரான பிரோடாகரஸின் கொள்கை. இவர்கள் போதித்த விஷயங்கள், நன்னெறியைப் பற்றியவையோ, மத போதனை சம்பந்தமானவையோ அல்ல. தற்காலச் சட்டக் கல்லூரிகளில் படித்து விட்டுப் பெரிய வக்கிலிடம் ஜூனியராக இருப்பது போலத்தான் அவர்களிடம் கற்பது. எப்படிப் பேசுவது, தர்க்கம் செய்து வெற்றி காண்பது எப்படி என்பது தான் அவர்கள் போதித்த கலை. இவர்களது கொள்கைகளைப் பற்றிப் பேராசிரியர் வில்லோபி (willoughby) கூறுவதைப் பார்க்கலாம்:— "எங்கும், எப்போதும் நிலைபெற்று உண்மையெனக் கொள்ளக் கூடியவை ஒன்றுமே கிடையாது! மனிதன் தான் எல்லாவற்றுக்கும் அளவு கோல்! சட்டப்படி அதிகாரம் செலுத்துவதற்கு, மேம்பட்ட வலிமை ஒன்று தான் அடிப்படை!"

இந்தச் சூழ் நிலையில் தான் ஸாக்ரடீஸ் வந்தார். நிதர்சனமான உண்மைகளையும், நேரான தர்க்க ரீதியையும் தவிர வேறு எதற்கும் அவர் செவி சாய்க்கவில்லை. "மக்கள் திறம்படப் பேசக் கற்றுக் கொண்டால் போதாது. கற்றுணர்ந்து அறிவு முதிர்ச்சி பெற வேண்டும். அவர்கள்தான்-அவர்கள் மட்டும் தான்-ஆட்சியில் பங்கு கொள்ளலாம்" என்று கூறினார் அவர். தெருத்தெருவாகச் சென்று, காண்போரை யெல்லாம் நிறுத்தி, அவர்களுடன் பேசிப் பேசி அவர்களது கருத்தைத் திருப்பினார். ஆட்சியில் பங்கு கொண்ட, பேச மட்டும் தெரிந்த செல்வர்கள் வெகுண்டெழுந்ததும், அதன் விளைவாகச் ஸாக்ரடீஸ் கொலையுண்டதும் எதிர் பாராதவை அல்ல. ஸோஃபிஸ்டுகளும், அவர்களை எதிர்த்த ஸாக்ரடீஸும், கிரேக்க சிந்தனைகளின் மிகப் பெரிய-கடைசி- சகாப்தத்துக்கு அடி கோலினார்கள். வெகு விரைவில் அது பூர்த்திபெற்றது. பங்குகொண்ட சிந்தனைச் சிற்பிகள், பிளேட்டோவும், அரிஸ்டாடிலுமாவர்.

இப்போது நாம் பூர்வகதையின் முடிவு-கட்டத்துக்கு வந்து விட்டோம். எந்த சிந்தனையாளரைப் பற்றியும் படித்து அறிந்து கொள்வதற்கு முன்பு, அவருக்கு முன்னிருந்தவர்களைப் பற்றிச் சிறிதாவது தெரிந்து கொள்வது மிகவும் அவசியம். அப்போதுதான் அவரது மதிப்பை நாம் சரியான முறையில் உணர முடியும். வண்டிச் சக்கரத்தைக் கண்டு பிடித்தவன்தான், இயந்திர சகாப்தத்துக்கே முன்னோடி என்கிறார்கள். இப்போது சக்கரம் சர்வ சாதாரணம். அதைக் கண்டு பிடிப்பதற்கு முன்பு இருந்த நிலையை மனதில் கொண்டு பார்த்தால் தான் அதன் பெருமை முழுதும் தெரியும். எந்தத் துறைக்கும் இந்த உண்மை பொருந்தும். தவிர, கிரேக்க சிந்தனைகளின் நான்காவது படியை இறுதியாகக் கட்டியவர் அரிஸ்டாடில். முதல் மூன்று படிகளையும் காணாமல் நான்காவது படியை மட்டும் பார்த்தால், பூரண அழகும் தென்படாது.

இனி, சிந்தனைச் சிற்பியின் சிற்பத்தைப் பார்ப்பதற்கு முன்பு, அவரது வாழ்க்கை வரலாற்றைச் சற்றுப் புரட்டலாம்.

வாழ்க்கை வரலாறு

'வாழ்வுக் கோர் பொருளுண்டு; அதைக் காண்பதே
நான் உண்ணும் உணவும், பருகும் பானமுமாகும்''

—*ராபர்ட் பிரௌனிங்*

1. பிறப்பும் கல்வியும்:

ஏதென்ஸ் நகரம் அரிஸ்டாடிலைத் தன்னுடைய மகன் என்று சொல்லிக் கொண்ட போதிலும், அவர் பிறந்தது, மாஸிடோனியாவைச் சேர்ந்த ஸ்டாஜிரா (stagira) என்ற இடத்தில். சுமார் கி. மு. 384ல் அரிஸ்டாட்டில் பிறந்ததாகச் சான்றுகள் கூறுகின்றன. அவரது தந்தை

அரிஸ்டாடிலின் பால உருவச்சிலை

நிக்கோமாக்கஸ் ஒரு வைத்தியர். சரித்திரப் பிரசித்தி பெற்ற 'மஹா' அலெக்ஸாந்தர் மன்னனின் பாட்டனுருக்கு அரண்மனை வைத்தியர். அரிஸ்டாட்டில் வளர்ந்ததெல்லாம் மருந்துவாசனையில். விஞ்ஞானியின் மகனுகப்பிறந்த அவருக்கு விஞ்ஞான மனப்பாங்கிலேயே, எதையும் ஆய்ந்து, பகுத்து அறியும் மனப் பாங்கிலேயே ஊறி வளரும் வாய்ப்புக் கிடைத்தது. வெறுமே பார்த்துக் கொண்டிருப்பதுடன் நில்லாமல், மருத்துவக்கலையை அவர் கற்கவும் செய்தார். தந்தை நெடுநாட்கள் உயிருடன் இருந்திருந்தால், மகனையும் முழு மூச்சுடன் வைத்தியராக்கி யிருப்பார். அரண்மனை மருத்துவம் வழிவழியாகத் தொடர்ந்திருக்கும். அரிஸ்டாடில், அலெக்ஸாந்தர் மன்னனுக்கு வைத்தியராகி இருப்பார். ஆனுல் சந்தர்ப்பம் வேறு மாதிரி இருந்தது. அவர் தத்துவம் கற்றுத் தேர்ந்து, அதே மன்னனுக்குத் தத்துவம் போதிக்கும் ஆசானுனர்.

அரிஸ்டாடிலுக்குப் பதினெட்டு வயது நடந்து கொண்டிருக்கும் போது, அவரது தந்தை காலமானுர். தந்தை இறந்த பிறகு அவர்

இளமைப் பருவத்தைக் கழித்த விதத்தைப்பற்றிப் பல கதைகள் உலாவு கின்றன. அவர் பூர்வீகச் சொத்தை யெல்லாம் 'கரைத்து' விட்ட பிறகு, வயிற்றுப் பிழைப்புக்காகச் சேனையில் சேர்ந்ததாகவும், பிறகு மருத்துவராகச் சிலகாலம் 'பிராக்டிஸ்' செய்ததாகவும், அது கட்டு படியாகாமல் போகவே, நொந்த மனத்துக்கு இதமாகத் தத்துவம் பயிலப் பிளேட்டோவின் கலைக்கழகத்தை நாடியதாகவும் ஒரு கதை. தந்தை இறந்த பிறகு அவர் நேரே பிளேட்டோவைக் குருவாக நாடி வந்ததாகவும் கூறுவோர் உண்டு. எது எப்படியாயினும், அரிஸ்டாடில், பிளேட்டோவின் கலைக்கழகத்தின் அமைதிசால் இடத்தில் இருபதாண்டு கள் பயின்றதைப் பற்றிக் கருத்து வேற்றுமை இல்லை.

குருவும் சீடனும் எப்படி வாழ்ந்திருப்பார்கள்? குருவோ பழுத்த தத்துவ ஞானி. அறுபதாண்டு கடந்தவர். சீடன், விஞ்ஞானத்தில், அதாவது, எதையும் கண்டு, ஆய்ந்து தெளிந்து ஏற்றுக் கொள்ள வேண்டுமென்ற தர்க்க மனப்பான்மையில்—பற்றுக் கொண்ட காளை.

பிளேட்டோ, தமது இளம் சீடனின் அறிவுக் கூர்மையை விரைவி லேயே உணர்ந்து கொண்டார். புத்தகங்களை வாங்கி வாங்கிச் சேர்த்து வைத்துப் படிப்பதில் அரிஸ்டாடிலுக்குத் தீராத ஆசை. அவர் இல்லமே, 'படிப்பின் உறைவிடம்' என்று பிளேட்டோ கூறியிருக்கிறார்.

அரிஸ்டாடிலும், தன் ஆசிரியரின் புகழையும், மேதா விலாசத் தையும் உணராமலில்லை. ஆனால் 'குரு சொல்வதே வேதவாக்கு' என்ற எண்ணம் மட்டும் மாணவனிடம் இல்லை. "ஞானம் என்பது பிளேட்டோவுடன் அஸ்தமித்து விடும் என்று மட்டும் சொல்லிவிடக் கூடாது" என்று அவர் கூறினாராம். பிளேட்டோவுக்கும் இதில் வருத்தம் தான். "கன்று தன் தாயின் மடியிலுள்ள பால் முழுவதை யும் குடித்து விட்டு அதை எட்டி உதைக்கத்தான் செய்யும்" என்றாராம் அவர். இந்த மனவேற்றுமையில் ஆச்சரியமே இல்லை. தேர்ந்த அறிஞர்கள் அருகருகே இருப்பது, வெடி மருந்தும் நெருப்பும் போலத்தான்!

பிளேட்டோவுக்கும் வயது ஆகிக் கொண்டு வந்தது. அரிஸ்டா டிலும் நன்கு கற்றுத் தேர்ந்து விட்டார். பிளேட்டோவுக்கும் அவர் மீது மதிப்பும் நம்பிக்கையும் உண்டு. எனவே, ஆசிரியருக்குப் பின்பு, தமக்கே கலைக்கழகத்தின் தலைமைப் பதவி கிடைக்கும் என்று அரிஸ் டாடில் எண்ணினார். ஆனால் கி. மு. 347ல் பிளேட்டோ இறந்ததும் அவர் ஆசை பொய்த்தது. பிளேட்டோவின் மருமகன் ஸ்பியூஸிப்பஸ் தலைமைப் பதவி ஏற்றான். அதற்கு மேலும் அங்கே இருக்க அரிஸ் டாடில் மனம் ஒப்பவில்லை. இந்த மடம் இன்றேல் சந்தை மடம்! கற்றோர்க்கு இடம் தானா கிடைக்காது?

2. அரசரும் அறிஞரும்

அரிஸ்டாடில் சில காலம் நாடோடியாகச் சுற்றினார். அனுபவம் பல பெற்றார். ஹெர்மியாஸ் என்ற மன்னவன் இவரைத் தன் அவைக்கு அழைத்துக்கொண்டு கௌரவித்தான். ஆசிரியராகப் பணியாற்றினாலும் வைத்தியர் பதவி இன்னும் அவரை விடவில்லை. இச்சமயத்தில்தான்

அரிஸ்டாடில், ஹெர்மியாஸ் மன்னனின் சகோதரியை (சகோதரி மகளை என்று கூறுவோரும் உண்டு) மணம் புரிந்துகொண்டார்.* நல்ல வேலையாயிற்று. பணக்கார மனைவியாயிற்று. நிறைய ஓய்வாயிற்று.. பேருமாயிற்று. அரிஸ்டாடில் வாழ்வு இன்ப கீதம் இசைத்தது. ஆனல், கீதம் நெடு நாட்கள் நீடிக்கவில்லை. ஹெர்மியாஸ் மன்னனின் மகுடமும் உயிரும் பறிபோயின. அரிஸ்டாடில் அரசறிய வீற்றிருந்த வாழ்வு வீழ்ந்தது. ...

ஓராண்டு அரிஸ்டாடிலுக்கு நிலையான இடமில்லை. அதற்கு அடுத்த வருஷம், மாஸிடோனிய ராஜ்யத்தின் மன்னனுன ஃபிலிப், தனது மகனது கல்விப் பொறுப்பை ஒப்படைப்பதற்காக அரிஸ்டாடிலைத் தமது அவைக்கு அழைத்தான். மாஸிடோனியா அப்போது மகோன்னத நிலையிலிருந்தது. ஒரே மகனுக்குப் பதின்மூன்று வயது. கலைகள் யாவும் அவனுக்குப் புகட்டி, அறிவுசால் மன்னனுக அவனை ஆக்கவேண்டுமென்று விரும்பினுன் பிலிப் மன்னன். தேர்ந்து கற்றுணர்ந்த அறிஞரைத் தேடியலைந்தான். அரிஸ்டாடில் அகப்பட்டார். குறு குறுப்பு நிறைந்த மைந்தனிடம் அறிஞரைக் காண்பித்து, "இவர் தான் உன் ஆசிரியர். கற்றுத் தேர்ந்துகொள்" என்றுன் ஃபிலிப். உலகப் பிரசித்தி பெறப் போகும் அறிஞரும், அரசனும் ஒருவரையொருவர் பார்த்து நின்றனர். காட்டுக் குதிரைகளை யெல்லாம் அடக்குவதில் அப்போதே தேர்ந்திருந்த முரட்டு அரச குமாரன், "இவரிடம் படிக்கவேண்டுமாமே? எதைப் படிப்பது?" என்ற புதிர் தோன்ற அவரைப் பார்த்து விழித்தான். அவன்தான் மகா அலெக்ஸாந்தர்! (இந்தியாவின்மீது படையெடுத்து வந்த அலெக்ஸாந்தர் தான்!)

அவன் தந்தை ஃபிலிப், உறுதி வாய்ந்த திட சித்தன். திரேஸ் ராஜ்யத்தை வென்று பெரிய தங்க வயலொன்றைச் சொந்தமாக்கிக் கொண்டான். செல்வம் கைக்கு வந்ததும் ஃபிலிப் சுற்று முற்றும் பார்த்தான். பற்பல நகர ராஜ்யங்கள் சிதறுண்டு கிடந்தன. அவற்றிலெல்லாம், தனித்தனி கலையழகும், அறிவொளியும் திகழ்ந்தது உண்மைதான். ஆனல் இவை அவன் கண்ணில் படவில்லை. வெவ்வேறு வர்த்தகர்கள், தமக்குள் சச்சரவிடுவதைக் கண்டான்; தந்திரம் வாய்ந்த வாசாலகர்கள் மக்களை ஏமாற்றி ஒருவரையொருவர் அடித்துக் கொள்ளச் செய்வதைப் பார்த்தான்; இனப் போரைக் கண்டான். ஒரு நாட்டை அவன் காணவில்லை. அதன் பல்வேறு சிதறுண்ட பகுதிகளைத்தான் பார்த்தான். அவற்றை இணைப்பதென்று உறுதி பூண்டான். இணைக்கவும் செய்தான்—தர்க்கத்தாலோ—பிரசாரத்தாலோ அல்ல. யுத்தத்தால்! பிறந்த நாட்டை இணைத்தாயிற்று. மகன் போர் முறைகளில் தீரன். அறிவு விளக்கத்துக்கோ சிந்தனையாளர் அரிஸ்டாடில் கிடைத்துவிட்டார். மகனது மூர்க்கத்தனமும், அசட்டுப் பிடிவாதமும் ஓடிவிடும். இனிமேல், உலகையே இணைத்து ஆளலாம். இவ்வாறு ஃபிலிப் மன்னனின் சிந்தனைகள் ஓடின. இவ்வாறு கனவுலகில் அவன் சஞ்சரித்துக்கொண்டிருக்கையில் ஒருநாள் சூழ்ச்சியாளன் ஒருவன் அவன் உயிரைக் கவர்ந்தான். அது கி. மு. 336-ல்.

---

* அரிஸ்டாடிலுக்கு இரு மனைவியர் என்றும் சரித்திரம் கூறுகிறது அவர் எங்கு, எப்போது மணந்தாரென்பது திட்டமாக அறியக் கிடக்கவில்லை.

அரிஸ்டாடிலும், அலெக்ஸாந்தரும் பழகிய விதம் என்ன என்று பார்க்கலாம். சாதாரணமாகப் 'பெரிய இடத்தில்' 'பிரைவேட்' வாத்தியார் வேலை பார்ப்பதே சங்கடம்தான். தந்தை, மகனுக்கு எல்லா ஞானமும் ஒரே வாரத்தில் வந்துவிடவேண்டுமென்று விரும்பு வான். மகனோ, வாத்தியாரிடம் பெயருக்கு உட்கார்ந்திருந்துவிட்டு எழுந்து ஓடவே விரும்புவான். வாத்தியாருக்கு வேலை நிலைக்க வேண்டு மானால், இரண்டு பேரையும் 'தாஜா' செய்யவேண்டும்…

அலெக்ஸாந்தர்

அரிஸ்டாடில்—அலெக்ஸாந்தர் உறவைப் பற்றிப் பற்பல கதைகள் இருக்கின்றன. வாத்தியாரின் செல் வாக்கு பையனிடம் ஊறியது என் றும், அலெக்ஸாந்தர் வாழ்க்கை முழுவதிலுமே, அரிஸ்டாடிலின் தத் துவச் சுவடுகள் பொதிந்திருக்கு மென்றும் கூறுவோர் சிலர். "இது முழுவதும் தவறு. முரட்டு அலெக் ஸாந்தராவது, சிந்தனைகளுக்குச் செவி சாய்த்ததாவது?" என்போ ரும் உண்டு. அரிஸ்டாடிலுக்கும், அலெக்ஸாந்தருக்கு மிடையேயான கடிதப் போக்குவரத்து, என்ற தலைப்பில் பல கடிதங்கள் இருக்கின் றன. அவற்றில் மன்னவன் அறிஞ ரைப் போற்றியிருக்கிறான் இந்தக் கடிதங்களெல்லாம் "ஃபோர்ஜரி" என்போரும் உண்டு!

ஒன்று மட்டும் நிச்சயம். அரிஸ் டாடில், மாஸிடோனியா ராஜ்யத் திற்கு வந்து சேர்ந்து, அரச குமா ரனுக்குக் கல்வி கற்பிக்கும் பொறுப் பை ஏற்றுக்கொண்ட போது, சிறு வன் அலெக்ஸாந்தர், முரட்டுத்தன மான, உணர்ச்சி வசமான, அடங் காத பையனாக இருந்தான். அவன் வாழ்க்கையே வேகம்தான். மனமே ஓர் எரிமலை. இதைப் பதப்படுத்தத்தான் அரிஸ்டாடில் விழைந்தார். வெற்றி கண்டாரா? அல்லது, மாணவனின் மனப் போக்கு அறிஞரை பாதித்ததா? என்று சற்று பார்க்கலாம்.

"வாழ்க்கை இயற்கை அளிக்கும் செல்வம். ஆனால் நல்ல வாழ்க்கை ஞானம் அளிக்கும் செல்வம்" என்பது ஒரு கிரேக்கப் பழமொழியின் கருத்து. "என் உயிருக்கு நான் என் தந்தைக்குக் கடமைப்பட்டிருக் கிறேன். ஆனால் என் வாழ்விற்கு என் குரு அரிஸ்டாடிலுக்கே நான் நன்றி செலுத்த வேண்டுமென்று" அலெக்ஸாந்தர் கூறியதாக புளூ டார்ச் என்ற சரித்திர அறிஞர் வரைந்திருக்கிறார். "என் தோள் வலியைவிட, என் ஆதிக்கத்தின் மாட்சியைவிட, நன்மை எது, தீமை

எது என்று பகுத்துணரும் அறிவே மேம்பட்டது. அதை எனக்களித்தவர் என் ஆசிரியரே" என்றும் அலெக்ஸாந்தர் மன்னவன் கூறியிருப்பதாகச் சொல்லுகிறார்கள். அரிஸ்டாடில், தொகுத்துச் சேர்த்து உணரும் அறிவு மனப்பான்மை கொண்டவர். அலெக்ஸாந்தர் மன்னன், உலக முழுவதையும் ஒருமைப் படுத்தி ஒரே குடைக்கீழ் ஆள வேண்டுமென்று தீராத ஆசை கொண்டதற்கு, அரிஸ்டாடிலின் இந்தத் தொகுக்கும்—மனப்பாங்கு உதவி செய்தது என்று கூறுவோர் சிலர். "தத்துவ அறிவின் நடைமுறைப் பலன்களுக்கு, அலெக்ஸாந்தரின் வாழ்வே ஓர் எடுத்துக்காட்டு" என்று, பதினெட்டாம் நூற்றாண்டு சிந்தனையாளரான ஹெகல் (Hegel) கூறுகிறார். இதற்கு பென் (Benn) என்பவர் பதில் கூறுவதையும் பார்க்கலாம்:— "தத்துவத்தின் பலனுக்கு வேறு எடுத்துக்காட்டு எதுவுமா அகப்படவில்லை? அலெக்ஸாந்தர்!... கர்வம்பிடித்தவன், கட்குடியன், கொடுங்கோலன்,... அவன்தானா உதாரணத்துக்கு அகப்பட்டான்!"

அலெக்ஸாந்தர் மன்னன், தந்தைக்குப் பயந்துகொண்டோ, அல்லது மரியாதையை உத்தேசித்தோ, ஆசிரியரைப் போற்றிப் பேசியிருக்கலாம். தவிர, கலை, கலாச்சாரம் இவற்றைப் பொறுத்தமட்டில், மாஸிடோனியா ராஜ்யத்தின் பெயர் தாழ்ந்தே இருந்தது. இதை மாற்றி தான் வெற்றி வீரன் மட்டுமல்ல, கலை உணர்வு மிக்கவன் என்று உலகிற்குக் காண்பிக்க வேண்டுமென்பதற்காக, ஃபிலிப் மகாராஜாவும் சரி, மகா வீரன் அலெக்ஸாந்தரும் சரி, அரிஸ்டாடிலைப் போற்றிப் புகழ்ந்திருக்கலாம். மற்றபடி, அவர் சொன்னதையெல்லாம் மன்னன் கேட்டு உணர்ந்து அதன்வழி நின்றான் என்பதற்குச் சான்றுகள் இல்லை. இலட்சிய ராஜ்யத்தில் சில ஆயிரம் பேருக்குமேல் வசிக்கக் கூடாதென்றும், செல்வர்களோ, வறியர்களோ அல்லாத மத்தியதர வகுப்பினர்தான் ஆளும் கட்சியினராக இருக்கவேண்டும் என்றும் அறிஞர் அரிஸ்டாடில் போதித்தார். உலக முழுதையும் ஒரே ராஜ்யமாக்கக் கருதின அலெக்ஸாந்தர் இதைக் கேட்டுச் சரியென்று ஏற்றுக்கொண்டிருந்தால், சரித்திரம் அவன் பெயரை அறிந்தே இருக்காது...

சரி, மாணவனது போக்கு ஆசிரியரைப் பாதித்ததா என்றால், அதுவும் இல்லை என்றுதான் சொல்லவேண்டியிருக்கிறது. அரிஸ்டாடில், அலெக்ஸாந்தருக்குப் பாடம் சொல்லிக்கொண்டிருந்த காலத்தில், நகர ராஜ்யங்களின் பெருமை மங்கிவிட்டது. கிரீஸ் முழுவதுமே ஃபிலிப் மகாராஜனின் குடைக்கீழ் வந்துவிட்டது. அதை இன்னும் விஸ்தரிப்பதற்கும், அலெக்ஸாந்தர் திட்டமிட்டிருந்தான். அப்படியிருக்க, அரிஸ்டாடில், தம் போக்கில், நகர ராஜ்யமே லட்சிய ராஜ்யம் என்ற அடிப்படையில் சிந்தித்துக்கொண்டிருந்தார். "மொத்தமாகப் பார்த்தால், இந்த இரண்டுபேரும் தத்தம் துறையில் பெரியவர்களே. இவர்கள் ஒருங்கே இருந்ததால் பலனெதுவும்தான் விளையவில்லை. அவர்கள் வெவ்வேறு உலகங்களில் வாழ்ந்ததைப் போலிருந்தது" என்கிறார் அறிஞர் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல்.

கி. மு. 336-ல் தந்தை கொல்லப்பட்டுவிடவே, அலெக்ஸாந்தர், புத்தகங்களை உதறிவிட்டு அரியணை ஏறினான். கடல் கடந்து நாடுகளை வெற்றி கொள்ளவும் கிளம்ப ஆயத்தம் செய்தான். அரிஸ்டாடில், தாம் கல்வி கற்ற பிளேட்டோவின் கலைக் கழகத்துக்கே திரும்பிச்

செல்லலாமென்று எண்ணினர். அதன் அப்போதையத் தலைவனான க்ஸெனுக்ரிடஸ் என்பவன், ப்ளேட்டோவின் தத்துவங்களில், கணிதம், மாயாவாதம் ஆகிய துறைகளில் ஈடுபாடு கொண்டவன். அரிஸ்டாடிலுக்கோ அவற்றை அவ்வளவாகப் பிடிப்பதில்லை, எனவே, பழைய கழகத்தை நாடுவதென்ற எண்ணத்தை விடுத்தார். புதிய கழகமொன்றைத் தாமே நிறுவ எண்ணினர். கி. மு. 335-ல் ஏதென்ஸ் நகரம் திரும்பினர். அங்கேயே பன்னிரெண்டு ஆண்டுகள் அவர் வசித்திருந்தார். அப்போதுதான் அவரது நூல்களில் பல எழுதப்பட்டன. தத்துவ அறிஞர் பிறந்தது வேறிடத்திலாயினும், அவரது அறிவொளி ஏதென்ஸிலிருந்துதான் வீசியது.

3. கலைக் கழகம்

அரிஸ்டாடில் ஏதென்ஸுக்குத் திரும்பி வந்து லிஸியம் (Lyceum) என்று ஒரு கலைக் கழகம் நிறுவினர். அப்போது அவருக்கு வயது ஐம்பத்து மூன்று. பலவிடங்களுக்கும் சென்று சிந்தனைத் திறனுடன் அனுபவப் பண்பும் நிறைந்தவராக இருந்தார். மன்னவர் மன்னனுக்கு ஆசிரியராக இருந்த பெருமை வேறு. மிகுந்த தன்னம்பிக்கையோடு, வேற்றூரான ஏதென்ஸில் அவர் கலைக் கழகம் நிறுவினர். (மாஸிடோனியா மன்னன் ஏதென்ஸை வெற்றி கண்ட பிறகு, தோல்வியுற்ற நகரம், வாகை சூடியவர்களைக் கசப்புடன் நோக்கிய வண்ணம் இருந்ததென்பதையும், அரிஸ்டாடில் மாஸிடோனிய மன்னனின் நிதி உதவி பெற்றே கலைக் கழகம் தொடங்கினரென்பதையும் நினைவில் வைக்க வேண்டும்). தன்னம்பிக்கை பொய்க்கவில்லை. கலைக் கழகத்தில் சேருவதற்கு இளைஞர் திரண்டு கூடினர்.

அரிஸ்டாடிலிடம் லிஸியம் கட்டு திட்டம் நிறைந்த கல்லூரியன்று. சுதந்திர மணம் அங்கு கமழ்ந்தது. இருந்த ஒரு சில நடைமுறைச் சட்டங்களையும் மாணவர்களே வகுத்தார்கள். கழகத்தை மேற்பார்வையிடுவதும் மாணவர்கள்தாம். பத்து நாட்களுக்கு ஒருமுறை இதற்கென மாணவர்-தலைவன் தேர்ந்தெடுக்கப்படுவான். மாணவர்கள் ஆசிரியருடன் ஒருங்கே உண்பார்கள். கழகத்தின் நீண்ட பாதைகள் வழியே நடந்தவாறே அரிஸ்டாடில் மாணவர்களுக்குப் போதிப்பார். கல்வியென்றால், அது சுதந்திரக் கல்வி. கலைக் கழகமென்றால் முக்காலும் தகும்.

பிளேட்டோவின் கலைக் கழகத்துக்கும், அவரது சீடரின் லிஸியத்துக்கும் வேறுபாடு உண்டா? அல்லது, லிஸியம், 'கழகத்'தின் பிரதியா? கலைக் கழகத்தின் தலைமைப் பதவியிலிருந்தவன் முக்கியமென்று கருதிய தத்துவத் துறைகள், தமக்கு அவ்வளவாகப் பிடிக்காததால்தான் அரிஸ்டாடில் தனிக் கழகம் நிறுவியதே. பிளேட்டோவின் கழகம் கணித சாஸ்திரத்துக்கும், அரசியல் தத்துவத்துக்குமே முதலிடம் அளித்தது. அரிஸ்டாடிலின் பள்ளி, உயிர் நூலுக்கும், இயற்கை—விஞ்ஞானத்துக்கும் முதன்மை தந்தது. பிளேட்டோவின் கலைக் கழகம் தத்துவப் பள்ளி; அரிஸ்டாடிலின் ஆராய்ச்சிக்கூடம் விஞ்ஞானச் சோதனை சாலை.

அரிஸ்டாடில் ஆற்றிவந்த ஆராய்ச்சிப் பணிதான் என்ன? அரிஸ்டாடிலுக்குத் தேவைப்பட்ட தாவர வர்க்கங்கள், பிராணி, பறவை

இனங்கள் முதலியவற்றைத் தடையின்றிக் கொடுத்துக்கொண்டே இருக்கும்படி வேட்டையாட்கள், தோட்டக்காரர்கள் செம்படவர்கள் அனைவருக்கும் அலெக்ஸாந்தர் மன்னன் உத்திரவிட்டிருந்ததாகக் கிரேக்க சரித்திரம் கூறுகிறது. அரிஸ்டாடிலின் தேவைப்படி ஆசியாவிலும், கிரீஸிலும் ஓராயிரம் பேரை மன்னவன் நியமித்து வெவ்வேறு பிரதேசங்களின் தாவர, விலங்கின வகைகளைக் கழகத்துக்கு அனுப்பச் செய்ததாகவும் ஒரு செய்தி. கழகத்தில் அரிஸ்டாடில் ஆசிரியராக இருந்தபோதுதான் "அரசியல்" (Politics) என்ற நூலை எழுதினார். 158 விதமான அரசியல் அமைப்புச் சட்டங்களை ஆராய்ந்து அறிந்த பின்னரே அவர் நூலை எழுதப் புகுந்தார். இதற்கெல்லாம் உதவிபுரிய பல செயலாளர்களையும், நிருபர்களையும் அறிஞருக்கு மன்னவன் வழங்கினான். தற்காலச் செலவாணியில் சுமார் 20 லட்ச ரூபாய் மதிப்புள்ள நிதியை, அரிஸ்டாடிலின் பரிசோதனைகளுக்கும் சிந்தனைகளுக்கும் வகை செய்யும் பொருட்டு அலெக்ஸாந்தர் அளித்தானும். இது தவிர, அரிஸ்டாடிலும் செல்வம் படைத்தவர்தாம். மனைவி வழியாகவும் சொத்து உண்டு. பிறகு என்ன? பரிசோதனைகள் தங்கு தடையின்றி நடந்தன. சிந்தனைகள் கவலையின்றி ஓடின. இரண்டாயிர வருஷ காலத்துக்கு அறிஞர் கருத்துக்கு உணவாகக் கூடியவை, கழகத்தில் சமைக்கப் பட்டன.

ஆனால், எந்தவிதமான கவலையுமின்றி அரிஸ்டாடில் கலைக் கழகத்தில் ஆராய்ச்சி நடத்தி வந்தார் என்று கூறுவதற்கில்லை. அவரது கழகத்தின் ஆதரவெல்லாம் அலெக்ஸாந்தரிடமிருந்து வந்தது. அரசியல் வானத்தில் முகில் சூழ்ந்தால் அந்த நிமிஷமே காரியம் கெட்டுவிடும். நிலைமை எப்படியிருந்தது பார்ப்போம் அலெக்ஸாந்தர் மன்னன், கழகம் நிறுவப்பட்ட உடனேடு திக் விஜயம் கிளம்பிவிட்டான். நகரங்களின் ஆட்சியாளர் அவன் பக்கம்தான். ஆனால் மக்கள் எதிர்க் கட்சி. தனித்தனி நகரங்களாகவே தனியாட்சி செலுத்தி வந்தவர்களுக்கு ஒரு குடைக்கீழான ஆட்சி பிடிக்கவில்லை. அதிலும் ஏதென்ஸ் நகரமானது மாஸிடோனிய ஆட்சியை விஷமென வெறுத்தது. புகழ்பெற்ற கிரேக்க வாசாலகர் டெமாஸ்தனீஸ் வேறு தமது நாவன்மையால் மக்கள் மனதில் சுதந்திர உணர்ச்சியை எழுப்பி வந்தார். அலெக்ஸாந்தர் வெளி நாடுகளில் திக் விஜயம் செய்யப் புறப்பட்ட போது, ஆண்டிபேடர் (Antipater) என்பவனைத் தனதிடத்தில் இருத்திவிட்டுச் சென்றான். ஆண்டிபேடர், அரிஸ்டாடிலின் உற்ற நண்பன். தனது மகனை லிஸியம் கழகத்தில் பயிலவும் அனுப்பினான். அதுவும் தவிர, ஒரு குடைக்கீழான அரசுதான் நாட்டின் முன்னேற்றத்துக்கு அடிகோலும் என்று அரிஸ்டாடில் பூரணமாக நம்பினார். அப்படி ஆளக் கூடிய

டெமாஸ்தனீஸ்

வன் அலெக்ஸாந்தராக இருந்தாலும் வேறு யாராயினும் அவருக்கு அக்கறையில்லை. அதனால் அவர் மாஸிடோனியக் கோஷ்டியுடன் சேர்ந்து கொண்டார். ஏதென்ஸ் நகர மக்களுக்கு அரிஸ்டாடிலைப் பிடிக்காமல் போயிற்று. அரிஸ்டாடில் தமது கலைக் கழகத்தைத் தொடங்கிப் பன்னிரண்டு ஆண்டுகள் இதே நிலைமை நீடித்தது. எனினும் கழகத்தைப் பாதிக்கும் வகையில் குறிப்பிடத்தக்க விதத்தில் சம்பவம் எதுவும் நிகழவில்லை.

ஆனால் அரிஸ்டாடிலின் சொந்த வாழ்க்கையில் சில சம்பவங்கள் நிகழ்ந்தனவென்று சில ஆசிரியர்கள் கூறுகின்றனர். அரிஸ்டாடிலின் மனைவி இறந்துவிட்டாள். அவள் மூலம் அறிஞருக்கு ஒரு பெண் குழந்தை இருந்தது. (பெயர் பிதியாஸ்) மனைவி இறந்தபிறகு, ஹெர்ஃபிலிஸ் என்ற மாதொருத்தியுடன், அறிஞர் அரிஸ்டாடிலுக்குத் தொடர்பு ஏற்பட்டதென்றும், இந்த உறவின் கனியாக நிகோமாக்கஸ் என்ற மகன் பிறந்தானென்றும் சிலர் கூறுவர். அரிஸ்டாடில், தமது உயிலில், தமது ஆசைநாயகிக்கும், இரு மக்களுக்கும் வகை செய்தாரென்றும் கூறப்படுகிறது. அவரது எழுத்துச் சுவடிகளைத் தொகுப்பதில் மகன் நிகோமாக்கஸ் உதவி செய்தானும். ஆனால், அவன் சிறுவயதிலேயே இறந்துவிட்டான். அரிஸ்டாடிலின் புதல்வி மும்முறை மணந்தாள். அவளுக்கு மூன்று குழந்தைகள் பிறந்தனவாம். அரிஸ்டாடிலின் சீடன் ஒருவன், தனது ஆசிரியரின் பேரப்பிள்ளைகளைக் காப்பாற்றி முன்னுக்குக் கொண்டுவந்தானும்.

ஆனால், குடும்ப வாழ்க்கையில் நடந்த சம்பவங்களோ, அரசியல் துறையில் அச்சுறுத்தி நின்ற குமுறும் மேகங்களோ அரிஸ்டாடிலின் சிந்தனைகளைப் பாதிக்கவே இல்லை. தமது கலைக் கழகத்தில் இவை யாவற்றையும் மறந்து, அமர்ந்து, நூற்றுக்கணக்கான புத்தகங்களை அவர் எழுதிக் குவித்தார்.

4. வாழ்வும் வாக்கும்

இந் நிலையில், அரிஸ்டாடில் வாழ்வில் கண்டறிந்த அனுபவங்கள் அவரது சிந்தனைகளை எப்படிப் பாதித்தன என்று உணர்ந்துகொள்ள வேண்டியது அவசியம். அனுபவங்கள் என்றால், சுற்றிலும் இருந்த நாட்டு-நடப்பு, அவர் கண்டு பழகிய முக்கியஸ்தர்கள் என்று இரண்டு பிரிவுகளாகப் பார்க்கலாம்.

நாட்டு நடப்பை எடுத்துக்கொண்டால், தம்மைச் சுற்றிலும் நடந்த சம்பவங்கள் அவரது சிந்தனைகளைப் பாதிக்கவே இல்லை என்றுதான் தெரிகிறது. நன்கு உறங்குபவன் கொசுக்கடியை அறியாமலே தூங்குவது போலத்தான், அவரும் சிந்தனைகளில் மூழ்கி இருந்தார். அவரது தத்துவத்தின் ஜீவன், அவர் வாழ்ந்த கிரீஸின் ஆன்மா அல்ல. என்றைக்கோ மறைந்துவிட்ட பண்டையக்கிரீஸின் மூச்சு. அவர் வாழ்ந்திருந்த காலத்தில், கிரேக்க நகர ராஜ்யங்கள் ஒன்றன்பின் ஒன்றாக வீழ்ந்துகொண்டு வந்தன. ஸ்பார்டாவின் தனியாட்சி மகிமையும், ஏதென்ஸின் தனிப் பண்பும் தன்னிறைவும் பழைய விஷயங்களாகிவிட்டன. ஆனால் அரிஸ்டாடிலின் அரசியல் தத்துவம் பூராவும் நகர ராஜ்யங்களின் அரசியல் தத்துவம். அவர் பரிசீலனை செய்தவை எல்லாம், மறைந்துவிட்ட நகர ராஜ்யங்களின் அரசியல் அமைப்புச்

சட்டங்கள். தம்மைச் சுற்றி நடக்கும் நடப்பு நிலையான தொன்றல்ல என்றும், நகர ராஜ்யங்கள்தான் இலட்சிய ராஜ்யங்கள், அவை புத்துயிர் பெற்று விடுமென்றும் அவர் எண்ணிக்கொண்டு தமது "அரசியல" என்னும் நூலை உருவாக்கினர்.

இனி, இரண்டாவது பிரிவைப் பார்க்கலாம். அவர் பழகிய மக்களுக்குள் முக்கியமானவர்கள் இரண்டே பேர்— பிளேட்டோவும், அலெக்ஸாந்தர் மன்னனும். அலெக்ஸாந்தர் மன்னன், அரிஸ்டாடிலிடம் எந்த மாறுதலையும் தோற்றுவிக்கவில்லை என்று கண்டோம். தோற்றுவித்திருந்தால், அவர் நகர ராஜ்யத்தின் புகழைப் பாடியிருக்க மாட்டார். ஆனல், பிளேட்டோ, அரிஸ்டாடிலின் வாழ்க்கை முழுவதும், அவரது சிந்தனைகளின் பின்னணியாக நின்றவர். அரிஸ்டாடிலின் வாழ்விலேயே, பிளேட்டோவின் கழகத்தில் கழித்த இருபதாண்டுகள் தாம் உண்மையான அனுபவம். பிளேட்டோவின் சிந்தனைகளை அரிஸ்டாடில் பலவிடங்களில் கண்டிக்கிருர்; மாற்றுகிருர்; தளர்த்துகிருர். ஆயினும் அவரது சிந்தனையின் ஒவ்வொரு துறையிலும் பிளேட்டோவின் சுருதி பின்னணியில் ஒலிக்கத்தான் செய்கிறது. பிளேட்டோவின் கூட்டுறவுதான் அரிஸ்டாடிலின் சிந்தனைகளுக்கு அஸ்திவாரம் "தமது வாழ்வில் மூன்றில் ஒரு பகுதியை அரிஸ்டாடில், பிளேட்டோவிடம் கழித்தார் என்பது, அவரது சிந்தனைகளை உணர்ந்துகொள்வதற்கு மூலாதாரமானது" என்கிருர் பேராசிரியர் ஃபாஸ்டர். இது குறித்து வேறிடத்தில் விவரமாகப் பார்க்கலாம்.

5. அணையும் சுடர்

அரிஸ்டாடில், அமைதி செறிந்த தமது ஆராய்ச்சிக் கூடத்தில், "அறிஞருக்கொரு" தலைவராக இருந்துவந்தார். எனினும், வாழ்வில் சிக்கல்கள் அதிகமாயின. மன்னனிடமும் கோபம்; மக்களிடத்தும் சலிப்பு. விஷயம் பிரமாதமல்ல. அரிஸ்டாடிலின் உறவினன் ஒருவனை அலெக்ஸாந்தர் தண்டித்துவிட்டான். அதை மாற்றும்படி இவர் கோரினர். அலெக்ஸாந்தர் அப்போது பிறந்த நாட்டில் இல்லை. விண்ணப்பம் மறுக்கப்பட்டது என்று, மன்னர் மன்னவன் உத்தரவிட்டிருப்பதாக அலெக்ஸாந்தரின் பிரதிநிதி ஓலை அனுப்பினன். அத்துடன், "அறிஞரும் அரசனின் ஆணைக்கு அடிபணிய வேண்டியதுதான்" என்று கூருமல் கூறிய கடிதமும் இருந்தது. அரிஸ்டாடிலுக்குச் சினமும் சலிப்பும் பொங்கின. ஆனல், இதற்காக அலெக்ஸாந்தரின் ஆட்சியை எதிர்த்து மனம் குமுறிக் கொண்டிருந்த ஏதென்ஸ் மக்களின் பால் சேர்ந்துகொள்ளவும் அவர் மனமொப்பவில்லை. அதனல் என்ன பலன் விளையும்? மக்கள் அன்னிய மன்னனை வெற்றிகொண்டு மீண்டும் சுதந்திரம் பெறுவது அரியதொரு செயல். அப்படியே பெற்றாலும், இந்த அலெக்ஸாந்தரல்லாவிடில் வேருருவன் மீண்டும் பிடித்துக் கொள்வான். இந்தச் சில்லறைத் தகராறுகள் இல்லா திருந்தால்தான் கலை கொழிக்கும்; அறிவு சிறக்கும். இல்லாவிடில் சக்தியெல்லாம் கூச்சலிடுவதிலேயே கொன்னே கழிந்துவிடும். இவ்வாறு அரிஸ்டாடிலின் சிந்தனைகள் ஓடின. அதனல் அவர் ஏதென்ஸ் நகரில் இருந்துகொண்டு அலெக்ஸாந்தரின் ஆட்சியைத் தொடர்ந்து ஆதரித்து வந்தார். மக்கள் மனம் பொறுமினர். இதை அறிந்துகொள்ளாமலில்லை அவர். தெரிந்து கொண்டும், கொண்ட கொள்கையை விடாது அவர் பற்றியிருந்தார். சாதாரணமாகப் பார்ப்பவர்களுக்கு, அலெக்ஸாந்தருக்காக முழுமூச்

சுடன் போரிடுபவராகவே அரிஸ்டாடில் தோன்றினர். இதை உணர்ந்து, அலெக்ஸாந்தர், ஆசிரியரைக் கௌரவிக்க நினைத்தான். ஏதென்ஸ் நகரின் முக்கிய இடமொன்றில், அரிஸ்டாடிலின் சிலையொன்றை வைக்கச் செய்தான் மன்னவன். மக்கள் மேலும் மனம் சாம்பினர்; குமுறினர். அரிஸ்டாடிலின் அறிவுத் திறனைப் பற்றி அவர்கள் மனதில் எண்ணமே எழவில்லை. "வேற்று அரசனின் கையாள் ஒருவனுக்கு நம் நகரத்திலேயே சிலையா?" என்றுதான் நொந்தனர். இதெல்லாம் அந்த நிலையில் கையாலாகாத கோபம்தான். ஆனால், நெடுநாட்கள் அது அவ்வாறு இருக்கவில்லை...

ஏதென்ஸ் நகரம் முதலில் நம்பவே மறுத்தது. செய்தி உண்மைதா னென்றறிந்ததும் களிக்கூத்தாடியது. கட்டுக்கடங்காத மகிழ்ச்சி. ஒரே வெறிதான். காரணம், அலெக்ஸாந்தர் மன்னன் திடீரென்று காலமான செய்தி கிடைத்ததுதான். அடக்கிக்கொண்டு வந்த மன்னன் மாளவும், ஏதென்ஸ் வாசிகள் சுதந்திர முழக்கம் செய்தார்கள். நகரில் ஆதிக்கம் செலுத்திவந்த மாஸிடோனியக்கட்சி கலக்கப்பட்டு விட்டது. முதல்-மகிழ்ச்சியின் வெறிசற்று அடங்கவே, ஏதென்ஸ் மக்கள் அரிஸ்டாடிலைப் பற்றிச் சிந்தித்தார்கள். "இதுவரை அலெக்ஸாந்தர் இருந்தான் என்ற எண்ணத்திலல்லவா, 'கருடா சுகமா?' என்று கேட்டுக்கொண்டிருந்தது இந்த நச்சரவம்? தீர்த்துவிடுவோம் இப்போது..." என்று கறுவி னர்கள்.

"தீர்த்து விடுவது" ஒன்றும் அவ்வளவு சிரமசாத்தியமான காரிய மல்ல. யாரைக் கொல்ல வேண்டுமானாலும்—அதிலும் குறிப்பிட்ட நபர் அறிஞராக இருந்துவிட்டால் இன்னும் விசேஷம்—அவர்களுக்கு ஒரு வழி இருந்தது. அதைச் சட்டபூர்வமாகச் செயலாற்ற. ஒன்று மில்லை. "இந்த நபர், நாஸ்திகப் பிரசாரம் செய்கிறன்; மதக்கோட்பாடு களைக் கிண்டல் செய்கிறன்; இளைஞர் மனதைக் கெடுத்தேவிடுவான் போலிருக்கிறது" என்று குற்றப்பத்திரிகை வாசிக்கவேண்டியது. விசாரணை என்று பேருக்கு நடத்தவேண்டியது. கொலைத்தண்டனை கொடுத்துவிட வேண்டியது. அவ்வளவே தான்!

ஸாக்ரடீஸிற்கு நேர்ந்த இதே கதி அரிஸ்டாடிலுக்கும் வந்து சேர்ந்தது. ஆனால், அரிஸ்டாடில், விசாரணைக்கு உட்படவில்லை. நகரை விட்டு ஓடிவிடுவதென்று தீர்மானித்தார். அந்தக் காலத்தில், ஏதென்ஸ் நீதிசபை எவர் மீதாவது குற்றம் சாட்டினால், அந்த நபர், நகரைவிட்டு ஓடிவிடுவதாகச் சொன்னால், அவர் மீது நடவடிக்கை எதுவும் எடுக்கப்பட மாட்டாது. "ஒரு தத்துவ ஞானிக்கு ஏதென்ஸ் இழைத்த அநீதி போதும்; மற்றொரு முறை அது நடக்க நான் விடமாட் டேன்!" என்று கூறி, ஏதென்ஸை விட்டுத் தம் தாயின் ஊரான சால்ஸிஸ் என்ற இடத்துக்கு ஓடிவிட்டார் அரிஸ்டாடில்.

சால்ஸிஸிற்கு வந்து சேர்ந்த உடனேடு, அறிஞரை நோய் பற்றிக் கொண்டது. (சர்தர்ப்பம் தமக்கு நேர் எதிராகத் திரும்பியது கண்டு மனம் சாம்பி, விஷத்தை அருந்தி நோயை வரவழைத்துக்கொண்ட தாகவும் சிலர் கூறுவர்.) விரைவில் நோய் அறிஞரை வென்றது. ஏதென்ஸை விட்டுச்சென்று சில மாதங்களில், அரிஸ்டாடில் இயற்கை எய்தினர். (கி. மு. 322).

அதற்கு முதல் வருஷம் தான் மன்னர் மன்னன் அலெக்ஸாந்தர் மாண்டான். அதே வருஷத்தில், பிரசித்திபெற்ற பேச்சாளர் டெமாஸ்தனீஸ் தற்கொலை புரிந்துகொண்டார். அரிஸ்டாடிலும் மனம் நொந்து வாழ்வின் முடிவைக் கண்டார். தனது தலைசிறந்த மன்னன், புகழ்பெற்ற நாவின் மன்னன், மாண்புறு சிந்தனை வேந்தன் மூவரையும் ஒருங்கே இழந்து, கிரீஸ் மாதா புத்திர சோகத்தால் மெலிந்து இரங்கி வாடி நிற்பாளாயினள்.

இரண்டாம் பகுதி

சிந்தனை விளக்கமும் நூற் சுருக்கங்களும்

நூல்கள்

"சில புத்தகங்களை நுகர்ந்து விட்டுவிடலாம்.... வெகு சிலவற்றை அப்படியே சுவைத்துச் சுவைத்துக், கொள்ள வேண்டும்."

— ஃபிரான்ஸிஸ் பேகன்

i) நூல்கள் எவை எவை ?

தத்துவ நூலில் ஐந்து பெரும் துறைகள் அடங்கியிருக்கின்றன. தர்க்கம், நன்னெறி, அரசியல், அறிவியல், கலைகள் ஆகியவை தத்துவத்தின் அங்கங்கள்.

தர்க்கம் என்பது சிந்தனைப்போக்கு. பேச்சு, ஆராய்ச்சி இவற்றில் ஒரு கோவையை ஒருமைப்பாட்டை, ஒரு ராஜபாட்டையை அமைத்துத் தரும் சாதனம். இலட்சிய நடத்தையைப் பற்றிக் கூறுவது நன்னெறி நூல். அரசியல் நூல் லட்சிய சமுதாய அமைப்பை விரித்துக் கூறுவது. மெய்ஞானத்தின் இயல்பைச் சுட்டிக்காட்டுவது அறிவியல். எப்பொருளிலும் இயற்கையின் "கை புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பை"க் கண்டுணரும் சாதனம் கலையியல். இவை எல்லாவற்றின் ஒருமை—இணைப்புத்தான் தத்துவம். இவை ஒவ்வொன்று குறித்தும் எண்ணற்ற பக்கங்கள் இயல் இயலாக அங்கம் அங்கமாகச் சிந்தித்து எழுதிவைத்ததால் தானே என்னவோ, அரிஸ்டாடிலைத் "தத்துவ ஞானி" என்ற சிறப்புப் பெயராலேயே—இயற்பெயரைக் குறிப்பிடாமலே—உலகம் அழைத்தது.

அரிஸ்டாடில் எழுதிய நூல்களில், உலகம் அறிந்தவை நாற்பத்தெட்டுதான். இன்னும், பாலையில் வீசும் நறுமணமென உலகினர் அறியாதொழிந்த நூல்கள் எத்தனையோ? மொத்தம் அரிஸ்டாடில் நானூறு நூல்கள் எழுதியதாகக் கூறுவர். தர்க்கசாஸ்திரத்தைப் பற்றிய முக்கிய நூல்கள் நான்கு கிடைத்திருக்கின்றன. இவற்றைச் சரியான சிந்தனையின் "கருவி" என்ற தலைப்பில் அரிஸ்டாடிலின் சீடர்கள், அவரது கையெழுத்துச் சுவடிகளைத் தொகுத்து வெளியிட்டார்கள். அறிவியலில் இருபத்தாறு நூல்கள் இருக்கின்றன. "பௌதிகம் (Physics)," "வான வெளியினிலே (On the Heavens)" "வளர்ச்சியும் அழிவும்", "பூகற்ப நூல்", "விலங்கினங்களின் பிறப்பு" போன்றவை இவற்றில் முக்கியமானவை. தவிர, ஒழுக்கத்தைப் பற்றிக் கூறும் நூல்கள் நான்கு; அரசியலைப் பற்றி மிக விரிவானதோர் புத்தகம்; அரசியல் அமைப்புச் சட்டங்களைப் பற்றி ஒன்று; பொருளாதாரம், மெய்ஞ்ஞானம், சரித்திரம், நுண் கலைகள் இவற்றைப் பற்றியெல்லாம் பல்வேறு பனுவல்கள் என அரிஸ்டாடிலின் நூல்கள் விரிந்து கிடக்கின்றன.

ஹெர்மிப்பாஸ் மன்னனின் ஆதரவில் ஆஸ்ஸாஸ் நகரில் சில காலமும், ஏதென்ஸ் நகரில் லிஸியம் என்ற தமது கலைக் கழகத்தில் பல ஆண்டுகளும், அரிஸ்டாடில் தங்கியிருந்தபோது இவற்றை ஒன்றன்பின் ஒன்ருக எழுதி முடித்தார். ஆனுல், ஏதென்ஸில் இருக்கும்போதுதான் முக்கியமான நூல்கள் பலவும் எழுதப்பட்டன என்பதற்குச் சான்று இருக்கிறது.

அரிஸ்டாடிலின் நூல்களை இரண்டு வகைகளாகக் கொள்ளலாம். தமது கழகத்தின் கொள்கைகளைப் பிரபலப்படுத்துவதற்காக எழுதியவை சில ; 'நான் கண்ட அறிவு பெறுக இவ்வையகம்' என்ற மனப் பண்பில் சிந்தனை உதிக்க உதிக்க ஆராய்ச்சி செய்யச் செய்ய விஷயங்களைக் காணக் காண எழுதியவை பல. முந்தைய நூல்களில் இலக்கியச் சுவையும் கலைபழகும் காணக் கிடைக்கின்றன. பிந்தையவற்றிலோ, அறிவின் திறனும் கருத்தழகும் பொருள் நுட்பமும் தர்க்க ரீதியும் தான் இருக்கின்றனவேயன்றி வெறும் சொல்லழகு சற்றும் இல்லை. இதுபற்றிப் பின்னர் பார்க்கலாம்.

அரிஸ்டாடில் தமது வாழ்வுக்காலத்தில் பிரசுரித்த புத்தகங்கள் மிகச் சிலவே. அவர் இறந்தபின்னர், அவர் விட்டுச் சென்ற ஏட்டுச் சுவடிகளை, அவரது நண்பர் யூடிமஸும் மகன் நிகோமாக்கஸும் எடுத்துப் பத்திரப்படுத்திஞர்கள். நிகோமாக்கஸ் அதன் பிறகு வெகு நாட்கள் உயிரோடில்லை. பிறகு அரிஸ்டாடிலின் சுவடிகள் எப்படிப் பதிப்பிக்கப்பட்டன என்பதற்குத் தெளிவான சான்று எதுவும் இல்லை. அவரது மாணவர்கள் சிலரிடம் அவை கிடைத்தனவென்றும் அரிஸ்டாடிலைப் பிடிக்காத ஏதென்ஸ்—கும்பல் அவற்றைப் பிடுங்கி அழித்து விடாதவண்ணம் அவர்கள் அவற்றைப் பத்திரப்படுத்திஞர்களென்றும் கூறப்படுகிறது. பத்திரப்படுத்தியவர்கள் மாண்டுபோயினர். பற்பல ஆண்டுகளுக்குப் பிறகு மக்கிய நிலையில் அவை கண்டுபிடிக்கப்பட்டுப் பதிப்பிக்கப்பட்டனவாம்.

அரிஸ்டாடிலின் நூல்கள் சிலவற்றில் முன்னுக்குப்பின் முரணுன கருத்துக்கள் இருக்கின்றன. அதற்கு இரண்டு காரணங்கள் சொல்லலாம். அரிஸ்டாடில் சிந்தனை செய்து எழுதப் புகாத விஷயமே இல்லை. அனுபவம் ஏற ஏற, சார்ந்த விஷயங்கள் பலவற்றைப் பயிலப் பயில, கருத்துக்களும் மாறியிருக்கலாம். தவிர அவர் எழுதிய நூல்கள், பெரும்பாலும், கழகத்தில் உரை நிகழ்த்துவதற்காகவே எழுதப் பட்டவை. அவைகளும் ஒன்றிரண்டு அல்ல ; நூற்றுக்கணக்கானவை. அவற்றை ஆசிரியரே கண்காணித்துப் பதிப்பிக்காததால், பிறகு பதிப்பித்தவர்கள் அரிஸ்டாடில் மூலையில் எழுதிவைத்த சிறு குறிப்புகளைக் கூட அவரது தேர்ந்த முடிவான சிந்தனைகளென்று தவருகக் கருதிச் சேர்த்துப் பதிப்பித்திருக்கவும் இடமிருக்கிறது.

இப்போது நமக்குக் கிடைத்திருக்கும் அரிஸ்டாடில் நூல்கள் எல்லாமே அநேகமாக அவர் பதிப்பித்தவை அல்ல. அவர் எழுதிய "அரசியல்", "ஞான இயல்" என்ற இரு நூல்களும், அவர் விட்டுச் சென்ற குறிப்புகளிலிருந்து, அவரது சீடர்கள் தொகுத்தவையே. அவரது நூல்கள் சிலவற்றில், வியக்கத்தக்க ஒருமைப்பாடும், கோவையும் காணப்படுகின்றன. "வேருெருவர் பார்த்துப் பரிசீலனை செய்து பதிப்பித்தால் இப்படி இருக்கமுடியும்" என்று கருதுவோரும்

உண்டு. இதற்கு மாருக, அவரது நூல்களில் காணப்படும் முரண்பாடுகளுக்குத்தான், பதிப்புத் தவறுகள் காரணம் என்போர் சிலர். நிஜமாக அரிஸ்டாடில் எழுதிய நூல்கள் எவை என்று காண முடியவில்லையே என்ற ஏக்கமும் சிலர் பால் இருக்கிறது. ஆனுல், ஒன்றுமட்டும் நிச்சயம். 'அரிஸ்டாடில்' என்ற பெயர் தாங்கி வெளிவந்துள்ள நூல்களிலெல்லாம் அவற்றில் ஒரு சிலவற்றை எழுதியவரின் எழுதுகோல் வேறுபட்டிருக்கலாமேயன்றி, அவை எல்லாவற்றிலும், ஒரே பேரறிஞரின் இதய ஒலிதான் கேட்கிறது. வால்ட் விட்மன் என்ற கவி சொன்னுர் :—

"இது ஒரு நூல் அல்ல அன்பா !... இதைத் தொடுபவன்
மனித இதயத்தையே தொடுகிருன்."

ii) ஒலியும் ஒளியும்

அரிஸ்டாடிலின் நூல்களை ஒவ்வொன்ருக ஆராய்வதற்கு முன்னதாக அவரது எழுத்துக்கள் எப்படி ஒலிக்கின்றன, அவை வீசும் ஒளி எத்தகையது என்று பொதுப்படையாகக் காணவேண்டுவது அவசியம். இதற்கு அறிஞரையும், அவரது ஆசிரியரையும் இணைத்துப் பார்க்கவேண்டும். பிளேட்டோவும், அரிஸ்டாடிலும். ஒரு சிறிது பார்ப்போம்.

பிரபலமான குருவுக்குப் பல சீடர்கள் இருப்பார்கள். அவர்களில் யாராவது ஒருவர்தான் ஆசானுக்கு உகந்த சீடராக அமைவார். ராம கிருஷ்ண பரமஹம்ஸருக்கு ஒரு விவேகாநந்தர் தான் பிரபல சீடர். மஹா வித்வான் மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களின் சீடர்களில் டாக்டர் ஐயரவர்களைத்தான் உலகம் என்றும் நினைவிலிருத்திக் கொள்ளும். அதேபோலத்தான் ஸாக்ரடீஸுக்குப் பிளேட்டோ! பிளேட்டோவுக்கு அரிஸ்டாடில்! பிரபலக் குருவிடம் பயிலச் செல்லுவோருக்கு இரு அனுபவங்கள் ஏற்படலாம். ஆசிரியரின் திறனில் தம்மையும் மறந்து மூழ்கி எல்லையற்ற அன்பும், மரியாதையும் ஏற்படலாம். வியர்சனத்துக்கு அப்பாற்பட்ட மரியாதை அது. ஸ்ரீ மீனுட்சிசுந்தரம் பிள்ளையவர்களை முதன்முதல் கண்டதும், தெய்வ சந்நிதானத்திலிருப்பதைப் போன்ற உணர்வு தமக்கு ஏற்பட்டதாக டாக்டர் சாமிநாத ஐயரவர்கள் குறிப்பிட்டிருக்கிருர்கள். இப்படியல்லாமல், ஆசிரியரை விமர்சனம் செய்துகொண்டே, அவரது சிந்தனைகளை நுணுகி ஆராய்ந்துகொண்டே இருக்கும் சீடர்களும் உண்டு. "நீங்கள் கூறும் கடவுளை எனக்குக் காட்ட முடியுமா?" என்று அச்சமின்றி வெளிப்படையாக ராமகிருஷ்ணரைக் கேட்டார் நரேந்திரர். ஸாக்ரடீஸின் சிஷ்யர் பிளேட்டோ முதல் ரகத்தைச் சேர்ந்தவர். பிளேட்டோவின் சீடர் அரிஸ்டாடிலோ இரண்டாவது ரகத்தைச் சேர்ந்தவர்!

அரிஸ்டாடிலின் சிந்தனைகளில் பெரும் பகுதி, பிளேட்டோவின் கொள்கைகளைக் கண்டனம் செய்வதாக இருக்கிறது. காரணம், இரண்டுபேருடைய முறைகளும் வெவ்வேருனவை. பிளேட்டோ ஒரு லட்சியவாதி. "லட்சியப் பொருளே மெய்ப்பொருள்" என்று அறை கூவியவர் அவர். "வெளிப்பார்வைக்கு மெய்யென்று தோன்றும் பொருள்களும் சரி, விஷயங்களும் சரி, மெய்ப்பொருள்கள் அல்ல. அவை குற்றமற்றவையாக வேண்டுமானுல் இருக்கலாம். எந்தத் துறையிலும்,

லட்சியப்பொருள்தான் மெய்ப்பொருள்" என்ற அடிப்படையில்தான் பிளேட்டோ தமது குடியரசை எழுதினர். இலட்சிய ராஜ்யமொன்றைச் சமைத்தார். (எழுத்தில்தான்!) அரிஸ்டாடிலுக்கு இந்த "இலட்சியவாதம்" உகந்ததாகப் படவில்லை. "நாம் காணும் பொருள் ஒவ்வொன்றிலும் மெய்ப்பொருளின் அம்சம் இருக்கிறது. காணுத ஒன்றை இலட்சியமென்று தேடித் தேடி அலைவது வீணர் தொழில். கண்டவற்றில் மெய்ம்மை காண்பதே அறிவு" என்ற அடிப்படையில் அரிஸ்டாடில் தமது சிந்தனைக் கோட்டையை எழுப்பினர். பிளேட்டோ லட்சியவாதி; அரிஸ்டாடில் நிதர்சனவாதி.

இந்த வித்தியாசத்துக்கு நாம் காரணம் தேடி அலைய வேண்டியதில்லை. அரிஸ்டாடில், சிறுவயதில், தமது தந்தையின் மேற்பார்வையில் மருத்துவக்கலை பயின்றுரென்று கூறினேம். விஷயங்களை நேரில் கண்டு உண்மை நிலவரத்தை நிதர்சனமாக உணர்ந்து முடிவுக்கு வரும் மனப்பண்பு இளமையிலேயே அவரிடம் ஊறிவிட்டது. பிளேட்டோவிடம் அவர் வந்து சேர்ந்தபோது பிளேட்டோவின் போதனைகள், இவைதான்: "குறிப்பிட்ட பொருள்களில் உண்மை இல்லை. பொது இலட்சியங்களே மெய்ம்மையின் உறைவிடம். காணும் பொருளிலல்ல; காணுததொரு லட்சியத்தில்…" காணும் வண்ண அழகிற்கு மேலானதொரு செளந்தரியத்தைப் பிளேட்டோ தேடிக்கொண்டிருந்தார். நேரில் உள்ள நன்மைகளுக்கெல்லாம் மேலானதொரு லட்சிய நன்மையை அவர் நாடி அலைந்தார். இந்த மனப்பாங்கு அரிஸ்டாடிலுக்கு உகந்ததாக இல்லை. அவருக்கு நேரில் கண்டறிவதில் நம்பிக்கை உண்டு; காணும் பொருள்களில் நம்பிக்கை உண்டு; அனுபவத்தில் நம்பிக்கை உண்டு. "கூர்ந்து கவனி; ஒத்திட்டுப்பார்; முடிவுக்கு வா" என்பவையே அவர் சிந்தனைகளின் அஸ்திவாரம். பிளேட்டோவின் பாதையிலிருந்து அரிஸ்டாடில் இந்த இடத்தில் வேறு வழி புகுந்தார்.

தமது வழியே செல்லவும் அவருக்கு வகையிருந்தது. பிளேட்டோவுக்கிருந்த வசதிகளைவிட அவரது சீடருக்கு எவ்வளவோ அதிகம். உலகிலேயே வீறுகொண்டெழுந்து நின்ற மன்னர் மன்னனின் இடையருத உதவி அவருக்குப் பன்னிரெண்டு ஆண்டுகள் கிடைத்தன.

இவ்வுலகைப் பற்றிய சிந்தனைகள் மட்டுமின்றி, உலகிற்கு அப்பாற்பட்ட விஷயங்களைப் பற்றியும் அரிஸ்டாடில், பிளேட்டோவுடன் கருத்து வேற்றுமை கொண்டார். உலகைக் கடவுளர், காலச் சக்கரத்தின் ஏதோ ஒரு சுற்றில் உண்டாக்கினர்களென்றும், ஒவ்வொரு மனிதனின் செயல்களையும் வானவர் கண்காணித்து வருகிறுர்களென்றும் பிளேட்டோ நம்பினர். "இல்லாவிட்டால் ஒன்று, கடவுள்களுக்கு, அவ்வாறு கண்காணிக்கச் சக்தியில்லை என்று பொருள்; அல்லது கண்காணிக்கச் சோம்பல் என்று பொருள். இரண்டும் ஒப்புக்கொள்ளும்படி இல்லை" என்பது பிளேட்டோவின் வாதம். அரிஸ்டாடில் இதை ஒப்புக்கொள்ளவில்லை. நாம் வாழும் உலகு ஒரு காலத்தில் ஆண்டவனுல் படைக்கப்பட்டது என்பதை அவர் ஒப்பவில்லை. "உலகிற்கு ஆதியும் இல்லை; அந்தமுமில்லை" என்பது அவர் சித்தாந்தம். புலனறிவுக்குத் தக்கவாறு உயிரினங்களைப் பாகுபாடு செய்தவர் அவர். இந்த முறைப்படி பார்க்குமிடத்துப் 'பல்வேறு கடவுளர் இடைவிடாமல் உலகில் நடைபெறும் எல்லாக் காரியங்களையும் கண்காணித்து

வருவார்கள்' என்பதை அவர் நம்பவில்லை. அரிஸ்டாடில் எழுதிய பல நூல்களுக்கு இந்தக் கருத்து வேற்றுமை அடிப்படையாக அமைந்தது.

பிளேட்டோவும் அரிஸ்டாடிலும்

இந்த அடிப்படை வேற்றுமையின் பிரதிபலிப்பு அவர்களது எழுத்துக்களில் தெளிவாகத் தெரிகிறது. விஞ்ஞான மனப்போக்கில் ஊறிப்போன அரிஸ்டாடில், பகுதி பகுதியாகப் பிரித்து, பல்வேறு அங்கங்களின் கீழ் தமது சிந்தனைகளை எழுதினர். பிளேட்டோவின் இலட்சியவாதம் அவரது எழுதுகோலுக்கு இறக்கைகளையே கொடுத்தது. நிதர்சனத்தைப் பற்றி பிளேட்டோவுக்கு அக்கரையில்லை. காணாத ஒன்றை—அதைக் காண்போமென்ற நிச்சயம் சற்றும் இல்லாத போதும்—தேடி அலையும் கவிஞனின் எழுத்து, பிளேட்டோவின் நூல்கள். காண்போமென்ற உறுதியுடன், நிதானமாகப் படிப்படியாக ஆராய்ந்து பார்க்கும் விஞ்ஞானியின் எழுத்து, அரிஸ்டாடிலின் நூல்கள். பிளேட்டோ கற்பனை மண்டலத்தில் சஞ்சரிக்கும் போது, அரிஸ்டாடில் மெதுவாக, ஒவ்வொன்ருகத் தாம் கண்டவற்றைச் சேர்த்து எழுதிக் கொண்டிருக்கிருர். தமது கற்பனையின் எல்லைக் கோட்டில் கண்ட இலட்சிய ராஜ்பத்தைப் பிளேட்டோ வர்ணிக்கும்போது, அரிஸ்டாடில், நல்ல வாழ்க்கைக்குத் தேவையான சாதனங்கள் என்னென்ன என்று ஒவ்வொன்ருக விரலை மடக்கிக் கற்றுக்கொடுக்கிருர். பிளேட்டோ உணர்ச்சி பொங்க எழுதும்போது, அரிஸ்டாடில், உணர்ச்சியற்ற குரலில் பாடம் சொல்லுகிருர். பிளேட்டோ ஒரு கவிஞன். அரிஸ்டாடில் ஒரு விஞ்ஞானி!

அரிஸ்டாடில் எழுதப்புகுந்தபோது, பிளேட்டோவின் சிந்தனைகளை அலட்சியம் செய்து விடவில்லை. பிளேட்டோவின் இலட்சியவாதத்தைச் சற்று மிதப்படுத்திஞர். அத்துடன், தாம் நேரில் கண்டறிந்த உண்மைகளையும் சேர்த்து வழங்கிஞர். அதனுல் அரிஸ்டாடிலின் எழுத்துக்களில், விரிவும், விமர்சனமும் இருந்தபோதிலும், வேகம் இல்லை; கவர்ச்சி குறைவு. “பிளேட்டோ செய்த தவறுகள், செய்யமுடியாத

தொன்றைச் செய்து பார்க்க விழைந்த இளைஞனின் தவறுகள்; அரிஸ்டாடிலின் பிழையோ, பழகிப்போய் விட்ட விருப்பு வெறுப்புக்களை நீக்கமுடியாத முதியவனின் பிழை" என்கிறார் தற்கால அறிஞரான பெர்ட்ரண்ட் ரஸ்ஸெல்.

ஆனால், அரிஸ்டாடிலின் எழுத்துக்களில், உணர்ச்சி இல்லாவிட்டாலும் உண்மை இருந்தது; கவித்துவம் இல்லாவிட்டாலும் கலை இருந்தது; அழகு இல்லாவிட்டாலும் ஆராய்ச்சி இருந்தது. பிளேட்டோ ஒரு லட்சியவாதி; அரிஸ்டாடில் விஞ்ஞானி என்று கூறினோம். பிளேட்டோ விண்ணகத்தே விசும்பிப் பறக்க நினைத்தார். அரிஸ்டாடில் மண்ணகத்தே மாண்புற வாழ வழிகாட்டினார். புரட்சிவாதிகள், லட்சியவாதிகள், மாயாவாதம் இவற்றிற்கெல்லாம் தந்தை பிளேட்டோ. விஞ்ஞானம், தர்க்க வாதம் மிதவாதிகள் இவற்றிற்கெல்லாம் வழிகாட்டி அரிஸ்டாடில். கிரேக்க மக்களைப் பொதுவாக இரண்டு வகையாகக் கூறலாம். உணர்ச்சி வசத்தினராய், மாயாவாதிகளாய், மதப்பற்றுடையவர்களாய் மறுமையில் அக்கறை கொண்டிருந்தனர் ஒரு சாரார். சஞ்சலமற்று, இம்மையில் கவனம் செலுத்தி, உலகப்போக்கில் ஈடுபட்டவர் மற்றொரு சாரார். பிளேட்டோவும் அரிஸ்டாடிலும், இந்த இரு பிரிவுகளுக்கும் சரியான எடுத்துக் காட்டுகள்.

அரிஸ்டாடிலின் சிந்தனைகளை அறிந்துகொள்ள வசதியாக இருக்கும் பொருட்டு இந்த ஒப்புமையே யன்றி, "இருவரில் யார் சிறந்தவர்?" என்ற பொருளற்ற கேள்விக்கு விடை காண்பதற்கு அல்ல. இவ்வாறு நான் இங்கு குறிப்பிட்டதற்குக் காரணம் "இருவரில் சிறந்தவர் யார்? கலைஞரா? விஞ்ஞானியா?" என்ற பொருள் இன்னமும், பள்ளிக்கூட மேடைகளில் விவாதிக்கப்பட்டு வருவதுதான்!

பாகம் ஒன்று—**அறிவியல்**

"நமக்குத் தெரிந்தது எது? தெரியாதது எது? என்பதை அறிந்து கொள்வதே உண்மையான அறிவு"

—சீன ஞானி கன்ஃபியூஷியஸ்

அரிஸ்டாடிலை அறிவியற்கலையின் தந்தை என்று உலகம் போற்றுகிறது. உறங்கிக் கிடந்த விஞ்ஞான உணர்வைத் தட்டி எழுப்பியவர் அரிஸ்டாடில்.

கிரேக்க நாகரிக வளர்ச்சியின் முதற்படியிலேயே, விஞ்ஞானம் பற்றிய—அதாவது பௌதிகம், அகில அண்டம், உயிரினங்கள் பற்றிய—சிந்தனைகள் அறிஞர் மனதில் எழுந்தன. ஆனால், இவை ஒன்றும் முன்னேற முடியாதபடி பலர் பார்த்துக்கொண்டார்கள். அவர்கள் தாம் கிரேக்கக் கடவுளர்! எந்தப் பொருளை எடுத்துக்கொண்டாலும், வானவரின் செயல்களுடன் சம்பந்தப்படுத்தாமல், காரண-காரிய ரீதியாகப் பார்த்து விடை காண்பதற்கே ஒருவரும் முயலவில்லை—முயலும் நிலையிலும் அன்றையச் சமுதாயம் அவர்களை விட்டு வைக்கவில்லை. எல்லாச் செயல்களும், வானுலகத் தேவர்களின் கட்டுப்பாட்டுக்கு—நேரடியான மேற்பார்வைக்கு—உட்பட்டதென்ற நம்பிக்கை

ஆலினும் பலமாக வேரூன்றியிருந்தது. அதனுல், ஒன்றிரண்டு பேர், அறிவியல் துறையில் மேற்கொண்ட முயற்சிகளும் அப்படி அப்படியே நின்று போயின. அவற்றை ஒருசேர இணைத்து, அவற்றுடன் மேலும் தொடர்ந்து சென்ற பெருமை அரிஸ்டாடிலேயே சாரும்.

அறிவியல் துறையில் அரிஸ்டாடில் எழுதிவைத்த புத்தகங்கள் மிகப்பல. "பௌதிகம்", 'வான வெளியிலே", "வளர்ச்சியும் அழிவும்", "பூகற்ப நூல்", "இயற்கை சாஸ்திரம்", "ஆன்மாவைப் பற்றி" "விலங்கின உறுப்புகள்", "விலங்கினங்களின் உற்பத்தி", "விலங்கின நடமாட்டம்" ஆகியவைகளில் அவர் கூறியுள்ள கருத்துகளை இப் பகுதியில் பார்க்கலாம்.

விஞ்ஞானத்துறையில் அவரது சிந்தனைகளை மூன்று பிரிவுகளாகப் பிரித்துப் பரிசீலனை செய்யலாம். இயற்கை நூல், பௌதிகம்—வான சாஸ்திரம் மனோதத்துவம் என்ற மூன்று பிரிவுகளாக அரிஸ்டாடிலின் அறிவியல்-சிந்தனைகளைப் பகுத்திருக்கிறேன்.

(1) இயற்கை நூல்

அரிஸ்டாடில் இயற்கையை ஊடுருவிப் பார்த்தார். நூற்றுக் கணக்கில் விலங்கினங்களைச் சேர்த்து வைத்துக்கொண்டு அவற்றினருகில் மணிக்கணக்காக இருந்தார். ஆனுல், கவிஞனின் உணர்ச்சியோடு அல்ல; விஞ்ஞானியின் பரிசோதனை மனப்பான்மை கொண்டு. வருஷக்கணக்கில் அவர் அவ்வாறு பரிசோதனை செய்துதான், விலங்கினம், தாவர இனங்கள் இவற்றின் வளர்ச்சி, உற்பத்தி, இனத்தேர்வு ஆகியவற்றைக் குறித்து உலகிலேயே முதன்முதலாக எழுதிவைத்தார்.

அவரது பல நூல்களுள், "விலங்கினங்களின் உறுப்புகள்" என்ற நூல், பல்வேறு விலங்கினங்களின் உடலமைப்பின் பலன்களை ஆராய் கிறது. அத்துடன் உயிர் நூலின் முறை என்ன என்பதையும் விளக்கு கிறது. "விலங்கினங்களின் உற்பத்தி" என்ற நூல், உயிரினங்களின் பிறப்பு-ரகசியம் பற்றியது. உடல் நிறம், கண்கள், உரோமம் ஆகிய வற்றின் வண்ணம்—இவை வேறுபடுவதேன் என்ற கேள்விக்கு இந்த நூலில் அரிஸ்டாடில் முதன் முதலில் விடை கண்டிருக்கிறுர்.

இயற்கை நூலைப் பற்றிய அரிஸ்டாடிலின் சிந்தனைகளில் மூன்று விசேஷ அம்சங்கள் காணப்படுகின்றன.

முதலாவதாக, உயிரினங்கள் எல்லாவற்றையும்—தாவரங்கள் உட்பட—அவர் வரிசைப்படுத்துகிறுர். அந்தந்த உயிரினம் ஆற்ற வேண்டிய செயல்கள்தாம், அந்த வரிசையின் அளவுகோல். அந்த வரிசையில், மனிதன் தான் முதலிடம் வகிக்கிறுன். ஏனெனில், மனிதன் ஆற்றும் செயல்கள்தாம், மற்றெல்லா உயிரினங்களின் செயல்களைவிட மிகவும் அதிகம்—பலதரப்பட்டவை.

இரண்டாவதாக, இயற்கையில் நடைபெறும் எல்லாச் செயல் களுக்கும், அவர் குறிக்கோள் (Purpose) கற்பிக்கிறுர். விலங்கினங்கள், தாவர இனங்கள் இவற்றைப்பற்றி ஆராயும்போது, அவற்றின் ஒவ் வொரு அங்கத்தையும், அதன் குறிக்கோளைக் கொண்டே அவர் விளக்கிக் கூறுகிறுர்.

மூன்றாவதாக, உயிர்வாழ்வுதான், உலகின் மூல—உண்மை என்று அவர் கூறுகிறார். (பேரறிஞர் பெர்னார்ட்ஷா அப்படி வலியுறுத்திய "உயிராற்றல் (Life-force)" கொள்கைக்கு அரிஸ்டாடிலே மூலவேர் என்று கொள்ளலாம்). உயிர் வாழ்வனவற்றின் மாறுதல், செயல்கள் ஆகியவற்றை, உயிரற்றவற்றைப்பற்றிய ரசாயனம் போன்ற நூல்களின் கோட்பாடுகளைக் கொண்டு விளக்க முடியாது என்பது அரிஸ்டாடிலின் மூன்றாவது சித்தாந்தம்.

இப்போது, உயிரினங்களைப்பற்றிய அவரது குறிப்புக்களைப் பொதுவாகப் பார்க்கலாம்.

மூலப்பொருள்கள் மொத்தம் நான்கு என்பது அரிஸ்டாடிலின் முடிவு. நீர், காற்று, மண், தீ ஆகியவை அவை. உயிரினங்களின் உறுப்புகள் அனைத்தும் (ரத்தம், எலும்பு, தோல் போன்றவை) இந்தப் பொருள்களின் ஏதாவது ஒரு சேர்க்கைதான் என்கிறார் அவர். உறுப்புகளிலும் இரண்டு வகைகள் உண்டு. பிரித்தாலும், முன்போன்றே இருக்கும் பகுதி; (உதாரணம்: உரோமம், நகம் முதலியன). பகுக்க முடியாத பகுதிகள். (தலை, கைகால்கள் முதலியன).

தாவரங்கள், ஏற்கனவே தமக்கெனத் தயாரிக்கப்பட்ட உணவைப் பூமியிலிருந்து கிரகித்துக்கொண்டு, வளர்ந்து, குறிப்பிட்ட பருவத்தில் இன விருத்தி செய்துகொள்கின்றன என்பது அரிஸ்டாடிலின் தாவர சாஸ்திரப் பரிசோதனைகளின் முடிவு. இந்த அலுவல்களுக்கு ஏற்றபடி தான் அவற்றின் பாகங்கள் அமைக்கப்பட்டிருக்கின்றன.

ஆனால், விலங்கினங்களின் சங்கதி வேறு. அவை ஒரே இடத்தில், செடியைப் போல நிலைபெற்றிருந்தால் உணவு அவைகளுக்குத் தானே கிடைக்காது. எனவே, அவை, இரையைத் தேடி இடம் விட்டு இடம் செல்லவேண்டும். அதனால், அதற்குத் தேவையான அளவு யூகம், நினைவு, உணர்ச்சி எல்லாம் அவற்றிற்கு வேண்டும். கிடைத்த இரையை, ஜீரணம் செய்யும்படியான நிலைக்குத் தயாரித்து அவை விழுங்க வேறு வேண்டும். இதற்கெல்லாம் வசதியாக விலங்கினங்களின் உடலமைப்பு அமைந்திருக்கிறது. போஷாக்கிற்குத் தேவையான சத்துக்கள் இரைப் பையிலிருந்து பிரிக்கப்பட்டு, இரத்தமாக மாறி, உடலின் எல்லாப் பகுதிகளுக்கும் அனுப்பப் படுகிறது. சத்துள்ள பொருள்களின் சங்கதி இப்படி. அவை போக மீதி நிற்கும் சக்கை என்ன ஆவது? அது வெளித் தள்ளப் படுகிறது; இல்லாவிட்டால், உரோமம், நகம், கொம்பு போன்ற முக்கிய மற்ற உறுப்புகளின் வளர்ச்சிக்குப் பயன்படுகிறது. அந்தக் காலத்தில், கிரேக்க நாட்டில் ஒரு கருவி இருந்தது. அதை ஒரே சமயத்தில் விளக்காகவும், மாமிசம் வதக்குவதற்கும் உபயோகப்படுத்த முடியும். தீயின், ஒளி, உஷ்ணம் என்ற இரு சக்திகளும் ஒரே சமயத்தில் வீணாக்கப்படாமல் பயனாகின்றன. இதே முறையைத்தான் இயற்கையும் பெருமளவில் அனுஷ்டித்து வருகிறது, என்கிறார் அரிஸ்டாடில்.

வெளியிலிருந்து காற்றை உள்ளுக்கு இழுப்பதன் மூலம், காற்றுப் பைகள்(Lungs)இரத்தத்தைக் குளிரச் செய்கின்றன. மீன் போன்ற கடல் வாழ் ஜந்துக்களுக்கு இந்த வசதி இல்லை. அதனால்தான் அவை இயற்கையாகவே குளிர்ந்து இருக்கும்படி, நீரில் வசிக்க விதிக்கப் பட்டிருக்கின்றன. உடலில் வெப்பம் தோன்றுவது அவசியம். அதுதான் செய்

கைக்கெல்லாம் மூலகாரணம். ஆனுல், வெப்பம் அதிகமானுலும் ஆபத்து. வெப்பம் அதிகமானல், அதைத் தணிப்பதற்குத்தான் மூளை இருக்கிறது. அதனுலேயே அது குளிர்ந்த மூலப் பொருள்களால் ஆக்கப்பட்டிருக்கிறது. இரத்தத்தை அதிகப்படி குளிரச் செய்வதன் மூலம், தூக்கத்தை உண்டாக்குவதும் மூளைதான். (மூளை ஓர் உணர்ச்சி உறுப்பு என்று முந்தைய கிரேக்கச் சிந்தனையாளர்கள் கூறியதை அரிஸ்டாடில் மறுத்தளித்து, இதயமே உணர்ச்சி-உறுப்பு என்று கூறினுர்)

''ஆனுல், பார்வை, கேட்டல், நுகர்தல் ஆகியவற்றுக்கான புலன்கள் தலையில் அமைந்திருப்பது ஏன்?'' என்ற கேள்வியைப் போட்டுக்கொண்டு அவரே பதில் சொல்லுகிருர். ''இவை மிகவும் நுண்ணிய-உணர்ச்சிகள். அதனுல் அவை, இருதயத்திலிருந்து எவ்வளவு தொலைவில் இருக்கமுடியுமோ அவ்வளவு தொலைவில் இருக்கின்றன. இல்லாவிடில், எல்லா உணர்ச்சிகளுக்கும் இருப்பிடமான இதயம், தனது உஷ்ணத்தினுல் அந்த நுண்-புலன்களைக் கெடுத்து விடும்.''

'விலங்கினங்களின் சரித்திரத்'தில், ''குரங்குகள், மனிதனுக்கும், இதர விலங்குகளுக்கும் இடைப்பட்ட தரத்தவை'' என்று அரிஸ்டாடில் கூறுகிருர். வாழ்வின் முறையை வகுப்பது அருந்தும் உணவே என்கிருர் அவர். (மரக்கறி உணவே புலவர்களுக்கும், தத்துவஞானிகளுக்கும் உகந்தது என்றும், மரக்கறி உணவுதான் நீண்ட நேரம் களைப்பின்றி உழைக்கும் சக்தியைக் கொடுப்பது என்றும் கூறிய பெர்ஞர்டு ஷாவின் கருத்தை ஒப்பு நோக்குக). 'விலங்கினங்களின் உற்பத்தியில்', எவ்வளவுக்கெவ்வளவு ஓர் உயிரினம் அபிவிருத்தி அடைந்திருக்கிறதோ, அத்தனைக்கத்தனை அதன் சந்ததிகளின் எண்ணிக்கை குறையும்' என்று அரிஸ்டாடில் கூறுகிருர். (இதற்கு இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு, ஹெர்பர்ட் ஸ்பென்ஸர், இதை ஒத்த தேற்றமொன்றைக் கண்டுபிடித்தார்).

இனி, அரிஸ்டாடிலின் ''உயிரினங்களின் தர-வரிசை முறைக் கொள்கையை'' ப் பற்றிப் பார்க்கலாம். உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாவற்றையும், படிப்படியாக உயர்ந்து செல்லும் படிவரிசைக்கு ஒப்பிடலாம் என்பது அவர் கருத்து. கீழ்வகை உயிரினங்களிலிருந்து, மிக உயர்ந்த வகை வரையில், அமைப்பிலும் சரி, உணர்விலும் சரி, வாழ்க்கை முறையிலும் சரி; இனவிருத்தி முறையிலும் சரி ஒன்றைவிட மற்ருென்று சற்றே உயர்ந்த, சீரான வரிசை காணப்படுகிறது. ஆனுல், ஒன்றிற்கும் மற்ருென்றிற்கும் இடையே உள்ள படி வித்தியாசம் மிகக் குறைவு.

''உயிரற்றவைகளிலிருந்து, இயற்கை மிக மிக மெதுவாக, விலங்கு உயிரினங்களை அடைகிறது. எந்த இடத்தில், உயிரற்றவையிலிருந்து உயிர் தோன்றியது என்று திட்டமாகச் சொல்ல முடியாதபடி, இந்த முன்னேற்றம் அவ்வளவு மெதுவாக இருந்திருக்கிறது···உயிரற்றவைகளுக்கு அடுத்தபடியாகத் தாவர இனங்களைச் சொல்லலாம். அவற்றிலும் ஒன்றுக்கொன்று வித்தியாசமிருக்கிறது··· விலங்குகளோடு ஒப்பிடும்போது அவைகளுக்கு உயிரில்லை என்று தோன்றினுலும், தல்,

மண் போன்ற அசேதனப் பொருள்களுடன் ஒப்பிடும்போது, உயிர் இருப்பது தெரிகிறது...உணர்ச்சியை எடுத்துக்கொண்டால், சில விலங்குகளுக்கு அது இருப்பதன் அறிகுறியே இல்லை ; வேறு சில வகை விலங்குகளிலோ உணர்ச்சி தெளிவாகத் தெரிகிறது—எனவே, உயிர்—அளவிலும் சரி, இயங்கும் திறனிலும் சரி, உயிரினங்கள் அனைவற்றிலும், தரப்படுத்தியதோர் வரிசை நெழுபோடுகிறது..." ('விலங்கினங்களின் சரித்திரம்').

செடிகளுக்கும், மரங்களுக்கும், போஷணை ஊட்டிக்கொள்ளுவ தற்கும், வளர்வதற்கும், இனவிருத்தி செய்வதற்கும் தான் முடியும். கருவிலுள்ள விலங்குகளும் அதே மாதிரிதான். அவற்றிற்கு வளரத்தான் முடியும். ஆனால் வளர்ச்சியடைந்த விலங்கு அப்படியல்ல. அது அங்கு மிங்கும் செல்லக்கூடும். ஆசை, துயரம், மகிழ்ச்சி, இன்பம் ஆகிய உணர்ச்சிகளும், ஓரளவுக்கு ஞாபகசக்தியும் அவற்றிற்கு உண்டு. மனித னுக்கு இவற்றையெல்லாம் மேலானதொரு சக்தி—பகுத்தறிவு—உண்டு. அதனால், உயிரினங்களின் தர வரிசையில் மனிதன் மேல் படியில் இருக்கிறான்.

இந்தத் தர வரிசையில், ஒற்றுமை எவ்வளவு வியக்கத்தக்கதாக இருக்கிறதோ, அதே அளவுக்கு வேற்றுமையும் இருக்கிறது. வேற்று மையில் ஒருமைப்பாடு—ஒற்றுமையில் வேறுபாடு என்பதே இயற் கையின் தத்துவம்.

[அரிஸ்டாடில், இவ்வாறு உயிரினங்களின் தர வரிசையைக் கண்டு ணர்ந்தாலும், டார்வின் ஆராய்ந்த பரிணாமத் தத்துவத்தை ஏன் முன்பே அரிஸ்டாடில் காணவில்லை என்பதே வியப்பாக இருக்கிறது என்று பலரும் கூறியிருக்கிறார்கள். எல்லா உயிர்களும் தகுதியுள்ள வற்றின் தேர்வினாலேயே உயிர்வாழ்கின்றன என்று எம்பிடாக்ளீஸ் கூறுவதை அரிஸ்டாடில் மறுதளிக்கிறார்.]

அரிஸ்டாடிலின் இயற்கை நூல் ஆராய்ச்சியில் மற்றொரு முக்கிய விஷயம், அவரது, கருவுயிர்பற்றிய ஆராய்ச்சியாகும். அரிஸ்டாடிலுக்கு முன்னமேயே ஹிப்பாக்கிரிடஸ் என்பவர், அடைகாக்கப்படும் முட்டை களைப் பல்வேறு படிப்படியான தருணங்களில் உடைத்துப்பார்த்து, "உயிரின் மூலம்" என்ற நூலை எழுதிவைத்தார். இதே முறையை அரிஸடாடிலும் பின்பற்றிக் கணக்கற்ற பரிசோதனைகளின் பின்னர், கோழிக்குஞ்சின் வளர்ச்சி பற்றிக் குறிப்புகள் தயாரித்தார்.

இது தவிர, பாரம்பரியத்தைப் பற்றிய சில பிரச்னைகளும் அவர் சிந்தனையில் இடம் பெற்றன. "கிரேக்க மாதொருத்தி நீக்ரோ ஒருவனை மணந்தாள். அவர்களுக்குப் பிறந்த குழந்தைகள் சங்கைப்போல வெண் மையாகவே இருந்தன. ஆனால், பேரப்பிள்ளைகள் கறுப்பாக ஜொலித் தன : நடுவில் அந்தக் கறுப்பு நிறம் எங்கே ஒளிந்து கொண்டிருந்தது ?" என்று அவர் கேட்கிறார். [அரிஸ்டாடில் போட்ட இந்தக் கேள்விக்குறி பல நூற்றாண்டுகள் அப்படியே நிலைத்து நின்றது. கடைசியில் சென்ற நூற்றாண்டில் கிரகர் மெண்டெல் அதை அழித்து விடை கண்டார். கேள்வி கேட்டு விட்டு விட்டாரே அரிஸ்டாடில் என்று அலட்சியப் பார்வை பார்க்கக் கூடாது. "கேள்வி கேட்கத் தெரிவதே பாதி தெரிந்து கொண்டாற்போல" என்று லத்தீன் மொழியில் பழமொழி ஒன்று உண்டு !]

அரிஸ்டாடிலின் இயற்கை நூல் சித்தாந்தங்களில் உண்மைக்குப் புறம்பானவை பல உண்டு. (உதாரணம்: இருதயம், மூளை முதலியவற்றிற்கு அவர் அளிக்கும் விளக்கம்). ஆனுல், அதே சமயத்தில், மிகப் பெரிய உயிர் நூல் தத்துவங்களுக்கு அடிப்படை எழுப்பியவர் அவர். இயற்கை சாத்திரத்தில், விரிவான, திட்டவட்டமான ஆராய்ச்சி மேற்கொள்ளக் கற்றுக்கொடுத்தவர் அவரே. அவரது இயற்கை-நூல் ஆராய்ச்சியின் முக்கிய விளைவு ஒன்றுண்டு. அரிஸ்டாடிலுக்கு முன்பிருந்த சிந்தனையாளர்கள், விலங்குகளைத் துச்சமாக மதித்தார்கள். அவர்களது சிந்தனைகளெல்லாம் மனிதன், (அடிமைகள் அல்லாத மனிதர்கள் தான்!) கடவுள், அண்டத்துக்கும் மனிதனுக்குமுள்ள சம்பந்தம், இவற்றைப் பற்றியே இருந்தன. இயற்கை-நியதியில் மனிதனுடைய சக-ஜீவிகள் தாம் விலங்குகள் என்ற கருத்தை முதன் முதலில் வழங்கியவர் அரிஸ்டாடில். விலங்குகளுக்கும் உணர்ச்சி உண்டு; மனிதனிடத்தும் ஓரளவு மிருக-உணர்ச்சி உண்டு என்ற உண்மையை நிதர்சனமாகக் கண்டு கூறியவர் அவரே. இந்த உண்மை நிலைத்திருக்கும் வரை, அவரது உயிர் நூல் ஆராய்ச்சியும் பலனற்றதாக ஆகாது.

ii) பௌதிகம்—வான நூல்

(அரிஸ்டாடில் எழுதிய பல நூல்கள் 'பௌதிகம்' என்ற தலைப்பின் கீழ் வருகின்றன. 'பௌதிகம்' என்று அவர் எதைக் குறித்தார் என்பதை முதலில் தெரிந்துகொள்ள வேண்டும். நிதர்சனமாகக் காணும் பொருள்களுடைய இயற்கையே (Movement) 'பௌதிகம்' என்ற பெயரால் அவர் பொதுவாகக் குறிப்பிடுகிருர். உயிருள்ளவற்றிற்கும், பிறவற்றிற்கும் உள்ள வித்தியாசம் குழந்தைக்கும் தெரியும். "உயிருள்ளவை தாமே நகரக்கூடியவை; உயிரற்றவை நகரா" என்பதுதான் அவரது 'பௌதிகத்தின்' அடிப்படை. ('எல்லாப் பொருள்களும், இடையருது ஒரே போக்கில் இயங்கிக்கொண்டே இருக்கும் இயல்புடையவை என்றும், ஏதாவது ஒரு விசை தடுத்து நிறுத்திஞல்தான் அவை இயக்கத்தை நிறுத்துமென்றும் பிறகு நியூடன் ஆராய்ந்து கண்டார்.)

இப்போது அரிஸ்டாடிலைப் பார்ப்போம். பௌதிகம் என்பது, இயற்கையை உணர்ந்து கொள்வது என்கிருர் அவர். "அதை அறிந்து கொள்வது, உண்மை அறிவின் மீதுள்ள அவாவிஞல் தானேயன்றி, அதைக் கற்றதால் இயற்கை சக்திகளை மனிதன் வசப்படுத்திக்கொண்டு விட முடியாது". 'இயற்கை' என்பது, மனிதனுலோ சூழ்நிலையாலோ மாற்றப்படுவதற்கு முன்பு, முதன்முதலில் பொருள்கள் இருக்கும் தன்மை; வெளிச் சக்தியாலன்றித் தானே இயங்கக்கூடிய சக்தி; அவ்வாறு இயங்கக்கூடிய பொருள்களின் மொத்த எண்ணிக்கை, இவற்றைக் குறிக்கும். அதனுல், 'பௌதிக நூல்' என்பது விரிவானதொரு கலையாகும். "பூகற்ப நூலி"ன் முகவுரையில் அரிஸ்டாடில் கூறுவது, பௌதிக நூலைப் பற்றிய அவரது கருத்தை நன்கு காட்டுகிறது.

"......இயற்கை இயக்கத்தைப் பற்றி நாம் பார்த்தோம்...வான வெளியில் உலாவும் விண்மீன்களைப் பற்றியும், மூலப் பொருள்களின் வகைகள், மாற்றம், அழிவு இவற்றையும் பார்த்தோம்...வானிலை நூல் என்று முன்னேர் அழைத்த சாஸ்திரத்தையும் பரிசீலனை செய்து, உயிரினங்கள் அனைவற்றையும் பார்த்தறிந்தால், நமது நூலறிவு ஒருவாறு முடிந்ததென்று சொல்லலாம்....."

உயிரினங்களைப் பற்றித் தனியே பார்த்துவிட்டோம். எனவே, அவை நீங்கலாகப் பிறிதுள்ளவற்றை இங்குபார்க்கலாம். அதற்கு முன்பு, அரிஸ்டாடிலுக்கு முன்பு பௌதிகக் கலை எந்த அளவுக்கு முன்னேறியிருந்த தென்பதைச் சுருக்கமாகத் தெரிந்துகொள்ள வேண்டும்.

மிலிடஸ் சிந்தனையாளர்கள், (இவர்களைப் பற்றித் தோற்றுவாயில் கூறப்பட்டது) சூரியனும், விண்மீன்களும் வெறும் நெருப்புக் கோளங்களே என்றும், உலகம் முழுவதும் ஏதாவது ஒரு மூலப்பொருளால் ஆக்கப்பட்டதென்றும், கூறினர்கள். சாதாரண—தெய்வீகமல்லாத—பொருள்களின் அடிப்படையில் விளக்கம் கூறத் தொடங்கியது இவர்களே.

அனெக்ஸகோரஸ் (Anaxagoras) என்ற அறிஞர், எந்தப் பொருளையும், இடையறாது, சிறுசிறு பாகங்களாகப் பகுக்கலாமென்று கண்டார். கிரகணங்களைப் பற்றிய உண்மைக் காரணத்தையும் அவர் கண்டார். கூடுமானவரையில், மாயாவாத முறையில் அல்லாமல், பொருள்வாத முறையை அனுஷ்டித்தார் அனெக்ஸகோரஸ்.

லூஸிப்பஸும், டெமாக்ரடிஸும், இதை மேலும் விஸ்தரித்தார்கள். எல்லாப் பொருள்களும் அணுக்களால் ஆனவை. அணுக்களைப் பகுக்க முடியாது. அழிக்கவும் முடியாது. அவை என்றென்றும், ஆதியும் அந்தமுமின்றி இயங்கிக்கொண்டே இருக்கின்றன; அந்த இயக்கத்தில் அவை ஒன்றுடன் ஒன்று மோதிப் பல பொருள்களும், இறுதியில் உலகங்களும் தோன்றுகின்றன. இவ்வாறு பல உலகங்கள் தோன்றி, நின்று, மறைகின்றன—ஓடும் நீரின் குமிழ்கள் போல. அண்டத்திலே, எல்லையற்றதோர் சூனிய வெளி இருக்கிறது. அதில், ஒரே வெறுமை தான். (சூன்யந்தான்) அங்கு திக்குத்திசை ஏதுமில்லை. காற்றடிக்காத போது, ஜன்னல் வழியே சூரியக் கிரணம் விழுந்துகொண்டிருக்கையில், அதற்கிடையே சிறுசிறு தூசிகள் இடையறாது இங்குமங்கும் அலைந்து கொண்டிருப்பது போல, அணுக்களும் திரிந்து கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட இயக்கம் நிறைந்த அண்டத்தில், தற்செயலாக நிகழ்வதென்று எதுவும் இல்லை. ஒவ்வொரு காரியத்துக்கும் ஒரு காரணம், ஒரு தேவை உண்டு. ஆனால் ஒரு குறிக்கோள் கருதி எதுவும் நிகழ்வது இல்லை. எல்லையற்று நிற்கும் வெறுமை, இயந்திர-விதிகளை அனுசரித்துச் செல்லும் அணுக்கள்—இவையே அண்டம். இவையே அரிஸ்டாடிலுக்கு முன்பு கண்டுபிடித்து வழங்கப்பட்ட, பௌதிகச் சிந்தனைகள். இவற்றில் சிலவற்றை நமது அறிஞர் ஏற்கிறார். சிலவற்றைத் தள்ளி விடுகிறார். ஒரு முக்கியமான விஷயம், அரிஸ்டாடிலுக்குக் குறிக்கோளில் நம்பிக்கை உண்டு என்பதே. இப்போது பார்க்கலாம், சற்று விரிவாக.

அரிஸ்டாடிலின் பௌதிகச் சிந்தனைகளை மூன்று அம்சங்களாகப் பிரிக்கலாம். **1) பொருள்களின் இயக்கம். 2) இயக்கத்தின் காரணம். 3) அதன் குறிக்கோள்** (Purpose).

இயக்கமே இயற்கையின் அடிப்படை என்பது அரிஸ்டாடிலின் சித்தாந்தம். "ஓர் அடிப்படைக் கொள்கையிலிருந்து தொடங்கி, இடையறாது இயங்கி, ஓர் இறுதி-வடிவத்துக்கு வரும் பொருள்களே இயற்கைப் பொருள்கள்" இதை விளக்குவதற்காக, **'உள்ளுறை இயல்பு', 'நிதர்சன இயல்பு'** என்று இரு வகைகளாக, இயல்புகளைப்

பிரித்தார். அழகிய பளிங்குக்கல் இருக்கிறது. ஒரு சிற்பி அதை அழகிய சிலையாக உருவாக்க முடியும். சிலையின் அழகு, பளிங்குக்கல்லின் "உள்ளுறை இயல்பு". ஒரு விதை மரமாக வளர முடியும். மரம் என்பது, விதையின் "உள்ளுறை இயல்பு". பள்ளியில் படிக்கும் சிறுவன், ஒரு வைத்தியனாகவோ, நடிகனாகவோ, பாடகனாகவோ, மாறலாம். இவர்களது திறமைகள், அவனவனுடைய 'உள்ளுறை இயல்பு'. இவ்வாறு வெளிப்படையாக இராமல், உள்ளுக்குள் அமிழ்ந்து கிடக்கும் இயல்பை முழுதும் வெளிப்படுத்திச் செயலாற்றிக் கொள்வதற்குத்தான் 'இயக்கம்' என்று பெயர்.

இந்த இயக்கச் சங்கிலியை ஆராயும்போது, "பொருள்" என்பதற்கும், "உருவம்" என்பதற்கும் வித்தியாசம் கற்பிக்கிறார் அறிஞர். "உருவம்" என்பது, பல பொருள்களைப் பிணைத்து வைப்பது. செங்கல், சுண்ணும்பு, மரம் முதலியவை பொருள்கள். வீடு ஓர் உருவம். பளிங்குக்கல், சிற்பியின் உளி, அவனது கலைத்திறன் ஆகியவை பொருள்கள். சிற்பம்தான் உருவம். எனவே, 'உருவம்' என்பது ஒருமைப்பாட்டைச் சாதிக்கிறது. 'பொருள்கள்' வேற்றுமையை உண்டாக்குகின்றன. இதே வேறுபட்ட பொருள்கள் ஒருமைப்பாட்டுக்கு ஏங்குகின்றன; அதை வரவேற்கின்றன. இதுதான் இயக்கத்தின் தத்துவம். உலகிலுள்ள பொருள்களை, இன்னும் சிறிய பொருள்களாகப் பகுக்கலாம். மாற்றலாம். நீர், நெருப்பு, மண், காற்று ஆகிய நான்கு மூலப்பொருள்கள்தான் பகுக்க முடியாதவை.

அரிஸ்டாடிலின் 'பௌதிகத்தில்' மற்றொரு முக்கியப்பகுதி, "சூனிய வெளியை"ப் பற்றிய அவரது கருத்துக்கள். அறிஞர் லூஸிப்பஸும், அறிஞர் டெமாக்ரிடஸும், அண்டத்தில், ஒன்றுமே இல்லாத சூன்யம் பரவியிருப்பதாகக் கூறியதாகப் பார்த்தோம். இந்தக் கருத்தை அரிஸ்டாடில் ஏற்கவில்லை. "சூனிய வெளி இருக்கிறதென்று சொன்னால், 'இடம்' என்று ஒன்று இருப்பதை ஏற்றுக்கொண்டதாகி விடும். ஏனெனில், இடமற்றதொன்று என்றுதானே சூனியவெளிக்கு வரையறை கூறவேண்டும்?" என்று கிண்டல் செய்கிறார் அவர்.

இதையடுத்து, அவர் காலத்தைப்பற்றி விவாதிக்கிறார். "காலம் என்பது இல்லையென்றே சொல்லிவிடலாம். ஏனெனில், காலம் என்பது, இறந்த காலம், நிகழ்காலம் என்ற இரண்டையும்தான் குறிக்கும். இவற்றில் ஒன்று, மறைந்து விட்டதொன்று; மற்றொன்றோ, இன்னும் தோன்றவே இல்லை!" என்று அவர் கூறிப் பிறகு இதையே மறுதளிக்கிறார். ஏனெனில் காலம் என்பது இடையறாததொரு இயக்கம். இயக்கம் இல்லாமல் காலம் இருக்கமுடியாது. ஆனால் இயக்கம் நடைபெற்றுக் கொண்டே இருக்கும்போது, காலக்கணக்கும் இருக்கத்தான் வேண்டும். இயக்கம் இருக்கும் வரையில் காலமும் இருந்துகொண்டுதான் இருக்கும். காலத்துக்கு முடிவு இல்லாததுபோல, ஆரம்பமும் இல்லை என்கிறார் அரிஸ்டாடில். (பிளேட்டோவோ காலத்துக்கு ஆதி உண்டு என்று கூறுகிறார். பிற்காலத்தில், கிறித்தவப் பாதிரியார்கள் அரிஸ்டாடிலின் கொள்கைகளை வேதவாக்காக ஏற்றபோது, இதைமட்டும் ஒப்புக் கொள்ளவில்லை.)

இதுதான் இயக்கத்தின் விளக்கம்.

இரண்டாவதாக, இயக்கத்தின் காரணத்தை அவர் ஆராயும்போது, எந்த இயக்கத்தின் காரணத்தையும் உணர்ந்துகொள்ள நான்கு விஷயங்கள் தெரியவேண்டுமென்கிறுர்: 1) பொருள். 2) உருவம். 3) இயக்கத்தின் மூலகர்த்தா. 4) அதன் குறிக்கோள். சிற்சில சந்தர்ப்பங்களில், இவைகளில் ஒன்றுக்கொன்று வித்தியாசம் காண முடியாது போனுலும், இவை நான்குதான், "எல்லாப் பொருள்களின் இயக்கமும் ஏன்?" என்ற கேள்விக்கு விடை பகரக்கூடியவை. வீடு என்பது முற்றுப் பெற்றதோர் இயக்கம். உதாரணமாக, வீடு என்ருல் என்ன வென்ருல், "செங்கல், மரம், சுண்ணும்பு முதலியவற்றைக் கொண்டு, கொத்தர்கள் மூலம், இந்தக் குறிப்பிட்ட வடிவத்தில், மனிதர்கள் வசிப்பதற்காக ஏற்படுத்தப்பட்டது" என்று வரையறை கூறலாம். இதில் அரிஸ்டாடில் கூறும் நான்கு அம்சங்களும் வந்து விடுகின்றன. "இதேபோல, எல்லா இயக்கங்களும் விடை காணக்கூடிய நூல்தான் பௌதிகம்."

மூன்ருவதாக இயக்கத்தின் குறிக்கோள். அரிஸ்டாடிலுக்கு முன்பிருந்த 'விஞ்ஞானி'கள் 'குறிக்கோள்' என்பதையே அறவே நீக்கிவிட்டார்கள். உலகில் இயற்கையில் நடக்கும் செயல்களுக்குத் தேவையோ, காரணமோ உண்டே தவிர, 'குறிக்கோள்' என்பது இல்லை—அதாவது ஒரு குறிக்கோளைக் கொண்டு இயக்கம் நிகழ்வதில்லை என்று அவர்கள் கூறினர்கள். அரிஸ்டாடில் இதைக் கண்டித்தார். இயற்கையில் நடக்கும் இயக்கங்களுக்குக் குறிக்கோள் உண்டு; குறிப்பிட்ட நோக்கத்துடனேயே இயக்கம் நிகழ்கிறது என்று அவர் கூறினர். குடியிருப்பதற்காக வீடு கட்டப்படுகிறது. மணி பார்ப்பதற்காகக் கடிகாரம் செய்யப்படுகிறது. அதேபோல இயற்கையின் எல்லா இயக்கங்களும் குறிக்கோள் கருதியே நிகழ்வன என்பதே அவர் கருத்து.

இயக்கத்தைப்பற்றி இவ்வாறு அரிஸ்டாடில் கூறிவிட்டுத், தான் இயங்காமல் பிற பொருள்களின் இயக்கத்தைத் தோற்றுவிக்கும், "இயங்கா இயக்கி" ஒன்று இருக்கவேண்டும் என்று கூறிப் 'பௌதிக நூலை' முடிக்கிறுர். அந்த "இயங்கா இயக்கியே" கடவுள்! இதைப் பற்றி 'ஞான இயலில்' விவரமாகப் பார்க்கலாம்.

இந்த "இயங்கா இயக்கி" உலகின் எல்லைக்கோட்டில் இருக்க வேண்டுமென்று அவர் கருதுகிருர். இத்துடன் "பௌதிக நூல்" முடிகிறது. இந்த இடத்தில்தான் அவரது வான நூல் தொடங்குகிறது. இவை இரண்டிலும் கூறப்பட்டுள்ளவை, தற்கால விஞ்ஞானத்தால் தவறென்று நிரூபிக்கப் பட்டவையாயினும், சுமார் 2000 ஆண்டுகளுக்கு அந்தக் கொள்கைகள் கருத்துலகில் ஆட்சிசெய்து வந்தன.

வான நூலைப் பார்க்கலாம்.

"பௌதிகம்", "வானவெளியிலே", "உற்பத்தியைப் பற்றி", "பூகற்ப நூல்" ஆகிய நூல்களில் அரிஸ்டாடிலின் வானசாத்திர சிந்தனைகள் காணக்கிடக்கின்றன.

அவரது வான-நூலின் முதல் தத்துவம், 'எல்லாப் பொருள்களுக்கும், அகில-அண்டத்தில் ஓர் இயற்கையான இடம் உண்டு' என்பதுதான். அதை வேறு எதுவும் தடுக்காவிட்டால், அண்டத்தில் அது நேரே சென்றுகொண்டே இருக்கும். அதன் இயற்கையான

இடத்தை அடைந்த உடன் அது அங்கேயே நிரந்தரமாக நின்றுவிடும். ஆனால், அண்டத்தில் இயக்கம் மாறாது நடைபெற்றுத்தான் வருகிறது. இதற்கு ஆரம்பமோ, முடிவோ கற்பித்துக் கூறுவதென்பது தர்க்க ரீதியாக ஆகாத காரியம். அதைப் பின் எப்படித்தான் விளக்குவது? அரிஸ்டாடில் இரண்டு வழிகள் கூறுகிறார். தானே இடையறாது இயங்கிக்கொண்டே இருக்கக்கூடிய பொருள்கள் அண்டத்தினுள் இருக்கவேண்டும். இவற்றில் ஒன்று முதன்முதலில் இயக்கத்தைத் தொடங்கியிருக்கலாம். அல்லது, தான் இயங்காமல், பிறவற்றை இயக்கக்கூடிய ஒன்று இருந்தாக வேண்டும். முதலில் கூறிய விளக்கம் தவறு என்கிறார் அரிஸ்டாடில். ஏனெனில், தானே இயங்கும் அந்தப் பொருளிலும், ஒரு பகுதி இயங்கக்கூடியதாகவும், மற்றொரு பகுதி அதை முதலில் இயக்கியதாகவும் இருக்கவேண்டும். எனவே, தான் இயங்காமல், பிறவற்றை இயக்கக்கூடிய தொன்றுதான் சரியான விளக்கம்.

இதற்கு அடுத்தபடியாக, அவர் அகில-அண்டத்தின் அமைப்பை ஆராயப் புகுகிறார். அண்டத்துக்குச் சூரியன் நடுவிலிருக்கிறான் என்று அறிஞர் பிதாகரஸ் கூறியது தவறு. அண்டத்தின் நடுநாயகம் பூமியே. அகில-அண்டத்தையும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். சந்திரனுக்கு மேல் விசும்பிடை உள்ள பகுதி ஒன்று; அதற்குக் கீழே உள்ள பகுதி மற்றொன்று. மேலே உள்ளவற்றை விண்ணினங்கள் என்றும், கீழ்ப் பகுதியில் இருப்பவற்றை மண்ணினங்கள் என்றும் அழைக்கலாம். விண்ணினங்கள் பந்துபோல் உருண்டையானவை. அவற்றிலும், அதிக உயரத்தில் இருப்பவை, மிகமிக அதிகமான தெய்வாம்சம் பெற்றவை. இந்த இரண்டு பகுதிகளுக்கும் பல வேற்றுமைகள் இருப்பதாக அரிஸ்டாடில் கூறுகிறார்.

முதலாவதாகக் கீழ்ப்பகுதியில், உதாரணமாகப் பூமியில், உயிருள்ளவைகளிலிருந்தே இயக்கம் தோன்றுகிறது.

இரண்டாவதாக, அண்டத்தின் கீழ்ப்பகுதியில், பொருள்களின் இயக்கம், நேராக இருக்கிறது. அதாவது அவை ஒரு நேர் கோட்டிலேயே இயங்கிச் செல்லுகின்றன. மேல்-பகுதியில், பொருள்கள் வட்ட வடிவாக இயங்கிக்கொண்டே செல்லும்.

மூன்றாவதாகக் கீழ்ப்பகுதியிலுள்ள பொருள்கள், அண்டத்தில் இயங்குவதோடு மட்டுமல்லாமல், தரமாறுதல், வளர்ச்சி, இளைப்பு, உற்பத்தி, அழிவு போன்ற இதர மாறுதல்களுக்கும் உட்பட வேண்டியிருக்கிறது.

நான்காவது வித்தியாசம், பொருள்களின் அமைப்பைப் பற்றியது. கீழ்ப்பகுதியில் உள்ள பொருள்கள் எல்லாமே, நீர், நெருப்பு, மண், காற்று ஆகிய மூலப் பொருள்களின் சேர்க்கையால் ஆனவை. மேல் பகுதியில் உள்ள பொருள்கள், ஈதர் என்ற தனிப்பொருளால் ஆனவை. நட்சத்திரங்களும், கிரகங்களும் நெருப்புக் கோளங்கள் அல்ல. அவை ஈதரால் ஆனவையே. இந்தப் பொருள், வட்டவடிவமாக உருண்டு சென்று கொண்டே இருப்பதைத் தவிர, வேறு எந்தவித மாறுதலுக்கும் உட்படாது. அதைக் குறைக்கவோ, அழிக்கவோ, பெருக்கவோ முடியாது. மண்ணினங்களிடையே இந்தப் பொருள் கிடையாது. (ஆனால்,

மனிதனின் மனம் இந்தத் தெய்வீகப் பொருளால் ஆக்கப்பட்டதென்று பிரிதோரிடத்தில் அரிஸ்டாடில் கூறுகிறார்).* உலகப் பொருள்கள் எல்லாம் முன்கூறிய நான்கு மூலப் பொருள்களின் பல்வேறு விதமான சேர்க்கைகளால் ஆனவையே. இவற்றை மேலும் பகுக்க முடியாது. ஆனால் ஒரு மூலப் பொருளை மற்றொரு மூலப் பொருளாக மாற்றலாம். ஒரு பொருளை அழித்தால், தானே மற்றொரு பொருள் தோன்றிவிடும். ஒரு மூலப் பொருளின் அழிப்பு மற்றொன்றின் பிறப்பு. இவற்றில், நெருப்பும் காற்றும் மேல்நோக்கி இயங்கக் கூடியவை. மண்ணும், நீரும் கீழ் நோக்கி இயங்கக் கூடியவை.

இவ்வாறு அண்டத்தின் இரு பகுதிகளைப் பற்றி விளக்கிக் கூறி விட்டு, அரிஸ்டாடில் பூமியின் வடிவம் இருப்பிடம் ஆகியவை பற்றி விரித்துக் கூறுகிறார். ("வானவெளியிலே"). அண்டத்தின் நடுமத்தியில் பூமி இருக்கிறதென்பது அரிஸ்டாடிலின் சித்தாந்தம். கவி தாந்தேயும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அண்டத்தின் நடுவிலுள்ள ஒரு நெருப்புக் கோளத்தைச் சுற்றிப் பூமி ஓடுகிறதென்ற அறிஞன் பிதாகரஸின் கொள்கையை அரிஸ்டாடில் கண்டிக்கிறார். அடுத்த படியாக, அவர், பூமி உருண்டை வடிவமாகத்தான் இருக்க வேண்டும் என்று கூறுகிறார். சந்திர கிரணங்களில் பூமியின் நிழல் வளைந்துதானே தெரிகிறது? பூமியின் பல்வேறு இடங்களிலும், தொடுவானம் ஒரே இடத்தில் இருப்பதில்லையே? அதனால் பூமி உருண்டையாகத்தான் இருக்க வேண்டும். பூமியின் சுற்றளவு பத்தாயிரம் மைல்கள் என்று அவர் கணக்கிட்டார். விண்ணகத்தே ஒளிரும் கிரகங்கள், விண் மீன்களை விடப் பூமியின் அளவு மிகவும் சிறியது என்கிறார் அவர்.

சூரியன் நமக்கு உஷ்ணமும் வெளிச்சமும் அளிப்பது பற்றி அவர் ஒரு கருத்து வெளியிடுகிறார். சூரியன் விண்ணகத்தே உலவுவதாதலால், அது ஈதரால் ஆனது; நெருப்பால் அல்ல. எனவே சூரியனுக்கு உஷ்ணம் கிடையாது. அது இயங்கும் முறையில் பல பருவங்களில் பல விதமாகப் பூமியை அணுகுகிறது. அந்த இயக்கத்தினால்—அதாவது, சூரியன் காற்றுடன் உராயும்போது சூடு பிறந்து தீ உண்டாகிறது. இதுதான் பூமிக்கு உஷ்ணமும் வெளிச்சமும் அளிப்பது என்பது அரிஸ்டாடிலின் தீர்மானம்.

"பூகற்ப நூலில்," உலகில் விளையும் மாறுதல்களைப் பற்றி அரிஸ்டாடில் விளக்கிக் கூறுகிறார். அண்ட முழுவதும், இடைவிடாது மாறிக் கொண்டே இருக்கிறது என்ற பழைய கொள்கையை அவர் ஏற்கவில்லை. இருப்பினும் அண்டத்தின் கீழ்ப்பகுதியில் உள்ள பூமியில், அலைகள் போல் உயர்ந்தும் தாழ்ந்தும் மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டுதானிருக்கும் என்று அவர் ஏற்றுக் கொண்டார். இதற்குக் காரணம், ஒன்று—மூலப் பொருள்களின் மாற்றம். இரண்டு-உயிரினங்களின் தோற்றமும் அழிவும். இனி, அரிஸடாடிலின் சிந்தனைகளைச் சுருக்கிக் கூறலாம்:

உலகமே ஒரு சுழற்சி. நதிகள் வரண்டு விடுகின்றன. நறுமலர்ச் சோலையில் கலகலவென்று பொழியும் அருவிகள் சுருங்குகின்றன. ஏன்?

* ஸிஸிரோவின் மேற்கோள்.

கடல்களே வற்றிப் பாலைகளாகின்றன. மேலே ஈர்க்கப்பட்ட தண்ணீர் கருமேகங்களாகி, உலகம் குளிரப் பெய்து, வறண்ட நீர் நிலைகளை நிரப்பி விடுகின்றன. எங்கும் மாறுதல் நிகழ்ந்து கொண்டே இருக்கிறது. கண்ணால் காண முடியாதுதான். ஆனால், ஆக்கம் நிறைந்தது. நிலங்களைக் கடல் கொள்ளுகிறது. கடலை நிலம் ஆக்கிரமிக்கிறது. உலகம் முழுதிலுமே. தோன்றலும், அழிவும் தாண்டவமாடுகின்றன. புயல் வேகத்தில் தோன்றிச் சமுதாயத்தையே நிலை குலையச் செய்வதும் உண்டு. இவற்றையடுத்து, நாகரிகங்களும் தோன்றி வளர்ந்து, முன்னேற்றத்தின் உச்சியை அடைந்து உடனே பாதாளத்தில் சரிகின்றன. சரிந்த நாகரிக-சமுதாயங்கள் மீண்டும் முன்னேற்றப் பாதையில் தட்டுத் தடுமாறிச் செல்லத் துவங்குகின்றன. கலை, விஞ்ஞானம், கலாச்சாரம், அறிவு, பொருளாதாரம் ஆகிய எல்லாத் துறைகளிலும், மறுமலர்ச்சி தோன்றிக் கொண்டே இருப்பது இதனால்தான். புராணக் கதைகள் எல்லாம், மறைந்த நாகரிகங்களின் மருவிய சுவடிகள்தாம். மனிதன், தான் வாழும் உலகை வெற்றி கொள்ளவில்லை. அதனால்தான் அவன் வாழ்வில் இந்த சுழற்சி. இவை எல்லாவற்றிற்கு மிடையே உலகம் நிலைத்து நிற்கிறது.

[" உலகின் கவிதை என்றும் அழியாதது; அது என்றும் நிற்பதும் இல்லை" என்ற கவிஞன் கீட்ஸின் மொழிகளை, அரிஸ்டாடிலின் " பூகற்ப நூல்" நினைவூட்டுகிறது.]

முன்பே குறிப்பிட்டபடி, மயக்கும் கவிதை நடை; அரிஸ்டாடிலிடம் இல்லை. இருப்பினும், உணர்ச்சிபற்ற அந்தப் பேராசிரியரைக் கவிதை-உணர்ச்சி சிலசமயங்களில் பற்றிக் கொண்டதன் மிகச்சில எடுத்துக் காட்டுகளில், " பூகற்ப நூலும்" ஒன்று.

iii) மனோதத்துவம் :

மனோதத்துவம் என்று இங்கு குறிப்பிடுவது, தற்கால மனோதத்துவ நிபுணர்கள் சமைத்துள்ள, மேல்-மனம், மறை-மனம், மாயை, " காம்ப்ளெக்ஸ்", போன்ற பிரிவுகள் அடங்கிய உள-நூலை அல்ல. மனம் என்பது என்ன? வாழ்க்கை இயக்கத்தில் அதன் பங்கு என்ன? பொதுப்படையாக அதன் அலுவல்கள் என்னென்ன? என்பது பற்றியே இங்கு கூறப்படும்.

அறிஞர் அனெக்ஸகோரஸ் தான் முதன் முதலில் மனதைப் பற்றிச் சிந்தித்தவர். உயிருள்ள ஜீவன்களுக்குள் 'மனம்' இருப்பதால்தான், அவை உயிரற்றவைகளிலிருந்து வித்தியாசப்படுகின்றன என்றும், எல்லா இயக்கங்களுக்கும் மனமே மூலகாரணமென்றும், அவர் கூறினார். இதற்கு அப்பால் அனெக்ஸகோரஸ் ஒன்றுமே கூறவில்லையென்றும், ஒரு செயலை விளக்கத் தமக்கு வேறு எந்தக் காரணமும் புலப்படாவிட்டால், 'மனதே' காரணம் என்று காட்டிவிடுகிறாரென்றும் அரிஸ்டாடில் குற்றம் சாட்டுகிறார். அவரது கொள்கைகளை இப்போது பார்க்கலாம்.

அகில அண்டத்தின் இயக்கத்தில் இரண்டு கோடிகள் இருக்கின்றன. ஒரு முனையில், உயிரற்ற பொருள்கள் இருக்கின்றன. மற்றொரு முனையில், " இயங்கா இயக்கி"யின் நித்திய மன-ஆற்றல் இருக்கிறது. இவை

இரண்டிற்கும் இடையில், உயிர்வாழ்வு, பலதரப்பட்ட வரிசைகளில், படிகளில், தகுதிகளில் இருக்கிறது. உயிரினங்கள் யாவற்றையும் அரிஸ்டாடில் படிப்படியாக உயர்ந்து செல்லும் தர-வரிசையாகக் கருதியதை முன்பு பார்த்தோம். இந்தத் தரவரிசையில் பல்வேறு வகை உயிரினங்கள் பல்வேறு வகைப்பட்ட மன ஆற்றலைப் பெற்றிருக்கின்றன. பகுத்தறிவைப் பெற்றிருக்கும் மனிதனின் மன-ஆற்றல்தான் மிகவும் அதிகம். இந்த வரிசையில் பல்வேறு விதமான மன-ஆற்றல்களைப் பற்றிப் பொதுப்படையாக விளக்கிக் கூறுவதுதான் அரிஸ்டாடிலின் மனோதத்துவம்.

அவரது மனோதத்துவச் சிந்தனைகளில் மூன்று முக்கியத் துறைகள் இருக்கின்றன. 1.) உணர்வு-அறிதல். 2) இயக்கத்தின் தோற்றம். 3) மனிதன் அறிவு பெறுவதில் மனம் ஆற்றும் பணி.

முதலில், உணர்வு-அறிதலைப் பற்றிப் பார்க்கலாம். ஐம்புலன்களின் அறிவுக்கும், பொது-அறிவுக்கும், (Common Sense) அவர் வேறுபாடு காட்டுகிறார். (இவை இரண்டுமே, ஞாபக-சக்தி, கற்பனைத்திறன் என்ற ஆற்றல்களிலிருந்து வேறுபட்டவை). புலன்-அறிவு என்றால் என்ன? அது எப்படி உண்டாகிறது? எந்த ஒரு பொருளிலிருந்தும், விதவிதமான அணுவகைகள் எழும்பிப் புலன்களைச் சென்று தாக்குவதால், நம்மால், ஒளி, வாசனை போன்றவைகளை அறிய முடிகிறது என்பது அரிஸ்டாடிலுக்கு முன்பிருந்த விளக்கம். ஆனால், அரிஸ்டாடில் இதை நம்பவில்லை. நமது புலன்கள், எந்தப் பொருளிலிருந்தும் ''உருவத்தைப்'' பிரித்தெடுத்துக் கிரகித்துக் கொள்கின்றன என்று அவர் கூறினார். (அப்படியானால் 'சர்க்கரை' என்ற பொருளை எடுத்துக் கொண்டால், அதில் ஜட உருவம், நிற-உருவம், சுவை-உருவம் என்று பாகுபாடுகள் கலந்து பின்னிக் கொண்டிருக்க வேண்டும். நமது புலன்கள், தத்தமக்கு ஏற்ற உருவங்களைக் கிரகிக்கின்றன). இதுதான் புலன்-அறிவு. பொது-அறிவு என்றால் என்ன என்று பார்க்கலாம். சிகப்பு நிறமுள்ள ஆப்பிள் ஒன்றை நாம் உண்கிறோம். நமது கண்கள், அது சிகப்பு என்று அந்த 'உருவத்தை'க் கண்டறிகிறது. நமது நாக்கு, அதன் 'இனிப்பு-உருவத்தை' உணர்கிறது. நமது கைகள், அது குளிர்ச்சியாக இருப்பதை உணர்கின்றன. சிகப்பு, இனிப்பு, குளிர்ச்சி என்ற மூன்று உருவங்களும் ஒரே பொருளுக்குச் சொந்தமானவை தான் என்று நாம் உணர்கிறோமே, அது தான் பொது-அறிவு. பொது-அறிவு, புலனறிவு இவற்றைத் தவிர, ஞாபக-சக்தி, கற்பனை, பகுத்தறிவு போன்ற ஆற்றல்கள் இருக்கின்றன. (இங்கு பிளேட்டோவுக்கும் அரிஸ்டாடிலுக்கும் கருத்து வேற்றுமை காண்கிறோம். புலன் அறிவு, பொது-அறிவு என்றெல்லாம் அவர் பகுத்துப் பேசவில்லை. பொருளிலிருந்து புலன்கள், 'உருவங்களை'ப் பிரிக்கின்றன என்றும் அவர் ஒப்புக்கொள்ளவில்லை. உணர்வு-அறிதல் பூராவுமே மனதின் செயல் என்றார் பிளேட்டோ.)

இரண்டாவதாக, இயக்கத்தின் மனோதத்துவ அம்சத்தைப் பார்க்கலாம். விலங்கினங்களின் இயக்கத்துக்கு மூல காரணம் ஆர்வம். ஆர்வத்தை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம் :—1. விருப்பம், 2. கோபம், 3. இன்பத்தில் இச்சை. ஆர்வம் மட்டும், இயக்கத்தைத்

தோற்றுவித்து விட முடியாது. முடிவு செய்து தீர்ப்பளிக்கும் ஆற்றலும் அதற்கு உதவ வேண்டும். அதாவது, கீழே ஒரு பழம் கிடக்கிறது. ஆர்வம் தோன்றுகிறது, அதை எடுத்துத் தின்ன. இந்த ஆர்வத்தால் மட்டும் கைகால்கள் அசைவதில்லை. ஏதோ ஒரு குரல், "உம் எடுக்கலாம். எடு" என்று தீர்ப்பளித்ததும் தான் அவயவங்கள் நகரும். எனவே, இச்சையுடன் ஒரு தீர்ப்பும் அவசியமாகிறது, இயக்கத்தைத் தோற்றுவிக்க. விலங்குகளுக்கு, பகுத்துணர்ந்து தீர்ப்புக் கூறும் திறன் இல்லைதான். எனினும், அவற்றிற்கும் ஒருவிதக் கற்பனை-ஆற்றல் உண்டு. அது இல்லாவிடில் இயக்கமும் இல்லை. மனிதனுக்கு, இச்சை, தீர்ப்புத் திறன், ஆகியவற்றைத் தவிர, நல்லது-தீயவற்றைப் பகுத்தறியும் ஆற்றலும் உண்டு. எனவே, சில சந்தர்ப்பங்களில், ஏதாவது ஒரு இச்சை பிறந்து, "உம், மேலே செல்" என்ற தீர்ப்பும் பிறந்த பிறகு, நல்லது-நாடும் பகுத்தறிவு, 'நில்' என்று கூறும். இவை மூன்றுக்குமிடையே போராட்டம் தொடங்குகிறது. இச்சை வென்றால், அந்தக் குறிப்பிட்ட இயக்கம் நடைபெறும். இல்லாவிடில் இல்லை. இம்மாதிரிப் போராட்டங்கள் தோன்றாத நிலைதான் பண்பின் அடையாளம்.

மூன்றாவதாக, மனிதன் அறிவு பெறுவதில் 'மனம்' தாங்கும் பங்கு என்ன? கருத்துக்கள் வகுப்பது, திட்டங்கள் அமைப்பது, போன்றவை எல்லாம், புலனறிவும், பொது அறிவும் கொண்டு சேர்க்கும் உணர்வுகளைத் தொகுப்பதால் ஏற்படும் செயல்கள். புலன்களும் சரி, கற்பனையும் சரி, மூலப் பொருள்களைச் சேகரிக்கின்றன. அவற்றைத் தொகுத்து உருவம் அளிப்பது மனத்தின் வேலை. இதை விளக்கும் பொருட்டு, அரிஸ்டாடில், மனித மனத்தை இரு-பிரிவுகளாகப் பிரித்திருக்கிறார். ஒன்று, ஏற்கும்-மனம்; மற்றது, ஆக்கும்-மனம். ஏற்கும்-மனம், மூலப் பொருள்களைப் புலன்களிடமிருந்தும், கற்பனைத் திறனிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப் பெற்றுக் கொள்ள, மண்ணிலிருந்து பானை உருவாக்குவதுபோல, ஆக்கும்-மனம், கருத்துக்களைச் சமைக்கிறது. இந்த ஆக்கும்-மனம் தான், மனிதனுக்கு இருக்கும் தெய்வீக-ஆற்றல்.

iv) அரிஸ்டாடிலின் அறிவியல்-பொது விளக்கம்

அரிஸ்டாடிலின் அறிவியல் - சிந்தனைகளைப் படிக்கும்போது அவற்றின் சில விசேஷ அம்சங்கள் கவனத்தில் படுகின்றன. முதலில், அவரது சோதனை-ஆர்வம் எவரையும் வியக்க வைக்கும். அவர் பன்முறையும் பகர்ந்தார். இரண்டாவதாக, எல்லா இயக்கங்களும், ஒரு குறிக்கோள் பற்றியே நிகழ்வன என்று அவர் குறிப்பிடுகிறார். மூன்றாவதாக, அறிவியற்கலைகளைக் கற்றுணர்வது, அறிவு பெறுவதற்கு மட்டும்தான் என்றும், அவற்றின் அறிவால் உலக சக்திகளை மனிதன் வெற்றி காண முடியாதென்றும் அவர் திடமாக நம்பினார். நான்காவதாக இயக்கங்கள் எல்லாவற்றையும், தரம் (Quality) ஒன்றையே அளவுகோலாகக் கொண்டு அவர் பரிசீலனை செய்தார். மற்றெல்லாப் பொருள்களையும் விட மனதிற்கே அவர் முதலிடம் அளித்தார்.

இயற்கையைப் பற்றி அறிவதே விஞ்ஞானம் என்று கூறிய அவர், இயற்கையின் மிக முக்கியப் பகுதியான உயிரினங்களை ஆராயப் புகுந்தது இயற்கையே. இந்த ஆராய்ச்சியில் அவர் கண்ட முடிவுகள்

பலவும் தவறு. * ஒரு சில உதாரணங்கள் பார்ப்போம். "தசைகள்" என்று ஒன்று இருப்பதாகவே அவருக்குத் தோன்றவில்லை. மூளை, இரத்தத்தைக் குளிரச் செய்வதற்கான கருவி என்று அவர் சொன்னார். இரத்தம் குளிர்ந்தால் தூக்கம் வரும் என்றும் அவர் முடிவுகட்டினார். ஆண்மகனின் மண்டையோட்டில், பெண்ணின் மண்டையோட்டைவிட அதிகமான கோடுகள் இருக்கும் என்றார். மனிதனுக்கு ஒவ்வொரு புறமும் எட்டு விலா எலும்புகள்தான் என்றார். ஆண்களைவிடப் பெண்களுக்குப் பற்களின் எண்ணிக்கை குறைவு என்றார். இந்தத் தவறுகளை அவர் வேண்டுமென்று செய்தாரென்று கொள்வதற்கில்லை. ஒரு கொள்கையை நிர்ணயிக்க வேண்டும் என்ற அளவுக்கு மீறிய உற்சாகத்தில், உண்மையைத் திரித்துக் கூறியதாகவும் கொள்வதற்கில்லை. ஏனெனில், அவ்வாறு செய்வது தவறு என்று அவரே வற்புறுத்துகிறார் :—

"......பரிசோதனைகளைக் கொண்டு பார்க்குமிடத்து, தேனீக்களின் உற்பத்தி பற்றி இதுதான் சரியான கொள்கை என்று படுகிறது. எனினும், உண்மை நிலவரத்தைச் சரியாக அறிந்துவிட்டதாகக் கூறுவதற்கில்லை. முடிவு கூறி வகுத்துவிட்ட சித்தாந்தங்களை விட நேரில் பரிசோதித்துக் கண்டறியும் உண்மைகளுக்கே மதிப்புக்கொடுக்க வேண்டும்" (விலங்கின உற்பத்தி").

இவ்வாறு எழுதியவர், வேண்டுமென்று தவறிழைத்ததாகக் கொள்வது சிரமமே. கவனக் குறைவு காரணமாக இருந்திருக்கலாம். உயிர்-நூலைப்பற்றிய அவரது முடிவுகளில் ஒன்றிரண்டு இப்போதும் நிலைத்து நிற்கின்றன. இன்னும் சில பிற்கால அறிஞர்கள் புரட்சிகரமான முடிவுகளைக் கண்டறிய வகை செய்தன. உயிர் நூல் அறிவில் ஒரு புதிய முறையை வகுத்துக்கொடுத்து, அதற்கு ஓர் வடிவம் அமைத்ததற்காகவே, விஞ்ஞான உலகம் மிகவும் அரிஸ்டாடிலுக்குக் கடமைப்பட்டிருக்கிறது.

பௌதிகம்–வான நூல் இவற்றைப்புற்றிய கருத்துக்களிலும் தவறுகள் மலிந்திருக்கின்றன என்று எவரும் கூறிவிடுவார்கள். அந்தக் காலத்தில் தூரதரிசிக் கண்ணாடி இல்லாததே மிகப் பெரும்பாலான தவறுகளுக்குக் காரணம் என்பது வெளிப்படை.

மனோதத்துவம் பற்றி அவர் கூறியிருப்பவற்றில் பலவற்றை ஏற்றுக் கொள்வதே முடியாது. அவர் செய்த ஓர் அடிப்படைத் தவறு, உண்ணுதல், பார்த்தல், நடத்தல் போன்ற செயல்களுக்கும் நினைத்தல், கற்பனை செய்தல், போன்ற மூளை–வேலைகளுக்கும் வித்தியாசமே காணவில்லை. இரண்டாவது நரம்பு–மண்டலம் என்று ஒன்று உடம்பிலிருக்கிறது என்றே அவர் உணரவில்லை. மனித உடலை, அவன் இறந்த பிறகு அறுத்துப்பார்த்துப் பரிசோதிக்கும் வழக்கம் அப்போது காணப்படவில்லை.

விஞ்ஞானம் என்பது என்ன? விஞ்ஞானி என்பவன் எப்படி இருக்கவேண்டும்? என்று உலகிற்கு வழி வகுத்தவர் அரிஸ்டாடில். அதனாலேயே அவருடைய முக்கியத்துவம் அதிகரிக்கிறது.

---

* அரிஸ்டாடில் வாழ்ந்த அந்தக் காலத்தில் பரிசோதனைக் கருவிகளே கிடையாது. கடிகாரம், பூதக்கண்ணாடி, உஷ்ணமானி, பாரமானி, நிறை எடுக்கும் கருவி, போன்று மிகமிகத் தேவையான பொருள்கள் கண்டுபிடிக்கப்படவே இல்லை.

பாகம் இரண்டு — ஞான இயல்

"எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள்
மெய்ப்பொருள் காண்ப தறிவு" — திருக்குறள்

[இந்த ஞான இயலின் சில பகுதிகள் சற்று சிக்கலாகத் தோன்றலாம். ஒரு முறைக்கு இரண்டு முறையாக ஆழ்ந்து படித்தால் ஞான இயல்பற்றிய தத்துவத்தைப் புரிந்துகொள்ள இயலும்.]

[கண்ணில் காணும் பொருள்களின் இயக்கத்தை அரிஸ்டாடில் உண்மை என்று ஒப்புக்கொண்டார் என்று பார்த்தோம். "கண்ணில் தென்படுவனவெல்லாம் அநித்திய மானவை; கண்ணால் காணாதவைகளே நித்தியமானவை" என்று பிளேட்டோவைப்போல் அவர் மாயா வாதத்தில் ஈடுபடவில்லை. ஆனால் அதற்காக, காலங்கடந்து, நமது பார்வைக்கு அப்பால் இருக்கும் பொருள்களைக் (அவை நிதர்சனமாக இருப்பது நிச்சயமானால்) குறித்துப் பரிசீலனை செய்வது வீணர்களின் வேலை என்று அவர் தள்ளிவிடவுமில்லை. மனித அறிவையும், மனிதனின் செயல்களையும் பார்க்குமிடத்து, மனத்தைப் பௌதிக (இயக்க) விஞ்ஞானம் மட்டும் விளக்கிக் கூற முடியாது என்று அவருக்குப் பட்டது. உண்மையில், விஞ்ஞானம் என்பது மன-ஆற்றலின் ஒரு பிரிவே ஆகும். "ஒரு பொருள் மற்றொன்றிற்கு உள்ளேயும், வெளியே யும் ஒரே சமயத்தில் இருக்க முடியாது. எனவே, விஞ்ஞானம் மனதின் பிரிவாக இருந்துகொண்டு, அதை உள்ளடக்கி விளக்கும் கருவியாக இருக்க முடியாது" என்றார் அரிஸ்டாடில். எனவே, இயக்க-உலகிற்குப் புறம்பாக உள்ள விஷயங்களை விளக்கிக் கூறத் தனியொரு சிந்தனை-விளக்கம் தேவை. தம் குருவான பிளேட்டோ, வெறும் மாயப் பொருள்களுக்கு உருவம் அளித்ததன் மூலம், இந்தவிளக்கத்தைச் சரிவரச் செய்யவில்லை என்று கூறி, அதைத்தாம் செய்யப் புகுகிறார் அரிஸ்டாடில்.

இந்தப் பகுதியில், அரிஸ்டாடில், பொருள், உருவம், உடல், ஆன்மா, நிதர்சனம், மாயை போன்ற பலவற்றிற் கிடையே நுண்ணிய பேதம் காட்டி விளக்குகிறார். கடவுளின் இயல்பை எடுத்துக் கூறுகிறார். வாழ்வின் பலனை எடுத்துரைக்கிறார். மெய்ப்பொருள் எது என்று காட்டு கிறார். இவற்றை உணர்ந்து தெளிவதே "ஞானம்" என்று முடிவு கூறுகிறார். உயிரினங்களைப் பற்றிய நூல்களிலும், "பௌதிகம்," "வான வெளியிலே" போன்ற அறிவியல்-நூல்களிலும்கூட இந்தக் கருத்துக்கள் விரவியிருந்தாலும், "மெய்ஞானம்," "தத்துவத்தைப் பற்றி," "தத்துவங்கள்" ஆகிய நூல்களில்தான் இவை குறித்துச் சாங்கோ-பாங்கமாக விளக்கப்பட்டிருக்கிறது.

இனிமேலே செல்லலாம்.]

ஞான இயல்பற்றிய அரிஸ்டாடிலின் சிந்தனைகளை நான்கு தலைப்பு களின் கீழ் விரித்துக் கூறுவோம். 1) அனைத்துலகப் (Universal) பொருள் களின் தத்துவம். 2) பொருளும் உருவமும்—உலக இயக்கத்தின் பயன். 3) உடலும் ஆன்மாவும். 4) கடவுளின் தன்மை.

முதலில், அவரது அனைத்துலகப் பொருள்களின் தத்துவத்தை எடுத்துக் கொள்ளலாம். இது பிளேட்டோவின் சிந்தனைகளுக்கு எதிர்வாதமாக இருப்பதால், அவற்றை நாம் முதலில் பார்க்கவேண்டும். பிளேட்டோவின் தத்துவம் சுருக்கமாக இதுதான்:—"நாய்" என்று ஒரு சொல் இருக்கிறது. "நாய்" என்றால், இந்த நாய் அல்லது அந்த நாய் என்று பொருள் கொள்ளக்கூடாது. "நாய்" என்றால் கடவுள் சிருஷ்டித்த "இலட்சியநாய்" ஒன்றையே குறிக்கும். உலகில் நாம் காணும் நாய்கள், அந்த இலட்சிய நாயின் குணங்களை ஒருவாறு (முழுவதும் அல்ல) ஒத்திருப்பதால்தான் அவற்றை நாய்கள் என்று அழைக்கிறோம். "இலட்சிய நாய்" ஒன்றுதான் உண்மையானது; நாம் காணும் நாய்கள், உருவெளித்தோற்றம். உலகில் ஒரே பெயர் கொண்ட பல பொருள்கள் இருக்கின்றன. உதாரணமாகப் பலபல படுக்கைகள் இருக்கின்றன. ஆனால், அவற்றிற்கெல்லாம் பொதுவான "கருத்து" அல்லது "பண்பு" ஒன்றேதான். கண்ணாடியில் ஒரு படுக்கையின் உருவம் தெரிந்தால், அது உண்மை உருவமல்ல. உரு வெளித்தோற்றமே. அதே போலத்தான் பல்வேறு படுக்கைகளும், இலட்சியப் படுக்கையின் உரு வெளித்தோற்றம். அந்த இலட்சிய உருவம் கடவுளால் ஆக்கப்பட்டது. உலகில் காணும் பொருள்கள் எல்லாம் இலட்சியப் பண்புகளின் குறைபாடுள்ள பிரதிகள்தாம். இலட்சியத்தைப் பற்றித்தான் "அறிவு" இருக்கமுடியும். பொதுப் பொருள்களைப்பற்றி "அபிப்பிராயம்" தான் கொள்ளமுடியும். ஒரு மனிதனை இங்கு மங்கும், பின்புறமும் திரும்ப முடியாதபடி பிணைத்து ஒரு குகையில் அடைத்திருப்பதாகவும், அவனுக்குப் பின்புறத்தில்—அவனால் பார்க்க முடியாதபடி-நெருப்பு எரிவதாகவும், அவன் நேரே பார்க்கக்கூடிய இடத்தில் சுவரொன்று இருப்பதாகவும் வைத்துக்கொள்வோம். நெருப்பின் ஒளியினால், சுவரில், அங்கு இருக்கும் பொருள்களின் நிழல்கள் தோன்றும். அந்த மனிதன் அவற்றையே நிஜப்பொருள்கள் என்று நினைத்து ஏமாறுவது போலத்தான், மக்களும், (அதாவது தத்துவ ஞானிகள் அல்லாதவர்கள்) கண்ணில் காணும் பொதுப் பொருள்களை, உண்மையென நினைக்கிறார்கள் என்பது பிளேட்டோவின் வாதம். பூனை, நாய், அன்பு, அழகு என்றெல்லாம் நாம் பார்த்து உணர்கிறோம். அவையல்ல உண்மை. இவை ஒவ்வொன்றுக்கும், உலகனைத்துக்கும் பொதுவான இலட்சியமாக, இலட்சியப் பூனை, இலட்சிய நாய், இலட்சிய அன்பு, இலட்சிய அழகு இவை இருக்கின்றன. ("குடியரசு").

அரிஸ்டாடிலின் ஞான இயல், இந்தத் தத்துவத்தை மறுதளிப்பதில் ஆரம்பமாகிறது. முதலாவதாக, இந்த "இலட்சியப்பண்பு - தத்துவம்", தர்க்க - ரீதியாக நிரூபிக்கக் கூடியதல்ல. உதாரணமாக, ஒரு முக்கோணம் இருக்கிறது. முக்கோணத்துக்கு மூன்று நேர்கோடுகள் தேவை என்பது தெளிவு. நாம் காணும் முக்கோணங்கள், பிளேட்டோவின் தத்துவப்படி, உண்மையல்ல. கடவுள், இலட்சிய முக்கோணம் ஒன்றை உண்டாக்கியிருக்கவேண்டும். ஆனால், கடவுள் இலட்சிய நேர்கோடு

ஒன்றையும்—ஒன்றே ஒன்றுதான்—சமைத்திருக்க வேண்டும். அப்படி யானால், இலட்சிய முக்கோணத்துக்கு மூன்று இலட்சிய நேர்கோடுகள் தேவையாயிற்றே; இவற்றை எப்படிக் கடவுள் உண்டாக்கியிருக்க முடியும்? முன்னுக்குப்பின் முரணாக இருக்கிறதே?

இரண்டாவதாக பிளேட்டோவின் தத்துவம், நிரந்தரமான உருவங்களையும், மாறிக்கொண்டே இருக்கும் அவற்றின் பல பிரதிகளையும் பற்றிக் கூறுகிறது. ஆனால், இந்த மாறுதலின் காரணம் கூறப்படவே இல்லை.

இவ்வாறு கூறிவிட்டு அரிஸ்டாடில் தமது தத்துவத்தை விளக்குகிறார். உலகத்தில், சிறப்புப் பெயர்கள், உரிச்சொற்கள் என்று இரண்டு உண்டு. சூரியன், சந்திரன், இந்தியா, காவிரி என்பவை சிறப்புப் பெயர்கள். அவை ஒவ்வொன்றும், ஒவ்வொரு பொருளைத்தான் குறிக்கின்றன. நாய், பூனை, மனிதன், என்ற பெயர்களை எடுத்துக்கொண்டால், இவை ஒவ்வொன்றும் எத்தனையோ பொருள்களைக் குறிக்கும். உலகில் எத்தனையோ நாய்கள், மனிதர்கள், பூனைகள்…இவற்றை, "வர்க்கப் பெயர்கள்" (class-names) என்று கூறலாம். அதே போலத்தான், வெண்மையான, உருண்டையான…என்பவை போன்ற உரிச்சொற்களும். சிறப்புப் பெயர்களை "வஸ்துக்கள்" என்று கூறலாம். உரிச்சொற்களையும், வர்க்கப் பொருள்களையும், உலகனைத்துக்கும் பொதுவாக நிற்கும், "அனைத்துலகப் பெயர்கள்" என்று குறிக்கலாம். "அனைத்துலகப்பெயர்" ஒன்று, ஏதாவது ஒரு வஸ்துவின் பெயராக இருக்க முடியாது. ஏனெனில் வஸ்து என்பது, ஒரு குறிப்பிட்ட பொருளையே குறிப்பது. வேறு எதையும் அது குறிப்பதல்ல. ஆனால், அனைத்துலகப் பெயர்கள், பொதுப்பெயர்கள். பல பொருள்களுக்குப் பொதுவாக உள்ள பண்புகளைக் குறிக்கும் பெயர்கள் அவை…("தத்துவத்தைப்பற்றி") அனைத்துலகப் பொருள்களுக்குத் தானே இயங்கும் ஆற்றல் இல்லை; குறிப்பிட்ட பொருள்களின் மூலந்தான் அவை வெளிப்படுகின்றன.

சில உதாரணங்கள் பார்க்கலாம்; தாய்மை, சிகப்பு, ஓட்டம் என்பவை அனைத்துலகப் பொருள்கள். பெண்கள், இருப்பதால்தான் தாய்மை இருக்கிறது; சிகப்புப் பொருள்கள் இருப்பதால்தான் சிகப்பு இருக்கிறது; ஓடக்கூடியவை இருப்பதால்தான் ஓட்டம் என்பது இருக்கிறது. எனவே, அனைத்துலகப் பொருள்கள், குறிப்பிட்ட பொருள்களைச் சார்ந்திருக்கின்றன என்று தெரிகிறது. ஆனால், இதற்கு மறுதலை உண்மையல்ல. பாருங்களேன், தாய்மை அடையாமலே ஒருத்தி பெண்ணாக இருக்கலாம்; சிகப்பாக உள்ள ஒருவனது முகம், ரத்தம் செத்து வெளுத்தாலும் முகம் முகமே; ஓடக்கூடிய பிராணிகள் ஓடாதொழிந்தாலும் அவை முன்போல் ஓடக்கூடிய பிராணிகள்தாம்!

உலகத்தில் நாம் காணும் பொருள்கள் சில இருக்கின்றன. குறிப்பாகச் சிலவற்றையே உணர்த்துபவை சில இருக்கின்றன. இந்த வித்தியாசத்தைக் கண்டுணர்ந்தவர் அரிஸ்டாடில் தான். பிளேட்டோவுக்குப் "பொதுப் பொருள்கள்" அனைவற்றிற்கும், அதே மாதிரியானதொரு இலட்சிய-குறிப்புப் பொருள் உண்டு. அதுதான் நித்தியம் அவருக்கு. அரிஸ்டாடிலோ, கண்ணில் காணும் பொருள்களுக்குள்ளேயே, பொது

வானவை, சிறப்பானவை என்று பகுத்தார். அரிஸ்டாடிலின் இந்த "அனைத்துலகப் பொருள்களின் தத்துவம்" நிதரிசன - வாதத்துக்கு வழி காட்டி. "எங்கே தேடுகின்றாய் மெய்ப்பொருளை, இங்கே காணுமல்?" என்ற கேள்வியை இதன்மூலம் அவர் முதன் முதலில் கேட்டார்.

அடுத்தபடியாகப், "பொருளுக்கும்," "உருவத்துக்கும்" உள்ள சம்பந்தம் என்ன? உலக - இயக்கத்தின் பயன் என்ன? என்று பார்க்கலாம். பளிங்குக்கல் ஒன்று இருக்கிறது. அதிலிருந்து சிலை உருவாகிறது. மண் இருக்கிறது; அதிலிருந்து பானை செய்யப்படுகிறது. இவற்றில், பளிங்குக்கல் என்பது "பொருள்"; சிலை, என்பது "உருவம்"; மண் என்பது பொருள். பானை உருவம். (உருவம் என்று அரிஸ்டாடில் குறிப்பிடுவது, வெறும் ரூபத்தையோ, வடிவத்தையோ மட்டும் குறிப்பிடுவதல்ல. அவர் கூறுவது அதற்கு மேலானது, "உருவப்பண்பு" என்று வேண்டுமானால் கொள்ளலாம்.)

ஒவ்வொரு வஸ்துவுக்கும் உருவப்பண்பு உண்டு. மூலப் பொருளிலிருந்தே உருவப்பண்பு உண்டாகிறது. ஒரு வஸ்துவின் உருவப்பண்பு, அதைவிட உயர்ந்த - படியிலிருக்கும் வேறொரு வஸ்துவின் மூலப் பொருளாக அமையலாம். உதாரணமாக, "மனிதன்" என்ற உருவப் பண்பு, குழந்தை என்ற மூலப் பொருளிலிருந்து உருப்பெற்றது. குழந்தை, கரு என்ற மூலப் பொருளின் உருவம்; கருவோ, அண்டம், விந்து ஆகிய மூலப் பொருள்களின் உருவம். ஒவ்வொரு உயிரினமும், அதைவிட உயர்ந்த படிக்குச் செல்லவேண்டும் என்ற உள்ளார்வத்தின் அடிப்படையிலேயே, பொருள் - உருவ வளர்ச்சிகள் தோன்றுகின்றன." என்கிறார் அரிஸ்டாடில்.

இவ்வாறு மேல் - படியிலிருந்து கீழே சென்றுகொண்டே இருந்தால், உருவமே இல்லாத மூலப் பொருளை வந்தடையலாம். ஆனால், இது சாத்தியமல்ல. ஏனெனில், உயிரினங்களின் தர - வரிசையில், எந்த இடத்திலிருந்து உருவப் பண்பின் செயல் தொடங்குகிறது என்று திட்டமாகக் கண்டறிவதற்கில்லை. ஆனால் உருவமில்லாத பொருளே இல்லை என்று கூறிவிட முடியாது. அகில - அண்டத்தில் இங்கு மங்கும் அலைந்து கொண்டிருக்கும் பொருள்களைத் தவிர, நித்தியமான, உருவமற்ற பொருள்களும் இருக்கின்றன. அவற்றிற்கு வளர்ச்சியும், தேய்வும் இல்லை. (இவை என்ன?).

பொதுவாகப் பார்க்குமிடத்து, "பொருள்" என்பது ஏற்கும் - கருவி. "உருவம் (அதாவது உருவம் அளிக்கும் சக்தி) ஏற்கச் செய்யும் விசை. பழைய உதாரணத்தை எடுத்துக்கொண்டால், கரு என்பது முதலில் உருவமற்ற பிண்டம் - மூலப்பொருள். உருவப்பண்பின் விசை, அதை ஓர் உருவம் ஏற்கச் செய்கிறது. மூலப்பொருள் என்பது உலகெங்கிலும் வியாபித்திருக்கிறது. மரம், எலும்பு, கல் போன்ற பொருள்களெல்லாம் கூட்டுப்பொருள்கள். அவற்றை மேலும் பகுக்க முடியும். பகுக்க முடியாத மூலப்பொருள்கள் கடைசியில் நான்குதான்—நீர், நெருப்பு, காற்று, மண். இவற்றின் பல்வேறு சேர்க்கைகளின் மீது உருவமூட்டும் சக்தி அழுந்துவதால்தான் உருவப்பண்புகள் தோன்றுகின்றன. உருவமும், பொருளும் ஒன்றுக்கொன்று தேவைப் படுகின்றன. அதுதான் உலக நியதி.

சரி; "உருவம்" என்று இருக்கிறதே, அதற்கு ஓர் உருவப்பண்பு உண்டா? அது ஒரே மாதிரியானதா? அல்லது அதிலும் பல வகைகள் உண்டா? "உருவம்" என்பது, பொருளின் உதவியின்றியே இயங்கக் கூடியது. உலக முழுவதும் பரந்திருப்பது. ஒரே பிரிவைச் சேர்ந்த இனங்களுக்கு, ஒரே மாதிரியான உருவ-விசைதான் உருவப் பண்பளிக் கிறது. இந்த இடத்தில் ஒரு சந்தேகம் நமக்கு எழுகிறது. பொருளுக்கு உருவம் ஏதும் இல்லை. பொருளும், உருவ்-விசையும் சேர்ந்தால்தான் உருவப் பண்பு உண்டாகும். இந்த உருவ-விசையோ, குறிப்பிட்ட பிரிவு உயிரினங்களுக்கு ஒரே மாதிரியானதுதான். அப்படியென்றால், 'மனிதர்கள்' என்ற பிரிவுக்கு ஒரே மாதிரி உருவ-விசைதான் உண்டு. உருவ மற்ற பொருளின்மீது உருவ-விசை மோதி உருவம் தோன்றுகிறது. ஒரேமாதிரியான உருவ-விசை பொருளின்மீது மோத மோத, ஒரே மாதிரி மனிதர்கள்தாமே தோன்ற வேண்டும்? ஆனால் உண்மையில், ஒரேமாதிரிக் காணப்படும் மனிதர்களுக்கிடையே கூட எத்துணை வித்தியாசம்! இது எப்படி? இந்தக் கேள்விக்கு அரிஸ்டாடில் விடை பகர வில்லை!

சுருங்கச் சொன்னால், "பொருள்" என்பது உருவத்தின் வாய்ப்பு. "உருவம்" தான் பொருளின் இறுதி-வடிவம். பொருளுக்கு உருவம் தேவை. அது இல்லாவிட்டால், பொருளுக்கு மலர்ச்சி இல்லை. தாமரைக்குச் சூரியன் போலவும், முத்துச் சிப்பிக்கு மழைத் துளி போலவும், மண்ணிற்கு குயவன் சக்கரம் போலவும், பொருள் என்பதற்கு உருவ மாகும்.

அரிஸ்டாடில் இவற்றிற்குக் கூறும் எடுத்துக்காட்டு ரசமாக இருக் கிறது. பொருளும், உருவமும், பெண்ணும், ஆணும் போல என்கிறார் அவர். ஆண் மகன், சக்தி உடைய உருவ-விசை! பெண் உருவத்தை ஏற்பதற்கு விழைந்து, ஏற்கத் தயாராக இருக்கும் பொருள்! இந்தப் பொருளும், உருவமும் சேர்ந்து கருத் தோன்றுகிறது. கரு என்ற மூலப் பொருளிலிருந்து, குழந்தை என்ற உருவம்; குழந்தை என்ற மூலப் பொருளிலிருந்து, மனிதன் (அல்லது ஸ்திரீ) என்ற உருவம்... இவ்வாறு இயற்கையின் சுழற்சி நடைபெறுகிறது. உருவம், பொருளை வெற்றி காண்பதுதான் இயற்கையின் தத்துவம்; இடையறா முன்னேற்றம்; நித்திய வெற்றி.*

இவ்வாறு அரிஸ்டாடில் உருவ-விசையின் புகழ் பாடுகிறார். உருவத்தின் விசையன்றிப் பொருள் எதுவும் இருக்க முடியாது. உருவம் தான், (பொருளைவிட) மெய். உருவமே நித்தியம். இவ்வாறு அரிஸ்டாடில் கூறுவது, பிளேட்டோ 'இலட்சியப் பண்புதான் நித்தியம், அதுவே மெய்' என்று அடுத்தடுத்துக் கூறுவது மாதிரியே இருக்கிறது என்று தற்காலப் பேரறிஞர் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் கூறுகிறார். பிளேட்டோவின் "இலட்சியப் பண்பு-தத்துவ"த்தைக் கண்டிக்கப்புகுந்த அரிஸ்டாடில், அதே போன்றதொரு தத்துவத்தையே வகுத்துவிட்டாரென்று ஸெல்லர் (Zeiler) என்பவரும் கூறுகிறார். அரிஸ்டாடிலின் "பொருள்-உருவ" தத்துவத்தில் விளக்கம் போதவில்லை. ஆங்காங்கு எழுகின்ற

---

* ஆண் என்ற 'உருவம்', பெண் என்ற பொருளைப் பூரணமாக வெற்றி காண முடியாத சேர்க்கையின் பயனாகத்தான் பெண்-மகவு பிறக்கிறது என்பது அரிஸ்டாடிலின் கொள்கை.

முக்கியமான சந்தேகங்களுக்கும் அவர் சரிவர விடை பகரவில்லை. காரணம் இதுதான். அவர் பிளேட்டோவின் தத்துவத்தைக் கண்டிக்க முற்பட்டாலும், ஆசிரியரது "உருவம்", அவரது சிந்தனை என்ற 'பொருளில்' ஆழ்ந்த சுவடுகளை விட்டுச் சென்றதால், அதிலிருந்து முழுவதும் விடுபட்டுக்கொண்டு, தர்க்க-ரீதியான கொள்கையை இது விஷயத்தில் அரிஸ்டாடில் வகுக்க முடியவில்லை என்றே கொள்ளலாம்!

இந்தப் "பொருள்-உருவ" வாதத்திலிருந்து அரிஸ்டாடில் காணும் முடிவு உலகிலிருக்கும் பொருள்கள் எல்லாமே, ஏதோ ஒரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்காகத்தான் இயங்குகின்றன என்பதே ஆகும். ஒவ்வொரு செய்கைக்கும் காரணம் (அல்லது மூலம்) நோக்கம் என்று இரு அம்சங்கள் உண்டு. இவற்றில் நோக்கம் அல்லது குறிக்கோள் மிகவும் முக்கியமானது. சில பொருள்கள், குறிக்கோளின் சக்தியை எதிர்ப்பதால்தான் உலகில் ஏமாற்றங்களும், தவறுகளும் நிகழ்கின்றன. ஒவ்வொரு பொருளுக்கும் உள்ளூரக் குறிக்கோள் ஒன்று உண்டு. குறிப்பிட்ட குறிக்கோளின்றி எந்தப் பொருளும் உலகில் இல்லை. தன்து *குறிக்கோள் அமைப்பு, இயற்கை, இவற்றின் சக்தி கொண்டே, குறிப்பிட்ட விதத்தில் இயக்கங்கள் நடைபெறுகின்றன. (உதாரணமாகக் கோழி முட்டையின் உள்ளிருக்கும் கரு, கோழியாகத்தான் வளருமாறு இயங்கவேண்டும்; வாத்தாக அல்ல", என்ற அமைப்பும், இயற்கையும், குறிக்கோளும் கருவினுள்ளேயே அடங்கியிருக்கின்றன.) இவ்வாறு கூறுவதால் கடவுள் ஒருவர் வெளியிலிருந்து நிகழ்ச்சிகளையும், இயக்கங்களையும் செயலாற்றவில்லை என்று பொருள் அல்ல. இந்த இயக்கம்—தெய்வீக—ஊக்கம்—அந்தந்தப் பொருள்களுக்கு உள்ளிருந்தே நிகழ்கிறது என்றே பொருள். இதுதான் அரிஸ்டாடிலின் தத்துவத்தின் ஆணி-வேர்.

பொருள்-உருவத் தத்துவத்தை விளக்கிக் கூறும்போது, அரிஸ்டாடில், உயிரினங்களின் நிதரிசன-ஆற்றலுக்கும், உள்ளுறை ஆற்றலுக்கும், வித்தியாசம் காட்டினார். குழந்தை (இது பொருள்)க்கு ஒரு வித இயக்கம் இருக்கிறது; இது நிதரிசன—அதாவது உண்மையில் நிகழ்கிற—ஆற்றலை வெளிப்படுத்துவது; குழந்தை (பொருள்), மனிதனாக (உருவம்) மாற முடியும். இது உள்ளுறை-ஆற்றல். (இதையே, அரிஸ்டாடில் பொதுப்படையாகப் 'பொருள்கள் என்பன, உருவங்களின் உள்ளுறை-ஆற்றலே' என்று கூறினார்.) ஒவ்வொன்றிற்கும் உள்ளுறை-ஆற்றல் இருக்கிறது. "அதை வெளிப்படுத்திக்கொள்ள வேண்டும்; உள்ளுறை-ஆற்றல், வெளிவந்து நிதர்சன ஆற்றலாக வேண்டும்" என்ற தீராத தாபம் ஒவ்வொன்றுக்கும் உண்டு. அதை வெளிப்படுத்திக்கொள்ளும் முறையிலேயே இயக்கங்கள் நடைபெறுகின்றன. ஒவ்வொரு உயிரினமும், தான் இருப்பதைவிட மேம்பட்ட நிலையை எய்த வேண்டுமென்று இடையறாது முன்னேற்றப் பாதையில் செல்கின்றன. உலகமே ஒரு முன்னேற்ற இயக்கம்.

இனி, ஆன்மாவையும், உடலையும் பற்றிய அரிஸ்டாடிலின் சிந்தனைகளைப் பார்க்கலாம். ஆன்மா என்பது, உடலின் உருவம் என்பது முதற் கொள்கை. (அதாவது உடல், பொருள், ஆன்மா, அதன் உருவப் பண்பு.) ஆன்மா என்பது, உடலிலிருந்து வேறல்ல என்கிறார்

---

* இந்தக் குறிக்கோள் உயிர்களுக்குள்ளேயே அடங்கியிருக்கிறது.

அவர். (ஆன்மாவும் உடலும் வேறு என்றும், உடல் அழிந்தவுடன், ஆன்மா உடற் சிறையிலிருந்து விடுபட்டுச் சென்றுவிடுகிறதென்றும் அறிஞர் பிதாகரஸ் கூறியதை அரிஸ்டாடில் கண்டிக்கிறார்.) "உடலுடன், ஆன்மாவும் அழிந்துபடத்தான் செய்யும். ஆன்மாவை—அல்லது அதன் சில பகுதிகளை—உடலினின்றும் பிரிக்க முடியாது. உடலில் உள்ளுறையும் உயிரின் சக்தியை வெளிப்படுத்தி இயக்கும் முதற் கருவி ஆன்மாவே… மெழுகுத் துண்டு ஒன்றில், அச்சு வைத்து அடித்து ஒரு மெழுகு-உருவம் உண்டாக்கிவிட்டு, மெழுகும் அந்த உருவமும் ஒன்றா, வேறா. என்று கேட்பது போலத்தான், உடலும் ஆன்மாவும் வேறு பொருள்களா என்று கேட்பதும். ஆன்மாவே உடலின் பயன்" (அரிஸ்டாடிலின் 'ஞான நூலி'ல்.)

அரிஸ்டாடில் முன்னமே கூறியபடி, "உருவப் பண்பு" என்பது பொருளில் ஒருமைப்பாடு உண்டாக்குவது. தனியே கீழே கிடக்கும் கல், எல்லாக் கற்களையும் போலக் கல்தான். அதில் எந்த ஒருமைப்பாடும் இல்லை. சிற்பி, உளிகொண்டு அதிலிருந்து சிற்பம் செதுக்கி, ஒருமைப் பாட்டுடன் கூடிய உருவம் அளிக்கிறான். இதே உவமையை, உடல்-ஆன்மா உறவுக்கும் விஸ்தரிக்கலாம். உடலில் பல்வேறு பாகங்கள் இருக்கின்றன. ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட பலன் உண்டு. ஆனால், உடலிலிருந்து தனியே பெயர்த்து எடுக்கப்பட்ட கண்ணால் பார்க்க முடியாது. இம்மாதிரி தனித்தனியே தமது அலுவல்களைச் செய்ய முடியாமல், ஒன்றாக உடலில் இணைந்திருக்கும்போது மட்டும், தமது பணிகளை ஆற்றக்கூடிய உறுப்புகளின் இணைப்பே உடல். அந்த உறுப்புகளுக்கு இயக்கம் ஊட்டுவது—அதாவது, அவற்றின் உள்ளுறை ஆற்றலை வெளிப்படுத்துவது தான் ஆன்மா. ஆன்மா என்ற இந்த உருவப் பண்புதான், உடலுக்கு ஒருமைப்பாட்டை அளித்து, அதன் பயன் ஈடேறும்படி செய்கிறது. இந்த உருவப் பண்பு, உடல் என்ற பொருளுடன் இணைந்தே நிற்கிறது. உடல் அழிந்தால், ஆன்மா தனித்துச் செய்ய வேண்டுவது எதுவும் இல்லை.

ஆனால், ஆன்மா முழுவதும் உடலுடன் அழிந்துபடுமென்று அரிஸ்டாடில் கூறவில்லை. ஆன்மாவின் சில பகுதிகளே அழியும் என்று கூறிவிட்டு, ஆன்மாவிற்கும் மனதிற்கும் அவர் வேறுபாடு கூறுகிறார். ("ஞான நூல்") "மனம் என்பது, ஆன்மாவுக் குள்ளிருக்கும் சுதந்திர வஸ்து. அதற்கு அழிவென்றுமில்லை… மனம் என்பது என்ன என்பது தெளிவாக அறியக்கிடக்கவில்லை. எனினும், அது ஆன்மாவிலிருந்து வேறுபட்டதே. நித்தியத்துக்கும், அநித்தியத்துக்குமுள்ள வேற்றுமை மனதிற்கும், ஆன்மாவுக்கும் உண்டு. மனம் என்பது, காலங் கடந்ததொரு பொருள். உடலை இயக்கிப் புலன்-அறிவு பெறச் செய்வது ஆன்மா. உண்ணுதல், உணர்வறிதல், இயக்கம் ஆகியவை அதன் செயல்கள். மனத்தின் வேலை இவற்றைவிட உயர்தரமானது. உடலுக்கோ, புலன்களுக்கோ சற்றும் சம்பந்தமில்லாத சிந்தனைத் தொழில் புரிவதே மனம். எனவே, ஆன்மாவின் பிற பகுதிகள் அழிந்தாலும், மனத்திற்குச் சாவு இல்லை." (அரிஸ்டாடில்—"ஞான நூல்").

"Nichomachean Ethics" என்ற நூலிலும் அரிஸ்டாடில் இதே போன்ற கருத்துக்களைக் கூறுகிறார். ஆன்மாவை, இந்நூலில் அவர், பகுத்தறிவுள்ளது, பகுத்தறிவற்றது என்று இரு பிரிவுகளாகப் பிரிக்

கிறார். பகுத்தறிவற்ற பிரிவு எல்லா உயிரினங்களிடத்தும் காணப்படுவது. பகுத்தறிவுள்ள பிரிவு மனிதனுக்கே உரிய விசேஷச் சொத்து. சிந்தனையே அந்தப் பிரிவின் உயிர். அதுதான் மனித வாழ்வின் பூரண மான மகிழ்ச்சி. "ஆனால்... இதை மனிதனிடம், மனித அம்சத்துக்கு மேலான தெய்வீக அம்சம் எத்தனைக்கெத்தனை அதிகமாக இருக்கிறதோ அத்தனைக்கத்தனை, அதிகமாக அவன் இந்த மகிழ்ச்சியை எய்துவான்."

அரிஸ்டாடில் இவ்வாறு கூறுவதால் மனிதனுக்கு மனிதன் காணப்படும் வித்தியாசத்தை, அல்லது ஒரு குறிப்பிட்ட மனிதனின் சிறப்பியல்பை, மனிதனின் பகுத்தறியும் திறனைக்கொண்டே கணக்கிடுகிறார். ஒருவனுக்குப் பாகற்காய் பிடிக்கும். மற்றவனுக்குப் பிடிக்காது. இது "பிரிக்கும் இயல்பு". ஆனால் சிந்தனையின் விளைவுகளைக் குறித்து—இருவரும் சரியாகச் சிந்தித்தால்—வேற்றுமை கிடையாது. பாகற்காய் பிடிப்பவனும், பிடிக்காதவனும், இரண்டும் இரண்டும் நாலு என்று ஒப்புக்கொண்டுவிடுவார்கள். எனவே பகுத்தறிவு மனிதர்களைப் பிணைக்கிறது. பிரிக்கும் சக்திகள் அழிந்துவிடக்கூடியவை. பிணைக்கும் சக்தியான பகுத்தறியும் மனம் நித்தியமானது. இவற்றில் எதை அதிகம் சார்ந்து வாழ்வதென்பது, அந்தந்தத் தனி மனிதர்களைப் பொறுத்தது.

உலகிலுள்ள பொருள்கள் யாவற்றையும் அரிஸ்டாடில் மூன்று விதமாகப் பிரித்திருக்கிறார். (1) உணர்ச்சியுள்ளவை—அழியக் கூடியவை. தாவரங்களும், விலங்கினங்களும் இந்தப் பிரிவில் அடங்கும். (2) உணர்ச்சியுள்ளவை ஆனால் அழியாதவை—விண்ணகத்தே ஓடும் கிரகங்கள் முதலியவை இதில் சேரும். (3) உணர்வற்றவை—அழியாதவை—மனித ஆன்மாவின் பகுத்தறியும் பிரிவு—அதாவது மனம், கடவுள் ஆகிய இரண்டும் இந்த வகையின.

அரிஸ்டாடில் கடவுளைப் பற்றிச் சிந்தித்ததற்கு, அவரது இயக்கக்கொள்கையே காரணம். உலகத்திலுள்ள பொருள்கள் எல்லாம் இடையறாது இயங்கிக்கொண்டே இருக்கின்றன என்று பார்த்தோம். இந்த இயக்கம் இடைவிடாத சுழற்சி எப்படி, எப்போது, முதன் முதலில் ஆரம்பித்தது? என்று கேள்வி போடுகிறார் அரிஸ்டாடில். இயக்கத்துக்கு ஆதி இல்லை என்பதை அவர் ஒப்புக்கொள்ளவில்லை. மூலப்பொருள் வேண்டுமானால் ஆதியில்லாத பொருளாக இருக்கலாம். ஆனால், அவற்றிலிருந்து எண்ணற்ற உருவங்களும், உருவப்பண்பும் எவ்வாறு தோன்றின? இந்த இயக்கத்துக்கு ஒரு மூலம் இருந்திருக்கத் தான் வேண்டும் என்பது அரிஸ்டாடிலின் முடிவு. தான் இயங்காமல், பொருள்களில் இயக்கத்தைத் தோற்றுவித்த பொருள் ஒன்று - ஆதி மூலம் ஒன்று - 'இயங்கா இயக்கி' ஒன்று இருக்கத்தான் வேண்டும். அந்த இயங்கா இயக்கி, முடிவற்றது; உணர்வற்றது; இடமற்றது; குறையற்றது. இதையே அவர் கடவுள் என்று குறிப்பிடுகிறார். "வாழ்க்கையும், தொடர்ந்த இயக்கமும் நித்தியத்துவமும் கடவுளைச் சேர்ந்தவை. இவையே கடவுள். (அரிஸ்டாடில் - "ஞானநூல்").

இந்த இடத்தில் ஒரு விஷயத்தை நாம் கவனிக்க வேண்டும். "அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு" என்று அரிஸ்டாடில் சொல்லவில்லை. "ஆதி பகவன் முதற்றே இயக்கம்" என்றுதான் கூறுகிறார். கடவுள் உலகை முதன் முதல் இயக்கினரே

யன்றி, உலகைச் சிருஷ்டிக்கவில்லை. அவர் இயக்கியே தவிர சிருஷ்டி கர்த்தா அல்ல. இந்த இடத்தில் பிளேட்டோவின் சிந்தனைகளை ஒப்பு நோக்குவது அவசியம். Timaeus என்னும் நூலில் பிளேட்டோ உலகைக் கடவுள் படைத்துத்தான் இருக்க வேண்டுமென்று கூறுகிறார்.* மூலப் பொருள்கள் ஒழுங்கின்றிச் சிதறிக் கிடந்ததை எடுத்து அவர் உலகை உருவாக்கினார். (யூதர்களும், கிறிஸ்தவர்களும் கூறுவது போலச், சூனியத்திலிருந்து உலகைக் கடவுள் சமைத்தார் என்று பிளேட்டோ கூறவில்லை.) முதலில் ஆன்மாவையும் பிறகு உடலையும் அவர் உண்டாக்கினார். சூரியன் காலம் விண்ணகம் எல்லாம் அப்பொழுதே தோன்றின என்பது பிளேட்டோவின் கொள்கை. அரிஸ்டாடிலின் சிந்தனைகளின் அடிப்படையே காலமும், உலகும் ஆதியும் அந்தமுமற்றவை என்பது. மூலப்பொருள்கள் முன்பே இருந்தன என்றும், அவற்றிலிருந்து உலகைக் கடவுள் அமைத்தா ரென்றும் பிளேட்டோ சொன்னார். உலகும் காலமும் கூட முன்பே இருந்தன வென்றும் உலகில் இயக்கத்தைத் தோற்றுவித்தவர் தான் கடவுள் என்றும் அரிஸ்டாடில் சொன்னார்,

இயங்கா - இயக்கிதான் கடவுள் என்னும் அரிஸ்டாடிலின் தத்துவத்தைச் சிறிது பார்க்கலாம். உலகில் எந்தச் செயலுக்கும், இயக்கத்துக்கும் காரண பூதங்கள் நான்கு என்கிறார் அரிஸ்டாடில். 1. காரணப் பொருள், (Material Cause), 2. காரணக் கரு. (Formal cause) 3. காரண மூலம் (Efficient cause) 4. காரண இறுதி (Final cause) என்பவை அவை. சிற்பி - சிற்பம் உதாரணத்தையே எடுத்துக் கொள்ளுவோம். சிலைக்குக் காரணப் பொருள் கல்! காரணக் கரு—சிற்பத்தின் உருவத்தைப்பற்றிச் சிற்பியின் மனதில் எழும் கற்பனை! காரணமூலம்—சிற்றுளி கல்லின் மீது கிரமப்படி தாக்குவது! காரண இறுதி என்பது சிற்பியின் மனதில் நிர்ணயிக்கப்பட்ட குறிக்கோள் ; அவரது நோக்கம்! உலகின் இயக்கங்களுக்கெல்லாம் குறிக்கோள்தான் இயங்கா - இயக்கியான கடவுள். இயக்கங்களுக்குக் குறிக்கோள் அளித்தவர் அவர். அவரைப்போலவே ஆக வேண்டுமென்று இடைவிடாது முயன்று இயங்குவதே அந்தக் குறிக்கோள் ; லட்சியம்.

ஆனால், தான் இயங்காது பிறவற்றில் இயக்கத்தைத் தோற்றுவிப்பதுதான் கடவுள் என்று கூறுவது சிரமம். ஏனெனில், வான வெளியில் 47 அல்லது 55 இயங்கா இயக்கிகள் இருப்பதாகக் கணக்கெடுக்கப்பட்டிருக்கிறது. இவற்றிற்கும் கடவுளுக்கும் என்ன சம்பந்தம் என்று அரிஸ்டாடில் தெளிவாகக் கூறவில்லை. எனவே மொத்தம் 47 அல்லது 55 கடவுள்கள் இருப்பதாகவே அரிஸ்டாடில் கருதினதாகவும் கொள்ளலாம். அவர் இவ்வாறு வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும், "....அம்மாதிரி (அதாவது இயங்கா இயக்கி) ஒன்றுதான் இருக்கிறதென்று கொள்வதா, அல்லது ஒன்றிற்கு மேற்பட்டவை இருப்பதாகச் சொல்வதா என்ற கேள்வியை அசட்டை செய்து விடக்கூடாது" என்று 'ஞான நூலில்" எழுதியிருக்கிறார். [பிளேட்டோவின் கருத்துக்களை இங்கு ஒப்பு நோக்கலாம். வானவர் விலங்கினம் பறப்பன, நீர் வாழ்வன என நான்குவித உயிரினங்களை மூலக் கடவுள் படைத்

* திரு. அரு. ராமநாதனின் 'சிந்தனையாளர் பிளேட்டோ' எனும் நூலில் இக் கருத்துக்கள் விரிவாகக் கூறப்பட்டிருக்கின்றன.

தாராம். வானவர்களிடத்தில் ஒரு பகுதி சிருஷ்டித்தொழில் ஒப்படைத்தாராம். அதாவது, விலங்கினம் முதலியவற்றில், அழியக்கூடிய பகுதிகளைக் (உடலுறுப்புகளைக்) கடவுள்களும், அழியாப் பகுதியைக் (ஆன்மாவில் ஒரு பகுதியை) கடவுளும் சிருஷ்டித்தார்களாம்.

கடவுள்தான் உலக இயக்கங்களின் இறுதிக் குறிக்கோள் என்று பார்த்தோம். அதாவது கூடியவரையில் கடவுள் - தன்மை பெறுவதே உயிரினங்களின் இலட்சியமாக இருக்கவேண்டும். சுருங்கச் சொன்னால், கடவுள்போல ஆவதே உலக இயக்கத்தின் நோக்கம். Theaetetus என்ற நூலில், பிளேட்டோ, "அற வழிகளைக் கடைப்பிடிப்பதன் மூலம் கடவுளைப்போல் மனிதன் ஆக முடியும்; கடவுள் அற வடிவினர். எனவே, அறத்தை மேற்கொள்ளும் மனிதன் அதிகமாகக் கடவுள்போல் ஆகிறான்" என்று கூறுகிறார். ஆனால் அரிஸ்டாடில் கூறும் வழி சற்று வேறுபட்டது. "அன்புடன் பற்றுக அவன் தாளை" என்பதே அவர் கூறும் வழி. காதலிமேல் காதலனுக்கு அடங்காத அன்பு. அந்த அன்பையே பற்றுக் கோடாகக்கொண்டு, அவளை அடைய அவன் முயற்சிக்கிறான். அதேபோலக்கடவுள்மீது அன்புகொண்டு, அதையே புணையாகக் கொண்டால்தான் அவரை அடையலாம் என்பது அரிஸ்டாடில் காட்டும்வழி.

நாம் கடவுளிடத்து அன்பு செலுத்த வேண்டும் என்று அவர் கூறினாரே தவிர, "அன்பே கடவுள்" என்றோ, கடவுள் உயிர்களிடத்து அடங்கா அன்புடையவர் என்றோ கூறவில்லை. இதற்குக் காரணத்தைப் பார்ப்போம். கடவுள் பற்றற்றவர். உணர்வற்றவர். மாசற்றவர். மாசற்றதைத் தவிர வேறு எதையும் நினைப்பது அவரது தகுதிக்கு உகந்ததல்ல. குற்றமற்றதைத் தவிர வேறெதன் மீதும் அன்பு கொள்வது அவருக்கு ஏற்றதல்ல. உணர்வற்ற தொன்றைத்தவிர வேறு எதையும் அவர் உணரமாட்டார். குற்றமற்றது எது? உணர்வற்றது எது? என்று அவர் நினைத்துப் பார்த்தால் அது தானே என்று அவருக்குப் புலப்படும். எனவே கடவுள் தன்மீதே தான் அன்பு கொள்ள வேண்டும்; தன்னைப்பற்றியே தான் நினைத்துக்கொண்டிருக்க வேண்டும். அதனால்தான் அரிஸ்டாடில், "கடவுள் மீது மக்கள் அன்பு செலுத்த வேண்டுமே தவிர, மக்கள் மீது கடவுள் அன்பு செலுத்துவதென்பது முடியாத காரியம்" என்று கூறுகிறார். ஸ்பைனோஸா (Spinoza) என்ற சிந்தனையாளரும் இதே கருத்தைத் தெரிவித்திருக்கிறார். அதனால், மக்கள், தாங்கள் கடவுள் மீது அன்பு செலுத்தி, அதையே பற்றுக் கோடாகக் கொண்டு அவரை அடைய வழி பார்க்க வேண்டும்.

அரிஸ்டாடிலின் ஞான இயல், நிதர்சன வாதத்தில் தான் துவங்குகிறது. பிளேட்டோவின் இலட்சிய - வாதத்தையும் மாயா வாதத்தையும் கண்டிக்கும் வகையில் தான் அது தொடங்குகிறது.

ஆனால் தெளிவான ஒருமைப் பாட்டுடன் கூடிய கட்டுக்கோப்பு அதில் இல்லை. அவருடைய தத்துவப்படியே பார்த்தால் பிளேட்டோவின் தத்துவமாகிய "பொருளி" லிருந்து ஒருமைப்பாடு கொண்ட "உருவமாகத்" தமது கொள்கையை நிலை நாட்ட அவர் நினைத்தார். அதற்கு அவர் செய்தது, பிளேட்டோவின் லட்சியக் கொள்கைகளுடன், தர்க்க ரீதியான பொது அறிவைக் கலந்து வழங்கியதுதான். ஆனால் அவை சரியானபடி கலக்கவில்லை.

பாகம் மூன்று : ஒழுக்கவியல்

"கடனென்ப நல்லவை எல்லாம் ; கடனறிந்து
சான்றாண்மை மேற்கொள் பவர்க்கு"
—திருக்குறள் (சான்றாண்மை)

[அரிஸ்டாடில், தமது கலைக்கழகத்தில், அறிவியலைப் பற்றியும், வான வெளியில் ஓடும் கிரகங்களைப் பற்றியும், உலகெங்கும் பரந்து கிடக்கும் உயிரினங்களைப்பற்றியும், மெய்ப்பொருளைப்பற்றியும், மட்டும் சிந்தித்துக்கொண்டு இருக்கவில்லை. அவரிடம் மாணவர்கள் திரளாக வந்து கூடக் கூட, அவரது சிந்தனைகள் வேறு திசைகளிலும் திரும்பின. சிறந்த வாழ்க்கை எது? மனிதன் 'வாழ்வாங்கு வாழ்தல்' எவ்விதம்? வாழ்வின் மேன்மை எது? நன்னெறி என்பது தான் என்ன? சமுதாயத்தின் பொது - நன்மைக்கும் தனி மனிதனின் நன்மைக்கும் என்ன சம்பந்தம்? என்பவை போன்ற கேள்விகள் அவர் மனத்திடைப் பிறந்தன. கேள்விகளுக்குத் தாம் கண்ட விடைகளை மூன்று புத்தகங்களில் அவர் எழுதிவைத்தார். (அவற்றில் இரண்டு, அரிஸ்டாடிலின் சீடர்கள், குறிப்புச் சுவடிகளிலிருந்து தொகுத்தவை என்றும் Nichomachean Ethics என்கிற ஒரு நூல்தான் அரிஸ்டாடில் புத்தக வடிவில் எழுதியதென்றும் கூறுவர்.)

மேற் குறிப்பிட்ட கேள்விகளுக்கு அவர் விடைகாண முற்பட்ட போது, தாம் எப்போதும் பற்றுக் கோடாகக் கொண்டிருந்த நிதர்சன-வாதத்தையே துணையாகக் கொண்டார். அவரது விஞ்ஞானம் - முறையின் மணம், அவரது நன்னெறிச் சிந்தனைகளிலும் மணக்கிறது. மனித இயல்புக்கும், நடைமுறைக்கும் பொருந்தாத வரட்டுத் தத்துவங்களை அவர் போதித்தாரில்லை. 'நீர்மேற் குமிழி இளமை' என்று மாயா வாதம் புரியவுமில்லை. பிளேட்டோவைப்போல 'கனவுக் கொள்கைகளை'க் கூறவும் இல்லை. ஹெராக்ளிடஸைப் போல, "மனிதன் என்றுமே நல்லது செய்யமாட்டான். மனித குலத்துக்கு உய்வே இல்லை" என்று நம்பிக்கையில்லாத் தீர்மானம் படிக்கவும் இல்லை. வாழ்க்கையில் தாம் நேரே கண்டுணர்ந்தவற்றை அடிப்படையாகக் கொண்டு, மனித இயல்பை அரிஸ்டாடில் தெளிவாக உணர்ந்தார். அதற்கு ஒவ்வும் வகையில், 'வாழ்வின் லட்சியம் என்ன' என்று பார்த்தார். அந்த இலட்சியத்தை அடையும் வகையில், மனிதன் மேற்கொள்ள வேண்டிய செயல் முறைகள் என்ன என்று கண்டார். அறமென்றால் என்ன? நட்பாவது யாது? என்றெல்லாம் அலசி விடை கண்டார். பிறகு இலட்சிய மனிதனின் நடத்தை எப்படி இருக்கும் என்று கற்பித்து

எழுதி வைத்தார். "மனித இயல்பின் வகையை, அரிஸ்டாடில் சரியான முறையில் உணர்ந்தார். அவர் காணும் இலட்சியம் ஒவ்வொன்றுக்கும் இயற்கையானதோர் அடிப்படை இருக்கிறது; இயற்கையாக உள்ள ஒவ்வொன்றுக்கும் இலட்சிய-முன்னேற்றமும் இருக்கிறது" என்று அறிஞர் ஜார்ஜ் ஸந்தாயனு (George Santayana) அரிஸ்டாடிலின் நீதி நூல்களைப் பற்றிக் குறிப்பிடுகிறுர்.

"சரியான வழி எது? அந்த வழியை மக்கள் கடைப்பிடிக்கச் செய்வது எப்படி?" என்று நடைமுறை யோசனைகள் கூறும் வகையிலேயே அரிஸ்டாடிலின் "நீதி நூல்" அமைந்திருக்கிறது. அரசியல் அறிஞரும், பெற்றேரும் அதைத் தாம் முதலில் கற்றுத் தேர்ந்து, பிறகு தாம் வழி காட்ட வேண்டிய மக்கள், குழந்தைகள் ஆகியோரையும் நல்வழிப் படுத்துவதற்கு ஓர் செயல்முறையாக அதை எடுத்துக்கொள்ளவேண்டு மென்பதே அரிஸ்டாடிலின் விருப்பம்.

இனி அரிஸ்டாடிலின் நீதி நூலைப் பகுதி பகுதியாகப் பார்க்கலாம்.]

பிறவிப் பயன் யாது?

உலக இயக்கம் அனைத்திற்கும் ஒரு குறிக்கோள் உண்டு என்று நம்புபவராதலால், அரிஸ்டாடில், "மனித வாழ்வின் குறிக்கோள் எது?" என்ற பரிசீலனையுடன் தமது நூலைத் துவக்குகிறுர். அந்தக் குறிக்கோளை வரையறுத்த பிறகு, அதை எய்தும் வழிகள் எவை என்பன விரித்துக் கூறப்படுகின்றன. இடையிடையே, நீதி, அறம், நட்பு என்பவை போன்ற பண்புகளைப் பற்றிய ஆராய்ச்சி இருக்கிறது. இலட்சிய நடத்தை எது என்ற கற்பனைச் சித்திரமும் வருகிறது.

நித்திய ஆனந்தமே மனித வாழ்வின் குறிக்கோள் என்பது அரிஸ்டாடிலின் சித்தாந்தம். "ஆனந்த நிலைக்கு மேலானதொரு இலட்சியம் கிடையாது; அதற்காகவே அதை நாம் நாடுகிறேம்; ஆனால், இன்பம், கௌரவம், அறிவு போன்றவற்றை யெல்லாம் நாம் நாடுவது, அவற்றின் மூலம் ஆனந்த நிலை எய்துவதற்காகத்தான்" (அரிஸ்டாடில்). ஆனந்த நிலை என்றுல் என்ன என்று பார்க்கலாம். அரிஸ்டாடில் பரிசோதனையாளராதலால், இதைக் கண்டறிவதற்கும் ஒரு முறை வகுத்துக்கொள்கிறுர். மனித வாழ்வின் ஆனந்த நிலை எது என்று அறிய வேண்டுமாதலால், மனிதன் பிற உயிரினங்களிலிருந்து எவ்வாறு வேறுபட்டிருக்கிறுன் என்பதையே அந்த முறையின் அடிப்படையாக அவர் ஏற்படுத்திக் கொள்ளுகிறுர். மனிதனுக்குச் சிறப்பாக உள்ள ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்திக்கொள்வதுதான் ஆனந்த நிலையின் திறவுகோல். மனிதனின் தனிச் சிறப்பு, அவனது சிந்தனைத் திறன். அதனுல்தான், "அரிதரிது மானிடராய்ப் பிறத்தலரிது" என்ற முதுமொழி பிறந்தது. அதனுல்தான் அவன், தன்னினும் வலிய உயிரினங்களையும் வெற்றி கொண்டு ஆள்கிறுன். சிந்தனை என்னும் தனிப் பேராற்றல் அவனுக்குச் சிறப்பைத் தந்திருப்பதால், அதன் பூரண வளர்ச்சி அவனுக்கு நித்திய ஆனந்தத்தைத் தரும் என்று கொள்ளலாம்.

ஆனுல் மனிதன் என்பவன் பகுத்தறியும் சக்திபெற்ற சிந்தனை-இயந்திரம் மட்டுமன்று. அவனுக்கு உணர்ச்சிகள் உண்டு. உணர்ச்சிகளை

யெல்லாம் வென்று, சிந்தனைத் திறன் ஒன்றையே புணையாகக் கொண்டவனின் வாழ்வு பாலைவனமாகவே இருக்கும். பகுத்தறிவைப் பயன்படுத்தாமல், "உணர்ச்சிகள் எவ்வழி தாடும் அவ்வழி" என்று அலைபவனின் வாழ்வு சோகத்தின் சிகரமாக இருக்கும். உணர்ச்சிகளும், சிந்தனைத் திறனும் ஒன்றிய வாழ்வே வாழ்வு. இவற்றில் எது எந்த அளவுக்கு அதிக ஆதிக்கம் செலுத்துகிறது என்பது, மனிதனுக்கு மனிதன் வேறுபடும். "சிந்தனைத் திறனின் பூரண வளர்ச்சியே ஆனந்த நிலையின் வாயிற்படி" என்று கூறும்போது, அரிஸ்டாடில் இந்த உண்மையை மறந்துவிடவில்லை.

எனவே, ஆனந்த நிலை எய்துவதற்கான வழியில் இரண்டு கிளைகள் இருக்கின்றன. முதலில் பகுத்தறிவைப் பயன்படுத்தி, "எது சிறந்தது?" என்று தர்க்க ரீதியாகப் பார்த்து விடை காணவேண்டும். இரண்டாவதாக, இந்த முடிவை வழியாகக் கொண்டு உணர்ச்சிகளைச் சீர்ப்படுத்திக் கொள்ளவேண்டும். முதலில் சொன்னது அறிவாற்றல்; பிறகு கூறியது ஒழுக்க நெறி. அறிவாற்றல், கல்வித் தேர்ச்சியால் பெறுவது; ஒழுக்க நெறி பழக்க வழக்கங்களால் ஏற்படுவது. அறிவாற்றல், ஆனந்த நிலைக்கு அடிப்படைத் தேவை. ஒழுக்க நெறி, அதை வளம் பெறச் செய்யும் கருவி. உணவு இல்லாவிட்டால் உயிர் வாழ முடியாது; உணவு, உயிர் வாழ்தலுக்கு அடிப்படைத் தேவை. ஆனால், பக்குவமான முறையில், தேர்ந்த உணவு வகைகளை உண்டால், உடல் நிலை வளம் பெற்றுச் சீரிய முறையில் இருக்கும். அதேபோலத்தான், ஆனந்த வாழ்வுக்கு, அறிவாற்றலும், ஒழுக்க நெறியும்.

எனவே, அறிவாற்றலும், ஒழுக்க நெறியும் ஒருங்கமைந்த வாழ்வு தான், நித்திய ஆனந்தத்துக்குச் செல்லும் பாதை. மனிதனுடைய செயல்களிளெல்லாம் தலைசிறந்தது சிந்தனைதான். மனிதனுக்கு எத்தனையோ அலுவல்கள் இருக்கின்றன, ஜீவனோபாயத்துக்கு. சிலர் அரசியலில் ஈடுபடுகிறார்கள்; சிலர் போர் வீரராக இருக்கிறார்கள்; சிலர் கலைஞராக வாழ்வு நடத்துகின்றனர். மிகச் சிலர், சிந்தனையையே வாழ்வின் செயலாகக் கொண்டு வாழ்கின்றனர். சிந்தனையாளருக்குத் தான் ஒய்வு *(Leisure) நிறைய உண்டு. அதனால், செயல்களில் சிறந்தது சிந்தனையே. மனிதன், ஒவ்வொரு நிமிஷமும் சிந்தனை செய்துகொண்டே இருந்துவிட முடியாது. ஆனால், அவன் சிந்தனை செய்யும் ஒவ்வொரு நிமிஷமும், தெய்வ-வாழ்வு வாழ்கிறான். எல்லா மனிதர்களுக்குள்ளும் சிந்தனையாளனின் செய்கைதான் மிக அதிகமாகத் தெய்வத்தின் செய்கையை ஒத்திருக்கிறது. (ஏனெனில் தெய்வத்தின் பணி சிந்தனை செய்து கிடப்பதே என்பது அரிஸ்டாடிலின் முடிவு). எனவே சிந்தனையாளரின் வாழ்வுதான் தலைசிறந்தது; ஆனந்தம் செறிந்தது. நீதி நூலின் இறுதியில் அரிஸ்டாடில் இதுபற்றிக் கூறியுள்ளது கவனிக்கத்தக்கது :—

---

*ஒய்வு என்றால், செயலொன்றும் புரியாமல் வாளாவிருப்பது என்று பொருளல்ல. ஜீவனோபாயத்துக்காக அல்லாமல், தமது ஆற்றலை வளரச் செய்யும் நோக்கத்துடன் செய்கை செய்வதற்கே, அரிஸ்டாடில் 'ஒய்வு' என்று பெயர் கொடுக்கிறார். இதுபற்றி மேலும் விரிவாக, "அரசியலில்" கூறப்படும்.

"சிந்தனையைப் பயன்படுத்தி, அறிவாற்றலை வளர்த்துக்கொள் பவன்தான் வானவருக்கு மிகவும் உகந்தவன். வானவரின் செய்கை,— அவர்களுக்கு மிகவும் உகப்பான செய்கை—சிந்தனை புரிதலே. எனவே, தெய்வங்கள் மனிதர்களிடத்து அக்கறைபூண்டால், (அக்கறை பூண்டிருப்பதாகத்தான் அனைவரும் சொல்கிறார்கள்) தமது செய்கையைப் புவிமீது ஆற்றி வருபவர் மீது அவர்கள் அதிக அன்புகொள்ளத்தான் வேண்டும். அவ்வாறு புவிமீது தெய்வ-வாழ்வு வாழ்பவன் சிந்தனையாளனே. அதனால், அவன்தான் வானவருக்கு மிகவும் உகந்தவன்; அதனாலேயே அவன் வாழ்வு ஆனந்தமயமாக இருக்கும்.

ஆனந்தமும் இன்பமும்

இனி, மேலே செல்வதற்கு முன்பு, "ஆனந்த நிலை" என்பதற்கும் இன்பத்துக்கும் வேறுபாடு தெரிந்துகொள்ள வேண்டும். அரிஸ்டாடிலின் கொள்கைப்படி ஆனந்தம் வேறு; இன்பம் வேறு. யூடாக்ஸஸ் (Eudoxus) என்ற கிரேக்க அறிஞர், 'இன்பமே வாழ்வின் லட்சியம்" என்று எழுதி வைத்துச் சென்றார். இதை அரிஸ்டாடில் மறுதளிக்கிறார். ஒருவன் எடுத்த காரியத்தில் வெற்றி கண்டால் அதில் அவன் இன்பம் காண்கிறான். அந்தக் காரியம் அறிவாற்றல் சம்பந்தப்பட்டிருந்தாலும் சரி, புலன்கள் சம்பந்தப்பட்டவையாக இருப்பினும் சரி, இது உண்மையே. அரியதொரு ஆராய்ச்சியை வெற்றிகரமாக முடித்தவனும் இன்பமடைகிறான். நெடுநாட்களாகப் பணம் சேமித்து வைத்து, தான் பார்க்க வேண்டுமென்று விழைந்த நடனக் கச்சேரியைப் பார்த்தவனும் இன்பமடைகிறான். ஆனால் இந்த இன்பம் வாழ்வின் லட்சியம் அல்ல. சில சமயங்களில் இன்பம், ஆனந்த நிலை எய்துவதற்குத் துணை புரிவதும் உண்டு. அவ்வளவுதான். இன்பத்தைப் பற்றி மூன்று கருத்துக்கள் உலவுவதாக அரிஸ்டாடில் குறிப்பிடுகிறார். ஒன்று 'இன்பம் என்பது நல்லதல்ல' என்ற கொள்கை. இது சரியல்ல என்பது அவர் வாதம். "துன்பம் என்பது நிச்சயமாக நல்லதல்ல. துன்பத்துக்கு எதிரிடையான இன்பமும் நல்லதல்ல என்று கூறுவது எப்படிச் சரியாகும்? பனியில் போதிய உடைகளின்றிப் படுத்துறங்குபவன் ஆனந்தமாக இருப்பான் என்று கூறுவது பேதைமை" என்பது அவர் வாதம். இன்பம் பற்றிய இரண்டாவது கருத்து, "சிற்சில இன்பங்கள் நல்லவையே; ஆனால் பல இன்பங்கள் மோசமானவை" என்பது. இதைப் பற்றி எழுதுகையில், அரிஸ்டாடில் இன்பங்களைத் தர-நிர்ணயம் செய்கிறார். "சில இன்பங்கள் மோசமானவைதான். ஆனால், அவை நன்மக்களுக்கு இன்பமாக இருப்பதில்லை. நற்செயலோடு சம்பந்தப்பட்ட இன்பம் நல்லதுதான். தீய செயல்களின் வாயிலாகப் பிறக்கும் இன்பம் தீயது" என்பது அவர் முடிவு. "இன்பம் நல்லதுதான்; ஆனால் மிகச் சிறந்தது அல்ல" என்ற மூன்றாவது கொள்கையையே அவர் ஆதரிப்பதாகத் தோன்றுகிறது. இன்பம் வேண்டியதுதான். இன்பமே இல்லாவிடில் வாழ்வில் வேறு என்னதான் சுவையிருக்கும்? விலங்கினங்களுக்கும் இன்ப-உணர்ச்சி உண்டு. மனிதனுக்கு உகந்த, தகுதிவாய்ந்த இன்பம் எது என்பதைப் பகுத்தறிவைக்கொண்டு நிர்ணயிக்கவேண்டும். அவ்வாறு நிர்ணயிக்கப்பட்ட, தீதற்ற இன்பம்கூட மனித வாழ்வின் இலட்சியப் பயன் அல்ல. ஆனந்த நிலை எய்த மனிதன் பாடுபடும்போது, அவனை ஊக்குவிக்கும் கருவியே இன்பம்.

நன்னெறிப் படுத்தும் முறை :

ஆனந்த நிலை எய்துவதற்கு வேண்டிய பண்புகள் இரண்டு என்று கண்டோம்—அறிவாற்றலும், ஒழுக்க நெறியும். இவை இரண்டும் சிறுவயதிலிருந்தே ஒருங்கமைந்து வளரச் செய்வதே கல்வி முறையின் குறிக்கோள். அறிவாற்றலை வளரச் செய்யலாம் ; ஒழுக்க நெறியைப் புகட்டும் முறை எப்படி ?

கல்வி கற்பிப்பவன், தனது நேரடியான மேற்பார்வையின் கீழ், குழந்தைகளை நல்வழி மேற்கொள்ளுமாறு செய்யவேண்டும். ஒவ்வொரு குழந்தைக்கும் இயல்பான-உணர்ச்சிகள் சில உண்டு. நல்ல மேற் பார்வையின்கீழ், திரும்பத் திரும்ப நற்செயல்களைச் செய்தால், அந்த இயல்பு-உணர்ச்சிகள் நல்ல பழக்க வழக்கங்களாகப் பரிணமிக்கும். தகுதியற்றவரின் மேற்பார்வையில், கேடு நிறைந்த சூழ்நிலையில் குழந் தைகள் இருந்தால், தீய வழக்கங்கள் தோன்றும்.

["நிலத்தியல்பால் நீர் திரிந்தற்றாகும் மாந்தர்க்கு
இனத்தியல்ப தாகும் அறிவு'—என்ற திருக்குறள் கருத்தை இங்கு ஒப்பு நோக்குக.]

தீய பழக்க வழக்கங்கள் படியப்படிய, நல்லது இன்னதென்று உணரும் பகுத்தறிவே நாளடைவில் நசித்து விடும். எனவே குழந்தைகள் அனைவரும், பண்பமைந்த கல்வியாளரின் மேற்பார்வையில் நல்ல செய் கைகளைச் செய்யச் செய்ய, அவர்கள் நல்லவர்களாகிவிடுவார்கள். நேர் மையான செயல்களைச் செய்யச் செய்ய, நேர்மையாளர்களாக ஆகி விடுவர் ; துணிச்சலான செயல்களை ஆற்ற ஆற்றத் துணிவும் தானே பிறந்துவிடும்.

[சிந்தனையாளர் ரூஸோ இதுபற்றிக் கூறியிருப்பது இங்கு குறிப் பிடத்தக்கது : "ஒருவர் செய்வதைப் பார்த்துப் பார்த்து இயற்றும் நற்செயல்கள், குரங்கின் செயல்களுக்கு ஒப்புமாகுமென்பது எனக்குத் தெரியும் ; ஆனால், பகுத்தறியும் உணர்வு நன்கு வளர்ச்சியடைந்திராத வயதில், எந்தச் செய்கைகள் நல்லதென்று நாம் கருதிக் குழந்தைகளை அவற்றில் பயிற்றுவிக்க எண்ணுகிறோமோ, அவற்றை அவர்கள் திரும்பத் திரும்பச் செய்யுமாறுதான் செய்யவேண்டும்… நாளடைவில், தமது சொந்தப் பகுத்தறிவாலும் நன்மை செய்வதில் விருப்பத்தாலும், அவர்கள் அவற்றைத் தாமே செய்யத் துவங்குவார்கள்…"]

"ஒவ்வொரு குழந்தைக்கும், குறிப்பிட்ட நற்செயல்கள் மீதும், தீச்செயல்கள் மீதும் **இயற்கையான** ஈடுபாடு உண்டு ; அதற்குத் தக்க படி, இந்தப் பயிற்சி பயனளிக்கும்" என்கிறார் அரிஸ்டாடில்.

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு கேள்வி எழலாம், நல்லது எது, தீயது எது என்று பகுத்தறிந்து, **தானே** நற்செயல்களைச் செய்வதில்தானே சிறப்பு இருக்கிறது ? சர்க்கஸ் மிருகத்தைப் போல பிறர் கண்டிப்புக் காகச் செய்து செய்து, அதுவே பழக்கப் படிந்து போனதால், நற்செயல் புரிவது என்ன சிறப்பு ? தானே உணர்ந்து செய்வதற்கு முன்பு, ஒருவர் போதிக்க வேண்டுவது அவசியம் என்றும், பிறர் கண்டிப்புக்காகச்

செய்யச் செய்ய, நாளடைவில், அதன் மதிப்பை மக்கள் தாமே உணர்ந்து செய்யத் துவங்குவார்கள் என்றும் அரிஸ்டாடில் பதிலிறுக்கிறார். எனவே, ஒழுக்க நெறியைத் தோற்றுவிப்பதற்காகக் குழந்தைகள், பொதுப் பள்ளியொன்றில் சேர்க்கப்பட்டுப் பொதுக் கல்வியாளர் ஒருவரால் பயிற்றுவிக்கப்பட வேண்டும். அதுதான் ஆனந்த நிலை என்னும் கோபுரத்துக்கு அஸ்திவாரம்.

அரிஸ்டாடில் இவ்வாறு பொதுக் கல்வி முறையைச் (Public Education) சிபாரிசு செய்வது, சுயேச்சைக் கல்வி முறையில் பற்றுக் கொண்டவர்களுக்குப் பிடிக்காமலிருக்கும். சிறு வயதில் குழந்தைகளின் உள்ளத்தைப் பொதுக் கல்விமுறை தகாத முறையில் ஆட்கொண்டு விடும் என்று அவர்கள் கூறுவார்கள். எதேச்சாதிகார முறையை (Totalitariamism) என்றும் நிலைத்திருக்கச் செய்வதற்கு இந்தப் பொதுக் கல்வி-முறை ஒரு கருவி என்று சொல்லுவார்கள். ஸ்பார்டா (Sparta) ராஜ்யத்தில் பொதுக்-கல்விமுறை அமுலில் இருந்தது. அரிஸ்டாடில் அதை நன்கு ஆராய்ந்து பார்த்தவர். அவ்வாறு இல்லாமல், தனிப்பட்ட முறையில் குழந்தைகளுக்குக் கல்வியூட்டும் முறை எவ்வாறு இருக்கும் என்று சிந்தனை செய்து பார்த்தார். இரண்டு முறைகளையும் ஒப்பு நோக்கியதில், பொதுக் கல்வி முறையே சிறந்ததெனப்பட்டது அவருக்கு. அதனாலேயே ஒழுக்கம் சால் மக்களாகக் குழந்தைகள் வளர்வதற்கு இம்முறையை அவர் சிபாரிசு செய்கிறார்.

[ஸ்பார்டாவில் இருந்த கல்வி முறையைச் சுருக்கமாகச் சொல்லலாம். இருபது வயது வரையில், நாட்டிலுள்ள எல்லாச் சிறுவர்களும், பெரியதொரு பொதுப் பள்ளியில் தங்கிப் பயின்றார்கள். உடலை வலிவுடையதாக்கித் துன்பத்தைப் பொருட்படுத்தாமல் கட்டுத்திட்டங்களுக்குப் பணியும் இயல்பைத் தோற்றுவிப்பதே இந்தக் கல்வி முறையின் நோக்கம். சட்ட வல்லுநர்கள் ஆற்றவேண்டிய மிகப் பெரும் பணிகளுள், குழந்தைகளின் கல்வி முறையும் ஒன்றெனக் கருதப்பட்டது. ஏழு வயதில், சிறுவர்கள் பெற்றோரைவிட்டுப் பிரிக்கப்பட்டுப் பொதுப் பள்ளிக்குக் கொண்டு செல்லப்படுவார்கள். அங்கு அவர்கள், உணர்ச்சி, அறிவுத்திறன், துணிவு இவற்றிற்கேற்பப் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படுவார்கள். கடுமையான சூழ்நிலைகளில் வாழ்வதற்கு அவர்கள் பயின்றார்கள். களவு, சூது போன்றவை கூட அங்கு கற்பிக்கப்பட்டன. செல்வு நிலையாமை, போன்ற நீதிப் பாடங்களும் போதிக்கப்பட்டன. இருபது வயதில் கல்வி முறை முடிந்து, ராணுவப் பயிற்சி தொடங்கும். இதுதான் ஸ்பார்டாவின் பொதுக் கல்வி முறை; ஸ்பார்டாவில் ஆண்களும் பெண்களும் ஒருங்கே எல்லாவற்றையும் பயின்றார்கள். இந்த முறை அரிஸ்டாடிலுக்குப் பிடிக்காதது. ஸ்பார்டாவின் அரசியல் முறையும் பிற வழக்கங்களும்கூட அவருக்கு உகந்தன அல்ல. ஸ்பார்டாவின் அரசியல் முறையின் இலட்சியத்தை அவர் வெறுத்தார். இருப்பினும், அந்த முறை தனது இலட்சியத்தை நன்கு பூர்த்தி செய்ததை அவர் கண்டபடியால், அந்த முறையை ஒப்புக்கொள்கிறார்.]

அரிஸ்டாடிலின் பொதுக் கல்வி முறையைப் பற்றிக் கூறிமுடிக்குமுன், மக்கள் அனைவரையும் மூன்று குணப் பிரிவுகளின் கீழ் பிரித்துவிடலாமென்றும், அவரவர்களின் இயல்பான குணப் பிரிவுக்கு ஏற்ப,

அவர்களது வாழ்க்கைப் போக்கும் அமைந்திருக்கு மென்றும், பிளேட்டோ கூறியதை அரிஸ்டாடில் ஏற்றுக் கொள்ள வில்லை என் பதைத் தனியே குறிப்பிட வேண்டும்.

நன்னெறிக்கு ஒரு பாதை :

ஒழுக்க நெறியைப் பற்றி அரிஸ்டாடில் கூறுகையில், தடையும், வருத்தமுமின்றி நன்னெறியை மேற் கொண்டு நடக்க வழியொன்று காட்டினர். அது தான் அவருடைய பிரசித்தி பெற்ற 'இடைவழிக்' கொள்கை. ["அரசியல்" நூல் பற்றிய விளக்கத்திலும் இதுபற்றிக் கூறப்பட்டிருக்கிறது.] ஒவ்வொரு நற் செயலும், இரண்டு அமிதங் களுக்கு இடையே உள்ள மிதப் பண்பு என்பது அவர் தீர்ப்பு. இந்த அமிதப் பண்புகள், நற்செயல்கள் அல்ல. உதாரணங்கள் பார்க்கலாம். தைரியம் என்பது நற்பண்பு ; இது, கோழைத்தனம், அசட்டுத் துணிச் சல் என்ற இரண்டு அமித குணங்களுக்கும் இடைப்பட்டது. சிரித்த முகத்துடன் நகைச்சுவை ததும்பப் பேசுகிருன் ஒருவன் ; நற்பண்புதான், சிடு மூஞ்சித் தனத்துக்கும், வெறிச் சிரிப்பிற்கும் இடைப்பட்டது அது; நல்ல நட்பு போற்றுதற்குரியது. அது, யாரிடத்தும் சண்டை போட்டுக் கொள்ளும் குணத்துக்கும், இச்சகம் பேசுவதற்கும் இடைப்பட்டது தான். தன்னம்பிக்கை, கையாலாகாத்தனத்துக்கும், மமதைக்கும் இடை வழி. ஒரு லட்சியத்தை வைத்துக் கொண்டு அதை எய்துவதற்காக உழைப்பது, சோம்பேறித் தனத்துக்கும், பேராசைக்கும் இடைப்பட் டது. "நன்னெறியைப் பற்றிக் குறிப்பிடும்போது, 'சரியான நடத்தை என்பது, கணித சாஸ்திரத்தாலோ, பொறி இயல் முறையிலோ, 'சரியான முறை' என்று கூறுவது போலத் தான்...மிகச் சிறந்த பலனை விளைவிக்கக் கூடிய மிகச் சிறந்த் வழி தான் எங்கும் சரியானதென்று கொள்ளப்படும்." இந்தச் சரியான வழி, "இடை வழி'தான். மித வாதம் தான். அதிகப் பணம் வைத்திருப்பதும் கெடுதி ; வறுமையும் கொடிது. நடுத்தரமே சிறந்தது. மிக நிறைய உண்பதும் தவறு ; பட்டினி கிடந்தாலும் உயிர் வாழ முடியாது. உடல் நூலிலும், சமூக இயலிலும் பொருந்தும் இந்தக் கொள்கை, ஒழுக்க நெறிக்கும் பொருந்தும். இடைவழியே தலைவழி.

இடைவழி என்று சொன்னல், இரண்டிற்கும், நான்கிற்கும் இடை யில் மூன்று இருக்கிறது என்பது போலக் கொள்ளக்கூடாது. அது எளிதில் கண்டு கொள்ளக் கூடியதுமல்ல ; என்றும் ஒரே மாதிரி நிலைத்து நிற்பதும் அல்ல. ஒவ்வொரு சந்தர்ப்பத்துக்கும் ஏற்ருற் போல, மனிதனின் பகுத்தறிவுத் திறனின் வளர்ச்சிக்கு ஏற்றபடி மாறக் கூடியது. சரியான இடை வழிப் பண்பு எது என்பது, பலநாள் பயிற் சிக்குப் பிறகு. தேர்ந்த-அறிவாற்றலின் துணை கொண்டு அறிந்து கொள்ள வேண்டியதொன்று. முன்பே குறிப்பிட்டபடி, நற்செயல் களை இடைவிடாது செய்து வருவதாலேயே. நற்பண்புகள் மக்களிடத் துப் படிகின்றன. எனவே, நற்பண்பு என்பது ஒரு செயலல்ல; பழக்கம். "தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன் மெய் வருந்தக் கூலி" தரத்தான் செய்யும். நற்செய்கையை ஊன்றிச் செய்யச் செய்ய, நற் பண்பு இன்னதென்று தேர்ந்தறியும் ஆற்றல் பெருகும். "வசந்த காலம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதுபோல, ஒரு நாளில்

மனிதன் பண்புகளைத் தேர்ந்தறிந்து ஆனந்த நிலை பெறவும் முடியாது"- பலநாள் பழக்கமே ஒழுக்க நெறியின் அடிப்படை. நாள் செய்வது நல்லவர் செய்யார்.

அமிதப் பண்புகளின் தீமையைக் குறிப்பிடும்போது, அரிஸ்டாடில் இளமைப் பருவத்தைப் பற்றி 'ஒரு மூச்சுக்' குறை கூறுகிறார். இளமை தான் அமிதத்தில் திளைக்கும் பருவம். அறிவை உணர்ச்சிப் பெருக்குமறைக்கும்காலம். பகுத்தறிவை இதயத்துடிப்பு ஆட்கொள்ளும்சமயம். மனதை, இதயம் கௌவும் காலம். இளமையில் ஒரு சிலர், வேண்டுமென்றே மனமறிந்து. அமிதச் செயல்களில் ஈடுபடுவார்கள். அவ்வாறு செய்பவர்கள் தமது குணத்துக்கு நேர் எதிரிடையாக உள்ள மற்றொரு அமிதப் பண்பே நற்செயலென்றும் அதைத் தம்மால் எய்த முடியவில்லை என்றும் கூறுவது உண்டு. பரீட்சைக்குப் பயந்து பயந்து படித்து, பயத்திலேயே விடைகளை மறந்து விடும் கல்லூரி இளைஞன் பரீட்சை நாளை யென்றாலும், வேண்டுமென்றே கவலைப்படாமல் ஊர் சுற்றும் சக மாணவனை இலட்சிய இளைஞனாக எண்ணி மனம் சாம்புவது அசாதாரணமல்ல. ஆனால் இந்த மனப்பான்மையும் ஓரளவு நன்மை தான் பயக்கிறது என்கிறார் நமது கிரேக்க சிந்தனையாளர். ஏனெனில் தமக்கு நேர் எதிரிடையாக உள்ள பண்பின் மீது மோகித்து, அதை எய்தத் துடிப்பவன் தானாக நாளடைவில் இரண்டிற்கும் நடுவிலுள்ள இடைவழிப் பண்பைக் கண்ணுற்று அதைப் பற்றிக் கொள்ளவும் இடமிருக்கிறது. "வளைந்த மூங்கிலை நேராக்க வேண்டுமானால் எதிர்த் திசையில் வளைக்கத் தானே செய்கிறார்கள்?" என்று அரிஸ்டாடில் கேட்கிறார். இது ஒரு ரகம். இடைவழியைக் கடைப் பிடிப்பவனை எள்ளி நகையாடும் அமிதவாதிகள் மற்றொரு ரகம். உதாரணமாகத் தைரியம் வாய்ந்த ஒருவனைக் கோழை ஒருவன், 'அசட்டுத் துணிச்சல்காரன்!' என்று அழைக்கிறான்; அசட்டுத் துணிச்சல்காரனோ, 'கோழை' என்று கேலி செய்கிறான்.

அரிஸ்டாடில், தமது இடை வழித் தத்துவத்தை அளவுக்கு மீறி வற்புறுத்துவதாகவே தோன்றுகிறது. உலகத்தோர் நல்லவை என்று ஏற்றுக் கொண்டிருக்கும் எல்லா நற்பண்புகளும் இந்தத் தத்துவத்துக்கு ஒத்து வருவதில்லை. உண்மை, அன்பு, ஊக்கம் போன்ற நற்பண்புகளை உதாரணமாகச் சொல்லலாம். (உண்மை என்றால் "பொய்மையும் வாய்மை யிடத்தப் புரை தீர்ந்த நன்மை பயக்குமெனின்" என்ற கருத்தையும் உள்ளிட்டே குறிப்பிடுகிறேன்.) அரிஸ்டாடிலின் தத்துவத்தை அப்படியே பின்பற்றுவதானால் நீதிபதி. நீதி வழங்குவதற்கும் அநீதி வழங்குவதற்கும் இடைப்பட்ட முறையைக் கையாள வேண்டியிருக்கும் அதிகாரிகள் லஞ்சம் வாங்கிக் கொண்டே இருப்பது, லஞ்சம் வாங்காதிருப்பது என்ற அமிதங்களுக்கிடையேயான இடைவழியைக் கடைப் பிடிக்கவேண்டியிருக்கும்; உபாத்தியார்கள் பாடம்கற்பிப்பது, பாடமே கற்பிக்காமலிருப்பது ஆகிய இரண்டிற்கும் இடைப்பட்ட செயலை மேற்கொள்ள வேண்டியதாக இருக்கும்; டாக்டர்கள், நோயாளியை முழுவதும் குணப்படுத்துவது, ஆளையே தீர்த்து விடுவது என்ற இரண்டுக்கும் நடுவில் இடைவழி ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும்! இடைவழிப்பண்பு என்பது சிற்சில சந்தர்ப்பங்களில் பொருத்த

மாக இருக்கலாம். அதையே எஞ்ஞான்றும் கடைப்பிடிப்பது சரியல்ல. (கிணறு தாண்டுவது போன்ற) சில சந்தர்ப்பங்களில் அது முற்றிலும் விபரீதமாகப் பலன் விளைவிப்பதும் உண்டு.

ஆனால் அரிஸ்டாடில் இடைவழிப் பண்பின் சிறப்பை அலுக்காமல் பாடியதற்குக் காரணம் இல்லாமல் இல்லை. கிரேக்க நாகரிகம் தோன்றிய காலத்தில் இருந்ததாகச் சொல்லப்படும். "ஏழு அறிஞர்கள்" (The Seven Wise Men) முதல் பிளேட்டோ வரையில் இடைவழிப் பண்பை மறைமுகமாகவாவது வலியுறுத்தியிருந்தார்கள். கிரேக்கக் கடவுளரில் ஒரு தேவனான அப்பாலோ (Apollo) வின் ஆலயத்தின் முகப்பில் "அமிதமே வேண்டாம்" என்று பொறிக்கப்பட்டிருந்தது. கிரேக்கர்களை உணர்ச்சி வசப்பட்டவர்களென்றும் தமது அமித உணர்ச்சியைக் கட்டுப்படுத்திக் கொள்ளவே அவர்கள் இவ்வாறு இடைவிடாது இடைவழிக் கொள்கையை வலியுறுத்தி இருக்க வேண்டுமென்றும் சிந்தனையாளர் நீட்ஷே கூறுகிறார். இது எப்படியாயினும், அந்தச் சூழ்நிலையிலேயே வளர்ந்த அரிஸ்டாடில், அந்தக் கொள்கையை மிகைப்படப் புகழ் பாடியதில் வியப்பொன்றுமில்லை. அறிவாற்றலுக்கும் ஒழுக்க நெறிக்கும் பழக்கமே காரணம் என்று அரிஸ்டாடில் கூறியதற்கு அவரும் விதி விலக்கு ஆகவில்லை!

நீதியும் நட்பும்

ஒழுக்க நெறியையும், அதற்கான கொள்கையையும் வலியுறுத்திய சிந்தனையாளர் உலக நடை முறை வழக்கை மறக்கவில்லை. இடைவழிப் பண்பைக் கடைப்பிடிப்பதைத் தவிர உலகில் மற்றும் தேவையாக இருப்பவற்றைப் பற்றியும் அவர் குறிப்பிடுகிறார். அவற்றில் முக்கியமாக, நீதியைப் பற்றியும், நட்பைப் பற்றியும் அவரது கருத்துக்களைப் பார்க்கலாம்.

"தைரியம், பெருந்தன்மை ஆகியவற்றைப் போல நீதியும் ஒரு நற்பண்பு···தகுதிக்குத் தக்கவாறு பொறுப்புகளையும், நன்மைகளையும் விநியோகம் செய்வதே அதன் பணி···தவறு ஏதாவது நேர்ந்து விட்டால், அதற்கு உரிய முறையில் பரிகாரம் தேடுவதும் அதன் பொறுப்பே" என்பது அரிஸ்டாடிலின் வரையறை. ஆனால் நீதியில் சமத்துவம் இருக்க வேண்டுமென்று அவர் கூறவில்லை. அனைவருக்கும் சம உரிமை உண்டு; அவற்றை அவரவர் பெறச் செய்வதே நீதி என்ற இக்காலக் கருத்தை அவர் கொள்கையளவில்கூட ஏற்றுக் கொள்ளவில்லை. "நீதி என்பது சமத்துவத்தை உள்ளிட்டது அல்ல; எல்லாவற்றிலும் சரியான விகிதம் இருக்க வேண்டும் என்பதையே அது விதிக்கிறது···சிற்சில சமயங்களில், இந்த விகிதம், சமத்துவத்தை உள்ளிட்டதாக இருப்பதும் உண்டு." (நீதி நூல்").

இந்தச் சந்தர்ப்பத்தில் முக்கியமான விஷயமொன்றைக் குறிப்பிட வேண்டும். நீதி என்ற சொல் கிரேக்க இலக்கியத்திலேயே மிகப் பரந்த முறையில் குறிக்கப்படுகிறது. தனி மனிதனின் எல்லாச் செய்கைகளையும் உள்ளிட்டதாகவே அந்தச் சொல் பயன்படுத்தப் படுகிறது. உதாரணமாக ஒருவன் கோழையாக இருந்தால் அதை நாம் அநீதி என்று குறிப்பிடுவதில்லை. தவறு என்று வேண்டுமானால்

சொல்லுவோம். ஆனால் கிரேக்கர்கள் அதை அநீதி என்பர். ஏனெனில், ஒருவன் கோழையாக இருந்தால் அதன் விளைவாக அவன் தன்னைச் சேர்ந்தவர்களைச் சில சமயம் ஆபத்துக்கு உள்ளாக்கி விடலாம். எனவே, கோழைத்தனமும் அநீதிதான்.

மேலே தொடரலாம், ஒருவனுக்கு 'நீதி'யாக இருப்பது, வேறு நிலையில் உள்ள மற்றவனுக்கு நீதியாக இருக்காது—இருக்க வேண்டிய தில்லை. எஜமானின் நீதி, அடிமைக்கு நீதி அல்ல. தந்தையின் நீதி, மகனுக்கு நீதி அல்ல. எஜமானுக்கு அடிமை சொத்தில் ஒரு பகுதி. மகனும் தந்தையின் சொத்துத்தான். ஒருவன் தனது சொத்துக்கே—உடைமைக்கே—அநீதி இழைத்துக் கொள்ள முடியாது. எனவே, அடிமையைப் பொறுத்த மட்டில் எஜமானும், மகனைப் பொறுத்த மட்டில் தந்தையும் செய்வதெல்லாம் நீதிதான். ஏனெனில் அவர்கள் இந்த விஷயங்களில் அநீதி இயற்றவே முடியாது! அடிமையைப் பொறுத்த மட்டில், இந்தப் பொது சட்டத்துக்கு அரிஸ்டாடில் இன்னும் கடுமையானதொரு திருத்த மசோதா இயற்றுகிறார். "எஜமானும், அடிமையும், நண்பர்களாகக் கூட இருக்க முடியாது; அடிமை ஓர் உயிர் வாழும் இயந்திரம்···இயந்திரத்துடன் நட்பாக எப்படி இருப்பது? ஒரு பொதுவான சட்ட அமைப்பில் பங்கு கொள்ளும் இரண்டு மனிதர்களுக்கிடையே தான் நீதியும், நட்பும் உண்டு." (நீதி நூல்).

அன்பு செலுத்துவதும் நீதிமுறை தான். எல்லாவற்றிலும் சரியான விகிதம் இருக்க வேண்டுமென்று நீதி விதிப்பதால் அன்பு செலுத்துவதிலும் ஒரு விகிதம், ஒரு தர வரிசை உண்டு. உதாரணமாகத் தந்தை-மகன் உறவை எடுத்துக் கொள்ளலாம். இருவரில் தந்தை உயர்ந்தவன். எனவே தந்தை மகன் பால் செலுத்தும் அன்பை விட, மகன் தந்தையிடத்துக் காட்டும் அன்பு அதிகமாக இருக்க வேண்டும். கணவன்—மனைவி விஷயத்திலும் அப்படித்தான். கணவன் தன்னிடத்துக் காட்டுவதை விட, மனைவி, கொழுநன்பால் அதிக அன்பு காட்ட வேண்டும். அரசன்-குடிகள், வாத்தியார்-மாணவன் போன்ற எல்லா உறவுகளும் இதே முறையைத் தான் அனுசரிக்க வேண்டும். அன்பும், நீதிக்கு உட்பட்டது; அந்த அன்பிற்கும் 'அடைக்கும் தாழ்' உண்டு!

தனி மனிதனுக்கு ஏற்ற நீதி முறைகளை யெல்லாம் ஆராய்ந்து அரசியல் அறிஞர்கள், நாட்டுக்கு உகந்த நீதி முறையை வகுக்க வேண்டும். அதற்குப் பணியாதாரை ஒறுப்பதாக அச்சுறுத்த வேண்டும். குழந்தைகளுக்குச் சிறுவயதிலேயே நீதிக்கு ஏற்ற நன்னெறி படியுமாறு செய்ய வேண்டும். ஆனால், மனிதர்கள் பலதரப்பட்டவர்கள். ஒவ்வொருவரது அறிவாற்றலுக்கும், குணத்துக்கும் ஏற்ற நீதி முறை என்ன என்று அரசியல் அறிஞன் கண்டு சொல்லுவது அசாத்தியம். எனவே, சமுதாயத்தின் நீதி முறைக்குப் புறம்பாக இல்லாத வரையில், தனி மனிதர்கள் தத்தமக்கு ஏற்ற நீதி நெறிகளைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

பிளேட்டோவின் நீதி முறைக் கொள்கையும், அரிஸ்டாடிலின் தத்துவத்தை ஒரு சிறிது ஒத்திருக்கிறது. ஆளும் வகுப்பினர், போர் வீரர், தொழிலாளிகள்-வியாபாரிகள் போன்றவர் ஆகிய மூவகுப்பின

ரும். தத்தமக்கு விதிக்கப்பட்ட பணியைப் பிற வகுப்பினரின் பணிகளில் தலையிடாமல் செய்து வருவதுதான் நீதி என்று அவர் கூறினார். ("குடியரசு"). இதன்படி பார்த்தால். வல்லமையிலும். அந்தஸ்திலும் ஏற்றத் தாழ்வுகள் இருப்பது அநீதியல்ல. சமத்துவம்தான் அநீதி ஆகிறது. தத்தமக்கு விதிக்கப்பட்ட பணியை அவரவர் செய்வது தான் நீதி என்றால் அந்தப் பணியை விதிப்பது யார்? அரசாங்கம். அரசியலின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்று ஒவ்வொரு பிரஜைக்கும் வேலை நிர்ணயிப்பது. அரிஸ்டாடில், பிளேட்டோவின் கருத்தில் முன் பகுதியை ஏற்றுக் கொண்டாலும் அரசியல் அறிஞர் தாம் அவரவருக்கான வேலைகளை நிர்ணயிக்க வேண்டும் என்ற கருத்தை அப்படியே ஒப்புக் கொள்ளவில்லை என்றுதான் படுகிறது.

நீதியைப் பற்றிய தமது விளக்கத்தின் எந்தப் பகுதியிலும் மனிதன் தனது ஆனந்த நிலைக்காக முயற்சிப்பதைத் தவிர, மற்றவரின் நன்மைக்காகவே முழுவதும் பாடுபட முடியும் என்று கூறவில்லை. 'ஒருவன் எத்தனை தூரம், பிறர் இன்பத்துக்காகப் பாடுபட முடியும்? 'என்ற பிரச்னையை அவர் "நட்பாராய்தலி"ல் கூறுகிறார்.

முதலில் அரிஸ்டாடில் நட்பின் அவசியத்தைப் பற்றிக் கூறுகிறார். "செயற்கரிய யாவுள நட்பினது போல்?" என்று, திருவள்ளுவரைப் போலத்தான் அரிஸ்டாடிலும் தமது நட்பு அதிகாரத்தைத் துவங்குகிறார். (ஆனால் பிறகு இருவரது பாதைகளும் வெவ்வேறு திக்குகளில் செல்லுகின்றன). "மனிதன் தனியே எவ்விதக் கூட்டுறவுமின்றி வாழ முடியாது...மனிதன் அரசியலில் வாழ்தற்குரிய ஜீவன்...பிறருடன் சேர்ந்து ஒன்றியிருப்பதே அவன் இயற்கை" என்பது அரிஸ்டாடிலின் நட்பு அதிகாரத்தின் பாயிரம். ஒருவன் துயருற்ற காலை அதைச் சொல்லி ஆற்றிக் கொள்ளவாவது நண்பனொருவன் தேவை. (சமயத்தில் அந்த நண்பன் உதவி செய்தாலும் செய்யலாம்). துயரம் வந்த பொழுதைவிட, மகிழ்ச்சி பொங்கும் சந்தர்ப்பங்களில்தான் நண்பன் இன்னும் அதிகமாகத் தேவை. 'மகிழ்ச்சியைப் பகிர்ந்து கொண்டால், அது இரட்டிக்கிறது" என்பது அவர் கொள்கை. "நகுதற்பொருட்டன்று நட்டல்" என்ற வள்ளுவர் வாக்கை அரிஸ்டாடில் பொருட்படுத்தவில்லை!

யார் யார் நட்புக் கொள்ள ஏற்றவர்கள்?—என்று பார்க்கலாம். ஒத்த பண்புடையவர்களுடன்தான் நட்புக் கொள்ள வேண்டும். நம்மை விட உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்கள் அவர்கள் குணத்திலும் மிக மேம்பட்டவர்களாக இருந்தாலன்றி அவர்களுடன் நட்புக் கொள்ளுதல் தகாது. ('மருவுக மாசற்றார் கேண்மை" என்றும். "குணனும். குடிமையும் குற்றமும் இன்று இனனும் அறிந்து யாக்க நட்பு" என்றும் கூறும் வள்ளுவர் கருத்துக்களை ஒப்பு நோக்குக). ஒத்த அந்தஸ்தில் இருப்பவர்களுடன் தான் நட்டல் வேண்டும் என்று தாம் கூறுவதற்கு அரிஸ்டாடில் காரணமும் தெரிவிக்கிறார். ஒருவர்-நம்மை விடச் செல்வத்திலும் அந்தஸ்திலும் மேம்பட்ட ஒருவர்—நமக்கு உதவுகிறார் என்று கொள்வோம். அவர் பால் நமக்கு நன்றி சுரக்கிறது. நன்றி நட்பாகப் பரிணமிக்கிறது என்றும் வைத்துக் கொள்ளுவோம். நன்றியின் அடிப்படையில் தோன்றிய இந்த நட்பு நிறைந்து நீடித்திருக்க முடியாது. ஏனெனில், 'நாம் அவருக்குக் கடமைப்பட்டிருக்

கிறோம்' என்ற உணர்ச்சி நம் மனத்தின் அடித்தளத்தில் இருந்து கொண்டு, அவரது குற்றங் குறைகளைக் கண்டிக்க நம்மை இடம் தராது. இந்தத் தாழ்மை-மனப்பான்மை, மனக்கசப்பாக மாறிவிடும். கசப்பு ஏற்பட்ட பிறகு நட்பு ஏது? எனவே, ஒத்த நிலையிலிருப்பவர் களுக்கிடையேதான் பரிபூரண நட்பு இருக்க முடியும்.

மற்றும் ஒருவனுக்குப் பல நண்பர்கள் இருப்பது உகந்ததல்ல. நட்பு என்பது ஏதாவது குறிப்பிட்ட சமயத்தில் உள்ள நட்பின்-தீவிரத்தைக் கொண்டு அளவிடப்படுவதில்லை. காலம்தான் பரிபூரண நட்பின் உரைகல்.

"நட்பிற்கு வீற்றிருக்கை யாதெனின் கொட்பு இன்றி
ஒல்லும்வாய் ஊன்றும் நிலை"

என்ற வள்ளுவர் கருத்து இங்கு காணக் கிடக்கின்றது. இவ்வாறு மாறா நட்புக் கொண்டிருப்பதற்கு, நிலைத்த பண்பு வேண்டும். எனவே, "நன்மக்களிடையே தான் நல்ல நட்பு இருக்க முடியும்".

ஒருவன் தன் நண்பனுக்காக, அவனுடைய நலனுக்காகத் தன்னலம் சிறிது மின்றிப் பாடுபட முடியுமா என்று பார்க்கலாம். 'முடியும்' என்று அரிஸ்டாடில் கூறவில்லை. ஒருவன் தன் நண்பனுக்காகப் பொருளோ, செல்வாக்கோ எதுவோ ஒன்று தியாகம் செய்வதாகக் கொண்டாலும் தன்னலமற்ற செய்கை அல்ல என்பதே அவர் கருத்து. தான் நல்லது செய்தோம் என்ற பெருமை-உணர்ச்சி அவனுக்கு இருக்கும்; இதனால் தான் பாராட்டப்படுவோம் என்ற மகிழ்ச்சி வேறு; தனது நண்பர் தன்னால் சுகிப்பதைப் பார்த்து அடையும் ஆனந்தம் வேறு;—இவ்வாறு தனக்கு ஏற்படக் கூடிய இன்பங்களை எதிர் நோக்கியே ஒருவன் நண்பனுக்காக உதவி செய்கிறான். "உடுக்கை இழந்தவன் கைபோல இடுக்கண் களைவது" தான் நட்பு என்பது சரிதான். ஆனால், அவ்வாறு செய்வதற்கு அவனுக்குப் பிரதிபலன் இல்லாமல் இருப்பதில்லை; பிரதி பலனைச் சற்றேனும் கருதாமல் நண்பன் உதவி செய்வதும் இல்லை. உதவி செய்து விட்டு, உதவி பெற்றுக் கொண்ட நண்பனிடம் அன்பு பாராட்டுவது, ஒரு பிராணியை நாம் ஆபத்தினின்றும் காப்பாற்றி விட்டுப் பெருமை தோன்ற அதனிடம் அன்பு செலுத்துவதைப் போலத்தான். இது தான் அரிஸ்டாடிலின் நட்புத்-தத்துவத்தின் சுருக்கம். தனது நலனுக்காக அன்றி, முற்றிலும் பிறருக்காகவே உழைக்க முடியும் என்று கருதவில்லை. பதினேழாம் நூற்றாண்டு ஆங்கிலச் சிந்தனையாளர் தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes) "மனிதனின் செயல்கள் பூராவும், பயம், தன்னலம் ஆகிய இரண்டு விசைகளால்தான் இயக்கப்படுகின்றன" என்று கூறினார். ஹாப்ஸிற்கு அரிஸ்டாடில் முன்னோடி என்றே நான் கருதுகிறேன். (சிந்தனையாளர் நீட்ஷேயின் கருத்துக்களும் இதே அடிப்படையில் பிறந்தவையே.)

இலட்சிய மனிதன் யார்?

அறிவாற்றலைப் பற்றியும், ஒழுக்க நெறியைப் பற்றியும் விளக்கி விட்டு, அரிஸ்டாடில், தமது கொள்கைகளுக்கு உகந்த இலட்சிய-மனிதனைக் கற்பனை செய்கிறார். எல்லா உயிர்களிடத்தும் "செவ்விய

தண்ணளி'' பூண்டொழுகுபவன் தான் சிந்தனையாளர் வள்ளுவரின் இலட்சிய-மனிதன். மேற்பூச்சைக்கண்டு ஏமாறாமல், உணர்ச்சிகளை விடுத்து, அறிவின் துணை கொண்டு உண்மையை உணர்பவன் தான் சிந்தனையாளர் பெர்னார்டுஷாவின் உயர்நிலை மனிதன். அன்பு, இரக்கம் என்றெல்லாம் 'போலி' வாதம் செய்யாமல், வன்மையும், கொடுமையும், தீரமும், தந்திரமும் கொண்டு ஆளும் சக்தி பெற்றவன்தான் சிந்தனையாளர் நீட்ஷேயின் இலட்சிய-மனிதன்! சிந்தனையாளர் அரிஸ்டாடில் என்ன சொல்லுகிறார், பார்ப்போம்.

அரிஸ்டாடிலின் இலட்சிய மனிதன், அன்பே ஓர் உருவாகி, விருப்பு வெறுப்பு இன்றிச் சேவை செய்பவன் அல்ல. அவன், தனது மதிப்பையும், திறனையும் நன்கு அறிந்தவனாக இருக்க வேண்டும். வேண்டாத அடக்கம் அவனிடம் இருக்கக் கூடாது. வெறுக்கத்தக்கவர்களை அவன் வெறுக்க வேண்டும். பண்புகளில் சிறந்தவனாக இருக்க வேண்டும். ஆபத்தை எதிர்த்து நிற்கத் தைரியம் உள்ளவனாக இருக்க வேண்டும். "இடுக்கண் வருங்கால் நகுக!" என்பது, அரிஸ்டாடில் தமது இலட்சிய-மனிதனுக்குச் செய்யும் உபதேசங்களில் ஒன்று. இனி, அரிஸ்டாடிலின் மொழி மூலமாகவே பார்க்கலாம் :—

"கௌரவம், அகௌரவம் என்பவற்றை இலட்சிய மனிதன் நன்கு உணர்ந்திருக்க வேண்டும். நல்ல மனிதர்கள் அளிக்கும் தகுதி வாய்ந்த பட்டங்களையும். விருதுகளையும் அவன் சுமாரான மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொள்ளுவான். தனது மதிப்புக்கு உகந்தவை அவை என்று நியாயமாகப் பெருமை கொள்ளுவான். பார்க்கப் போனால், அவனது பரிபூரணப் பண்புக்கு உகந்த விருதுகளை யாருமே அளிக்க முடியாது. ஆயினும், தக்க மனிதர்கள் கொடுக்கிறார்களே என்பதாலும், அவற்றிற்கு மேலாக அவர்கள் என்ன தான் கொடுக்க முடியும் என்ற எண்ணத்தாலும் அவன் அவைகளை மகிழ்ச்சியோடு பெற்றுக் கொள்ளுவான். [பிரசித்தி பெற்ற பேராசிரியர் ஒருவரை-அவர் நோபல் பரிசு பெற்றவராக வேண்டுமானால் இருக்கட்டும்—கல்லூரி மாணவர்கள் கௌரவிக்கும் போது, "இவர் பெரிய மேதை" என்று சொல்வதைக் கேட்கும் போது அவருக்கு எப்படி இருக்குமோ அதே போன்ற உணர்ச்சிதான் இலட்சிய மனிதனுக்கும் இருக்கும், புகழத் தகுதி பெற்ற பிறர் தன்னைப் புகழும் போதும்.]

ஆனால், தகுதியற்றவர்கள் விருதுகள் அளித்தால், இலட்சிய மனிதன் அவற்றை ஏற்கமாட்டான். உதறித்தள்ளிவிடுவான். (பாத்திர மறிந்து பட்டம் ஏற்பவன் அவன்). செல்வமும், ஆதிக்கமும் அவனுக்கு அற்பமானவை. செல்வமும் செல்வாக்கும் கௌரவம் அளிப்பதற்கான கருவிகள். கௌரவமே அவனுக்கு ஒரு பொருட்டல்ல என்றிருக்கும்போது, அதைப் பயக்கும் கருவிகளை அவன் துச்சமாக நினைப்பதில் வியப்பில்லையல்லவா ?··· இலட்சிய மனிதன் சிறு ஆபத்துகளில் மாட்டிக் கொள்ளமாட்டான் ; அதாவது அவற்றைவிட்டு விலகிச் செல்வான். ஆனால் பெரிய ஆபத்துக்களை முன்னின்று சமாளிப்பான். அந்த மாதிரி சந்தர்ப்பங்களில் உயிரை விடவும் தயங்கமாட்டான். உயிர் வாழ்வது அப்போது பொருட்டல்ல என்பது அவனுக்குத் தெரியும்··· பிறருக்கு இலட்சிய மனிதன் என்றும் உதவி செய்யும் பண்புடையவன். ஆனால்,

பிறர் தனக்கு உதவி செய்தால் பெற்றுக் கொள்ளமாட்டான். ஏனெனில் உதவி செய்தல் மேன் மக்கள் பண்பு ; ஏற்றுக்கொள்ளுதல் கீழ்மைக் குணம். எப்போதாவது பிறரிடமிருந்து உதவி பெற்றுக்கொள்ள வேண்டிவந்தாலும், அதை மும்மடங்காக இலட்சிய மனிதன் திருப்பிக் கொடுத்துவிடுவான்.

[" நல்லாறெனினும் கொளல் தீது ; மேலுலகம் இல்லெனினும் ஈதலே நன்று " — என்ற குறட் கருத்தையும், " கொள்ளெனக் கொடுத்தல் உயர்ந்தன்று ; அதனெதிர் கொள்ளே னென்றல், அதனினும் உயர்ந்தன்று " என்ற புறப் பாடலின் கருத்தையும் இங்கு ஒப்பு நோக்குக. ஆனால், " கொள்ளெனக் கொடுத்தல் ", " கொள்ளேன் என்றல் ", ஆகிய இரண்டு செய்கைகளும் இலட்சிய மனிதனுக்கே உரிய செய்கைகள் போலும் !...] மேலும், இலட்சிய மனிதன், உயர்ந்த அந்தஸ்தில் இருப்பவர்களுடன் கண்ணியமாகப் பழகுவான் ; நடுத்தர வகுப்பினரிடம் ' பட்டும் படாததுமாக ' நடந்துகொள்வான்... அவனுடைய விருப்பு வெறுப்புகளை அவன் சற்றும் ஒளிக்காமல் பட்டவர்த்தனமாகப் பேசிவிடுவான் ; ஏனெனில், பிற மனிதர்களை அவன் ஒரு பொருட்டாக நினைக்காததால், அவர்களுடைய மனதில் தனது மொழிகள் விளைவிக்கும் உணர்ச்சிகளைப் பற்றியும் அவனுக்கு அக்கறையில்லை... கீழ் மக்களுடன் எதிர்மறைப் புகழ்ச்சியாகப் பேசுவதைத் தவிர, அவன் உண்மையை மறைத்தே மொழிவதில்லை. அவனுக்குப் பேச்சில் அதிகப் பிரியம் கிடையாது. பிறர் தன்னைப் புகழ வேண்டுமென்பதோ, பிற மக்கள் இடித்துரைக்கப்பட வேண்டுமென்பதோ, அவனுடைய கவலை இல்லை... அவன் குரல் அழுத்தமாகவும், பேச்சு அளந்து வைத்தாற்போலவும் இருக்கும். அவன் எதிலும் அவசரப்படுவதே இல்லை ; ஏனெனில் அவன் மிகச் சில விஷயங்களைப் பற்றியே அக்கறை கொள்பவன். அவன் சினந்து மொழிவதும் இல்லை ; ஏனெனில், எதுவும் தனக்கு முக்கியமென்று அவன் கருதுவதில்லை. அவன் யாரையும் புகழ்ந்து கூறுவதும் இல்லை. பிறரைப் பற்றி அவனுக்குக் கவலையில்லையாதலால், அவன் வம்பு பேசுவதும் இல்லை ; பொதுக் கேளிக்கைகளில் அவன் கலந்துகொள்ளவும் மாட்டான்... லாபகரமான, பயனுள்ள பொருள்களைவிட, அழகான, லாபமற்ற பொருள்களையே அவன் அதிகம் வைத்திருப்பான்... ஆபத்து நேர்ந்தால் அதை அவன் ஆண்மையுடன் ஏற்பான்... அவனுக்கு மிகச் சிறந்த நண்பன் அவனேதான் ; அதனால் அவன் அடிக்கடி தனித்திருந்து ஏகாந்தத்திலேயே இன்பம் காண்பான்... இவ்வாறு இருப்பவன்தான் இலட்சிய மனிதன் ; அவனுக்குத் தாழ்ந்தவர்கள் எல்லாம் அனுவசியமாகப் பயந்து ஒடுங்கியிருப்பவர்கள் ; அவனைவிட அதீதமாக இருப்பவர்கள் கர்விகள் ! " (நீதி நூல் 1123B—1125A).

[" அந்த கர்வி என்ற ஆள் எப்படித்தானிருப்பான் என்று நினைக்கவே நடுக்கமாக இருக்கிறது " என்கிறார் பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் !]

அரிஸ்டாடிலின் உயர்நிலை மனிதனைப் போன்றவர்கள், ஒரு நாட்டில் ஓரிருவர் மட்டுமே இருக்கலாம். அதற்குமேல் இருக்க முடியாது. உயர்ந்த சமூக-அந்தஸ்து பெற்றிருப்பவன்தான் இம்மாதிரி " இலட்சிய நடத்தை " பூண்டு ஒழுக முடியும். அரசர்களும், பிரபுக்களும் இம்

மாதிரி வாழ்க்கை நடத்தினால்—அது சரி, தவறு என்பது வேறு விஷயம்—அது பொருத்தமாகவாவது இருக்கும். ஒரு குமாஸ்தாவும், வாத்தியாரும் இம்மாதிரி நடக்கத் தொடங்கினால், மறு நாள் வீட்டில் இருக்கமாட்டார்கள். இலட்சிய மனிதர்கள் ஒரு சிலரே இருக்க முடியும் என்பதை உணர்ந்ததாலேயே, அரிஸ்டாடில், அரசர் ஆட்சிதான் மிகச் சிறந்த அரசியல் அமைப்பு என்று கூறுகிறார்.

இப்போது ஒரு கேள்வி எழலாம். ஒருவருக்கோ, அல்லது ஒரு சிலருக்கோ மட்டும் உயர்ந்த நிலை அளிக்கும்படியான சமுதாய நிலை விரும்பத்தக்கதுதானா? அரிஸ்டாடில் "ஆம்" என்கிறார். இதை அறிஞர் ஹாப்ஸும், ஞானி நீட்ஷேயும் வேண்டுமானால் ஒப்புக்கொள்வார்கள். மத நம்பிக்கை உள்ளவர்களும், ஜனநாயக வாதிகளும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அடக்கமும், இரக்கமும், அன்பும்தான் தனிப் பெரும் பண்புகள் என்றும் இவற்றை மறக்கச் செய்யுமளவுக்குக் கௌரவமும், அந்தஸ்தும் ஒருவரிடம் குவியச் செய்யும் சமுதாயம் நீதிக்குப் புறம் பானதென்றும் மத நம்பிக்கை உள்ளவர்கள் சொல்வார்கள். ஆதிக்கமும், செல்வமும் ஒருவரிடம் குவிந்து கிடப்பது தவறு என்று ஜன நாயக வாதிகள் கூவுவார்கள். நோக்கம் எப்படி இருந்தாலும், அரிஸ்டாடிலின் இலட்சிய மனிதனுக்கு ஒருவரும் மரியாதை செலுத்த மாட்டார்கள். அப்படிப்பட்ட இலட்சிய மனிதர் ஓரிருவர் மட்டும் வாழ வகை செய்யும் சமுதாயத்தை விரும்பவும் மாட்டார்கள்.

ஒரு கேள்வி கேட்கலாம். என்னதான் ஜனநாயக நாடாக இருந்தாலும், ஜனாதிபதி, பிரதம மந்திரி, உயர்நீதி மன்ற நீதிபதி போன்றவர்கள் சாதாரண மக்களைவிட உயர்ந்த நிலையிலிருந்துதானே வருகின்றனர்? சாதாரண மக்களைவிட அதிகப்படியான திறனையும், பண்பையும் அவர்களிடமிருந்து எதிர்பார்க்கத்தானே செய்கிறோம்? எந்த நாட்டிலும், ஒரு என்ஜின் டிரைவரைவிட, ஜனாதிபதிக்கு மதிப்பும், கௌரவமும் அதிகம்தானே என்று கேட்கலாம். இதெல்லாம் வாஸ்தவம்தான். ஆனால் ஜனாதிபதியோ, பிரதம மந்திரியோ, அரிஸ்டாடிலின் இலட்சிய மனிதரைப்போல இருக்க முடியாது. இருக்கவும் அவர்கள் விரும்பமாட்டார்கள். மேலும், அவர்களுக்கு இருக்கும்—இருக்க வேண்டிய—சிறப்புப் பண்புகளையும், திறமையையும் ஒழுக்க நெறியின் பெயரால் இலட்சியப் பண்புகள் என்று கூற இப்போது ஓர் அரிஸ்டாடில் இல்லை.

ஒழுக்கவியல்—ஒரு பொது விளக்கம்

அரிஸ்டாடிலின் "ஒழுக்கவியலைப்" பற்றிப் பொதுப்படையாக விமரிசனம் செய்வது மிக முக்கியமானது. காரணம் இதுதான். இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருந்த அறிஞரின் விஞ்ஞானச் சிந்தனைகளைத் தவறென்று தள்ளிவிடலாம். பொருளாதாரம் அரசியல் போன்ற துறைகளும் எவ்வளவோ மாறுதல் அடைந்திருப்பதால் அந்தக் காலத்திய சிந்தனைகள் இப்போது நடைமுறைக்கு ஒவ்வாதனவாக இருக்கலாம். ஆனால், ஒழுக்க நெறியை அவ்வாறு தள்ளிவிடுவதற்கில்லை. எக்காலத்தும், எவ்விடத்தும் பொருந்தக்கூடிய நன்னெறிகள் சில உண்டு. தவிர, ஒழுக்கவியலில், விஞ்ஞான ரீதியாக, "இதுதான் கண்டறிந்த உண்மை" என்று கூறுதற்குமில்லை. ஓர் அறிஞரின் நீதி நூலைப்

பற்றி மதிப்புக் கூறவேண்டுமானால், மூன்று கேள்விகள் போட்டுக் கொண்டு அவற்றிற்கு விடைகாண வேண்டுமென்கிறார், பெர்ட்ராண்ட் ரஸ்ஸல். (1) அந்த நூலில் ஒருமைப்பாடு இருக்கிறதா? (2) அந்தச் சிந்தனையாளர், தமது பிற நூல்களில் கூறியிருப்பவற்றிற்கும் குறிப்பிட்ட நீதி நூலில் குறிப்பிட்டிருப்பவற்றிற்கும் கருத்து ஒற்றுமை இருக்கிறதா? (3) நம்முடைய கொள்கைகளுக்கு அவை உகந்ததாக இருக்கின்றனவா?

முதல் இரண்டு கேள்விக்கும் "இல்லை" என்ற பதில் கிடைத்தால், சிந்தனையாளரின் சிந்தனைப் போக்கில் தவறு இருக்கிறதென்று அர்த்தம். மூன்றாவது கேள்விக்கு எதிர்மறை விடை கண்டோமானால், 'சிந்தனையாளர் தவறு செய்திருக்கிறார்' என்று கொள்ளக்கூடாது. நமக்கு அவரது கொள்கைகள் பிடிக்கவில்லை என்றுதான் சொல்லலாம். இந்தக் கேள்விகளுக்கு விடை கண்டு பார்க்கலாம்.

முதலாவது கேள்விக்கு விடையாக, அரிஸ்டாடிலின் நீதி நூலில் பொதுவாக ஒருமைப்பாடு இருக்கிறதென்றே சொல்லலாம். ஆனந்த நிலையே மனித வாழ்வின் பிறவிப் பயன் என்பதும், அதை எய்துவதற் கேற்ற வழிகளும், கோவையாக முரணின்றிக் கூறப்பட்டிருக்கின்றன. "இடைவழிக் கொள்கை" என்ற நூலிழையும், முதலிலிருந்து கடைசி வரையில் (அவர் கூறியிருக்கும் வரையில்) அறுது தொடர்ந்து வருகிறது. இரண்டு சந்தர்ப்பங்களில்தான் ஒருமைப்பாடு குன்றுகிறது என்று எனக்குத் தோன்றுகிறது. தத்துவ ஞானி என்பவன், எது நீதி, எது நன்மை என்பதை விளக்கு முகத்தால், பிறருடைய கருத்துக்களைப் பாதிக்கக்கூடாது என்று அரிஸ்டாடில் விதிக்கிறார். அவை பற்றிய கொள்கைகளை அவர் விமர்சனம் செய்து கூறவேண்டுமேயன்றி, அவை பற்றி மக்கள் கருத்து உருவாக்கிக்கொள்வதில் தமது செல்வாக்கைப் பயன்படுத்தக்கூடாது என்கிறார். "அந்த அறிஞரே சொல்கிறார்... அது தான் சரியாக இருக்கவேண்டும்" என்று மக்கள் சொல்லுமளவுக்கு நடந்துகொள்ளக் கூடாது என்று திட்டமாகக் கூறுகிறார். அப்படியிருக்கையில், அரிஸ்டாடில், தாமே தமது நூலில் திட்டவட்டமாகக் கொள்கைகளை வகுத்துக் கொடுக்கிறார். தமது தத்துவக் கொள்கைகளையும், ஏன் அரசியல் கருத்துக்களையும்கூட நீதி நூலில் வலியுறுத்தித் தான் கூறுகிறார். தவிரவும், ராஜ்யபாலனை அரசியல்–தத்துவ ஞானி, நல்லது இன்னதென்று உணர்ந்து, அவற்றைமக்கள் கடைப்பிடிக்குமாறு செய்யவேண்டுமென்றும், சிறு வயதிலேயே குழந்தைகளைப் பொதுப் பள்ளியில் கூட்டி வைத்து, அவற்றை அவர்கள் மனதில் படியச் செய்ய வேண்டுமென்றும் கூறுகிறார். நல்லது தீயது அறியும் பருவத்துக்கு முன்பே, "இதுதான் சரி" என்ற எண்ணத்தைச் சிறுவர்களின் மனதில் சிறிது சிறிதாகப் புகுத்தி வலிவுபெறச் செய்தல், அரசியல்-தத்துவ ஞானியின் பணியாகிவிடுகிறது. அரிஸ்டாடில் முதலில் கூறும் கருத்துக்கு இது முரண்பட்டதென்றே தோன்றுகிறது.

மற்றொன்று, குழந்தைகளுக்குப் பொதுக் கல்வி முறையை அவர் சிபார்சு செய்கிறார். ஆனால் அவர்கள் தமது மனம், தமது எண்ணம், தமது கருத்துக்கள் என்பவற்றையே மறந்துவிட்டுச் சமுதாய நன்மைக்காக, ராஜ்யபாலர் கூறுபவற்றையே பின்பற்ற வேண்டும் என்று திட்ட

மாகச் சொல்லத் தயங்குகிறார். அதேபோலக் குழந்தைகளின் பழக்க வழக்கங்களைத் திட்டம் செய்யும் அரசியல்-தத்துவ ஞானி, மக்களிடம் சென்று, "இதுதான் நீதி; இதுதான் நன்மை... இதையே நீங்கள் கடைபிடிக்க வேண்டும்" என்று சொல்லக்கூடாது என்கிறார். இவையும் முரண்பாடுகளாகவே தோன்றுகின்றன.

இனி, இரண்டாவது கேள்வி. அரிஸ்டாடிலின் நீதி நூலில் உள்ள கருத்துக்கள்; அவர் பிற நூல்களில் கொள்ளும் அபிப்பிராயங்களுக்கு ஒத்து இருக்கின்றனவா? இந்தக் கேள்விக்கு, "ஆம்" என்ற விடையைத் தயங்காமல் சொல்லிவிடலாம். அரிஸ்டாடிலின் தத்துவத்தின் ஜீவநாடி, "எல்லாவற்றிற்கும் குறிக்கோள் ஒன்று உண்டு" என்பது தான். அவரது ஞான நூலிலும் சரி, அறிவியல் சாத்திரங்களிலும் சரி, அரசியல் சிந்தனைகளிலும் சரி, "குறிக்கோள்" என்பதை வலியுறுத்திக் கொண்டே இருக்கிறார். நீதி நூலும், "மனித வாழ்வின் குறிக்கோள் என்ன?" என்ற வாதத்தில்தான் துவங்குகிறது. அதையே இறுதி வரையில் பரிசீலனை செய்து செல்கிறது. மற்றும், உயிரினங்கள் அனைத்தும், ஒரு ஏறுமுக வரிசையில் அமைந்தவை என்றும், அவற்றின் உச்சியில் மனிதன் இருக்கிறான் என்றும் அரிஸ்டாடில் முதன் முதலில் கொண்ட சித்தாந்தம், அவரது நீதி நூலிலும் விரவி நிற்கிறது. "மனிதனே உயிரினங்களுள் சிறந்தவன். அந்தச் சிறப்பை அவனுக்குத் தருவது அவனது சிந்தனைத் திறன். அதை முழுவதும் வளர்த்துக்கொள்வதே, அவன் பிறவிப் பயனை அடைவதற்குத் திறவுகோல்" என்ற கருத்து நீதி நூலில் வற்புறுத்திப் பலகாலும் கூறப்படுகிறது.

இனிக் கடைசியாக, மூன்றாவது கேள்வி. அரிஸ்டாடிலின் நீதி நூற் கருத்துக்களுக்கும், நமது கொள்கைகளுக்கும் வேற்றுமை இருக்கிறதா? நிறைய இருக்கிறது என்று கூறத் தேவையில்லை. அவற்றை இரண்டு பகுதிகளாகப் பிரித்துப் பார்க்கலாம். முதலாவது, நீதி என்பது என்ன என்பது பற்றிய வேற்றுமை; இரண்டாவது, மனித சுபாவத்தைப் பற்றிய கருத்து வேற்றுமை.

அரிஸ்டாடிலின் நீதி, சமத்துவத்தை ஒப்புக் கொள்ளவில்லை. ஆதார உரிமைகள் என்றெல்லாம் பேசுகிறோமே, அதற்கெல்லாம் அரிஸ்டாடிலின் நீதிக் கொள்கையில் இடம் கிடையாது. (அடிமைகள் பற்றிய விஷயத்தை விடுத்துப் பிறவற்றைப் பற்றியே நான் குறிப்பிடுகிறேன்.) கணவன் மனைவியை விட உயர்ந்தவன்; தகப்பன், மகனை விட உயர்ந்தவன். கணவனுக்கு மனைவியும், தகப்பனுக்கு மகனும் உடைமைகள்; எனவே அவர்கள் விஷயத்தில் அநீதி என்ற பிரச்னைக்கே இடமில்லை என்பவை போன்ற கருத்துக்களை இப்போது யாரும் ஏற்க மாட்டார்கள். இதுவாவது போகட்டும். நாட்டில் மிகச் சிறந்தவையெல்லாம் ஒரு சிலருக்கே-அதாவது இலட்சிய மனிதர்களுக்கு-என்ற கருத்து, நீதி என்று நாம் வழங்கும் சொல்லுக்கு நேர் எதிரிடையே. அரிஸ்டாடிலின் நீதி முறைப்படி பார்த்தால், கணவன் மனைவியைக் கொடுமைப் படுத்துவது அநீதியல்ல; ஒரு சிலர்-அவர்கள் அரசர்களோ, தத்துவ ஞானிகளோ-இலட்சிய-மனிதர்களாக வாழ்வதற்குப் பிற மக்கள் அனைவரும் கருவியாகப் பயன் படுத்தப் படுவதும் அநீதியல்ல.

இனி, மனித சுபாவத்தைப் பற்றி அரிஸ்டாடிலின் கொள்கைகளைப் பார்க்கலாம். கொடைத் தன்மை, கண்ணோட்டம், இரக்கம் போன்ற பண்புகளை மனிதர்களிடம் அவர் காணவில்லை. கைம்மாறு கருதாத உதவியை ஒருவன் செய்யக்கூடும் என்று அவர் கருதவே இல்லை. உற்ற நண்பர்களுக்கிடையே கூட, தன்னலம் பாராத் தகைமையை அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மனிதர்களின் இன்ப துன்பங்களை உணர்ச்சி யற்று அவர் வெறித்துப் பார்க்கிறார். அதன் பயனாக, மனிதனின் செயல் ஒவ்வொன்றுக்கும் அவர் நோக்கம் கற்பிக்கிறார்.

சிலருக்கு இது மிகவும் அருவருப்பாகத் தோன்றலாம். ஆனால், அரிஸ்டாடிலின் கொள்கைகளில் உண்மை ஓரளவு இருப்பதை ஒப்புக் கொள்ளத்தான் வேண்டும். வெகு வெகு அபூர்வமான சமயங்களில் தான், தன்னலம் அணுவளவுமின்றி உற்ற நண்பர்களும் உதவி செய்து கொள்ளுகிறார்கள். ஊன்றிப் பார்த்தால் இந்த உண்மை யாருக்கும் புலப்படும். இது தவிர மனோதத்துவத்தை அரிஸ்டாடில் நன்கு உணர்ந் திருக்கிறார் என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும். உதாரணமாக, நம்மை விட உயர்ந்த நிலையில் இருப்பவர்களிடமோ, நம்மை ஆபத்தி லிருந்து காத்தவர்களிடமோ நட்புக் கொண்டால், அது உற்ற நட்பாக இராது என்ற அவர் கூற்றில் முக்காலும் உண்மை இருக்கிறது. உயர்வு-மனப் பான்மை, தாழ்வு-மனப் பான்மை என்று நாம் பேசுவதை யெல்லாம், அன்றே அரிஸ்டாடில் ஒருவாறு ஊகித்து உணர்ந்திருந்தார் என்றே படுகிறது. எனவே, மனித சுபாவத்தைப் பற்றிய, அவரது கொள்கைகள், பூரணமானவை அல்ல என்று வேண்டுமானால் சொல்ல லாமே தவிர, அவரது நீதி முறைக் கொள்கையைப் போல அப்படியே தள்ளி விடுவதற்கில்லை.

சுருங்கச் சொன்னால், அரிஸ்டாடிலின் நீதி நூலில், அறிவு இருக் கிறது; அனுபவம் போதாது. நிறை இருக்கிறது; நிறைவு இல்லை. கருத்து இருக்கிறது; கலை இல்லை, உண்மை இருக்கிறது; உணர்ச்சி இல்லை. அதில் இருப்பவற்றின் மதிப்பு அதிகமா? இல்லாதனவற்றின் நிறை அதிகமா?—என்பது அவரவர் கூற வேண்டிய தீர்ப்பு!

பாகம் நான்கு—அரசியல்

"மன்னுயிர்க்கெல்லாம் மகிழ்துணை புணர்க்க......"

— இளங்கோவடிகள்

[அரிஸ்டாடிலின் 'அரசியல் நூல்' (Politics), பிளேட்டோவின் 'குடியரசு' நூலைப்போல இலட்சிய ராஜ்யமொன்றைச் சமைத்துக் காட்டவில்லை. அரசியல் தத்துவம் இன்னதென்று வரையறுத்துக்கூறும் நூலும் அல்ல அது. தமது காலத்தில் வழக்கத்திலிருந்த பல்வேறு அரசியல்-அமைப்புக்களையும் ஆராய்ந்து, அவற்றில் தாம் காணும் குறைபாடுகளை எடுத்துக் கூறி அவற்றை நிவர்த்திப்பதற்கு ஆவன கூறுவதே, அரிஸ்டாடிலின் நோக்கம்.

பிளேட்டோவின் கொள்கைகள், எட்டமுடியாத இலட்சியங்கள். அரிஸ்டாடிலோ, நடைமுறை வழக்கங்களின் அடிப்படையிலேயே மாறுதல்கள் கூறுகிறார். பிளேட்டோவின் 'குடியரசு' நூல் பழைய உலகத்தை அப்படியே நீத்துவிட்டுப் புதிய உலகம் சிருஷ்டித்துக் கொள்ளலாம் என்று கூறுகிறது; அரிஸ்டாடிலின் நூல், பழைய உலகைத் தீர்ந்த முறைகளாலும் விடாத உழைப்பாலும் புதியதாக மாற்றிக்கொள்ளலாமென்று கூறுகிறது.]

அரிஸ்டாடிலின் 'அரசியல் நூல்', அரசியலின் முக்கியத்துவம், நாட்டின் தேவை, ஆகியவற்றில் ஆரம்பமாகிறது. மனிதன், தான் வாழும் அரசியல் அமைப்பில் ஒரு பகுதி. அதிலிருந்து பிரிந்துவிட்டால், அவன் தன் குறிக்கோளைச் சரிவரச் செயலாற்ற முடியாது. ஒரு குடும்பம் இருக்கிறது. தலைவனும், தலைவியும் அதில் ஒருங்கே வாழ்வது எதன் பொருட்டு? ஒரு சில தேவைகளைப் பூர்த்திசெய்து கொள்ளுவதற்காக. அதேபோல, குடும்பங்களும், கிராமங்களும், நாட்டின் அரசியலமைப்பில் ஒருங்கே வாழ்வதற்குக் காரணம் மனித வாழ்வின் தேவைகள் அனைத்தையும் பூர்த்திசெய்து கொள்ளும் பொருட்டே. ஏனெனில், "ஒழுங்குபடுத்தப்பட்டால், விலங்கினங்களுக்குள் தலைசிறந்து விளங்கும் அதே மனித இனம், 'சட்டம்' என்று ஒன்று இல்லாவிட்டால், விலங்குகளுக்குள் படு மோசமான விலங்காகி விடுகிறான்...சட்டம் என்று ஒன்று இருக்க வேண்டுமானால், அதற்கு நாடு, அரசியல் என்பவை தேவை"

நாடு என்பது எப்போது முதன் முதலில் தோன்றியிருக்கும் என்று அடுத்தபடியாக அரிஸ்டாடில் ஆராய்கிறார். முதன் முதலில் குடும்பம் என்ற சமுதாய—அமைப்புத்தான் தோன்றியிருக்க வேண்டும். கணவன்-மனைவி, எஜமான்-அடிமை என்ற இரண்டு உறவுகளின் அடிப்படையில் எழுந்ததே குடும்பம். குடும்பத்துக்கு அடுத்தபடி கிராம அமைப்பு; அதன் பிறகு நகரம், நாடு என்பது தோன்றியிருக்கவேண்டும். நாடு என்பது, இவ்வாறு சமுதாய—அமைப்புக்களுக்குள் கடைசியாகத் தோன்றியதாக வைத்துக்கொண்டாலும், அதுதான் எல்லாவற்றுக்குள்ளும் மிகவும் இயற்கையான அமைப்பு.

"நாடு என்பது இயற்கையின் படைப்பு; மனிதன் இயற்கையாகவே அரசியல் மனப்பாங்கு உள்ள ஜீவன்...நாடு என்ற பெரிய முழுப்பொருளின் அங்கமே மனிதன்...அதிலிருந்து அவன் தனியே பிரிந்துவிட்டால், அவனுக்குத் தன்னிறைவு கிடையாது...அவ்வாறு இல்லாமல் சமுதாயத்தில் வாழ முடியாதவனோ, அல்லது, தனி வாழ்விலேயே தன்னிறைவு பெற்று இருப்பவனோ, மனிதன் அல்ல; அரசியலின் ஒரு பகுதி அல்ல அவன்; அவன் ஒரு கடவுளோ, மிருகமோ தான்..." ("அரசியல் நூல்")

1. நாட்டின் அங்கங்கள் :

"அரசியல் சமுதாயத்தைப் பற்றிப் பரிசீலனை செய்து முடிவு காண்பதற்கு, அதன் அங்கங்களைப் பற்றி நன்கு அறிந்துகொள்ள வேண்டும்" என்ற பீடிகையுடன் "அரசியல் நூலின்" விரிவான ஆராய்ச்சி துவங்குகிறது. குடும்பங்கள்தாம் சமுதாயத்தின் அங்கங்கள். கணவன் மனைவி பெற்றோர்-மக்கள், அடிமைகள்-எஜமானர், ஆகியோர் குடும்பங்களின் அங்கங்கள்.

முதலில், **கணவன்-மனைவி** உறவைப் பற்றிப் பார்க்கலாம். ஆணுக்குப் பெண் தாழ்ந்தவளே என்ற தீவிர அபிப்பிராயம் கொண்டவர் அரிஸ்டாடில். "எஜமானுக்கு அடிமையைப் போல, சிந்தனையாளனுக்கு உடல் உழைப்பால் வயிறு வளர்ப்பவனைப் போல, ஆணுக்குப் பெண் என்கிறார் அவர். உயிரினங்களின் தர-வரிசையில், மனிதனுக்கு அடுத்த படியில் நிற்பவள் மாது என்றும், உலக இயக்கங்களுக்கு அடிப்படையான உருவப் பண்பே மனிதன்: அதனை ஏற்றுக் கொள்ளும் வெறும் பொருள்தான் மாது என்றும் அவர் பிற நூல்களில் பலவிடத்தும் கூறியிருக்கிறார். எனவே, ஆண் மகன் ஆளப் பிறந்தவன்; பெண் அடங்கியிருக்கப் பிறந்தவள். பெண்ணுக்கு மனத்திண்மை கிடையாது; எனவே, ஆணால் அடக்கி ஆளப்பட்டு அவள் குடும்பப் பொறுப்பை ஏற்று நடத்த வேண்டியதுதான். வேறு பணி அவளுக்கில்லை. பிளேட்டோவின் "குடியரசில்" கூறியிருப்பதைப்போல பெண்ணையும், ஆணைப்போல வளர்த்துக்கொண்டு வந்தால் அது அனர்த்தத்தையே விளைக்கும். ஆணுக்கும் பெண்ணுக்கும் வேற்றுமைகள் பரந்து இருக்கத்தான் வேண்டும். அதுதான் அழகு. "ஆணுக்கும் பெண்ணுக்கும் துணிவு ஒன்றுதான் என்று ஸாக்ரடீஸ் கூறியது தவறு; ஆணின் தைரியம், அவன் கட்டளையிடுவதில் இருக்கிறது. பெண்ணின் தைரியமோ அதற்குக் கீழ்ப்படிவதில் இருக்கிறது...யாரோ ஒரு கவி கூறியது போல, மௌனமாக இருத்தலே பெண்ணின் பெருமை." ("அரசியல் நூல்")

எனவே, அரிஸ்டாடிலின் கொள்கைப்படி, **பெண்கள் பொது வாழ்வில் பங்குகொள்ளக் கூடாது; அரசியலில் அவர்களுக்கு இடம் இல்லை**; குடியரசில் வாக்கு அளிக்கும் உரிமையும் கிடையாது. வீட்டோடு இருந்துகொண்டு, கணவன் சொற்படி நடந்துகொண்டு, "அடிவருடிப் பின்தூங்கி, முன்னெழுந்து". "தெய்வம் தொழாது கொழுநன் தொழுது எழுந்து", மக்களைப் பேணி வளர்த்தலே பெண்ணுக்கு ஏற்ற வாழ்வு. அவ்வாறு வாழ்வதிலும், கணவன் சொல்லும் வழி நடக்க வேண்டும். ஏனெனில், அவள் பிறவி அப்படி! இந்தத்

தத்துவத்துக்கு உகந்த வழியில் அவர், திருமணங்களுக்கான யோசனையையும் தெரிவிக்கிறார்.

ஆண்கள் முப்பத்தேழு வயதுவரை திருமணம் செய்துகொள்ளக் கூடாது. அதற்குப் பிறகே, இருபது வயது மங்கையைக் கரம் பிடித்தல் வேண்டும். இதற்குக் காரணம், அனுபவம் பெற்று உரமேறிய முப்பத்தேழு வயது மனிதன், எளிதில் இருபது வயதுப் பெண்ணை அடக்கியாள முடியும் என்பதே. மற்றொரு காரணம், இவ்வாறு மணம் செய்து கொண்ட தம்பதி, ஒரே சமயத்தில் தாம்பத்திய சுகத்தின் உச்ச உணர்ச்சி நிலையை எட்டிவிடுவார்கள். உடலுறவு–இச்சையை நீத்து விடுவார்கள். அதனால், மனப்போராட்டங்களுக்கோ, பெருமூச்சுக்கோ, நிலவு வெண்ணெருப்பாக எரிப்பதற்கோ இடமில்லாது போய்விடும். "ஆண்களுக்கு எழுபது வயதிலும், பெண்களுக்கு ஐம்பது வயதிலும், இனவிருத்திச் சக்தி போய்விடுகிறது. அதனால்தான் முப்பத்தியேழு—இருபது என்ற வயதுப் பொருத்தம். இதே வயது வித்தியாசத்தில் அதைவிடக் குறைந்த வயதில் மணம் புரிந்துகொள்வது உடல்நலத்துக்கு ஊறு விளைவிக்கும்...பிறக்கும் குழந்தைகளும் வனப்புடன் இரா; பெரும்பாலும் பெண்களாகவே பிறந்துவிடும்...காதலை விட உடல் நலமே பெரிது" ("அரசியல் நூல்").

இந்த விஷயங்களையெல்லாம் இளைஞர்கள் தாமே முடிவு செய்து கொள்வது தகாது. இளமைப்பருவம் காட்டாற்றைப் போல. திருமண வயது எது? இன்ப நுகர்வுக்கேற்ற பருவங்கள் எவை எவை? எந்த விகிதத்தில் குழந்தைகள் பிறக்கலாம்? என்பனவற்றை அரசாங்கம் நிர்ணயிக்க வேண்டும். தேவைக்கு அதிகமாக ஜனப் பெருக்கம் இருந்தால், குழந்தை பிறந்தபின் கொல்லுவதை விடப் பிறக்குமுன்பே கருவைச் சிதைத்துவிட வேண்டும். (சிசுவதை அப்போது பழக்கத்திலிருந்தது.)

அரிஸ்டாடிலின் சித்தாந்தங்கள் நம்மைத் திகைக்க வைக்க வேண்டும். பெண்ணுக்கு அவர் கூறும் மாண்பு, இன்னமும் நம் நாட்டில் பலரால் கூறப்பட்டு வருகிறது. உலகப் பிரசித்தி பெற்ற அரசியல் நிபுணர் ஸர். வின்ஸ்டன் சர்ச்சில், பெண்களுக்கு வாக்குரிமை அளிக்கக் கூடாது என்ற இயக்கத்தை முழு மூச்சுடன் தலைமை தாங்கி நடத்தியவர் தான். "மாதர் தம்மை இழிவு செய்யும் மடமை" எப்படிப் புகுந்ததென்று தெரியவில்லை. மூவாயிரம் ஆண்டுகளாக அது நிலைத்து நிற்பது தான் வியப்பு. அரிஸ்டாடிலின் பெண்மைத் தத்துவம் போலவே மற்றொரு சிந்தனையாளரும் கருத்துத் தெரிவிக்கிறார். "கடவுள் பெண்ணைச் சிருஷ்டித்தார்: அன்றிலிருந்து உலகில் சூன்ய உணர்ச்சி நீங்கியது உண்மைதான்; ஆனால், இன்னும் பல விஷயங்களும் அதோடு நீங்கி விட்டன; பெண் படைப்பு, கடவுளின் இரண்டாவது தவறு" என்கிறார். அவர் தான் ஞானி நீட்ஷே. இதற்கு நேர்மாறானவை அறிஞர் பெர்னார்ட்ஷாவின் கருத்துக்கள். "மனிதனும் உயர்நிலை மனிதனும்" (Man and Superman) என்ற நாடகத்தில், பெண் ஆணைக் கவர்ந்து அவனைக் கருவியாகப் பயன் படுத்துகிறாள் என்பதைப் பலவாறு ஷா விளக்குகிறார். உலக நடவடிக்கைகளில் பெண்கள் முழுப்பங்கும் தாங்கிப் பாடுபட்டால், உலகம் நன்னிலை எய்தும் என்று அவர் நம்புகிறார். அரசியல்

வாழ்வில் இரு பாலாரும் ஈடுபடக் கூடாது : ஒரு பாலார் மட்டுமே இடம் பெற வேண்டும் என்ற நிலை வந்தால், பொதுக் கடமைகளைப் பெண்களிடமே முழுதும் விட்டு விடலா மென்று ஷா துணிந்து கூறுகிறார். ஷா, பாரதியார் போன்றவர் ஒரு சாரார். அரிஸ்டாடில், நீட்ஷே போன்றவர்கள் மற்றொரு சாரார். பின் சொன்ன வரிசையில்தான் ஞானிகள் அதிகம். இனி மேலே செல்லுவோம்.]

குடும்ப வாழ்வில், தந்தைக்கும், மகனுக்கும் சம-உரிமைகள் கிடையாது என்று அரிஸ்டாடில் கூறுகிறார். "அரசன் குடிகளை ஆளுவது போலத் தந்தை தன் மக்கள் மீது அதிக்கம் செலுத்த வேண்டும்."

அடுத்தபடியாக, அடிமை - எஜமான் உறவைப் பார்க்கலாம். சிலர் அடிமைகளாக இருக்க வேண்டுவது, இயற்கையின் நியதி என்கிறார் அரிஸ்டாடில். சிலர் பிறக்கும் போதே, அறிவுத் திறனற்றவர்களாகவும், சுயமாக வாழத் தென்பற்றவர்களாகவும் பிறந்து விடுகிறார்கள். அவர்களுக்கு அறிவூட்டிச் சுயமாகத் தனிவாழ்வு வாழச் செய்ய உதவி செய்வது, "ஓட்டைப் பாத்திரத்தில் நீர் வார்ப்பதைப் போல"த்தான். எனவே பிறர் அவர்களை அடக்கி ஆண்டு, இன்ன தொழிலை எப்போது செய்ய வேண்டு மென்று ஆணையிட வேண்டும். அறிவுத்திறன் பெற்று பிறந்தவர்கள், ஆளப்படப் பிறந்தவர்களை தமது உடமைகளாகக் கருதி அவர்களை வேலை வாங்கி, அவர்களைக் காப்பாற்ற வேண்டும். அதுதான் நீதி. மாடு, நாய் போன்ற வீட்டு-மிருகங்கள் இருக்கின்றன. அவற்றை மனிதன் தனது உடமையாகக் கொண்டு காப்பாற்றுவதுதான் அவைகளுக்கு நல்லது. அவற்றைப் போலத்தான் அடிமைகளும். அடிமைகளும் எஜமானும் உடலும், மனமும் போல; உடலை மனதிற்கு அடிமைப் படுத்த வேண்டுவது போல, அடிமைகளும் எஜமானின் ஆதிக்கத்துக்கு உட்பட்டே இருக்க வேண்டும்…அடிமை என்பவன் உயிருள்ள இயந்திரம் ; கருவி…இயந்திரம் உயிரற்ற அடிமை. அவ்வளவுதான்."

['பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும்' என்ற தத்துவம் அரிஸ்டாடிலின் கருத்துக்குப் புறம்பானது. "சிவிகை பொறுத்தான், ஊர்ந்தான்" ஆகிய இருவரும், வெவ்வேறு இனங்களைச் சேர்ந்தவர்கள். அவரவர், தத்தம் இனத்துக்குரிய தொழிலைச் செய்வதுதான் நீதி என்று கிரேக்கர்கள் கருதி வந்தார்கள்.]

இயற்கையாகவே ஆளப்படுவதற்காகப் பிறந்தவர்கள் பணிய மறுத்தால், அவர்கள் மீது போர் தொடுப்பதே நியாயமான செயல் தான்என்கிறார் அரிஸ்டாடில். எனவே, இந்தப் போரில் அவர்கள் தோற்றுவிட்டால் அவர்களை அடிமைகளாக்கிக் கொள்வது நீதிக்குப் புறம்பானது அல்ல. ஆனால் ஒன்று. தாம் அடக்கியாளப் படுவதற்குப் பிறந்ததாக யாரும் ஒப்புக் கொள்ள மாட்டார்கள். எனவே இயற்கையின் நியதி என்ன, என்பது, போர்முடிந்த பிறகுதான் தெரியும். இதன்படி பார்த்தால், போரில் வெற்றி பெறுபவர்கள் யாரும் தோற்றவர்களை அடிமைகளாகச் சிறைப் பிடிப்பதை அநீதி என்று சொல்ல முடியாது.

[அரிஸ்டாடிலைப் போல, அடிமைகள் வைத்திருக்கும் பழக்கம் சரியானதே என்று கூறிய மற்றொரு சிந்தனை யாளர், கி.பி. பதின்மூன்றும் நூற்றாண்டில் வாழ்ந்திருந்த பாதிரியார், தாமஸ் அக்வினஸ்(St, Thomas Aquinas) என்பவர்,]

குடும்ப வாழ்வின் முக்கியத்துறையாகிய பொருளீட்டல், வாணிபம், சொத்துரிமை இவைபற்றி அரிஸ்டாடில் இனி விவரிக்கிருர்.

மக்கள் தனிப்பட்ட முறையில் சொத்து வைத்திருப்பது சரியா? என்ற பிரச்னை முதலில் எழுகிறது. ''வைத்திருக்க வேண்டியதுதான்'' என்று அரிஸ்டாடில் ஒப்புக் கொள்ளுகிருர். மனிதன் எந்தத் தொழிலைத் திறம்படச் செய்ய வேண்டுமானுலும், அவனுக்கு வாழவகை வேண்டும். கவலையின்றி உண்டு தனது தொழிலைக் கவனிப்பதற்கு ஒருவனுக்கு ஊதியம் தேவை. எனவே சொத்து வைத்திருப்பது இயற்கையின் நியதி. ''விலங்கினங்களுக்கு உணவு தேடும் உணர்ச்சி இருப்பது எவ்வளவு இயற்கையோ அவ்வளவு இயற்கையானதே, மனிதர்களுக்குச் சொத்து சேர்ப்பதற்கான உணர்ச்சியும்...ஒரு ராஜ்யத்தில், வீடுகளில் பயன்படுத்துவதற்குரிய கருவியே சொத்து என்பது'' என்பது அவர் வரையறை.

ஆனுல், 'பொருளீட்டுதல்' என்ற தொழிலில் ஈடுபட்டிருப்பது தவறு. அதனுல் விளையும் தீமைகள் அளப்பரியன. நாணயங்கள் கண்டு பிடிக்கப்பட்டது என்னவோ பண்ட மாற்று முறையின் அசௌகரியங்களைத் தவிர்ப்பதற்காகத்தான். ஆனுல் முடிவு என்ன வாயிற்று? பொருளீட்டல் என்ற தனித் தொழிலே தோன்றி விட்டது. போட்டி போட்டுக் கொண்டு மக்கள் பணம் சேர்ப்பதே குறிக்கோளாகக் கொண்டு விட்டார்கள். வருங்காலத்துக்குப் பொருள் தேடிவைப்பதே மனித வாழ்க்கையின் பிறவிப்பயன் என்று கருதத் தொடங்கியும் விட்டார்கள். இது மிகவும் வருந்தத்தக்க நிலைமை. மக்கள் கவலையின்றி உண்பதற்கே சொத்து இருக்க வேண்டுமென்பது உண்மையே தவிரப் பணம் சேர்த்தல் தவறு.

இப்பொழுது ஒரு கேள்வி எழலாம். மக்கள் கவலையின்றி உண்டு வாழ்வதற்கேற்ற சொத்து கொள்ளுதல் தவறில்லை என்ருல், 'அந்த அளவு எது என்று யார் நிர்ணயிப்பது? அப்படிப் பார்த்தால் மனிதன் எவ்வளவு சொத்து சேர்த்தாலும் திருப்தி இல்லாது போகலாம் அல்லவா? அதாவது பொருளீட்டுவதற்கு எல்லையே இல்லை என்பதை மறைமுகமாக ஒப்புக்கொண்டதாகி விடுமல்லவா? அந்தக் கேள்விகளுக்கு அரிஸ்டாடில் ஆணித்தரமாகப் பதில் தருகிருர் ''நன்கு வாழ்க்கை நடத்துவதற்குத் தேவைப்படும் பொருளின் அளவு வரம்பில்லாததன்று ...மனிதன் பொருளீட்டுவதற்கு வரையறையே கிடையாது என்று ஸோலோன் * கூறியது சரியல்ல...'' (அரசியல் நூல்)

பொருளீட்டுதல் என்ருல் என்ன என்ற கேள்வியும் இப்போது எழுகிறது. நில புலன்களைச் சரிவரக் கவனித்து வருவதால் கிடைக்கும் ஊதியம் 'நேர்வழியில்' சம்பாதித்தது. வர்த்தகத்துறையில் ஈடுபட்டுப் பொருள் தேடுவது சரியான முறையல்ல. ''வர்த்தகத்துறையில் சேர்க்கப் படும் பொருள் இயற்கை வழியில் வந்த பொருளல்ல...எனவே அது வெறுக்கப்படுவதற் கேற்றதே.''...ஆனுல், இதைவிடவும் மோசமான பொருளீட்டும் முறை ஒன்று இருக்கிறது. அதுதான் பணத்தை' **வட்டிக்கு விடுதல்'**. இது இயற்கைக்கு முரணுனது. ஏனெனில், பணம், பொருளை மாற்றிக் கொள்ள-வசதியாக இருக்கும் பொருட்டு ஏற்பட்

---

*ஸோலோன் (Solon) ஏதென்ஸ் நகரைச் சேர்ந்த அறிஞர்; சட்ட நிபுணர்.

டதேயன்றித் தன்னைத் தானே விருத்தி செய்து கொள்வதற்கு அல்ல...
பணம் சேர்க்கும்வழிகள் எல்லாவற்றிலும், இதுவேமிக்வும் இயற்கைக்கு
விரோதமானது." ("அரசியல் நூல்")

[இது குறித்து பெர்ட்ராண்ட் ரஸ்ஸல் கூறியுள்ள கருத்துக்கள் சிந்திப்பதற்கேற்றவை. மனித குலத்தை இரண்டு வகைகளாகப் பிரிக்கலாம்—கடன் கொடுத்தவர்கள்; வாங்கியவர்கள். கடன் கொடுத்தவர்கள் வட்டி முறையை ஆதரிப்பர்கள்; வாங்கியவர்கள் எதிர்ப்பார்கள். பெரும்பாலும் நிலக்கிழார்கள் கடன் வாங்கியோர் கோஷ்டியிலும், வர்த்தகர்கள் கடன் கொடுத்தவர்களாகவும் இருப்பார்கள். எனவே, சிந்தனையாளர்களின் கருத்துக்கள் தாம் எந்தப் பிரிவைச் சேர்ந்தவர்கள் என்பதை யொட்டியே இருந்து வந்திருக்கிறது. கிரேக்க சிந்தனையாளர்கள் பெரும்பாலும் பெருநிலக்கிழார்கள். எனவே அவர்கள் வட்டி-முறையை எதிர்த்தார்கள். அகஸ்டின், அக்வினஸ் போன்ற (கிறிஸ்துவ மத போதகர்கள்) சிந்தனையாளர்கள் கிறிஸ்துவ மதத்தைச் சேர்ந்தவர்கள்; மடத்தின் சொத்துக்கள் பெரும்பாலும் நிலத்திலேயே இருந்ததால் அவர்களும் அரிஸ்டாடிலின் கருத்தை மாற்றிக்கொள்ளவில்லை. ஆனால் சீர்திருத்த-இயக்கம் (Reformation) தோன்றிய பிறகு நிலைமை மாறியது. பிராடஸ்டண்டுகள் பலர் வர்த்தகத் துறையில் ஈடுபட்டிருந்தனர். எனவே கால்வின் (Calvin) போன்ற பிராடஸ்டண்டு சிந்தனையாளர்கள் வட்டி முறையை வெறுக்கவில்லை. சுருங்கச் சொன்னால், "ஒருவன் எவ்வளவுபணம்வைத்திருக்கலாமென்பது அது எதற்குப் பயன் படுத்தப் படுகிறது என்பதைப் பொறுத்திருக்கிறது" என்ற கிறிஸ்தவ மத போதகர்களின் கருத்துக்கும் "ஒருவன் சரியான முறையில் பொருளீட்டினனு என்பதுதான் ஒருவனது சொத்து உரிமை சரியா இல்லையா என்பதற்கு அடிப்படை" என்ற ஆங்கிலச் சிந்தனையாளர் ஜான் லாக் (Locke) கின் கருத்துக்கும், அரிஸ்டாடிலின் கொள்கைளே அடிப்படை என்று சொல்லலாம்.]

அடுத்தபடியாக எந்த அரசியலமைப்பு சிறந்ததெனச் சீர் தூக்கிப் பார்க்கமுயல்கிறார் அரிஸ்டாடில்.

2. சீர் தூக்கும் கோல்:

பிளேட்டோவின் இலட்சிய ராஜ்யக் கற்பனையை அரிஸ்டாடில் முதலில் சீர் தூக்கிப்பார்க்கிறார். சட்டங்களையும் நெடுநாட்களாகப் பழக்கத்தில் இருந்து வந்த விதிகளையும் நினைத்த மாத்திரத்தில் மாற்றுவது தீமை பயக்கும் என்ற பீடிகையுடன் அவரது பரிசீலனை துவங்குகிறது. தனி மனிதர்களின் சுதந்திரம் தனிப்பட்ட மக்களின் திறமையின் தர வேறுபாட்டின் அவசியம்-இவற்றில் அசையாத நம்பிக்கை கொண்டிருந்த அரிஸ்டாடிலுக்குத் தம் வாத்தியாரின் பொதுவுடமைத் தத்துவம் சற்றும் ஒவ்வவில்லை!

"ஒருமைப் பாடு எத்தனைக் கெத்தனை அதிகமாக இருக்கிறதோ, அவ்வளவுக்கவ்வளவு நாட்டுக்கு நல்லது" என்பது பிளேட்டோவின் தத்துவம். ஒருமைப் பாடு ஓரளவுக்கு மிஞ்சினல், தீமையே பயக்கும்... ஏனெனில் அது இயற்கையின் நியதிக்கு முரண்பட்டது என்பது அரிஸ்டாடிலின் எதிர்வாதம். உலகில் எங்கு பார்த்தாலும் வேற்றுமைதானே பரந்து கிடக்கிறது? மக்களிடையே எத்தனை வேற்றுமை? ஒரே கருவில் தோன்றிய இரட்டைப் பிறவிகளிடத்தும் எவ்வளவு வித்தியாசம்! ஒரே

இனத்தைச் சேர்ந்த பறவைகள், விலங்கினங்கள், இவ்வாறு எதை எடுத்துக் கொண்டாலும் எத்தனை நுண்ணிய பேதங்கள்! இவற்றையெல்லாம் அழித்து, ஒரு சேர ஒரே 'மொத்தை'யாக ஒருமைப்படுத்துவது எத்தனை தவறு? திறனிலும் தகுதியிலும் அலுவல்களிலும் வேற்றுமைகள் பல இருப்பதே இயற்கை விதித்த விதி. ஓரளவுக்கு மேல், இவற்றை அழித்து ஒருமைப்பாடு கொணருவது நன்மைக்கு அல்ல. எனவே, மன்பதை முழுவதையும் மூன்று பிரிவுகளாகப் பகுத்து, அந்தந்தப் பிரிவுக்கு ஏற்றதொழில்களைத்திட்டமாக நிர்ணயித்தபிளேட்டோவின் முறையை அரிஸ்டாடில் ஒப்புக் கொள்ளவில்லை.

அடுத்தபடியாக, ஆளும் வகுப்பினருக்குப் பிளேட்டோ நிர்ணயித்த பொதுவுடைமைக் குடும்பத்தை அரிஸ்டாடில் கண்டிக்கிறார். பிளேட்டோவின் தத்துவம் சுருக்கமாக இதுதான் :-ஆளும் வகுப்பினருக்குத் தனிப்பட்ட வீடோ சொத்தோ, மனைவியோ, குழந்தைகளோ இருக்கக் கூடாது. ஆளும் வகுப்பினர் அனைவரும் ஒரே உணவை உண்டு, ஒரே இடத்தில் உறங்க வேண்டும். அவர்களுக்குத் தனிப்படக் குடும்பம் என்று ஒன்று இருக்கக் கூடாது. பொதுநலச் சமுதாயத்தின் மீது அவர்களது பற்றும் அக்கறையும் சற்றும் குன்றாது இருப்பதற்காக, அவர்கள் தனிப்பட்ட பெண் மீதோ, குழந்தைகள் மீதோ அன்பு வைக்கக்கூடாது. ஆளும் வகுப்பினருக்கு மனைவிகள் பொது உடமை என்றால், அவர்கள் இஷ்டப்படி இன விருத்தி செய்யக் கூடாது. அரசாங்க சுகாதார கண்காணிப்பின் கீழ் அவர்கள் குறித்துக்கொடுக்கும் காலங்களில் மட்டுமே ஜனன-உற்பத்தி நடக்கலாம். குழந்தை பிறந்ததும், அது உடனே பெற்றோரிடமிருந்து பிரிக்கப்பட்டுப் பொது நிலையம் ஒன்றில் வளர்க்கப்படும். ஆளும் வகுப்பினரை மணந்த தாய்மார்கள் எல்லாம், அவ்வகுப்பினர் அனைவருக்கும் மனைவிகளாகிக் குழந்தைகள் எல்லாவற்றையும் பொதுவாக வளர்க்க வேண்டும். தகப்பன் யார்? தாய் யார்? என்றெல்லாம் தெரியாதாகையால், அந்த வகுப்பினருக்குள் (வயதுக்கேற்றபடி) ஒவ்வொருவனும் 'தந்தை.' அல்லது 'சகோதரன்.' ஒவ்வொருத்தியும் 'தாய்' அல்லது 'சகோதரி'-இதுதான் சுருக்கமாகப் பிளேட்டோவின் கொள்கை!

இதைக்கண்ட மாத்திரத்திலேயே அரிஸ்டாடிலுக்குச் சினமும், அருவருப்பும் பொங்குகின்றன. கண்ணில் எதிர்ப்படும் ஒவ்வொருவரையும் அண்ணா, அம்மா, அப்பா, என்றெல்லாம் கூப்பிட அவர் தயாராக இல்லை! எல்லாரும் நமது சகோதரர்கள் என்றால், ஒருவரிடத்தும் உண்மையான சகோதர உணர்ச்சி ஏற்படாது என்கிறார் அவர். ஒரு பொருள் நம்முடையது என்ற உண்மையும், அது நம்மிடத்தில் உண்மையான அன்பைத் தோற்றுவிக்கிறது என்ற உணர்வும் தான், மக்களிடத்து அன்பையும் அக்கறையையும் தோற்றுவிப்பன. 'எனது' என்ற உணர்ச்சியே இல்லாதவிடத்தில் அன்பே பொசுங்கிவிடும். 'எல்லாம் நமது' என்ற இயற்கையல்லாத போலி உணர்ச்சிதான் நிலவும். [ஒரு கதை தெரியுமல்லவா? கணவனும் மனைவியும் புதிகாக மணமானவர்கள். மனைவிக்கு 'ஈருடலும்-ஒருயிரும் கொள்கை' ஊறிப் போயிருந்தது. "என்னுடையது என்றே நாமிருவரும் எதையும் குறிப்பிடக் கூடாது. எல்லாம் நம்முடையவை" என்றாள். இந்த வேதனை தாங்காத கணவன், ஒருநாள், "கொடியில் இருக்கும் நமது பனியனை எடு!" என்று எரிச்சலுடன் சொன்னானாம்! ஓரளவுக்குமேல்,

'எனது' என்ற உணர்வை அறுத்து 'நமது', என்றே கூறுவது இதைப் போலத்தான் இருக்கும். இதையே அரிஸ்டாடில் வலியுறுத்துகிறார்.] பிளேட்டோவின் பொது உடைமைக் குடும்பத்தில் அவர் மற்றொரு தவறும் காண்கிறார். "என்னதான் குழந்தைகளைப் பிறந்த உடனேயே பெற்றோரை விட்டு எடுத்துச்சென்று விட்டாலும், ஜாடை தெரியாமல் போகாது" என்பது அவர் வாதம்! எனவே, ஒவ்வொருவரும் தமது குழந்தைகள் யார்யாரென்று அறியும் ஆவலில் அனைவரையும் மன எழுச்சியுடன் உற்று நோக்கிக்கொண்டே இருப்பார்கள். இந்தத்தாபம் அவர்களிடத்து இல்லாமல் போகாது. எனவே, பிளேட்டோ எந்த நோக்கத்தை மனதில் வைத்துக்கொண்டு அந்த முறையைச் சிபார்சு செய்தாரோ, அந்த நோக்கம் அந்த முறையால் நிறைவேறுமலே போய் விட இட மிருக்கிறது!

அடுத்ததாகச் சொத்துரிமைக்குப் பொது உடைமையின் சங்கதியைப் பார்க்கலாம். "நாட்டிலுள்ள பொருள்கள் அனைத்தும் எல்லாருக்கும் சொந்தமாக இருந்தால் ஒன்றையும் ஒருவரும் கவனிக்க மாட்டார்கள்" என்று அரிஸ்டாடில் கூறுகிறார். லாபம் வரும் என்ற எதிர் நோக்கு இருந்தால்தான் உழைப்பில் ஊக்கம் வரும்; 'இந்தப் பொருள் நம்முடையது என்ற எண்ணம் இருந்தால்தான் அதில் அக்கறை பிறக்கும். ஒரு பொதுவான போக்குவரத்து சாதனத்தில் ஒன்ருகப் பிரயாணம் செய்பவர்கள் அனைவருக்கும் அந்த சாதனமும், அதன் வசதிகளும் பொது. அவர்கள் அவற்றை எப்படிப் பேணுகிறார்கள் என்பது தெரிந்த விஷயமே. அதோடன்றி எந்தச் சிறு விஷயமும், அவர்களுக்கிடையே பூசல் ஏற்படுவதற்குக் காரணமாகி விடுகிறது... அதேபோலத்தான், பொது உடைமை உள்ள நாட்டு மக்களின் சங்கதியும்" (அரிஸ்டாடில்). ஆதி காலத்தில், விவசாயமும், ஆடுமாடு வளர்த்தலும் மட்டுமே தொழிலாக இருந்த சமயத்தில், பொது உடைமைச் சமுதாயம் ஏற்றதாக இருந்திருக்கலாம். சமுதாய நிலை மாறுதலடைந்து, தொழில்களும், மக்களும் பல்வேறு பிரிவுகளாகப் பிரிந்துவிட்டபிறகு, ஒவ்வொருவனும் தனது திறனை முழுதும் வெளிப்படுத்திக் கொள்ளச் சந்தர்ப்பம் அளிக்கப்படுவதுதான் நாட்டுக்கு நல்லது. பிளேட்டோவின் பொது உடைமைச் சமுதாயம் இதற்கு வகை செய்யவில்லை. எனவே, அது நன்மை பயப்பதாக இருக்க முடியாது. "இலட்சிய ராஜ்யத்தைப்பற்றிய கனவுக் கற்பனைகளுக்கு மக்கள் எளிதில் செவி சாய்க்கிறார்கள்...அனைவரும் அனைவருக்கும் நண்பர்களாகி விடுவார்கள் என்பதை நம்புகிறார்கள். அதிலும், ஒருவன் தற்போதைய சமுதாயத் தீமைகளை எடுத்துச் சொல்லும்போது, இந்த நம்பிக்கை பலப்படுகிறது, அத்தகைய தீமைகளுக்குக் காரணம், தனிப்பட்டோர் சொத்து உரிமையே என்று கூறப்படுகிறது...ஆயினும் உண்மை அதுவல்ல; மனிதனின் தீய இயல்புகளே சமுதாயத்தில் காணும் தீமைகளுக்கு அடிப்படை..." ("அரசியல் நூல்").

முன்பே சொன்னபடி, அரிஸ்டாடிலுக்கும் பிளேட்டோவுக்கும் ஒரே வித்தியாசம் தான். எவ்வளவு நல்லதாக இருக்கவேண்டுமோ, அத்தகைய இலட்சிய ராஜ்யத்தை உருவாக்குவதற்கேற்ற உயர்நிலை மனிதனைப் பிளேட்டோ நாடித்திரிந்தார். அரிஸ்டாடிலோ, எவ்வளவு

நல்லதாக இருக்கமுடியுமோ, அத்தகைய அரசியலமைப்பை ஏற்படுத்தக் கூடிய உயர்நிலைத் தத்துவ மொன்றைக்காண விழைந்தார். ஒன்றுமட்டும் கூறவேண்டும். பொது உடைமைக்கும், தனியார்—உடைமைக்கும், இடையே, கி. மு. நான்காம் நூற்றுண்டில் தொடங்கிய போர், கி. பி. 20 ம் நூற்றுண்டிலும் தொடர்ந்து, அதேபோல நடை பெறுகிறது.

பிளேட்டோவின் அரசியலமைப்பு முறைகளைத் தகர்த்தெறிந்து விட்டு, அரிஸ்டாடில் தன் கண்பார்வையைத் தமது காலத்தில் புகழ் பெற்ற ராஜ்யங்களான ஸ்பார்டா கிரீட், ஆகியவற்றின் மீதும், பண்டைய சட்ட நிபுணர்களான ஸோலோன், டிரேகோ ஆகியோரது நூல்கள் மீதும் திருப்புகிருர். ஸ்பார்டாவைப்பற்றிய அவர் கருத்துக்களே முக்கியமானவை.

[ஸ்பார்டாவில் நிலச் சுவான்தார்கள் அதிகம். ஆனுல் நிலத்தை உடையவன் அதைப் பயிரிடக் கூடாது. அது இழிவு. ஒவ்வொரு நிலப் பகுதிக்கும் ஓர் அடிமை உண்டு. ஒவ்வொரு ஆண்டும் அவன் நிலத்தைப் பயிரிட்டுக் குறிப்பிட்ட அளவு எஜமானுக்கு அளித்து விடுவான். இந்த அடிமைகளை அரசாங்கமாகப் பார்த்து விடுதலை செய்தால்தான் உண்டு. அவர்களது எஜமானர்களுக்குக் கூட அவர்களைச் சுதந்திர புருஷர்களாக்குவதற்கு அதிகாரமில்லை. ஸ்பார்டாவின் குடிகளுக்கு இளமையிலிருந்தே போர்ப் பயிற்சி அளிக்கப்பட்டது. சுமார் ஐநூறு ஆண்டுகளுக்கு ஸ்பார்டா போர்த் திறனில் இணையற்று விளங்கியது. போர் வீரர்களைத் தயாரிப்பதுதான் அரசாங்கத்தின் குறிக்கோள். சிறுவயதிலிருந்து, இருபது வயது வரையில் குழந்தைகள் பொதுக்கல்வி நிலையத்தில் தங்கிப் பாடம் பயின்ருர்கள். ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சியில் வேறுபாடு கிடையாது. பெண்கள், சாதாரணமாகக் கற்பில் தவறுவதில்லை. ஆனுல், குழந்தையில்லாத மணமான ஸ்திரீகள், வேற்று ஆடவரைத் தேடிச்சென்று குழந்தைகளைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்று அரசாங்கம் உத்தரவிட்டால் தடை சொல்லுவதில்லை. ஸ்பார்டாவுக்கு இரண்டு அரசர்கள் உண்டு. இருவரும் வெவ்வேறு வம்சங்களைச் சேர்ந்தவர்கள். "ஆன்ருேர் சபை" என்றழைக்கப்பட்ட சபையில் இரு அரசர்களும் அங்கத்தினர்கள். இவர்களைத்தவிர, அதில் மேலும் இருபத்தெட்டு அங்கத்தினர்கள் இருக்கவேண்டும். அவர்கள் அறுபது வயதுக்குக் குறைந்தவர்களாக இருக்கக் கூடாது. ஆன்ருேர் சபை, சட்டங்களை வகுத்துச் சட்ட சபையின் பரிசீலனைக்கு அளிக்கும். சட்ட சபையில் எல்லாக் குடிகளும் அங்கத்தினர்கள். அரசர்கள், ஆன்ருேர் சபை சட்ட சபை இவற்றைத்தவிர, அரசியல் நிர்வாகத்தில் மற்றொரு அங்கமும் உண்டு. அதுதான் ஐந்து நீதிபதிகள் அடங்கிய சபை. அரசர்கள் அவர்களது கட்டுப்பாட்டில் தான் ஆட்சி செலுத்தினர் என்றே கூறலாம்.

வேறு ராஜ்யங்களில் புரட்சியும்சச்சரவும் தலைவிரித் தாடுகையிலும், அமைதியாக நிலைபெற்று விளங்கியது ஸ்பார்டாவின் அரசியலமைப்பு. போர்த் திறனிலும் அது ஒப்புயர்வற்று விளங்கியது. அதனுல்தான் அது பல ஆசிரியர்களால் இலட்சிய-ராஜ்யமாகச் சித்திரிக்கப்பட்டது.]

அரிஸ்டாடில் ஸ்பார்டாவின் முறையை முகஞ் சுளித்துக் கண்டிக்கிருர். பெண்களுக்கு அங்கு அளிக்கப்பட்டிருந்த சுதந்திரம் அவருக்கு

வேம்பெனக் கசந்தது. 'அடக்கமில்லாத பெண்கள்!...ஆண்கள் அனைவரும் அங்கு பெண்களின் அடிமைகள் தாம்...போர் முறைகளில் கூடப் பெண்களின் ஆதிக்கமும் செல்வாக்கும் மிகுந்திருந்தது!...ராஜ்யத்தை ஆண்டதென்னவோ ஆண்கள்தாம். ஆனால் பெண்கள் தாங்களே அரசாண்டால் என்ன? அரசாளுபவர்களை ஆண்டால் என்ன?' என்கிறார் அரிஸ்டாடில். இது போகட்டும் என்றால், ஸ்பார்டாவில் பெண்களுக்குச் சொத்துரிமை வேறு இருந்தது!

ஸ்பார்டாவில் லஞ்ச ஊழல் அதிகம் என்கிறார் அரிஸ்டாடில். நீதிபதிகள் மிகவும் ஏழைகளானதால், கொடுக்கப்படும் லஞ்சத்தை வேண்டாமென்பதில்லை. அவர்களுக்கு அதிகாரமும், ஆதிக்கமும் அசாத்தியம். அவர்கள் புலனடக்கமாக வாழ வேண்டுமென்று விதி. ஆனால், விதிகள் மிகத் தீவிரமாகவே இருக்கவே அவர்கள் இரகசியமாகச் சிற்றின்ப வாழ்வில் ஈடுபட்டார்கள். நாட்டின் விதி ஒன்று: அதன் நடைமுறை வேறாக இருந்தது. அனுஷ்டிக்க முடியாத விதிகளைக் கொண்டுள்ள அரசியல் அமைப்பினால் என்ன பயன் என்றெல்லாம் அரிஸ்டாடில் கேட்கிறார்.

சமுதாய நலனுக்காகவே பாடுபடும் அபிப்பிராயம் நல்லது. தன் நன்மையையே நாடுவது தீயதொன்று. [" தம் குடிகள் அனைவரையும் அணைந்து செங்கோல் செலுத்தும் மன்னனைக் குடிகள் என்றும் சார்ந்திருப்பர்" (குறள்-54) என்ற குறட் கருத்தை ஒத்திருக்கின்றது அரிஸ்டாடிலின் தத்துவமும்.]

நல்ல அரசாங்கம் எது என்று கூறிய பிறகு, அவை மூன்றுவிதமான அமைப்புகள் கொண்டிருக்கலாம் என்று அவர் கூறுகிறார். மன்னர் ஆட்சி, மேன்மக்கள் ஆட்சி, அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்ட ஜனநாயக ஆட்சி என்பவை அவை. இவை ஒவ்வொன்றுக்கும் நேர் எதிர்முனைகளும் இருக்கின்றன. கொடுங்கோன்மை ஒருசிலர் ஆட்சி, குடியாட்சி என்பவை அவை. இவைகளுக்கிடையில் பலதரப்பட்ட இடை வழி-அமைப்புகளும் இருக்கின்றன.

" ஒரு ஆட்சி அமைப்பு நல்லதா, தீயதா என்பது, அந்த அமைப்பு முறையைப் பொறுத்ததில்லை; அதிகாரம் வகிப்பவர்களின் தன்மையையே பொறுத்திருக்கிறது" என்று அரிஸ்டாடில் முதலிலேயே இலக்கணம் கூறிவிடுகிறார். எந்த அரசியல் அமைப்பு சிறந்தது என்று ஆராயப் புகும்போது இதையும் மனதில் கொள்ளவேண்டும். தவிரவும் " மிகச் சிறந்த முறை என்பது அநேகமாக எய்த முடியாத தொன்றாக இருக்கலாம்; எனவே அரசியல் நிபுணர்கள் எந்த முறை தத்துவ ரீதியாக மிகச் சிறந்தது என்பதுடன் அந்தந்தச் சூழ்நிலைகளுக் கேற்ப எந்த முறை சிறந்தது? குறிப்பிட்ட நிலைமைகளில் எம்மாதிரி அரசியல் முறையை அமைக்க இயலும்? பொதுவாக ராயஜ்ங்களுக்கு எந்த முறை சிறந்தது? என்பவற்றை ஆய்ந்து அறிந்துகொள்ள வேண்டும்" (" அரசியல் நூல்")

இனி, ஒவ்வொரு முறையாகப் பார்க்கலாம்.

i) மன்னர் ஆட்சி

"வானோக்கி வாழும் உலகெலாம் ; மன்னவன்
கோல்நோக்கி வாழும் குடி "—குறள் (541)

நூல் முறைப்படிப் பார்க்கப் போனால், மன்னர் ஆட்சியே மிகச் சிறந்தது. அரசியல் அதிகாரம் யாவும் ஒரே மனிதனிடம் செறிந்து இருப்பதுதான் லட்சிய முறை. "பலர் ஆட்சி செலுத்துவது தவறு ; உனது யஜமானராகவும், உன்னை ஆள்பவராகவும் ஒருவரே இருக் கட்டும்" என்ற கவி ஹோமரின் கூற்றை அரிஸ்டாடில் ஆதரிக்கிறார். அப்படிப்பட்ட மன்னன்தான் சட்டங்கள் இயற்றுவதற்கு முற்றிலும் தகுதி பெற்றவன். "அவனிடம் சட்டம் ஒரு கருவியாக இருக்குமே தவிர, அவனுக்கே வரம்பு காட்டுவதாக இருக்காது. தேர்ந்த அறிவாளிகளுக்குச் சட்டமே தேவை இல்லை, அவர்களே சட்டத்தின் உரு···"

ஆனால், நடைமுறையில் மன்னவன் இலட்சியவாதியாக இருப்பதில்லை. வரம்பு கடந்த அதிகாரம் கையிலிருக்க நேர்மையின் உருவாக மன்னன் அமைந்திருப்பது துர்லபம்தான். இதைக் கூறிவிட்டு அரிஸ்டாடில், கொடுங்கோலனின் ஆட்சி பற்றி சற்றே வர்ணிக்கிறார். கொடுங்கோலனின் தலையாய பணி, தனக்குக் கிடைத்துள்ள அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ளுவதேயாகும். தனக்கு எதிராக யாராவது எழுந்தால், அவர்களைக் கொலை செய்தாவது தன் நிலைமையைக் காப்பாற்றிக் கொள்ளவேண்டும். தனக்கு எதிரான உணர்ச்சியைப் பரப்பக்கூடிய எதையும் அவன் தடுக்கவேண்டும். தயவு தாட்சிண்யம் சற்றேனும் உதவாது. ஒற்றர்களை அவன் நிறைய வைத்திருக்கவேண்டும். மக்கள் கூடிப் பேசுவதைத் தடை செய்யவேண்டும். மக்களுக்குள்ளேயே சண்டை மூட்டிவிடவேண்டும். பிரித்தாளும் கொள்கையைப் போலக் கொடுங்கோலனுக்கு உற்ற கருவி வேறு எதுவும் இல்லை. அல்லது, அவன் நன்மை செய்பவனைப் போலவும், மதப் பற்றுக் கொண்டவனைப் போலவும் நடித்து மக்களைத் தொடர்ந்து ஏமாற்றிக்கொண்டே இருக்க வேண்டும். இவ்வாறு மன்னன் இருந்தால் என்னாவது? அதிலும் கிரேக்கர்களுக்குக் கொடுங்கோலர் ஆட்சி புதிதல்ல. எனவே நடைமுறையில், மன்னர் ஆட்சியை மிகச் சிறந்ததெனக் கொள்ளுவதற்கில்லை.

ii) மேன்மக்கள் ஆட்சி

ஒருவனிடமே ஆதிக்கம் செறிந்திருந்தால் நிலைமை விபரீதமாக முடிந்துவிட ஏது நிறைய இருக்கிறது. அறிவிற் சிறந்த, திறமைசால் ஆன்றோர் சிலரிடம் ஆட்சி முறையை ஒப்படைத்துப் பார்க்கலாம். தேர்ந்து தெளிந்த அறிஞர்கள், தமதிச்சைப்படி ஆட்சிபுரிவார்கள் என்று சொல்லுவதற்கில்லை. "தேர்தல் முறைகளும் அறிஞர் சிலரிடத்தில் ஒப்படைக்கப்படுவது நல்லது. ஒரு வைத்தியனின் திறமையை மற்றொரு வைத்தியன்தான் அறிந்து சொல்ல முடியும். க்ஷேத்திர கணிதத்தில் பயிற்சியுள்ள ஒருவன்தான், க்ஷேத்திர கணிதத் தேற்றங்களின் உண்மையை அறிய முடியும். இதுபோலத் தேர்தல் எதற்காக நடத்தப் படுகிறதோ, அந்த விஷயம் பற்றிப் பூரணமாக நன்கு அறிந்தவர்கள்தான்; தேர்ந்தெடுக்கத் தகுதிபெற்றவர்கள்···எனவே, அரசியல்

நிர்வாகப் பொறுப்பை வகிப்பதற்கான மக்களைத் தேர்ந்தெடுத்து அவர்களைக் கண்காணித்து வரும் அலுவல் அறிவிற் சிறந்த ஆன்றோர் சிலரிடத்தில் ஒப்படைக்கப்படுவது நல்லது." ("அரசியல் நூல்"). ஆனால் இந்த முறையிலும் ஆபத்து இல்லாமலில்லை. இம்மாதிரி ஒரு சில மேன்மக்கள் ஆளுவது, செல்வத்தையும் செருக்கையும் விரும்பி நிற்கும் ஒருசிலர் ஆட்சியாக மாறிவிடலாம். உதாரணமாக இப்போது ஆட்சி செலுத்தும் 'மேன்மக்கள்' மறைந்த பிறகு என்ன செய்வது? மேன்மக்கள் ஆட்சியில் பரம்பரைப் பாத்தியதையைப் புகுத்துவதில் பொருளில்லை. ஆன்றோன் ஒருவனது மகன் ஆன்றோனாகவே இருக்கவேண்டுமென்று நியதி இல்லையல்லவா? எனவே, 'மேன்மக்கள்' இறந்த பிறகு செல்வம் படைத்த சிலர் ஆட்சியைக் கைப்பற்ற யத்தனிக்கலாம். வெற்றியும் பெறலாம். ஆட்சிபீடத்தை இவ்வாறு விலை கொடுத்து வாங்குவோரின் குடை நிழலில் மக்கள் செவ்வனே வாழ முடியாது என்பது வெளிப்படை. 'மேன்மக்கள்' ஆட்சிக்கும் ஒருசிலர் ஆட்சிக்கும் என்ன வேற்றுமை? இரண்டு முறைகளிலுமே ஆட்சிப் பொறுப்பு ஒருவரிடம் தானே இருக்கிறது? என்று கேட்கலாம். விடை மிகவும் எளிதானது. முதலில் சொன்னது ஒருசில நெறி மிக்க அறிஞர் ஆட்சி; பின் சொன்னது ஒரு சில செல்வச் சிறப்பினர் ஆட்சி. செல்வமும் நெறியும் அநேகமாக ஒன்றுவதில்லை!

iii. குடியாட்சி

குடியாட்சி என்பது செல்வர் ஆட்சியை எதிர்த்துப் புரட்சி ஏற்பட்டதன் விளைவாகத் தோன்றுவதே என்கிறார் அரிஸ்டாடில். அரசியல் நிர்வாகத்தை நடத்தும் ஒரு சிலருக்குப் பதவி மோகமும் லாப-எண்ணமும் அதிகரிக்க அதிகரிக்க அவர்களுக்கிடையிலேயே போட்டி அதிகரித்து அவர்களது எண்ணிக்கை குறைந்துகொண்டே வரும். இறுதியில் பொதுமக்கள் எண்ணிக்கையில் சிறுத்துவிட்ட தமது ஆட்சியாளரைப் புரட்சி கொண்டு வென்று தமது ஆட்சியை ஏற்படுத்துவார்கள். (கார்ல் மார்க்ஸின் சிந்தனையை ஒட்டியே இந்த இடத்தில் அரிஸ்டாடிலின் கருத்து இருக்கிறது). இப்படி ஏற்படுத்தப்படும் குடியாட்சியின் நன்மை தீமைகளைப் பார்க்கலாம்.

இந்த முறையில் நன்மைகள் இல்லை என்று சொல்ல முடியாது. தனித்தனியே பார்க்குமிடத்துப் பொதுமக்களால் சிறந்த முறையில் பகுத்துணர்ந்து முடிவு செய்ய முடியாதென்றாலும் அனைவரையும் கூட்டிப் பொதுவாக, மொத்தமாகப் பார்க்குமிடத்து அது அவ்வளவு மோசமாக இராது. "தவிரவும் சிற்சில விஷயங்களில் அந்தந்த விஷயங்களைப் பற்றி விசேஷ ஞானம் இல்லாதவர்கள் தான் சரியான தீர்ப்பு அளிக்க முடியும். வீடு கட்டுகிறான் கொத்தன். அந்தத் தொழில் தெரியாதவன் தான் அதைப் பற்றிச் சரியான முறையில் கருத்துத் தெரிவிக்க முடியும். விருந்துச் சாப்பாடொன்றின் மீது அதைத் தயாரித்தவனைவிடச் சமையலே தெரியாத 'சாப்பாட்டுராமன்' தகுதியுள்ள அபிப்பிராயம் கொடுக்க முடியும்... இதைத் தவிர பலர் சேர்ந்து ஆட்சி செலுத்தும்போது லஞ்ச ஊழல் அவ்வளவாக இருக்கமுடியாது; ஒரு சிலரை லஞ்சம் கொடுத்து வசப்படுத்திக்கொள்ளுவது சுலபம். ஆனால் பலர் ஆட்சிப் பொறுப்பை வகிக்கும்போது, இது முடியாது. ஒரு சிறு பாத்திரத்திலுள்ள தண்ணீரைக் கெடுப்பது சுலபம். ஒரு

பெரிய நீர்நிலையைக் கெடுப்பது அசாத்தியம்... மேலும், ஒரு தனி மனிதனோ, ஒரு சிலரோ உணர்ச்சி வசப்பட்டுத் தவறிழைக்கலாம்; பல்லாயிரக் கணக்கானபேர் ஒரேவிதமான உணர்ச்சிக்கு உட்பட்டுத் தவறிழைப்பது மிகவும் அரிது." ('அரசியல் நூல்')

"இம்மாதிரியான நன்மைகள் குடியாட்சியில் இருந்தபோதிலும், அது மேன்மக்கள் ஆட்சியைவிடத் தரம் குறைந்ததே" என்கிறார் அரிஸ்டாடில். தேர்தல் போன்ற சமயங்களில் மக்களை ஏய்த்துவிடுவது சுலபம். அவர்களுக்கு நிலையான கருத்துக்கள் இரா. திறனும், அறிவாற்றலும் செறிந்த ஒரு சிலரை விட அவை இல்லாத மக்கட் கூட்டம் அதிகத் தகுதிபெற்றதென்று எவ்வாறு சொல்ல முடியும்? எனவே, **மேன்மக்கள் ஆட்சி, குடியாட்சி, இவை இரண்டும் கலந்ததோர் ஆட்சி முறையே சிறந்ததாக இருக்கும் என்பது சிந்தனையாளரின் முடிவு. அதுதான், அரசியலமைப்புச் சட்டத்துக்கு உட்பட்ட ஜனநாயகம்.**

இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்திக்கொள்ள வேண்டும். கிரேக்கக் குடியாட்சி என்பது நாம் அறிந்த குடியாட்சி அல்ல. நகர மக்கள் அனைவரும் அடங்கிய சட்டசபை சட்டத்துக்கு அப்பாற்பட்டது. நீதி வழக்குகளை விசாரிப்பதும் அந்த மக்கட் கூட்டமே. கிரேக்கக் குடியாட்சியில் பிரதிநிதித்வம் இல்லை. நகர மக்கள் யாவரும் நிர்வாகப் பொறுப்பு, நடைமுறை விதிகள் வகுத்தல், நீதி வழங்குதல் ஆகிய சகல பொறுப்புகளிலும் பங்கு கொண்டார்கள். எனவே 'குடியாட்சி' என்று இங்கு கூறும்போதெல்லாம் இந்த முறையையே அது குறிக்கிறது என்பதைத் தெளிவாக உணர்தல் வேண்டும்.

அரசியல் அமைப்புச் சட்டத்துக்குட்பட்ட ஜனநாயகம் என்பது என்ன? நிர்வாகப் பொறுப்புகள் அனைத்தும் எல்லாரும் அடையக் கூடியதாக இருக்கும். அதாவது வாய்ப்புகள் அனைவருக்கும் இருக்கும். ஆனால் அறிவாற்றலில் தேர்ந்தவர்கள்தாம் அவற்றை எய்த முடியும். லட்சியங்கள் குறிக்கோள்கள் என்ன என்பவற்றை மக்கள் அனைவருமாகத் தீர்மானிக்கலாம். ஆனால், அவற்றை எப்படி அடைவது என்ற நடைமுறை வழிகளை வகுப்பது ஒருசிலரின் பொறுப்பாகவே அமையும். வாய்ப்புகள் அனைவருக்கும் பொது. ஆனால் பொறுப்புகள் சிலருக்கே உண்டு. சுருங்கச் சொன்னால் அது மேன்மக்கள் ஆட்சிக்கும், குடியாட்சிக்கும் நடுவிலுள்ள இடைவழி–அமைப்பு.

பொதுப்படையாகப் பார்க்குமிடத்து, மன்னர் ஆட்சி, மேன்மக்களாட்சியைவிடச் சிறந்தது; மேன்மக்கள் ஆட்சி ஜனநாயகத்தைவிட மேலானது. ஆனால் மிகச் சிறந்தவை பாழ்பட்டால் அவை மிக மோசமாகிவிடுகின்றன. அதனால் கொடுங்கோன்மை ஒருசிலர் ஆட்சியைவிடக் கொடியது; ஒருசிலர் ஆட்சி, குடியாட்சியைவிட மோசமானது. எனவே, **அரிஸ்டாடில், நடைமுறை வழக்கில் ஒருசில மாறுதல்களுக்கு உட்பட்ட ஜனநாயகத்தையே தேர்ந்தெடுக்கிறார்.**

எந்தவிதமான அரசியல் அமைப்பாயினும் சரி, ஒரு பொதுப்படையான பிரச்னை எழத்தான் செய்யும். **சட்டங்களை** யார் இயற்றுவது? அரசியல் அமைப்பில் சட்டங்கள் ஆற்றும் பணி என்ன? கிரேக்க அரசியல் சபைகள், சட்டங்களை **இயற்றவில்லை.** அறிவும் அனுபவமும்

மிக்க அரசியல் நிபுணரைக்கொண்டு சட்டங்களை வகுக்கச் செய்வது அந்தக் கால வழக்கம். இவற்றையொட்டி நடைமுறை விதிகளை வகுப்பதும் நீதி பரிபாலனமும் நிர்வாக அதிகாரிகளைத் தேர்ந்தெடுப்பதும்தான் கிரேக்க அரசியல் சபைகளின் அலுவல். சட்டங்களைத் திருத்தியமைப்பதற்குக்கூட (amendment) வழி எதுவும் அப்போது இல்லை.

'அரசியல் அறிஞர்' (statesman) என்னும் நூலில், பிளேட்டோ, "வரையப்பட்ட சட்டங்களுக்கேற்ப இயங்கும் அரசாங்கம், இலட்சிய ராஜ்யத்துக்கு அடுத்தபடி" என்று கூறினர். சற்று விரிவாகப் பார்க்கலாம்: ஒரு வைத்தியரின் திறமை, வைத்திய சாஸ்திரம் முழுவதையும் தலைகீழாக உருப்போடுவதில் இல்லை. அவற்றை அவர் தெரிந்து வைத்திருக்கவேண்டியது அவசியமே என்றாலும் நோயாளியின் தன்மைக்கு ஏற்ப அவற்றைப் பயன்படுத்துவதில்தான் அவருடைய சாமர்த்தியம் இருக்கிறது. அதேபோலத்தான், கவிஞன், வழக்கறிஞன், பொறியியல் நிபுணன் போன்ற யாருடைய விஷயமும். அப்படியிருக்கையில் அரசியல் நிபுணன் மட்டும் சந்தர்ப்பத்துக்கு ஏற்றபடி, தனது அறிவுத் திறனைக்கொண்டு சட்டங்கள் இயற்றக்கூடாதென்று ஏன் தடுக்கப்பட வேண்டும்? தான் கூறுவது, விதிகளுக்கு உட்பட்டதுதான் என்பதை ஒன்றும் புரிந்துகொள்ளத் திறனில்லாத மக்கள் சபையில் அவன் ஏன் எடுத்துக்கூறித்தான் ஆகவேண்டுமென்று கட்டாயம் இருக்கிறது? ஆனல் அப்படிப்பட்ட திறமை வாய்ந்த, பாரபட்சமற்ற அரசியல் அறிஞன் கிடைப்பது அரிது. அப்படிக் கிடைக்காவிட்டால், ஏற்கனவே வகுத்த சட்டங்களை அனுசரித்து இயங்கும் அரசாங்கமே, இருப்பவற்றுக்குள் சிறந்தது. இதுதான் பிளேட்டோவின் வாதம்.

அத்தகைய அரசியல் ஞானி கிடைப்பது அரிதினும் அரிது என்கிறார் அரிஸ்டாடில். அப்படி அகப்பட்டால், சட்டப் பொறுப்பு பூராவையும் அவரிடம் ஒப்படைக்கவும் சித்தமாக இருக்கிறார். ஆனல், அப்படி அகப்படாவிட்டால், மக்கள்-சபையிடம் அந்தப் பொறுப்பை ஒப்படைக்கலாமென்றே அவர் கருதுகிறார். அவர்கள் இயற்றும் சட்டங்களால் அவர்களே பாதிக்கப்படுவார்களாதலால், அந்த விஷயத்தில் மக்கள் நெறி பிசகி நடக்கமாட்டார்கள்.

இவ்வாறு இயற்றப்பட்ட சட்டத்தின் அலுவல் என்ன? அமைதியை நிலைநாட்டி, மக்களுக்குப் பொருளாதார சுபிட்சத்தையும், தமது அறிவாற்றலை வளர்த்துக்கொள்ளும் வகையில் போதிய ஓய்வையும் அளிப்பது; சிறு வயதிலேயே நாட்டு மக்களை, நல்வழியில் பயிற்றுவிப்பதற்கு ஏற்பாடு செய்வது; சமுதாயத்தின் நலனுக்கு ஊறு விளைவிப்பதாகத் தோன்றும் செயல்களுக்காகத் தண்டனை விதிப்பது. இவைதான் சட்டத்தின் பணிகள்.

இனி யார் யார் பிரஜைகளாகக் கருதப்படுவார்கள் என்று பார்க்கலாம். "ஒரு ராஜ்யத்தின் நிர்வாகப் பொறுப்பில் பங்கு ஏற்கக்கூடிய அதிகாரம் இருப்பவர்கள், அந்த ராஜ்யத்தின் பிரஜைகள் எனப்படுவார்கள்" என்பது அரிஸ்டாடிலின் வரையறை. பெண்களுக்கும் அடிமைகளுக்கும் அரிஸ்டாடிலின் ராஜ்யத்தில் பிரஜா உரிமை கிடையாது. தனக்கென ஒரு கருத்து மேற்கொள்ள முடியாதவர்கள், பிரஜை

களாக இருந்து என்ன பயன்? இவர்களைத் தவிரச் சொத்து ஏதுமில்லாதவர்களுக்கும் பிரஜா-உரிமை கிடையாது. ஏனெனில், அவர்கள் எப்போது.பார்த்தாலும் வயிற்றுப் பிழைப்பையே பார்த்துக்கொண்டிருப்பார்களாதலால், தமது ஆற்றலை வளர்த்துக்கொள்ளும் பொருட்டு ஓய்வுடன் இருந்து சிந்திக்க அவர்களுக்கு முடியாது; கட்டாது. அத்தகையோர் ஆட்சிப் பொறுப்பில் பங்கு கொள்வதால் அவர்களுக்கும் லாபமில்லை; நாட்டுக்கும் நன்மையில்லை. [இங்கிலாந்திலெல்லாம் நெடுநாட்கள் வரையில், வோட்டுரிமைக்குச் சொத்துரிமை அடிப்படையாக இருந்ததென்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் உன்னிப் பார்க்கவேண்டும்.] இன்னும் பார்த்தால் உடல்-உழைப்புப் பணிகளில் ஈடுபட்டிருப்போரும் வர்த்தகத் துறையில் உள்ளவர்களும் பிரஜைகளாகத் தகுந்தவர்கள் அல்லர். ஏனெனில் அவர்கள் செய்யும் தொழில் தக்கதன்று. நல்வாழ்வுக்குப் புறம்பானது. எனவே, பெண்கள் அடிமைகள், சொத்துரிமை அற்றோர், வணிகர், தொழிலாளிகள் இவர்களைத் தவிர ஏனைய அனைவரும் நாட்டின் பிரஜைகள். சட்டங்கள் செய்யவும் நீதி வழங்கவும், ஆட்சி அமைக்கவும், உரிமையும் தகுதியும் பெற்றவர்கள்.

[அடுத்தபடியாக 'உலகில் பல மாதிரியான ஆட்சி முறைகள் இருப்பானேன்?' என்று அரிஸ்டாடில் ஆராய்கிறார்.] ராஜ்யத்திலுள்ள பிரஜைகளுக்குள் பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வுகள் நிறைய உண்டு. பொருளாதார ஏணியில் ஒவ்வொரு படியிலும் இருப்பவர்கள், தமக்குள் ஒரு தனி வர்க்கத்தை (class) ஏற்படுத்திக் கொள்ளுகிறார்கள். பல்வேறு வர்க்கத்தினரின் செல்வாக்கிற்கும் ஆதிக்கத்துக்கும் ஏற்ப பிரஜைகள் தமக்குள் ஆட்சிப் பொறுப்பைப் பகிர்ந்துகொள்ளும் ஏற்பாட்டையே அரசியல் அமைப்புச் சட்டம் என்கிறோம். பல்வேறு விதங்களில் இந்த ஆட்சிப் பொறுப்பு-விநியோகம் நடக்கலாமாதலால் பல்வேறு விதமான அரசியல் அமைப்புகள் உண்டாகின்றன. ஒரு மனிதன், நான்கு அடிப்படைகளில்தான் அதிகாரப் பொறுப்பிற்கு உரிமை கோர முடியும்—சுதந்திரம், (அதாவது அடிமையாக இல்லாமலிருப்பது) செல்வம், நற்பண்பு, உயர்குடிப் பிறப்பு, இவற்றுள், பரம்பரைச் செல்வமும் நற்பண்பும் சேர்ந்தால் குடிப் பிறப்பு. மிகுதி உள்ள, சுதந்திரம், நற்பண்பு, செல்வம் ஆகியவற்றுள் செல்வத்தின் செல்வாக்கே அதிகம் என்பது கண்கூடு. எனவே அரசியல் அமைப்பின் மாற்றத்துக்கெல்லாம் அடிப்படை செல்வ நிலையில் ஏற்றத்தாழ்வுதான். (கார்ல் மார்க்ஸின் தொனி இதிலும் ஒலிப்பதைக் காண்க.)

ஒவ்வொரு ராஜ்யத்திலும் மக்களை மூன்று விதமாகப் பிரிக்கலாம். மிகுந்தபணம் படைத்தவர்கள்; மிகுந்த ஏழைகள்; நடுத்தரவகுப்பினர். நற்பண்புகள் எல்லாம், இரண்டு அமிதக் கொள்கைகளுக்கு இடைவழி நிற்பவையேஎன்று கண்டோம். அதேமுறைதான் இங்கேயும். மத்தியதர வகுப்பினரே மிகச் சிறந்தவர்கள். தர்க்கநீதிக்குச் செவிகொடுத்துக் கேட்பவர்கள் அவர்கள்தான். செல்வத்தில் திளைப்பவர்கள், சாதாரணமாகச் சிறுவயதில் அடக்கத்தையும் கீழ்ப்படியும் குணத்தையும் கற்பதில்லை. ஏழைகளோ, தலைநிமிர்ந்து நடக்கவே கற்றுக் கொள்ளுவதில்லை. அவர்களது நிலை அதற்கு இடங்கொடுக்காது. இதனால் என்ன ஆகிறது? ஒரு சாராருக்கு அடங்கி வாழத் தெரியாது; மற்றொரு பிரிவினருக்கு அடக்கியாள வராது. ஏழைகளும் பணக்காரர்களும் மட்டும் நாட்டில்

இருந்தால் எப்படி இருக்கும்? அது சுதந்திர மக்கள் வாழும் நாடாக இராது. அதில் எஜமானர்களும், அடிமைகளுமே இருப்பார்கள். ஒரு பிரிவினர் மனதில் ஏளனமும், மற்றவர் இதயத்தில் பொறாமையும் குடி கொண்டிருக்கும். நாட்டின் நலனுக்கு இது உகந்ததல்ல. கூடுமான வரையில் ஒரு நல்ல ராஜ்யத்தில் சம அந்தஸ்து உள்ளவர்கள் இருக்க வேண்டும். அப்போதுதான், நல்ல நட்பிற்கும், கருத்து வேற்றுமைகளைப் பரிமாறிக் கொண்டு அறிவு வளர்ச்சி பெறவும் உகந்ததாக இருக்கும். நடுத்தர வகுப்பினர் நிறைய இருக்கும் நாட்டில்தான் இது சாத்தியமாகும். அவர்கள் தான் அமிதமான கொள்கை எதுவும் மேற்கொண்டிராதவர்கள். அவர்களே, அமிதச் செல்வத்துக்கும், அமித வறுமைக்கும் இடைப்பட்டவர்கள். எனவே, அவர்களிடம்தான் அதிகப்படியான நற்பண்பு பொருந்தியிருக்கும். எனவே, ஆட்சிப் பொறுப்பை அவர்களிடம் ஒப்படைத்தால், ஆட்சி மிகச் சிறந்ததாக இருக்கும். மத்தியதர வகுப்பினரின் ஆட்சி நிலைபெற்றிருக்குமா என்று பார்க்கலாம். அவர்கள் மற்ற இருவகுப்பினரில் ஏதாவது ஒரு பிரிவினரை விடவாவது எண்ணிக்கையில் அதிகமாக இருப்பது நல்லது. ஆனால் ஒன்று, ஏழைகளும் பணக்காரர்களும் ஒன்றுகச் சேர்ந்து கொண்டு நடுத்தர வகுப்பினரை ஆட்சி பீடத்திலிருந்து துரத்திவிடுவார்களோவென்று அஞ்ச வேண்டியதே இல்லை. அந்த இருவகுப்பினருக்கும் பரஸ்பர நம்பிக்கை கிடையாது. எனவே, பொதுவான எந்தச் செயலுக்காகவும் அவர்கள் இருவரும் ஒன்று சேர மாட்டார்கள், எனவே நடுத்தர வகுப்பினர் அதிகமாக வாழ்ந்து, அவர்களை ஆட்சிப் பொறுப்பையும் வகிக்கும் நாடு சாலச் சிறந்ததாகும்.

[நடுத்தர வகுப்பினர்கள் புகழ்பாடும் அரிஸ்டாடில், செல்வத்தை மறு-விநியோகம் செய்வதன் மூலம் ஏழை, பணக்காரர் என்ற பேதத்தை ஒழித்து அனைவரையுமே 'மத்தியதர வகுப்பினராக' ஆக்கலாமென்று ஏன் யோசனை கூறவில்லை? ஒரே காரணம்தான் எனக்குத்தோன்றுகிறது. அப்படிச் செய்தால், பொருளாதார ரீதியில் அனைவரும் 'நடுத்தர' வகுப்பினர் ஆகிவிடுவார்களே தவிர, பிறப்பிலேயே நடுத்தர வகுப்பினராக இருப்பவர்களுடைய குண இயல்புகள் அவர்களுக்கு வரா. பிறவியில் செல்வனோ, வறியனோ ஆனவன், தனக்குப் பழக்கமான அமித குணங்களை நீத்து விடுதல் அரிது.]

3. புரட்சிகள்:

"அல்லற்பட்டு ஆற்றாது அழுத கண்ணீரன்றே
செல்வத்தைத் தேய்க்கும் படை" (குறள் 555)

அந்தக் காலத்தில் கிரேக்க தேசத்தில் நாளொரு கலகமும், பொழுதொரு புரட்சியும் எழுந்து எழுந்து அடங்கிய வண்ணம் இருந்ததால், அரிஸ்டாடில் அதைப் பற்றி ஒருதனி அங்கமே எழுதிவிட்டார்.

ஒரு சிலர் ஆட்சிக்கும், குடியாட்சிக்கும் ஏற்படும் மோதலின் விளைவு தான் எந்தப் புரட்சியும். "மக்கள் அனைவரும் எல்லா விதங்களிலும் சமமே" என்ற கொள்கையின் அடிப்படையில் முடியாட்சி உருவாகிறது. ஒரு சில அம்சங்களில் சாதாரண மக்களை விட மேம்பட்டவர்கள் தங்களை

உயர்நிலை மனிதர்களாக எண்ணிக் கொண்டு ஆதிக்கம் செலுத்துவதே ஒரு சிலர் ஆட்சி. இந்த இரண்டு கொள்கைகளும் ஒன்றோடொன்று ஒவ்வா ஆதலால் புரட்சி எழுகிறது. இவை இரண்டினுள்ளும், ஒரு சிலர் ஆட்சியின் தீமைகளே புரட்சியை எளிதில் தோற்றுவிக்கக் கூடிய வை" என்கிறார் அரிஸ்டாடில். ஒருசில ஆட்சியாளர்கள் சொல்லவொண்ணாத அளவுக்குக் கொடுமை புரிந்ததற்குச் சான்றுகள் இருக்கின்றன.

இந்தப் பொதுக் காரணத்தைத் தவிர, வேறு பல காரணங்களாலும் புரட்சி விளையலாம்.

அந்தஸ்து வேண்டும்; அதிகாரம் வேண்டும் என்று ஆசை ஒரு அளவிலாவது எல்லாரிடத்தும் விரவி நிற்கிறது. தனி மனிதர்களை விடக் கோஷ்டிகளிடத்தும் இந்த ஆசை அதிகமாகவே இருக்கும். செல்வத்திலோ. அந்தஸ்திலோ தம்மைவிடப் பிறர் மேம்பட்டிருக்கும் நிலையை எதிர்த்து மனக்குறை உள்ள பிரிவினர் புரட்சி செய்யலாம். அதாவது, தம்மைவிடக் குறிப்பிட்ட மற்றொரு நாடோ கோஷ்டியோ, உயர்ந்த நிலையிலிருப்பது அநீதியானது என்று அவர்களுக்குத் தோன்ற வேண்டும். (அமெரிக்க சுதந்திரப் புரட்சி நடந்ததற்கு இதுதான் காரணமென்று சொல்லலாம்).

ஒரு தனி மனிதனோ, அல்லது ஒருசிலரோ ஆட்சிப் பொறுப்பு முழுவதையும் வகித்து வருவதாக வைத்துக் கொள்ளுவோம். அவர்கள் நேர்மையாகவே ஆட்சி செலுத்தி வந்த போதிலும் அதீதமான அதிகாரம் அவர்கள் கையிலிருப்பதால் அவர்கள் நேர்வழியிலிருந்து பிறழ்ந்து விடலாமோ என்ற அச்சம் மக்கள் மனதில் தோன்றலாம். எதேச்சையாக நடந்த ஓரிரு செயல்கள் அந்த அச்சத்தை ஊர்ஜிதப் படுத்தும் வகையில் அமையலாம். அவ்வளவுதான்; புரட்சிக்கனல்மூண்டு விடும்.

ஒரு நாட்டிற்குள்ளேயே ஒரு குறிப்பிட்ட பகுதி, பொருளாதார நிலையிலோ சமூக அந்தஸ்திலோ வர்த்தகத் துறையிலோ மற்ற பகுதிகளைவிட மிகச்சிறந்து விளங்கலாம். அதனுல் அந்தப் பகுதி தம்மை ஆக்கிரமித்து விடுமோ என்ற அச்சம் பிற பகுதிகளிடத்துத் தோன்றி, அவை தோளோடு தோளிணைந்து முன்னேற்ற மடைந்திருக்கும் பகுதியை வெற்றிகொள்வதற்குப் புரட்சி நடத்தலாம்.

இவற்றைத்தவிர பரம்பரைப் பாத்தியதைபற்றிய பூசல்களும், பல்வேறு பகுதிகளோ வெவ்வேறு சமூகத்தினரோ அரசியலைக் கைப்பற்றுவதற்காக நடத்தும் போட்டா போட்டிகளோ புரட்சியைத் தோற்றுவிக்கலாம்.

அரசியலார் நெடுங்காலமாக வழக்கத்திலிருந்த கொள்கைகளையும், சம்பிரதாயங்களையும் சட்டத்தின் மூலம் ஒடுக்குவதாலும் புரட்சி தோன்றலாம்.

இவை எல்லாவற்றையும் தவிரப் புரட்சிக்கு மற்றுமொரு காரணமும் இருக்கலாம். ஏதாவது ஒரு பிரிவினர் கொடுந்தீங்கு இழைத்து விட்டு ஏதோ ஒரு குறிக்கோள் கருதிப் புரட்சி செய்வதாகக் கூறிக்

கொண்டு, தமது திச்செயல்களை அந்தப் போர்வையில் மறைத்து விடலாம்; அப்போது கயவன் என்ற பெயர் மறைந்து வீரன் என்று பெயர் வந்துவிடலாமல்லவா?

[எந்தக் காரணத்தால் புரட்சி விளைவதாயினும் அதன் அடிப்படை இயக்கிகள் இரண்டுதான்—அச்சம் தன்னலம். இவ்வாறு அரிஸ்டாடில் வெளிப்படையாகச் சொல்லாவிட்டாலும் அவர் கூறும் காரணங்களை ஊன்றிப் பார்க்குமிடத்து நமக்கு இது புலப்படுகிறது. மனிதனின் செய்கைகள் அனைத்திற்கும் மூலகாரணம் அச்சமும் தன்னலமுமே" என்று முதலில் துணிந்து கூறியவர் ஆங்கிலச் சிந்தனையாளர் தாமஸ் ஹாப்ஸ் (Thomas Hobbes).]

இனி புரட்சிகளைத் தடுப்பதற்கு வழிவகைகள்....?

பொருளாதார நிலையில் ஏற்றத் தாழ்வு இருப்பதுதான் புரட்சிகளுக்கு முக்கியமான தூண்டு கோல் ஆதலால் புரட்சியைத் தடுப்பதற்கு முதல் படி அத்தகைய அதீதமான ஏற்றத் தாழ்வுகளை நீக்குவதேயாகும். நீதி வழங்குவதிலும், நிர்வாகத்துறையிலும் கூட ஏற்றத் தாழ்வுகளைக் களைய வேண்டும். உரியதோர் விகிதப்படி அவரவர்கள் தமக்குக் கிடைக்கவேண்டுவனவற்றை அனுபவிக்குமாறு செய்ய வேண்டும்" என்கிறார் அரிஸ்டாடில். ஆனால், இந்த முறையில் ஒரு சங்கடம் இருக்கிறது. "உரிய விகிதத்தை நிர்ணயிப்பார் யார்? எதை அடிப்படையாகக் கொண்டு அதை நிர்ணயிப்பது' இவற்றிற்கு அரிஸ்டாடில் தெளிவாக விடையிறுக்கவில்லை. "அனைவருக்கும் சமத்துவம் வேண்டும்" என்ற கொள்கையையும் ஒப்புக் கொள்ள வில்லை.

அடுத்தபடியாக, நடை முறையிலுள்ள அரசியல் அமைப்புக்கு உகந்த முறையில் குழந்தைகளுக்குக் கல்வி கற்பிக்க வேண்டும். அந்தக் கல்வித்திட்டத்தில் வளரும் அவர்கள், பெரியவர்களானதும், "நடைமுறையிலுள்ள அரசியல் அமைப்பே சரி" என்று கொள்ளும் படியாகக் கல்வி அளிக்கப்பட வேண்டும். தவிர சட்டத்துக்குக் கீழ்ப்படிய வேண்டுமென்ற உணர்வையும் அரசாங்கம் மக்களிடத்துச் சிறு வயதிலிருந்தே தோற்றுவிக்க வேண்டும்.

மற்றும் அரசியலில் பங்கு கொள்ளாத வகுப்பினரின் உணர்ச்சிகளை ஆட்சியாளர் மதித்து நடக்க வேண்டும். தமது விருப்பு வெறுப்புகள் அசட்டை செய்யப்படவில்லை என்று அவர்கள் உணர்ந்தால், அதுவே போதும் அவர்களைச் சமாதானப்படுத்த. அப்படியும் நெஞ்சம் குமுறி நிற்பவர்களை, மெதுவாக, வெளி நாடுகளிலுள்ள குடியேற்றப் பிரதேசங்களில் நல்ல வேலை போட்டுக் கொடுத்துக் கப்பல் ஏற்றிவிடலாம்!

"நாட்டுப் பற்று" என்ற கருவியை ஆட்சியாளர் தாராளமாகப் பயன்படுத்த வேண்டும். "எண்ணிப் பாருங்கள் நமது நாட்டை எதிர்த்தேவா புரட்சி செய்வது? நாட்டுப் பற்று இல்லையா உங்களிடம்?" என்பதுபோன்ற மொழிகள், புரட்சியாளரது மனத்தையே ஓரளவு மாற்றினாலும் மாற்றும். அல்லது, அவர்களுக்குப் பிறமக்கள் ஆதரவு அளிப்பதைக் கண்டிப்பாகத் தடைசெய்யும். [இப்போது பல நாடு

களில் ஒரு குறிப்பிட்ட அரசியல் கட்சியின் செல்வாக்கை அடக்குவதற்கு இந்த முறை வெற்றிகரமாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது.]

கடைசியாக அரிஸ்டாடில் மற்ருெரு முறையும் கூறுகிருர். **மன்னன், கடவுள்-பக்தி மிகுந்தவனுக இருக்கவேண்டும்—அதாவது காண்பித்துக் கொள்ளவேண்டும்!** அப்படிப்பட்ட மன்னன் தீங்கு இழைத்தாலும், மக்கள் அவனை எதிர்த்துப் போராட அஞ்சுவார்கள். தமது பக்தனுன மன்னனுக்கு உதவி செய்வதற்குக் கடவுள் தமது படைகளை ஏவினுலும் ஏவலாமல்லவா ?...!

இந்த வழிகளுள் எதைப் பின்பற்ற வேண்டுமென்பது அந்தந்தச் சந்தர்ப்பத்தைப் பொறுத்தது. இது எப்படியாயினும், எதைக் கொண்டாவது, புரட்சியை வரவொட்டாமல் தடுப்பது நல்லது என்கிருர் அரிஸ்டாடில். "ஏனெனில் புரட்சியின் உடனடியான நேரடியான விளைவுகள் நலன் பயப்பன போலத் தோற்றினுலும், அதன் சார்ந்த-விளைவுகள் தீமையே விளைக்கின்றன...சமுதாயக் கட்டுக்கோப்பில் விரும்பத்தகாத அம்சங்களை மட்டுமல்லாமல், கட்டுக்கோப்பு முழுவதையுமே புரட்சி கலைத்துவிடுகிறது...அதனுல் ஏதாவது நன்மை இருந்தால் அது பல தீமைகளுடன் சேர்ந்தே இருக்கும்" (அரசியல் நூல்)

புரட்சியை விளைக்கும் காரணங்களும் சரி, அவற்றைத் தடுக்கும் முறைகளும் சரி இரண்டாயிரம் ஆண்டுகளுக்குப் பின்னரும் இன்றைய உலகிற்குப் பொருந்தவனவாகவே இருக்கின்றன. உலகம் மிகச் சில விஷயங்களிலேயே மாறி இருக்கிறது!

4. ஆட்சியின் அலுவல்கள் :

அரசியலின் குறிக்கோள் என்ன? என்பது அடுத்த பகுதி. அதைப் பற்றிக்கூறுவதற்கு முன்பு **மாதிரி-ராஜ்யம்** (Model-State) எப்படி இருக்க வேண்டும் என்று அரிஸ்டாடில் திட்டம் வகுக்கிருர். நாட்டு மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்யும் விதத்தில் **பொருளாதார சுபிட்சம்** உடையதாக அது இருக்கவேண்டும். சமுதாயத்தின் பல்வேறு அலுவல்களையும் திறம்படக் கவனிக்கும் விதத்தில், நாட்டில் போதிய அளவு (அதற்குமேல் இருக்கக்கூடாது) **ஜனத்தொகை** இருக்கவேண்டும். மக்கள் நன்கு வாழும் விதத்திலும், போக்குவரத்து, தற்காப்பு இவற்றிற்கு நல்ல வசதிகளும், வாய்ப்பும் இருக்கும்படியாகவும் அதன் **எல்லைகள்** அமைந்திருக்கவேண்டும். கடல் வர்த்தகத்துக்கு ஏற்ற முறையில் **துறைமுகங்கள்** இருக்கவேண்டும். உடலும் மனமும் சீரியமுறையில் இருக்கும் வண்ணம் அதன் **சீதோஷ்ண நிலை** இருக்கவேண்டும். **பல்வேறு துறைகளிலும் விசேஷப் பயிற்சி உடைய மக்கள்** அந்த நாட்டில் இருப்பது அவசியம். இவையெல்லாம் நாட்டுக்கு ஆதாரத் தேவைகள்

"தள்ளா விளையுளும், தக்காரும், தாழ்விலாச்
செல்வரும் சேர்வது நாடு".

"பிணியின்மை, செல்வம், விளைவு, இன்பம், ஏமம்
அணியென்ப நாட்டிற்குஇவ் வைந்து"

என்ற குறட்பாக்களின் கருத்தை இவை ஓரளவு ஒத்திருக்கின்றன.]

"நல்ல முறையில் வாழ்க்கை நடத்த வழி செய்வதுதான் நாடே யன்றி, வெறுமே மக்கள் வாழ்வதற்குமட்டும் அல்ல. வெறுமே வாழ வகை செய்வதே நாட்டின் குறிக்கோளாக இருந்தால், விலங்குகளும், அடிமைகளும் தமக்குள் ஒரு ராஜ்யத்தை ஏற்படுத்திக் கொள்ளலாமே" என்று அரிஸ்டாடில் கூறுகிறார்.

மனிதன் தனது பிறவிப்பயனை எய்துவதற்கான வகையில் வாழ்க்கை நடத்துவதற்கு அரசியல் அமைப்பு வாய்ப்புக்கள் அளிக்கவேண்டும். செல்வத்தைப் பெருக்குவதோ, நாட்டின் எல்லையை விஸ்தரித்துக் கொள்வதோ அதன் முக்கிய அலுவல்கள் அல்ல. **உயரிய நோக்கங் களும், செய்கைகளும் கொண்ட வாழ்க்கையை தனது பிரஜைகளிடம் தோற்றுவிக்காத வரையில், ஓர் அரசியல் அமைப்பு, தனது பணியைச் செவ்வனே செய்துவிட்டதாகக் கூறிக்கொள்ள முடியாது.** பொருளி யல் சாதனைகளோடு, மனிதன் தன் அறிவாற்றலைப் பயன்படுத்தி இலட்சிய-வாழ்வு வாழ்வதற்கு வாய்ப்புகள் தரும் நாடே நாடு.

நாட்டுக்குக் குறிக்கோள் வரையறுத்த முதல் சிந்தனையாளர் அரிஸ்டாடில். இனி, மேலே செல்லுவதற்கு முன்பு, அவரது கொள்கை காலத்தின் போக்கில் எவ்வெவ்வாறு மாறியது என்று சுருக்கமாகப் பார்க்கலாம்

[ஆங்கில அறிஞர், ஜான் லாக், "மனிதனின் உரிமைகளைப் பிறர் பறித்துக்கொண்டு விடாதபடி காப்பதே அரசியலின் குறிக்கோள்" என்றார். இதை அரிஸ்டாடிலும் கூறியிருந்தாலும், 'இது ஓர் அடிப் படைத் தேவையே தவிர, முடிவான குறிக்கோள் அல்ல' என்று கூறினார். பதினெட்டாம் நூற்றாண்டுச் சிந்தனையாளர் ஆடம் ஸ்மித், (Adam Smith) "இதர நாடுகளிலிருந்து படையெடுத்து வருவதைத் தடுப் பது; மக்களுக்குள்ளேயே ஒருவர் உரிமையையோ, உடைமையையோ பிறர் பறிக்காதபடி தடுப்பது; தனியார் ஏற்படுத்த முடியாத சில ஸ்தா பனங்களையும் வேலைத் திட்டங்களையும் மேற்கொள்வது; ஆகிய மூன்றும் தான் அரசியல் அமைப்பின் அலுவல்கள்" என்றார். இவ்வாறு குறுகிக் கொண்டே வந்த குறிக்கோள் ஹெர்பெர்ட் ஸ்பென்சரின் (Herbert Spencer) சிந்தனையில் கீழ்ப்படியை எட்டிவிட்டது. மக்கள் ஒருவரையொருவர் அடித்துக்கொள்ளாமல், போலீஸ்-வேலை செய்வதுதான் அரசியலின் குறிக் கோள் என்றும், வேறு எதிலும் அது தலையிட்டுக்கொள்ளக் கூடாதென் றும் அவர் கொள்கை. இவ்வாறு குறுகிப்போன குறிக்கோள் திரும்ப வும் விசாலமாயிற்று. சமீப காலம்வரை உயிர் வாழ்ந்திருந்த அறிஞர் ஹெரால்டு லாஸ்கி (Harold J. Laski) தமது "அரசியல் இலக்கணம்" என்ற நூலில், கூறுகிறார் — 'கூடியவரை மிகப்பெருமளவில், மக்கள் சமுதாய நலனை அடையச் செய்வதுதான் அரசியல் அமைப்பின் நோக்க மாக இருக்கவேண்டும். மக்கள் தமது மிகச்சிறந்த உள்ளுறை-ஆற்றலை வெளிப்படுத்திப் பயன்படுத்திக்கொள்ள அது வாய்ப்புகள் அளிக்க வேண்டும். அதற்கென, மக்களுக்கு உரிமைகள் சில அளிக்கப்படவேண் டும். உரிமைகள் இல்லாவிட்டால் எந்த மனிதனும், தனது திறனை வெளிபடுத்திக் கொள்ளவே முடியாது. உரிமைகளே அரசியலமைப்பின் அடிப்படை." அரிஸ்டாடில் உரிமைக் கொள்கையை ஏற்றுக்கொள்ள வில்லையே தவிர, நாட்டின் குறிக்கோள் பற்றிய இன்றைய கருத்து, பெரும்பாலும் அவருடையதையே ஒத்திருப்பதாகத் தோன்றுகிறது.]

இனி "மக்கள் மிகச்சிறந்த வாழ்க்கை நடத்த வாய்ப்பு அளிப்பது தான் சிறந்த அரசியல்" என்று கூறிய அரிஸ்டாடில் ஒரு நாடு பிற நாடுகளின்மீது படையெடுத்துச் செல்வதைப்பற்றி ஆராய்கிறார். அவ்வாறு படையெடுத்துச் சென்று வெற்றி கண்டால். நாட்டின் மதிப்பும் செல்வநிலையும் அதிகரித்துச் சுபிட்சம் பெருகி மக்கள் நல்வாழ்வு வாழ்வதற்கு வாய்ப்புகள் அதிகமாகலாம் அல்லவா? எனவே அயல் நாட்டுப் போரையும் நாட்டின் குறிக்கோளில் ஒரு பிரிவாகச் சேர்த்துவிட்டால் என்ன? நீண்டதொரு பரிசிலனைக்குப் பிறகு அரிஸ்டாடில், "போரிடுவது நாட்டின் குறிக்கோள் ஆகாது" என்கிறார். சச்சரவேதுமின்றிப் போரெதிலும் பங்கெடுத்துக்கொள்ளாமல் நடுநிலைமை வகிக்கும் நாடுகள் சோம்பேறி நாடுகளென்று பொருளில்லை. கடவுளுக்கும் அகில-அண்டத்துக்கும் போரிட்டுத் தமது செல்வாக்கையும் எல்லையையும் பெருக்கிக்கொள்ள முடியாது. கடவுளும், அகில-அண்டமும் சோம்பேறிகள் என்று பொருள் கொள்ளுவது? எனவே போரிடுவதென்பது நாட்டின் குறிக்கோளாக ஆகமுடியாது. இயற்கையாகவே அடிமை வாழ்வுக்கென்றே பிறந்தவர்களை வெற்றிகொண்டு அவர்களை அடிமைப்படுத்திக் கொள்ளுவதுதான் சரியான போர். "எப்படியும் போர் என்பது ஒரு சாதனமாக இருக்கலாமேயன்றி அது ஒரு குறிக்கோளாக, இலட்சியமாக இருக்கமுடியாது."

[இந்தச் சந்தர்ப்பத்தில்தான், "நாடு என்பது எவ்வளவு பெரியதாக இருக்கவேண்டும்? ஒரு லட்சிய-ராஜ்யத்தின் அளவு என்ன?" என்ற கேள்விகள் எழுகின்றன.]

மிகப் பெரிய ராஜ்யங்களாக இருந்தால், அவற்றை ஆளுவது சிரமம், ஆனால் தன்னிறைவு பெற்றிருக்கும் அளவுக்காவது அவை பெரியவையாக இருக்கவேண்டும். அப்படி இல்லாவிடில் மக்கள் சுபிட்சமாக வாழமுடியாது. ஆனால் அதற்காக மிகப் பெரியதாக இருந்துவிட்டால், மக்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள முடியாது. ஆனால் தேர்தல் சமயங்களில் நேர்மை இல்லாமலிருக்க ஏதுவாகும், எனவே தன்னிறைவு என்பதற்காக மிகப்பெரியதாகவும் நாடு இருந்துவிடக்கூடாது. மக்கள் ஒருவரையொருவர் அறிந்துகொள்ள வேண்டும். ஆட்சிக்குச் சௌகரியமாக இருக்கவேண்டும் என்பதற்காக மிகச் சிறியதாகவும் இருந்துவிடக் கூடாது. "ஒரு குன்றின்மீது ஏறிப் பார்த்தால் நாடு முழுதும் தெரியவேண்டும்; அதுதான் சிறந்த அளவு" என்கிறார் அரிஸ்டாடில்.

நாட்டில் ஜனத்தொகை எந்த அளவுக்கு இருக்கவேண்டுமென்பது, அந்தந்த ராஜ்யத்தின் வளமையையும் இருப்பிடத்தையும் பொறுத்தது. ஆனால் பத்தாயிரம் பேருக்குமேல் ஒரு நாட்டில் வாழ்வது விரும்பத்தக்கதல்ல என்று அரிஸ்டாடில் விதித்துவிடுகிறார்.

நாட்டின் அளவை நிர்ணயிப்பதில் கவனிக்கவேண்டிய மற்றொரு முக்கிய விஷயம் தற்காப்பு. விரோதிகள் படை எடுத்து வந்தால், அதிகச் சிரமமின்றி தன்னைத் தானே காத்துக்கொள்வதற்கு ஏற்றபடி இருக்கும் அளவே சிறந்த அளவு. இந்த அளவு எது என்பது போர் முறைகளையும், அந்தந்த ராஜ்யத்து மக்களின் போர்த்திறனையும் பொறுத்திருக்கிறது.

"சிறந்த வாழ்வுக்கு வேண்டிய வாய்ப்புகளுள், போதிய ஓய்வு ஒன்று; ஆகவே, நாட்டின் பணிகளுள் தலையாயது, மக்களுக்கு ஓய்வு கிடைக்க வழி செய்வது தான்" என்கிறார் அரிஸ்டாடில். முன்பே கூறியுள்ளபடி, 'ஓய்வு" என்றால் வேலையொன்றும் செய்யாது வாளா இருப்பது என்று பொருளல்ல. மக்களின் செய்கைகளை அரிஸ்டாடில் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிறார்.—வேலை ஓய்வு. வேறொரு காரணத்துக்காகச் செய்யவேண்டுமே என்ற கட்டாயத்துக்காகச் செய்யப்படுவன "வேலை" எனப்படும். உதாரணமாக ஒருவன் பூமியைப் பண்படுத்துகிறான். அந்தச் செயலுக்காக அவன் அதைச் செய்வதில்லை; பண்படுத்திப் பயிரிட்டால்தான் உணவு கிடைக்கும். உணவு இல்லாவிட்டால் வாழமுடியாது. எனவே ஒரு கட்டாயத்தின் பேரில், மற்றொரு குறிக்கோளை நிறைவேற்றுவதற்காக அது செய்யப்படுகிறது. அது வேலை. ஆனால், வேறு சில அலுவல்கள் இருக்கின்றன. அவற்றை, அவற்றுக்காகவே மக்கள் மேற்கொள்ளுவார்கள். ஏனெனில் அவற்றின் மூலம் மனிதன் தனது உள்ளுறை-ஆற்றலை வெளிப்படுத்திக் கொள்ள முடியும். தனது பொருளாதாரத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளுவதற்காக அல்லாமல் மனிதன் ஆற்றும் பிற செயல்களே இவை. ஆட்சி முறையில் பங்கு கொள்ளுவது பொதுநல சேவை பிற மக்களுடன் கூடிப் பழகுதல் தத்துவம் அறிவியல் இவற்றில் ஆராய்ச்சி செய்தல் போன்றவை இப்படிப்பட்டவை. இவற்றைச் செய்வதன் மூலம் மனிதனின் உள்ளுறை ஆற்றல் வெளிப்பட்டு, அவனுடைய அறிவாற்றல் வளர்ச்சியுற்று ஒழுக்கநெறியும் சிறக்கிறது. இந்தப் பணிகளையே அரிஸ்டாடில் "ஓய்வு" என்று குறிப்பிடுகிறார். மக்கள் சிறந்த முறையில் வாழ்வதற்கு இது தேவை என்பது வெளிப்படை. உணவு தேடும் கவலை இல்லாமலிருந்து "ஓய்வு" நிறைய இருந்தால் மக்கள் சீரியமுறையில் அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ள வசதியாக இருக்கும் என்பதால் தான் அரிஸ்டாடில் தனிப்பட்டோர் சொத்துரிமையை ஆதரித்தார். ஆகவே மக்களுக்கு ஓய்வு நிறைய இருக்குமாறு செய்வது அரசியலின் தலைமைப் பணி.

இச்சமயத்தில் ஒரு சிறு விஷயத்தை விளக்கிக்கூற வேண்டுவது அவசியம். மக்களுக்கு "ஓய்வு" நிறையக் கிடைப்பதற்கு வாய்ப்பு அளிக்க வேண்டுமென்றால், தொழிலாளிகளும் அடிமைகளும் எப்போதும் தமது எஜமானர்களுக்காக உழைக்க வேண்டியிருக்குமே, அவர்களுக்கு ஓய்வு வேண்டாமா? என்ற கேள்வி எழலாம். ஒரு சிலர், தமது அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ள வேண்டுமென்பதற்காகப் பிறரை உழைக்கச் செய்துகொண்டே இருப்பது தகாது அல்லவா? என்று கேட்கலாம். இதற்கு அரிஸ்டாடில் பதில் தருகிறார். தொழிலாளர்-வகுப்பினரும் அடிமைகளும் பிறவியிலேயே உடல்-உழைப்பு மட்டும் செய்வதற்கென்றே ஏற்பட்டவர்கள். அவர்களுக்கு வாய்ப்புகள் அளித்தால்கூட, அவர்களால் தமது அறிவாற்றலைப் பெருக்கிக் கொள்ள முடியாது. அவர்களுக்கு அதற்கான தகுதியும் திறனும் பிறவியிலேயே இல்லை. எனவே, அவர்களுக்கு ஓய்வு கிடைக்க வசதி செய்வது விழலுக்கு இறைத்த நீரைப்போலத்தான் அவர்களுக்கெல்லாம் அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ள வாய்ப்புக்கள் அளித்தால், உண்மையாகவே அறிவுத்திறனைப் பெருக்கிக்கொள்ளக் கூடியவர்களுக்கு அளிக்கப்படும் வசதிகள் குறைந்துவிடும். இதுதான் அநீதி. உண்ண

முடியாதவர்களுக்குப் போய் உணவைக்கொண்டு போய்த் திணிப்பதன் மூலம், உணவுக்காகக் காத்துக்கொண்டிருப்பவர்களது பங்கைக் குறைப்பது அநீதி தானே? அதனால், தொழிலாளிகள், அடிமைகள் ஆகியோருக்கு ஓய்வு-வசதிகள் அளிக்கவேண்டுவது அரசாங்கத்தின் கடமை அல்ல. அறிவாற்றலைப் பெருக்கிக்கொள்ளக் கூடியவர்களுக்கு, அந்த வசதிகளைக் கூடியவரையில் அதிகமாகத் தருவதுதான் அரசியலின் பணி. அதன் அமைப்பும், அளவும், செயல்களும் அதற்கு உகந்தவாறுதான் இருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் "சிறந்த வாழ்வு" வாழ முடியும். அரசியலின் லட்சியமும் ஈடேறும்.

இதற்கு அடுத்தபடியாக அரசாங்கத்தின் முக்கியமான அலுவல் கல்வித்திட்டம் வகுத்து, அதற்கேற்ப மக்களுக்குக் கல்வியறிவு அளிப்பதேயாகும். "ஏனெனில் மக்களுக்கு அவர்கள் வாழும் அரசியல் முறைக்கு ஏற்ற கல்வி அளித்தால்தான் அரசியல் அமைப்பு நிலைபெற்றிருக்கும்." கல்வி அளிப்பது என்றால் நாட்டிலுள்ள குழந்தைகள் அனைவருக்கும் பொதுக்கல்வி நிலையமொன்றில் கல்வி யூட்டுவது என்றே பொருள். நற்பண்புகளுக்கு ஏற்ற நடவடிக்கைகளைக் குழந்தைகள் மேற்கொள்ளுமாறு தூண்டவேண்டும். அவர்கள் அவ்வாறு செய்யச் செய்ய... டைவில் மனம் விரும்பி நற்செய்கைகளை மேற்கொள்ளத் துவங்குவார்கள். இந்த நற்செயல்களுக்குள், கீழ்ப்படிதல் என்பதும் ஒன்று. ஏனெனில் ஆளக் கற்றுக்கொள்பவன், முதலில் அடங்கக் கற்றுக்கொள்ள வேண்டும். சமுதாய நிர்வாகத்தினாலும் சட்டங்களாலும் கிடைக்கப் பெறும் நலனைச் சிறுவர்கள் உணருமாறு செய்வதும் கல்வியின் முக்கியமான நோக்கம். "மனிதன் பிறக்கும்போது அறிவாற்றலுடன் பிறக்கிறான். தீய வழிகளில் அதை அவன் பயன்படுத்தினால், முடிவு மிகுந்த விபரீதமாக இருக்கும்...எனவே, நற்பண்புகள் இல்லாவிடில் மனிதன் மிகுந்த மூர்க்கமானதொரு மிருகம்தான்;—பேராசையும், காமமும் ஓர் உருவான மிருகம். சமுதாயக் கட்டுப்பாடு ஒன்றுதான் அவனுக்கு நற்பண்புகளை அளிக்கமுடியும்." (அரசியல் நூல்). இதைச் சிறுவயதிலேயே குழந்தைகள் உணருமாறு செய்தல் கல்வித்திட்டத்தின் நோக்கம். சட்டத்திலிருந்துதான் சுதந்திரம் பிறக்கிறது என்பதை அவர்கள் உணருமாறு செய்யவேண்டும். [இந்தக் கூற்றில் ஓரளவு உண்மை இருக்கிறது. சட்டங்கள் இல்லாவிடில் நம் சுதந்திரம் குறையவே செய்யும். சாலைகளில் வாகனங்கள் இடது பக்கமே செல்லவேண்டுமென்பது சட்டம். அதுமட்டும் இல்லாமலிருந்தால், இப்போது இருப்பதைப் போன்று சுயேச்சையாக, வேகமாகத் தெருக்களில் வாகனங்கள் செல்லமுடியாது. பிறர் வீட்டுக்குள் அனுமதியின்றி நுழையக்கூடாது என்ற சட்டம் இல்லாவிட்டால், மக்கள் சுதந்தரமாகத் தோட்டம் போடமுடியாது. பூச்செடிகள் வைக்கமுடியாது. இம்மாதிரிப் பல எடுத்துக்காட்டுக்கள் கூறலாம்.]

பொதுக்கல்வி நிலையத்தில் குழந்தைகளுக்குக் கல்வி பயிற்றுவிக்க வேண்டுமென்றால், எல்லா குழந்தைகளுக்கும் அல்ல. யார்யார் பிரஜைகளாகப் போகிறார்களோ, அந்தக் குழந்தைகளுக்கு மட்டும்தான். அடிமைகள், தொழிலாளிகள் போன்றவர்களின் மக்களுக்கு, அவர்களுக்கு வாழ்வில் பயன்படக் கூடிய தொழில் முறைகளை வேண்டுமானால், கற்றுக் கொடுக்கலாம். ஆனால், இந்த போதனை, கல்வித் திட்டத்தின்

ஒரு பகுதி அல்ல. இந்த இடத்தில் அரிஸ்டாடிலின் கொள்கை பிளேட்டோவின் கொள்கையிலிருந்து வேறுபடுகிறது. கல்வி அளிக்கும்போது குழந்தைகளுக்கிடையே வகுப்பு-பேதம் பார்க்கவேண்டாமென்று பிளேட்டோ சொன்னார். தொழிலாளியின் மகனுக்குப் பிறவி-மேதை இருக்கலாமென்பதையும் சிந்தனையாளனின் மகனுக்கு அந்தத் திறனே இல்லாதிருக்கலாம் என்பதையும் பிளேட்டோ ஏற்றுக்கொண்டு அனைவருக்கும் ஒரே இடத்தில் ஒரே மாதிரியான கல்வி முறை பயிற்றுவிக்கலாமென்றும் அதன் பிறகு பரீட்சித்து அவரவர்களின் தகுதிக்கும் திறமைக்கும் ஏற்ப வகுப்புப் பிரிவினை செய்யலாமென்றும் அவர் விதித்தார். நிற்க.

கல்வி நிலையத்தில் என்னென்ன கற்பிக்கப்பட வேண்டும்? என்பதைப் பார்ப்போம். பொதுவாக ஒரு கொள்கை. கல்வி கற்பது கல்விக்காகவே என்பதுதான் அது. பொருள் ஈட்ட வகை செய்யும்படியாகவோ அதையே குறிக்கோளாகக் கொண்டதாகவோ கற்பிக்கும் கலைகள் இருக்கக் கூடாது. உதாரணமாகக் குழந்தைகளுக்கு உடற் பயிற்சி அளிக்கப்படவேண்டும். ஆனால் அவர்கள் விளையாட்டு-வீரர்களாகித் தொழில் முறை ஆட்டக்காரர்களாகும் அளவுக்கு இது போதிக்கப் படக்கூடாது. இசைக் கலை கற்பிக்கப்படவேண்டும்; ஆனால் தொழில் முறைப் பாடகர்களாக அவர்களைப் பயிற்றுவித்து விடக் கூடாது. பொருள் ஈட்டுவதற்காக அல்ல கல்வி; நற்பண்புகள் பெறுவதற்கே.

குழந்தைகளுக்கு ஓவியக் கலை கற்பிக்கப்படவேண்டும். அப்போதுதான் உலகின் வண்ண அழகை அவர்கள் ரசிக்க முடியும். ஆனால் நீதிநெறி புகட்டும் ஓவியங்களையோ, சிற்பங்களையோதான் உருவாக்குவதற்கு அவர்களுக்குக் கற்றுத்தரவேண்டும். கலைகளைத் தவிர அவர்கள் எழுதப் படிக்கவும் தெரிந்துகொள்ள வேண்டும்.

"சிறுவர்களுக்குப் பழக்க வழக்கங்களின்மூலம் நற்பண்பைப் புகட்டவேண்டும்" என்ற அடிப்படை பிளேட்டோ, அரிஸ்டாடில் இருவருக்கும் பொதுவாக இருந்திருக்கிறது. இருவரும் சர்வஜன கட்டாயக் கல்வித் திட்டம் வேண்டும் என்றும் கூறினார்கள். "கல்வி என்றால் குழந்தைகளிடம் இயற்கையாக அமைந்துள்ள இயல்பின் முதல் உணர்வுக்கு ஏற்றபடி பழக்கங்களைக் கொடுக்கும் பயிற்சிதான்" என்றார் பிளேட்டோ. இவ்வாறு கல்வியின் நோக்கம் முறை ஆகிய இரண்டிலும் ஆசிரியரும் மாணவரும் ஒரே கருத்துக்கள் கொண்டிருந்தாலும், முக்கியமான வேறுபாடு இருவரையும் பிரிக்கிறது. 'தமது தகப்பன்மார் தொழில் எதுவாயினும் குழந்தைகளுக்குப் பிறவி-மேதை தனியாக இருக்கலாம்' என்று பிளேட்டோ நம்பினார். அரிஸ்டாடில் அவ்வாறு கருதவில்லை. எழுதி வைத்த சட்டங்களுக்கு பிளேட்டோ அதிக மதிப்புக் கொடுக்கவில்லை. அரிஸ்டாடில் சட்டங்களே மன்பதை காக்கும் கருவி என்று நம்பி, அந்த அடிப்படையிலேயே கல்வித் திட்டம் வகுத்தார். எது எப்படியாயினும் கிரேக்க சிந்தனையாளர்கள் வகுத்த கல்வி முறை வெறும் ஏட்டுக் கல்வி மட்டுமின்றிக் கலைப் பயிற்சியையும் உள்ளடக்கியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

[அரிஸ்டாடிலின் கல்வி முறையில் ஓர் அம்சம் தற்காலத்தில் பலருக்குப் பிடிக்காமலிருக்கும். தாம் வாழும் அரசியலமைப்புத்தான்

சிறந்தது என்ற கொள்கையைச் சிறு வயதில்—நல்லது தீயது எவை என்று அறியும் பருவத்துக்கு முன்பே—குழந்தைகளின் மனதில் புகுத்த வேண்டும் என்பதே அது. பார்ப்பதற்குக் கசப்பாக இருக்கிறதே தவிர, இதுபோன்ற செயல் தினசரி நடப்பதுதான் என்பது ஊன்றிப் பார்த்தால் புலப்படும். பெற்றோரும் ஆசிரியர்களும் தம்மை அறியாமலே குழந்தைகளின் மனதில் தமது கருத்துக்களை நிலைநாட்டி விடுகிறார்கள். திமிர் உள்ள பணக்காரனின் குழந்தை தன்னை அறியாமலே வேலையாட்களைக் கேவலமாகப் பேசுகிறது; நினைக்கவும் செய்கிறது. பகுத்தறிவு வாதியின் குழந்தை "கடவுள் இல்லை" என்று மழலை மாறாத குரலில் பேசியதை நான் கண்டிருக்கிறேன்.]

இவ்வாறு அரசியலின் அலுவல்கள் குறித்துக் கூறிவிட்டு, மாதிரி ராஜ்யமொன்றை (Model State) கற்பனை செய்துகொண்டு, அதை வர்ணிக்கத் தொடங்குகிறார் அரிஸ்டாடில். என்ன காரணத்தாலோ, அந்த வர்ணனையை அவர் முடிக்கவில்லை.

5. அரசியல்—பொது விளக்கம்:

"அரசியல் நூலில்" கூறப்பட்டிருக்கும் சில ரசமான, (—கது) வேடிக்கையாக உள்ள சில விஷயங்களை இங்கு குறிப்பிடலாமென்றிருக்கிறேன்.

பெண்கள் குளிர்காலத்தில் கருவுற்றால்தான் குழந்தைகள் ஆரோக்கியமாகப் பிறக்கும். ஏனெனில் அப்போது வடதிசையிலிருந்து காற்று வீசுகிறதாம். (அப்படியென்றால் ஸ்ரீமதி அரிஸ்டாடில்கள் இரண்டு பேரும், காற்றுத்திசைகாட்டும் கருவியை உன்னிப்பாகக் கவனித்து விட்டுத் தான் தினமும் படுக்கைக்குச் செல்வார்கள் போலும் என்று கிண்டல் செய்கிறார் நவீனச் சிந்தனையாளரான பெர்ட்ராண்ட் ரஸ்ஸெல்.) சிறுவயதில் கல்யாணம் செய்து கொண்டால் பிறக்கிற குழந்தைகள் எல்லாம் பெண்ணாகப் பிறந்து வைக்குமாம். பதினெட்டு வயதுக்குக் குறைந்து பெண்கள் கலியாணம் செய்து கொள்ளக் கூடாது; பதினெட்டு வயதுப் பெண்ணைச் சமாளிக்க முப்பது வயது ஆடவன் போதுமென்றாலும், அவளை நன்கு அடக்கி ஆளும்பொருட்டு, ஆண் முப்பத்தி ஏழு வயதாக இருப்பது உத்தமம். அதிலும் அவன் ராணுவ-சேவை செய்து உடலும் மனமும் வைரம் பாய்ந்து கிடப்பது இன்னமும் நல்லது. ஜனத்தொகை அதிகமாகப் போய்விட்டால் கருச்சிதைவு செய்து கொள்ளலாம். ஆனால் கருவில் வளரும் குழந்தைக்கு "உணர்ச்சியும், அறிவும்" தோன்றுவதற்கு முன்னதாக இதைச் செய்து விட வேண்டும்....

இனி, அரிஸ்டாடிலின் "அரசியல் நூலில்" காணும் முக்கியமான அடிப்படைக் குறைபாடுகளை முதலில் பார்க்கலாம். அடிமைகள் வைத்திருப்பது அநீதியல்ல கிரேக்கர்கள் மற்றெல்லா இனத்தினரையும் விட ஆற்றலிலும், நெறியிலும் சிறந்தவர்கள் என்ற அடிப்படையில் அவரது 'மாதிரி-ராஜ்யம்' உருவாக்கப்படுகிறது. இந்த நம்பிக்கை மட்டும் இல்லாதிருந்திருந்தால் 'அரசியல் நூலின்' பல குறைபாடுகளை அரிஸ்டாடிலே களைந்தெறிந்திருப்பார். புகழ்பெற்ற கவி-சிந்தனையாளர் தாந்தே (Dante)யும் இதே தவறைத்தான் செய்தார்.

அரிஸ்டாடிலின் பல குறைபாடுகளுக்குக் காரணமாக இருந்த மற்ருெரு நம்பிக்கை நகர ராஜ்யங்கள் என்றும் நிலை பெற்றிருக்கும் என்பதுதான். அந்த அடிப்படையில் அவர் சிந்தித்திருக்கா விட்டால், பிற்காலத்துக்கும் பொருந்தக்கூடியதொரு அரசியல் அமைப்பை வரைந்திருப்பார்.

இரண்டாவதாக, அரிஸ்டாடில் சட்டங்களின் தேவையையும் அலுவலையும் மிகைப்படுத்தி வலியுறுத்துகிருர். சட்டத்தால் மட்டும் சாதிக்க முடியாத சில செயல்களும் உண்டு என்பதை 'அரசியல் நூலில்' எந்த இடத்திலும் அவர் ஒப்புக் கொண்டதாகத் தெரியவில்லை.

அரசியல் அமைப்புச் சரிவர இயங்குவதற்கு வர்த்தகர்களும், தொழிலாளிகளும் (அடிமைகள் நீங்கலாகப் பிற தொழிலாளிகளும்) தேவைஎன்பதை அரிஸ்டாடில் ஒப்புக் கொள்கிருர். ஆனல் அவர்களுக்குப் பிரஜா-உரிமை அளிக்க மறுக்கிருர். அடிமைகளைப் போலக் கட்டுத் திட்டத்துக்கு அடங்கி அவர்கள் வேலை செய்வதில்லை. அப்படியிருக்கத் தமக்கு உரிமைகள் எதுவுமே இல்லை என்ற நிலையில் அவர்கள் ஊக்கத்துடன் அரசியலமைப்பின் நலனுக்காகப் பாடுபடுவார்கள் என்று எப்படி எதிர்பார்க்க முடியும்?

நான்காவதாக, உள்நாட்டு விவகாரங்களைப் பற்றியே முழுதும் கூறப்பட்டிருக்கிறதேயன்றி வெளிநாட்டுத் தொடர்புகளைப் பற்றிப் பேச்சுமூச்சே இல்லை. நகர ராஜ்யங்கள் எப்போதும் நீடித்திருக்கும் என்று அவர் நம்பியதுதான் இந்தக் குறைபாட்டுக்கு மூலகாரணம். மற்றும் வரிவிதிப்பு அரசாங்கம் கடன் வாங்குதல் போன்ற பொருளாதார நடவடிக்கைகளைப் பற்றியும் ஒன்றும் கூறப்படவில்லை.

இந்த எல்லாக் குறைபாடுகளுக்கும் அடிப்படைக்காரணம் ஒன்று இருக்கிறது. அதாவது அரசியல் அமைப்புக்கும் அதில் வாழும் மக்களுக்கும் இடையே அரிஸ்டாடில் எந்தவிதமான வித்தியாசமும் காணவில்லை. அதாவது நாட்டின் பிரஜைகள் என்ற முறையில் மக்களைப் பற்றி எண்ணினுரேயன்றித் தனிமனிதர்கள் என்ற ஹோதாவில் அவர்களைப் பற்றிச் சிந்திக்கவில்லை. அதனல் தனிப்பட்டோர் சுதந்திரத்தைப் பேசிய அவர் குடிமை-உரிமைகளைப் பற்றி நினைத்தும் பார்க்கவில்லை. நாட்டையும் மக்களையும் ஒன்றெனக் கருதியே அவர் சிந்தித்தார். சில சந்தர்ப்பங்களில்தான் இது பொருந்தும்.

இனிக் குறைகளை விடுத்து குணங்களைப் பார்ப்போம். 'அரசியல் நூலின்' முதற் பெருமை நாடுபிறந்த கதையைப்பற்றி அது குறிப்பிட்டிருப்பதுதான். "நாடு என்ற சமுதாய அமைப்பு எவ்வாறு உருவாயிற்று" என்ற கேள்வியைப் போட்டுக் கொண்டு முதன் முதலில் விடை கண்டவர் அரிஸ்டாடில். மனித இயல் சரித்திரத்தையும் வரலாற்றையும் ஆராய்ந்து அறிந்த தற்காலத்திய நிபுணர்கள், அரிஸ்டாடிலின் இது சம்பந்தமான கருத்தைக் கொள்கையளவில் ஒப்புக்கொண்டுதானிருக்கிருர்கள். எந்தவிதமான வரலாற்றுச் சான்றும் இல்லாதிருக்கையில், மனிதன் எப்படி நாடு என்ற கட்டுக்கோப்பில் புகுந்து கொண்டான் என்று ஆராய்ந்து விடையும் காண்பது எளியதொரு சாதனையல்ல.

மற்றும், அரசியல் தத்துவம் குறித்து முதன்முதலில் தர்க்க ரீதியாக எழுதப்பட்ட புத்தகம் 'அரசியல் நூல்'. பிளேட்டோவின் "குடியரசு", இலட்சிய ராஜ்யத்தைப் பற்றிய வெறும் கற்பனைச்சித்திரம் தான். அவர் எழுதிய பிற நூல்களும் 'நல்லதொரு அரசியல் அமைப்பு இப்படி இருக்க வேண்டும்' என்றே உணர்த்தின. இருக்கிற சாதனங்களை வைத்துக் கொண்டு எவ்வளவு முடியுமோ, அவ்வளவு சிறந்த அமைப்பை ஏற்படுத்துவது எப்படி என்று படிப்படியாக வழிகாட்டிய முதல் நூல் அரிஸ்டாடிலின் 'அரசியல் நூல்' தான். பொதுப்படையாக எது நல்லது என்பதை மட்டுமின்றிச், சூழ்நிலை வித்தியாசத்துக்கு ஏற்ப, சாதனங்களின் தன்மைக்கு ஏற்ப எவ்வளவு நல்லதாக அரசியல் அமைப்பை அமைக்க முடியும் என்பதை அது விளக்கிக் கூறுகிறது. அதனால் தான் அரிஸ்டாடில், "முதன் முதல் அரசியல் விஞ்ஞானி" என்றழைக்கப் படுகிறார். (Chester Maxey, "அரசியல் தத்துவங்கள்")

மேலும், பொருளாதார நிலையின் ஏற்றத்தாழ்வுகள் அரசியலமைப்பை எவ்வாறு பாதிக்க முடியும் என்று முதலில் ஆராய்ந்த பெருமையும் அரிஸ்டாடிலுக்குச் சேர வேண்டும்.

அரிஸ்டாடிலின் 'அரசியல் நூலின்' தனிச்சிறப்பு அரசியல் அமைப்பின் இலட்சியம் என்ன என்று வகுத்துக் கூறியதேயாகும். "மனிதன் வாழ மட்டும் வகை செய்தால் போதாது; சீரிய, உயர்ந்த மிகச் சிறந்த முறையில் வாழ வாய்ப்புகள் அளிப்பதே அரசியலின் குறிக் கோளாக இருக்க வேண்டும்' என்று திட்டம் வகுத்த முதல் சிந்தனையாளர் அரிஸ்டாடிலே. முதன் முதலில் வகுக்கப்பட்ட இந்த இலட்சியம் பிற்காலச் சிந்தனையாளர்களால் படிப்படியாகக் குறுக்கப்பட்டது. பின்னர், நடந்த நிகழ்ச்சிகளால் படிப்படியாக விரிவடைந்து, இப்போது அரிஸ்டாடிலின் இலட்சிய அளவை எஞ்சியும் விட்டது. தற்காலத்தில் பலரும் க்ஷேமநல ராஜ்யத்திற்கு (Welfare state) வித்திட்டது, அரிஸ்டாடிலின் 'அரசியல் நூல்' வகுத்த இலக்கணமே ஆகும்!

தத்துவ ஞானிகள்தாம் நாட்டை ஆள வேண்டும் என்றார் பிளேட்டோ. பண்பாடு பொருந்திய உயர்குடிப் பிறப்பினரின் (Cultured gentlemen) ஆட்சியை அரிஸ்டாடில் வற்புறுத்தினர். தத்துவ ஞானிகள் ஆட்சி உலகில் வரவே இல்லை. உயர்குடிப் பிறப்பாளர் ஆட்சி மலையேறி விட்டது. அதனால், அவற்றை வலியுறுத்திய சிந்தனையாளர்களின் மாட்சி மங்கிவிட்டதென்று கூறமுடியாது.

"சிந்தனைகள் தாம் நம்முடையவை... அவற்றின்
விளைவுகள் நம் பொறுப்பில் இல்லை!"

—ஷேக்ஸ்பியர்

பாகம் ஐந்து—**தர்க்கவியல்**

"தர்க்க வாதத்துக்கு உட்பட மறுப்பவன் கண்மூடி; உட்பட இயலாதவன் அறிவிலி; உட்படத் துணிவற்றவன் அடிமை"

—முதுமொழி

முன்னுரை

3362

ஐரோப்பிய அறிவியல் கலைக்கு அடிப்படையாக, சிந்தனை முறைக்கு வழிகாட்டியாக ஒரு நூல் அகப்பட்டது. அதுதான் அரிஸ்டாடிலின் 'ஆர்கனன்" [organon '' கருவி"] என்ற நூல். உலகிலேயே தர்க்க சாஸ்திரத்தில் முதன்முதல் எழுதப்பட்ட நூல் அது. மற்றும் இதர விஞ்ஞான நூல் துறைகளைவிட, தர்க்க நூலின் எல்லை மிக விரிவானது. முதல் தர்க்க நூலுக்குக் "கருவி" என்று பெயரிடப்பட்டது மிகவும் பொருத்தமே.

சரியானபடி சிந்திப்பதற்கு முறைகூறும் நூலே தர்க்க நூல். ஒவ்வொரு கலைக்கும் ஒவ்வொரு ஒழுங்கிற்கும் ஒவ்வொரு அறிவியல் துறைக்கும் அடிப்படை விதி கூறும் சாஸ்திரம் அது. சரியானபடி சிந்திப்பதெப்படி என்று, முறையாக, படிப்படியாக விதி கூறுகிறது அது— கணித தேற்றங்களைப் போல, பௌதிக ரசாயன விதிகளைப்போல. இந்த நூலைப் பயிலப் பயில மனது பண்படுகிறது. இந்த விதிகளை ஒவ்வொரு பொழுதும் நினைவுக்குக் கொண்டு வராமலேயே அதைப் பயின்றவர்கள் முறைப்படி சிந்திக்கப் பயின்றுவிடுகிறார்கள். வயலின் பழகும்போது சிரமப்பட்டு, சரளிவரிசை வாசிக்கக் கற்றுக் கொள்கிறோம். அதுபோலத்தான்!

உண்மை எதுவென்று தேடிச் சிந்திப்பவருக்குத் தர்க்க நூல் ஒரு வழிகாட்டி என்று கண்டோம். ஆனால், அது காட்டுவது ஒரு வழி அல்ல. இரண்டு வழிகள்.

இந்த இரண்டு வழிகளையும், பகுப்பு முறை (Deduction), தொகுப்பு முறை (Induction) என்று அழைக்கலாம். பொதுப்படையான, அனைவரும் பார்த்த மாத்திரத்தில் தடையின்றி ஒப்புக் கொள்ளக் கூடிய கொள்கைகளிலிருந்து (மனித வாழ்வு சாசுவதமல்ல என்பது போன்ற கொள்கைகளிலிருந்து). குறிப்பிட்ட ஓர் உண்மையை வடித்தெடுப்பதுதான் பகுப்பு முறை.

ஒரு எடுத்துக்காட்டு:

மனிதர்கள் அனைவரும் ஒருநாள் இறந்துபடுவது திண்ணம் என்பது ஓர் உண்மை.

சாத்தன் ஒரு மனிதன் என்பது கண்கூடாக நாம் அறிந்து கொண்ட மற்றொரு உண்மை.

எனவே, சாத்தன் என்றேனும் இறப்பது நிச்சயம்.

என்ற உண்மையை வடித்தெடுக்கலாம். இதுதான் பகுப்பு முறை. இந்த முறையினுல் நாம் ஓர் உண்மையைக் கண்டால் அது உண்மை என்பது மட்டுமல்லாமல், அது ஏன் உண்மை என்பதையும் அது விளக்குகிறது.

குறிப்பிட்ட சில உண்மைகளை வைத்துக்கொண்டு, அவற்றைத் தொகுத்துப் பொதுப்படையான உண்மையொன்றை நிலை நிறுத்துவதே தொகுப்பு முறையாகும். ஒரு உதாரணம். நாம் பலவிதமான அளவுகள் உள்ள முக்கோணங்களை வரைகிருேம். ஒவ்வொன்றின் கோணங்களின் மொத்த மதிப்பைக் கணக்கிடுகிருேம். ஒவ்வொன்றிற்கும் 180 டிகிரி என்று தெரிகிறது. பல முக்கோணங்களை ஆராய்ந்த பிறகு, "ஒரு முக்கோணத்தின் மூன்று கோணங்களின் மொத்த மதிப்பு 180°" என்று பொதுப்படையான தேற்றத்தைக் காண்கிருேம். இதுவே தொகுப்பு முறை.

சுருங்கச் சொன்னுல், பொதுப்படையான உண்மைகளிலிருந்து குறிப்பிட்ட ஒரு கொள்கையை வடித்தெடுப்பது பகுப்பு முறை. குறிப்பிட்ட உண்மைகளிலிருந்து, பொதுப்படையானதொரு உண்மையைக் காண்பது தொகுப்பு முறை.

பகுப்புமுறைத் தர்க்க வியலுக்குப் பொதுப்படையான உண்மைகள் தாம் அடிப்படை. அவற்றைக் "கோட்பாடுகள்" என்று கூறுவோம். இவற்றில் இரண்டு வகைகள் இருக்கலாம். பார்த்த மாத்திரத்திலேயே இது உண்மைதான் என்று நிச்சயமாகத் தோன்றக்கூடிய கோட்பாடுகள் ஒருவகை; "சமமான இரண்டு பொருள்களிலிருந்து, சமமான பிரிவுகளை அகற்றிவிட்டால் எஞ்சி நிற்பவை ஒன்றுக்கொன்று சமம்" என்ற கோட்பாடு அந்த வகைக்கு ஓர் உதாரணம். இந்த மாதிரிக் கோட்பாடுகள் உண்மைதானென்று அவற்றிற்கு ஒரு எடுத்துக்காட்டைப் பார்த்த மாத்திரத்திலேயே புரிந்துவிடும். அவற்றை நிரூபிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவற்றிற்கு எதிர்மறை இருக்கும் என்று கருதக்கூட முடியாது. ஆனுல், மற்ருெரு வகைக் கோட்பாடுகள் வெறும் அபிப்பிராயங்களாகவே இருக்கலாம். பெரும்பாலும் அவை உண்மையாகவே தோன்றினுலும், அவற்றிற்கு எதிர்மறை இருக்கவே முடியாது என்று கூறுவதற்கில்லை. "அன்பே சிறந்தது" என்று பல அறிஞர்களும் சமயாசாரியர்களும் கூறிப்போந்தார். அநேகமாக அவற்றை நிராகரிப்பவர் கிடையாது. ஆனுல், "கொடுமைதான் சிறந்த பண்பு; வலிமையே மாட்சி" என்று அறிஞர் நீட்ஷே பிற்காலத்தில் கூறினுர். இத்தகைய கோட்பாடுகளை அரிஸ்டாடில் தர்க்க ஆய்வுக் கொள்கைகள் (dialecties) என்று அழைக்கிருர்.

இனி விவரமாகப் பார்ப்போம்.

தர்க்க-யூகக் கொள்கை (Syllogism)

தர்க்கவியலில் அரிஸ்டாடில் ஆற்றிய பெரும் பணி, தர்க்க-யூகக் கொள்கையை வகுத்துக் கொடுத்ததுதான்.

தர்க்கயூகக் கொள்கை என்பது என்ன? ஒரு உதாரணம் பார்க்கலாம். "மனிதர்கள் யாவரும் என்றேனும் இறந்துபட வேண்டும்."

"முருகன் என்பவன் ஒரு மனிதன்"—இந்த இரண்டும் கொடுக்கப்பட்டுள்ள உண்மைகள். இந்த இரண்டையும் இணைத்துப் பார்த்தால், "எனவே, முருகன் என்றேனும் இறந்துபடவேண்டும்" என்ற உண்மையை நாம் அவற்றிலிருந்து ஊகிக்க முடிகிறது. முதலிரண்டு கோட்பாடுகளும் உண்மையாக இருப்பதிலிருந்து, அவற்றிலிருந்து பிறந்த முடிவும் உண்மையாக இருக்கவேண்டுமென்று புலனுகிறது. இந்தத் தர்க்கயூகக் கொள்கையில் "எல்லா மனிதர்களும் என்றேனும் இறந்துபடவேண்டும்" என்பதற்கு "முதற்கோள்" என்று பெயர்; முருகன் ஒரு மனிதன் என்பது, இரண்டாம்கோள். "எனவே, முருகன் என்றேனும் இறந்து பட வேண்டும்" என்பது முடிவு. இந்தக் கொள்கையில் முக்கியமான அம்சம், முதற்கோள் இரண்டாம்கோள் ஆகிய இரண்டையும் சேர்த்து ஒன்றுகப் பரிசீலனை செய்ததன் விளைவாகவே "முடிவு" பிறக்கவேண்டும். மற்றும், "முடிவு" ஒரு பொதுப்படையான உண்மையாக இருக்காது. பொதுப்படை உண்மைகளிலிருந்து பிறக்கும் முடிவு குறிப்பிட்ட ஒரு பொருளைப்பற்றியதாகவே இருக்கும். கணித சாஸ்திரத்திலிருந்து ஒரு மேற்கோள் பார்ப்போம்.

"A யும் B யும் சமம்; A யும் C யும் சமம்; எனவே, B யும் C யும் சமம்" என்பது ஓர் ஆதாரத் - தேற்றம். முதல் இரண்டு கோட்பாடுகளிலும், "A" என்பது காணப்படுகிறது. அது பொது-உருபு. அதை நீக்கிவிட்டால் எஞ்சி நிற்பதே முடிவு,

அதே போலத்தான் இப்போது நாம் கண்ட, தர்க்கயூகக் கொள்கை உதாரணத்திலும். முதற் கோளிலும், அதற்கடுத்த படியிலும், "மனிதன்" என்ற சொல் பொதுவாக இருக்கிறது. அதை நீக்கிவிட்டுப் பார்த்தால் எஞ்சி நிற்பதே நமது முடிவு.

"சில கோட்பாடுகள் கொடுக்கப்பட்டிருப்பதாக வைத்துக்கொண்டு அவை உண்மையாக இருப்பதாலேயே, அவற்றிலிருந்து, குறிப்பிட்டதொரு முடிவு காண முடிவதாக இருந்தால், அந்தத் தர்க்கவாதத்துக்கே, தர்க்கயூகக் கொள்கை என்று பெயர்" (அரிஸ்டாடில்).

வாதம் புரிவதற்கும், சிந்தனைகளைச் சரிவர அமைத்துக் கொள்ளுவதற்கும் துணைசெய்யும் வகையில், பல்வேறு தர்க்க - யூகக் கொள்கைகளை வகுத்துவைப்பதே அரிஸ்டாடிலின் நோக்கம். விதிகளை வகுத்து வைத்துவிட்டால், பிறகு அவற்றைக்கொண்டு, சிந்தனைகளோ, வாதங்களோ, சரியானவையா, இல்லையா என்று தெரிந்து கொள்ளுவது சுலபம் அல்லவா?

தர்க்கயூகக் கொள்கைகளில் முக்கியமாக நான்கு விதங்கள் உண்டு. அவற்றில், "பார்பாரா" (Barbara) என்று அழைக்கப்படும் முதல் வகையைத்தான் சாதாரணமாக எல்லாரும் உதாரணத்துக்கு எடுத்துக்காட்டுவது வழக்கம். நாம் சற்று முன்பு பார்த்த உதாரணம் அந்த வகையைச் சேர்ந்ததுதான். இனி, இதர மூன்று வகைகளைப் பார்ப்போம்.

ஆடுகளுக்குப் பகுத்தறிவு கிடையாது—(முதற்கோள்).

வெள்ளாடுகளெல்லாம் ஆடுகளே—(இரண்டாம்கோள்).

எனவே, வெள்ளாடுகளுக்கெல்லாம் பகுத்தறிவு கிடையாது —(முடிவு)………(ii)

மனிதர்கள் அனைவருக்கும் பகுத்தறிவு உண்டு —(முதற்கோள்)
சில உயிரினங்கள் மனிதர்கள் எனப்படுகின்றன
(இரண்டாம்கோள்)

எனவே, சில உயிரினங்களுக்குப் பகுத்தறிவு உண்டு
(முடிவு)……(iii)

ஆங்கிலேயர்கள் ஒருவராவது கருநிறம் உடையவர்களில்லை…
(முதற்கோள்)
சில மனிதர்கள் ஆங்கிலேயர்கள் (இரண்டாம்கோள்)
எனவே சில மனிதர்கள் கருநிறம் கொண்டவர்களில்லை
(முடிவு)……(Iv)

இந்த நான்கு வகைகளையும் ஊன்றிப் பார்த்தால் ஒரு வித்தியாசம் புலப்படும். முதல்வகையின் முடிவு ஓர் உண்மையை எடுத்துக்காட்டுகிறது. ஒரு குறிப்பிட்ட பொருள் (அல்லது நபர்) ஒரு குறிப்பிட்ட தன்மையை உடையது (உடையவர்) என்று அது உணர்த்துகிறது. இரண்டாவது வகையைப் பார்ப்போம். ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த பொருள்களுக்கெல்லாம் ஒரு குறிப்பிட்ட பண்பு இல்லை என்ற எதிர்மறைப் பொருளை அதன் முடிவு குறியிடுகிறது. மூன்றுவது வகையின் முடிவு ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த சில பொருள்களுக்கு ஒரு குறிப்பிட்ட பண்பு உண்டு என்று உணர்த்துகிறது. கடைசி வகையின் முடிவு ஒரு குறிப்பிட்ட இனத்தைச் சேர்ந்த சில வற்றிற்கு, ஒரு குறிப்பிட்ட பண்பு இல்லை என்ற எதிர்மறைப் பொருளைக் கொண்டதாக இருக்கிறது.

இந்த நான்கு வகைகளும் ஒரு பிரிவுக்குள் அடங்கும் என்றார் அரிஸ்டாடில். அந்தப் பிரிவைப்போல மொத்தம் மூன்று பிரிவுகளை அவர் கண்டார். மேற்சொன்ன நான்கு வகைகளையும் "முதற் - பிரிவு (First figure) என்று அவர் அழைத்தார்.

முதற் பிரிவைச் சேர்ந்த தர்க்க - யூகக்கோட்பாடு ஒன்றை எடுத்துக் கொள்ளுவோம்.

"மனிதர்கள் பகுத்தறிவு உள்ளவர்கள்"—முதற்கோள்;
ராமன் ஒரு மனிதன்—இரண்டாம்கோள்;
எனவே, ராமனுக்குப் பகுத்தறிவு - உண்டு—இது முடிவு.

இந்த மூன்று வாக்கியங்களையும் பார்த்தால், மனிதன் என்ற சொல் முதலிரண்டு கோள்களில் மட்டும் இருப்பது புலப்படும். முடிவுக் கொள்கையில் அந்த உருபு இல்லை. முதலிரண்டு கோள்களிலிருந்தும் இந்த உருபை நீக்கியதாலேயே நமக்கு முடிவு கிடைக்கிறது. இதை 'நடு - உருபு" என்று அழைப்பார்கள். (Middle Term). இந்தக் கோட்பாடில், முதற் கோளில் நடு உருபு, எழுவாயாக அமைந்திருக்

கிறது.; அதே உருபு, இரண்டாம் கோளில், பயனிலையை அடுத்து வந்திருக்கிறது. இதுதான் முதற் பிரிவுக் கோட்பாட்டின் இலக்கணம்.

இரண்டாம் பிரிவுக் கோட்பாடுகளில் முதற்கோள் இரண்டாம் கோள் ஆகிய இரண்டிலுமே, நடு - உருபு பயனிலையை அடுத்து வரும். உதாரணம் :—

எல்லா மனிதர்களும் **இறக்கக் கூடியவர்கள்**-முதற்கோள்.
தேவதைகள் **இறக்கக் கூடியன** அல்ல—இரண்டாம்கோள்;
எனவே, எந்தத் தேவதையும் மனிதனல்ல—முடிவு.

மூன்றும் பிரிவுக் கோட்பாடுகளில், முதற்கோள், இரண்டாம் கோள் ஆகிய இரண்டிலுமே, நடு உருபு எழுவாயாக வரும். உதாரணம் :—

சில **மனிதர்கள்** நற்பண்பு மிக்கவர்கள் —முதற்கோள்.
எல்லா **மனிதர்களும்** இறந்துடவிடக் கூடியவர்கள்— இரண்டாம்கோள்.
எனவே இறந்துவிடக் கூடியவர்களில் சிலர் நற்பண்பு மிக்கவர்கள் —முடிவு.

மேற்கண்ட பிரிவுகளைத்தவிர, கோட்பாடுகளை, வேறு விதமாகவும் மூன்று வகைகளாகப் பகுக்கலாம். ஒன்று முதலிரண்டு கோள்களும். ஏதாவது ஒரு விஷயம் சாத்தியம் என்று கூறுவன; இரண்டாவது, ஒரு விஷயம் அதுதான் என்று உறுதியாகக் கூறுவன; மூன்றுவது. நடப்பில் நேரில் கண்டறிந்ததை "இது இப்படியிருக்கிறது" என்று மட்டும் எடுத்துக் கூறுவன.

வரையறைகள் (Definitions)

தமது அடுத்த நூலான Posterior Analytics என்பதில், அரிஸ்டாடில், தர்க்கக் கோட்பாடுகளின் முதற் கோள்களைத் தீர்மானிப்பது எப்படி என்ற பிரச்னையை ஆராய்கிறார்.

அரிஸ்டாடில், எந்த ஒரு பொருளுக்கும் வரையறை கூறுவது எப்படி என்று கூறுகிறார். "வரையறைகள்" (Definitions) என்ற அவரது சிறுநூல் தர்க்க வாதத்துக்கே உயிர்நாடி. ஏனெனில், விவாதத்திலோ, சிந்தனைப் போக்கிலோ ஏதாவதொரு சொல்லைப் பயன்படுத்து முன்பு, அது எதைக் குறிக்கிறது என்று திட்ட வட்டமாகச் சற்றேனும் ஐயத்துக்கு இடமின்றி அறிந்திருக்க வேண்டும். முதற் கோட்பாடுகளில் இவ்வாறு திட்டமாக வரையறை தெரிந்த சொற்களைப் பயன்படுத்தினுல் முடிவு தவருகப் போகவே போகாது. எனவே பொருள்களுக்கு வரையறை கூறவோ, காணவோ, அறிந்துகொள்ளுவது தர்க்க நூல் பயிலுவோனின் முதற்கடன். அதற்கு அரிஸ்டாடில் ஒரு பொது - வழி வகுத்துக் கொடுக்கிறார்.

ஒவ்வொரு வரையறைக்கும் இரண்டு பாகங்கள் உண்டு. ஏதாவது ஒரு பொருளுக்கு நாம் வரையறை கூற வேண்டுமானுல். முதன் முதலில், அந்தப் பொருள், அதேபோன்ற பொருள்களைக் கொண்ட பொதுப்

பண்டயான பெரும் பிரிவு ஒன்றைச் சேர்ந்தது என்று தெளிவு செய்து கொண்டு அந்தப் பிரிவின் பெயரைக் கூறவேண்டும். இதுதான் வரையறையின் பொதுப்படை - பாகம். அடுத்தது, சிறப்புப் பாகம். அதாவது, குறிப்பிட்ட பொருள், தனது பொதுப் பிரிவிலுள்ள இதர வகைகளிலிருந்து எந்த விதத்தில் வேறுபட்டிருக்கிறது என்பதை அது குறிப்பிடவேண்டும். உதாரணமாக மனிதன் என்ற சொல்லுக்கு வரையறை காண்போம். மனிதன், உலகில் உள்ள உயிரினங்களுள் ஒரு பிரிவு. இது, பொதுப்படையாகக் கூறுவது. பிற உயிரினங்களிலிருந்து மனிதன் வேறுபட்டுக் காண்பது எப்படி? அவனது பகுத்தறியும் திறனுல். எனவே, "பகுத்தறியும் திறனுள்ள உயிரினம்" என்பது மனிதனுக்கு வரையறை. வரையறையின் சிறப்புப் பகுதியைப்பற்றி அரிஸ்டாடில் கூறும்போது, அது, அந்தப் பொருளின் உயிர் நாடியாக உள்ள இயல்பை எடுத்துக் கூறுவதாக இருக்கவேண்டும் என்கிருர். "எந்தப் பொருளும், தனது அடையாளத்தை இழக்காமல் மாற்றிக்கொள்ள முடியாத இயல்புகளே. அத்தகைய இயல்புகள்; அவைதான் வரையறையில் முக்கியமாக இடம்பெறவேண்டும்' என்பது அவர் கூற்று. உதாரணமாக ராமன் என்ற மனிதனை எடுத்துக்கொள்ளலாம். அவ... சில சமயங்களில் மகிழ்ச்சியுடன் இருக்கலாம். வேறு சில சமயங்களில் கண்ணீர் பெருக்கலாம். சிலசமயம் இளைத்தும், சிலசமயம் பருத்தும் காணலாம். பணக்காரனுக இருக்கலாம். ஏழையாக மாறலாம். எப்படியாயினும் ராமன், ராமனே. எனவே, இவையெல்லாம், அவனுக்கு உயிர் நாடியாக உள்ள இயல்புகள் அல்ல. "ராமன்" என்ற தனது அடையாளத்தை இழக்காமலே, இத்தனை குண நலன்களும், இயல்புகளும் மாறிக்கொண்டே இருக்கலாம். எனவே, ராமனுக்கு வரையறை கூறும்போது அதன் சிறப்புப் பகுதியில் இவை ஒன்றுமே இடம்பெற முடியாது. ஆனல், ராமன் ஒரு மனிதன் என்ற இயல்பு என்றும் மாருதது. ராமன் அழிந்தாலன்றி அந்த இயல்பு மாருது; மாற்றவும் முடியாது. எனவே, ராமன் ஒரு மனிதன் என்பதே அவனுக்குக் கேந்திர - ஸ்தானமான இயல்பு. அதுவே, வரையறையில் இடம் பெறவேண்டும். இம்மாதிரி ஒவ்வொரு பொருளுக்கும் சொல்லிக்கொண்டே போகலாம்.

எந்தப் பொருளுக்கும் வரையறை தெரியாமல், அதைத் தர்க்க வாதத்திலோ, அறிவியற் கலை, தத்துவச் சிந்தனைகளிலோ பயன்படுத்தக் கூடாது என்பது அரிஸ்டாடிலின் தீர்ந்த முடிவு. வரையறை காண்பதற்கான விதியை அமைத்துக் கொடுத்த பிறகு அவர், முதற்கோள்களைக் காணும் விதம் என்ன? தர்க்க ரீதியான விஞ்ஞானக் கலையின் இயல்பு யாது? என்பவற்றைத் தமது "Posterior Analytics" என்ற நூலில் விளக்குகிருர்.

"Posterior Analytics"

அரிஸ்டாடில், அறிவியற் கலையை இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கிருர். ஒன்று, அறிவியற் கலைப் பரிசோதனைகளுக்கும் ஆரம்ப நிலையாக உள்ள ஆதார-முதற்கோள்களை உணர்ந்து கொள்ளுதல்; (உ - ம்) ஒன்றுக்கொன்று சமமாக உள்ள இரண்டு பொருள்களிலிருந்து, சமமான பொருள்களை எடுத்துவிட்டால், எஞ்சி நிற்பவை ஒன்றுக்கொன்று

சமம்.'' இரண்டாவது, அறிவியற் கலையில் பரிசோதனைகள் செய்து, உண்மையை நிலைநாட்டுவது.

எந்த ஒரு பொருளுக்கும் சில குண நலன்கள், சில இயல்புகள் உண்டு. ஆனால், உயர்நிலையாக உள்ள, கேந்திர-இயல்பு ஒன்றுதான் விசேஷமானது. அந்தப் பொருளின் வரையறையில் அதுதான் அங்கம் வகிக்கும். ''அந்தக் கேந்திர-இயல்புக்கும் பிற இயல்புகளுக்குமிடையே உள்ள வித்தியாசங்கள் இயற்கை-நியதியிலேயே வரையறுக்கப்பட்டிருக்கின்றன'' என்பது (Posterior Analytics)இல் காணும் முக்கியமான வாதம். இந்நிலையில், அரிஸ்டாடில் வரையறைகளைப் பற்றி மேலும் கூறுகிறார். வரையறை கூறுவதென்பது ஒரு வார்த்தைக்குப் பதிலாகப் பல வார்த்தைகளை ஒருசேரப் பிணைத்துக் கூறுவது மட்டும் அல்ல. உயிரற்ற உடலொன்றை நாம் கத்திகொண்டு கிழித்துப் போட்டால், கடைசியில் எலும்புக்கூடு எஞ்சி நிற்கும். அந்த உடலின் உருவம் பூராவும் அதன் அடிப்படையிலேயே உருவானது. அதேபோல எந்தப் பொருளையும்—அதன் இயல்புகள் முதலியவற்றை அலசி ஆராய்ந்து பார்த்தால் அதற்கு ஆதாரமாக உள்ள கேந்திர இயல்பு புலப்படும். அதுவே அதன் வரையறையின் முக்கிய அங்கம்.

இரண்டு தர்க்க வாதங்களில், அதிகப் பொதுப்படையான முதற்கோளிலிருந்து தொடங்கும் தர்க்கவாதமே சிறந்ததென்கிறார். ஒவ்வொரு விஞ்ஞானக் கலைப் பிரிவும், நிரூபிக்க முடியாத தர்க்கரீதியில் பகுத்துக் காணப்படாத, மனதால் உணர்ந்து அனுமானித்துக் கொள்ளவேண்டிய சில ஆதார முதற்கோள்களிலிருந்தே தொடங்க வேண்டுமென்றும் அவர் அறுதியிட்டுக் கூறுகிறார். கணித சாஸ்திரத்திலிருந்து மேற்கோள்கள் நிறையக் கூறுகிறார். உணர்வு-அறிதலிலிருந்து அறிவு பிறக்காது என்கிறார்.

பேச்சுக் கலை (Rhetoric)

பேச்சுக் கலை சம்பந்தமாக அரிஸ்டாடில் ஒரு பெரிய நூலே எழுதிவிட்டார். அவர் காலத்தில், பேச்சுக் கலை முக்கியமானதாகக் கருதப்பட்டு வந்தது. மேற்குடியைச் சேர்ந்த இளைஞர்கள் அனைவரும் திறம்படக் கூட்டங்களில் பேசவும் சொற்போர் புரியவும் வாதிட்டு வெல்லவும் கற்றுக்கொள்ள வேண்டுவது இன்றியமையாததாக இருந்தது. அரிஸ்டாடிலின் காலத்திலேயே புகழ்பெற்ற வாசாலகர் டெமாஸ்தனிஸ் தமது சொல் திறனால், ஏதென்ஸ் மக்களை அரசனுக்கெதிராக ஊக்கிக்கொண்டிருந்தார். எனவே சிந்தனைப் போக்குக்கேற்ற தர்க்க விதிகளை வகுத்த அரிஸ்டாடில், பேசி வாதத்தில் வெல்வதற்கான முறைகளையும் எடுத்துக்காட்ட முன்வந்தார்.

பேச்சுக்கலை பற்றிய தமது நூலில், கூட்டத்தில் பேசும் ஒருவன், கூட்டத்தினரின் உணர்ச்சிகளைத் தட்டி எழுப்புவது எப்படி என்பதையோ, அவன் எவ்வாறு தனது வாதங்களை அமைத்துக்கொள்ள வேண்டும் என்பதையோ அரிஸ்டாடில் கூற முற்படவில்லை. தனது வாதங்களை அவன் நிரூபிப்பது எப்படி? நம்பிக்கையூட்டத் தன் பக்கம் பிறர் கருத்துக்களைத் திருப்பும் வகையில் உதாரணங்களையும் நிகழ்ச்சிகளையும், வரலாற்று முறைகளையும் எவ்வாறு அமைத்துக்கொள்வது என்பதையே எடுத்துக்காட்ட விழைகிறார்.

அரசியலில், வாதங்களும், சொற்போர்களும் பெரும் பங்கு தாங்குகின்றன. ஒரு சட்ட முறையைச் சபையில் பிரேரேபணை செய்யும்போது, அது மக்களுக்கு எவ்வாறு நன்மை பயக்குமென்பதைக் கோர்வையாக, மக்கள் மனதில் பதியும் வண்ணம், அவர்கள் கருத்தைக் கவர்ந்து நம்பிக்கையூட்டும்படியாக எடுத்துச் சொல்லவேண்டும். எனவே, 'அரசியல் கலை' என்ற உயர்ந்ததொரு கலைப் பணியில், பேச்சுக் கலை ஒரு பகுதி. மற்றும், தர்க்கரீதியான கொள்கைகளையும், வாதங்களையும் பயன்படுத்துவதால் உண்மை எதுவென்று எடுத்துக்காட்டும் சாதனமாகவும் அது விளங்குகிறது.

இனி, பேச்சுக் கலையைப் பற்றிய நூலிலிருந்து, அரிஸ்டாடிலின் கருத்துக்களை நன்கு விளக்கும் ஒரு சில வாக்கியங்களைப் பார்ப்போம்:

"பேச்சுக் கலை என்பது, கேட்போரிடம் நம்பிக்கையைத் தோற்றுவிக்குமாறு செய்யும் திறமையே யாகும்."

"மூன்று வகையான பேச்சுக்கள் உண்டு; எடுத்துக்காட்டும் பேச்சு நீதி மன்றப் பேச்சு. பொருள் விளக்கும் பேச்சு; எடுத்துக் காட்டும் பேச்சு என்பது, ஒரு பொருளைப் பற்றியோ, மனிதரைப் பற்றியோ, புகழ்ந்தோ, இகழ்ந்தோ பேசுவது. நீதி மன்றப் பேச்சு குற்றம் சாட்டியோ அதற்கு எதிராகவோ பேசுவது; பொருள் விளக்கும் பேச்சு என்பது, சபை முன்பு, ஒரு குறிப்பிட்ட கொள்கையை எடுத்துக் காட்டுவது."

"மொத்தம் ஐந்துவிதமான நிருபணர்கள் உண்டு. சட்டங்கள், சாட்சிகள், சாட்சியங்கள், கேள்விகள் (அல்லது கொடுமைப்படுத்துதல்) பிரமாணம் செய்தல் ஆகியவை அவை. சட்டங்கள் என்றால், எழுதி வைக்கப்பட்ட சட்டத்தைத் தவிர நாட்டின் பழக்க வழக்கங்கள், என்றும் எங்கும் பொதுவாக இருக்கக்கூடிய இயற்கை விதிகள் ஆகியவற்றையும் குறிக்கும். கொடுமைப்படுத்துதலைப் பற்றி இரண்டு கருத்துக்கள் சொல்லலாம். அதுதான் உண்மையை வரவழைக்க வழி எனலாம்; அல்லது கொடுமையைப் பொறுக்கக்கூடியவன் உண்மையைச் சொல்லவே மாட்டான்; பொறுக்கமாட்டாதவன், அதற்காக, உண்மையல்லாதவற்றையும் உண்மையென்று (கொடுமை நின்றால் போதுமென்று) ஒப்புக்கொண்டுவிடுவான்.' என்றும் சொல்லலாம். கொடுமைப்படுத்துவது நமக்குச் சாதகமா, பாதகமா என்பதைப் பொறுத்திருக்கும் நமது வாதம்."

"ஒரு வாதத்தைப் பிறர் நம்புவதென்பது, அவனது பேச்சுத் திறனைத் தவிர அவனது அறிவுத் திறன், நேர்மை ஆகிய குண நலன்களையோ அவன்மீது அவர்களுக்கிருக்கும் நல்லெண்ணம், அன்பு, இவற்றையோ பொறுத்திருக்கிறது."

[எனவே, மனிதனின் உணர்ச்சிகளையும், பல்வேறு மக்களின் குண நலன்களையும் வாதம் புரிபவன் நன்கு ஆராய்ந்து தெரிந்து வைத்துக் கொள்வது அவசியமென்கிறார் அரிஸ்டாடில். இதையடுத்துப் பல்வேறு இயல்புகளையும், குணாதிசயங்களையும், பண்புகளையும் பற்றிச் சர்ச்சை செய்கிறார்.]

"இளைஞர்களின் குணாதிசயங்களைப் பார்க்கலாம்… அவர்களுக்குத் தீவிரமான விருப்பு வெறுப்புகள் உண்டு; தங்கள் விருப்பத்தை நிறை வேற்றிக்கொள்ள அவர்கள் துடியாக நிற்பார்கள்; விருப்பம் தீவிரம், ஆனால் திருப்தி சீக்கிரமே அடைந்துவிடுவார்கள்; கோபம் நிறைந்த வர்கள். செல்வத்தைவிடக் கௌரவத்திலும் வெற்றியிலுமே அதிக நாட்டம் உடையவர்கள்; நம்பிக்கை நிறைந்தவர்கள்; எளிதில் ஏமாற் றப்படக்கூடியவர்கள்; வீரம் செறிந்தவர்கள்; சங்கோசிகள்; எதிலும் தீவிரம் மிக்கவர்கள்; கேளிக்கைப் பிரியர்கள்…"

"வயது சென்ற முதியோர்களின் இயல்புகள் இவற்றிற்கு நேர் விரோதமானவை. அவர்கள் சந்தேகம் மிகுந்தவர்கள்; பேராசை கொண்டவர்கள் (ஏனெனில் ஒரு பொருளை இழப்பது எவ்வளவு சுலபம், பெறுவது எவ்வளவு கடினம் என்பதை அவர்கள் அனுபவத்தில் கண் டறிந்தவர்கள்); நம்பிக்கை குறைந்தவர்கள்; எதிர்கால நம்பிக்கையை விட கடந்த கால நிகழ்ச்சிகளின் நினைவே அவர்களுக்கு ஜீவாதாரம்; அதனால் அவர்கள் அவைகளைப்பற்றிப் பேசிக்கொண்டே இருப்பார்கள்; வலிமை குன்றியவர்கள்; கோப மிக்கவர்கள்; குறைகூறிக்கொண்டே இருப்பவர்கள்."

"நடுத்தர வயதுள்ளவர்களின் குண நலன்கள், இந்த இரண்டு வகைகளுக்கும் இடைப்பட்டதாக இருக்கும். அவர்கள் அதிகம் அஞ்சு வதுமில்லை; அதிகம் துணிவதுமில்லை. அவர்கள் எதையும் அதிகமாக நம்புவதும் இல்லை—பரிசீலனை செய்யாது தள்ளி விடுவதும் இல்லை; அவர்கள் வலிமை பொருந்தியவர்கள் ஆனால் மிதவாதிகள்; [உடலைப் பொறுத்த மட்டில் முப்பது முதல் முப்பத்தைந்து வயதுள்ளவர்கள் நடுத்தரத்தினர்; ஆனால் மனதைப் பொறுத்தமட்டில் நாற்பத்தொன் பது வயதுள்ளவர்களையே நடுத்தரத்தினரென்று கொள்கிறேன்."]

"செல்வந்தர்கள் கர்விகளாகவே பெரும்பாலும் இருப்பார்கள். அவர்கள் தமது செல்வத்தைப்பற்றிப் பெருமை பேசிய வண்ணம் இருப்பார்கள். கட்டளையிடவே தாம் பிறந்ததாக எண்ணுவார்கள். பிறரை வருத்தவேண்டும் என்ற எண்ணத்தைவிடப் பிறரை அவமானப் படுத்த வேண்டுமென்பதற்காகவே அவர்கள் பிறருக்கு ஊறு விளைப் பார்கள்."

"அந்தஸ்திலோ, அதிகாரத்திலோ இருப்பவர்கள், (அவை இல் லாது) வெறும் செல்வம் மட்டும் இருப்பவர்களைவிட மேம்பட்ட குணங் களைப் பெற்றிருப்பார்கள். செல்வந்தர்களைவிட அதிகாரத்திலிருப்பவர் களுக்குக் கௌரவ-உணர்ச்சி, உழைப்பு இவை அதிகம்…ஏழைகள், அதிகாரமற்றவர்கள் இவர்களின் இயல்புகள், மேற் சொன்னவை களுக்கு நேர் எதிர்ப்பட்டவை."

[இந்தக் குணநலன்களையெல்லாம், வாதம்புரிபவனோ, பேச்சாளனோ நன்கு தெரிந்துகொண்டு இருப்பது, தனது கருத்துக்களைப் பிறர் நம்ப வைப்பதற்குப் பெரிதும் உதவியாக இருக்கும் என்பது அரிஸ்டாடி லின் கொள்கை. இதற்குப் பிறகு, கருத்தைக் கவரும் வண்ணம் அழ குறப் பேசுவது எப்படி என்பதற்கான நடைமுறை விதிகளை விரிவாக எடுத்துக் கூறுகிறார்.]

“பேச்சாளர்கள் பயன்படுத்தும் சொற்கள் மிகச் சாதாரண மானவையாகவும் இருக்கக்கூடாது; மிகப் பிரமாதமானவையாகவும் இருத்தலாகாது…பிறமொழிகளிலிருந்து எடுத்த வார்த்தைகளையோ, புதிதாக உருவாக்கப்பட்ட சொற்களையோ பயன்படுத்தக் கூடாது. உவமைகளை அதிகமாகக் கையாளவேண்டும். ஏனெனில் உவமைகளில் தான் தெளிவும் புதுமையும் இனிமையும் இருக்கின்றன…உவமை யாகக் கூறப்படுவன எளிதில் காணமுடியாதவையாகவோ, உணர முடியாதவையாகவோ இருத்தல்கூடாது. உயர்ந்த, அழகிய பொருள் களை உவமையாகக் கூறுதல் நல்லது.”

“சங்கிலித் தொடர்போல் சேர்க்கப்பட்ட சொற்றொடர்கள், பிறமொழிச் சொற்களை இடை இடையே பயன்படுத்துதல், நீண்ட அடிக்கடி கூறப்படும் எடுத்துக்காட்டுகளைப் பயன்படுத்துவது, எளிதில் விளங்காத அல்லது அருசியான உவமைகளை எடுத்தாள்வது ஆகிய நான்கு காரணங்களால் ஒரு பேச்சு சாரமில்லாது போகும்.”

“தவிர, பேசும் மொழியைத் தூயதாகக் கையாளவேண்டும் [இலக்கண விதிகளிலிருந்து வழுவுதல் கூடாது]. சரியான சொற்[illegible] களைப் பிரயோகித்தல், நீண்ட, சுற்றி வளைக்கும் வாக்கியங்களை அல்லா மல் தக்க வார்த்தைகளைப் பயன்படுத்தல், ஆகியவை மிக முக்கியம்.”

“பேச்சுக்களோ, விவாதச் சொற்பொழிவுகளோ, கண்ணியமாக இருக்கவேண்டுமானால், நான்கு வழிகளைக் கையாளவேண்டும். ஒன்று, உணர்ச்சியோடு பேசவேண்டும்; இரண்டாவது, பேசுபவன், தனது தகுதிக்கேற்பப் பேசவேண்டும்; மூன்றாவது, பேசும் விஷயத்துக்கேற்ப உயர்ந்த நடையிலோ சாதாரண நடையிலோ பேசவேண்டும்; நான்கா வது, வழக்கில் இல்லாத அல்லது வேண்டுமென்றே சேர்க்கப்பட்ட வார்த்தைகளைக் கையாளக் கூடாது. [மிக்க உணர்ச்சி வசப்பட்டோ, கிண்டலாகவோ பேசும்போது இதற்கு விதிவிலக்கு உண்டு].”

பேச்சுக் கலையைப்பற்றி அதில் அவர் கூறியுள்ள விதிகளைவிட, மனித இயல்புகளை எடுத்துக்காட்டி யிருப்பதே சிறந்து விளங்குகிறது. அதற் காகவாவது அந்நூலைப் படிக்கவேண்டும்.

பாகம் ஆறு: **கலை இயல்**

“எழிலே உண்மை; உண்மையே எழில்”

—கவி கீட்ஸ்

[கலை வளர்ச்சிக்கும், இலக்கிய வளர்ச்சிக்கும் முன்னோடியாக நின்றவர்கள், ஹீப்ரு நாட்டினரும், கிரேக்கர்களுமாவர். அவர்களது கலைகளும் இலக்கியமும் கதை வடிவமாகவே இருந்தன. ஆனால், அவர்களுக்கு இலக்கிய-விமர்சனம்-திறன் ஆய்வு-என்பது என்ன என்றே தெரியாது. மற்றெல்லாத் துறைகளையும் போல, இதிலும் வழிகாட்டும் விளக்குத் தாங்கி நின்றவர் அரிஸ்டாடில்தான். “என்ன சொல்வது என்று, தெரிந்தால்மட்டும் போதாது; அதைச் சரியாகச் சொல்லத் தெரியவேண்டுவது அவசியம்” என்றார் அவர்.

"அரிஸ்டாடில் எழுதிய Politics எனும் நூல் கலை விமர்சனத் துறைக்கு ஒரு பாடப் புத்தகம்போல விளங்குகிறது. கலை என்பது என்ன? கவிதைகள் நாடகங்கள் ஆகியவற்றின் இலக்கணம் யாது? மக்கள் உணர்ச்சியை அவை எவ்வாறு பாதிக்கும்? பொது அரசியலில் அவை தாங்கும் பங்கு என்ன? என்பவற்றையெல்லாம் அந் நூலில் அவர் விரித் துரைக்கிறார்.]

மனிதனுக்கு இயல்பாகவே ஆக்கும் திறன் இருக்கிறது. அதை உணர்ச்சி வாயிலாக வெளிப்படுத்த வேண்டுமென்று அவன் விழைகிறான். அதிலிருந்து தோன்றுவதுதான் எந்தக் கலையின் ஆக்க மும். உலக நடப்பை நிதர்சனமாகத் தென்படுபவைகளைப் பிரதிபலிப் பதே கலையின் வடிவம். இவ்வாறு இயற்கை நடப்புகளின் கண்ணாடிப் பிரதிபிம்பம்போல செய்வது மனிதனுக்கு மகிழ்ச்சி யூட்டுகிறது. [சில நாட்களுக்கு முன்பு ராஜாஜி அவர்கள் சிறுகதை பிறந்தது எப்படி என்பது குறித்து வானொலியில் உரை நிகழ்த்தினார்கள். சிறு குழந்தை முதல் மனிதன் கனவு காண்கிறான். இயற்கையில் நடக்கும் பல சம்பவங்களின் ஒரு-மாதிரிப் பிரதிபலிப்புதான் கனவு. கனவு காண்பதற்கோ காணவேண்டுமென்றோ ஒருவரும் குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பதில்லை. எனவே இயற்கை-ரீதியில் நிகழ்வது அந்தப் பிரதி பலிப்பு. அதுதான் கதைகளைச் சமைப்பதற்குத் தோற்றுவாய். இவ்வாறு அவர்கள் கூறினார்கள். இந்தக் கருத்தை இங்கு ஒப்புநோக்குக.] கலைகள் இயற்கைச் சம்பவங்கள், பொருள்களின் பிரதிபலிப்புத்தான் என்றாலும் அவை அவற்றின் வெளித்தோற்றத்தை மட்டும் பிரதிபலித் துப் பயனில்லை. அவற்றின் உட்கருத்தை அவை வெளிப்படுத்தவேண் டும். அதுதான் உண்மையான கலை. ஒரு கலை உண்மையாக உயர்ந்த தாக இருந்தால் அது உணர்ச்சிகளுக்கும் புலன்களுக்கும் இன்பமளிப்ப தோடு அறிவுக்கும் விருந்தாக இருக்கவேண்டும். இது அறிவுக்கு இன்பம். இது தான் மகிழ்ச்சிகளுக்குள் தலைசிறந்தது. கலைச் சமைப்பு ஒவ்வொன்றிலும் ஒருமைப்பாடு இருக்கவேண்டும். அதற்கு ஒருமித்த தொரு வடிவம் இருக்கவேண்டும். உதாரணமாக நாடகமொன்றில், குழப்பமூட்டும் வகையில் உப காட்சிகள் இருக்கக்கூடாது. இவை எல்லாவற்றிற்கும் மேலாகக்கலை மனிதனைத் தூய்மைப்படுத்தவேண்டும். மனிதர்களிடம் சில விரும்பத்தகாத உணர்ச்சிகள் இருந்து, வளர்ந்து வரலாம். சமூகக் கட்டுப்பாட்டினால், அவர்கள் அந்த உணர்ச்சிகளுக்கு வடிவம் கொடுத்துச் செயலாற்ற முடியாமல் வாளாவிருக்கலாம். ஆனால் திடீரென்று ஏதாவது தூண்டுதலின்பேரில் அவை வெளிப்பட்டு சமூக விரோதமான நடவடிக்கைகளுக்கு இடமளிக்க ஏது இருக்கிறது. பற் பல குற்றங்களைப் பண்புள்ள மனிதர்களும் சில சமயங்களில் செய்து விடுவது இதனால்தான். இத்தகைய உணர்ச்சிகளைக் கவிதை நாடகம் போன்ற கலைக் கேளிக்கைகள் நீக்கிவிட வழி செய்யவேண்டும். வைத் தியர்கள், உடலில் சேரும் அழுக்குகளை வெளிப்படுத்தச் சிகிச்சை செய்வதுபோலக் கவிஞர்களும் நாடக ஆசிரியர்களும் வேண்டத்தகாத உணர்ச்சிகளை மக்கள் மனதிலிருந்து களைந்துவிட வழி செய்யவேண்டும்.

i) கவிதையும், அதைச்சார்ந்த கலைகளும்—பொதுவிளக்கம் :

"கவிதை, துன்பியல் நாடகம், இன்பியல் நாடகம், இன்னிசை, இவைகளெல்லாம் இயற்கையின் பிரதிபலிப்புகளாகும். முறைகள்,

இலட்சியங்கள், வடிவம் ஆகிய மூன்றிலும்தான் இவை ஒன்றுக் கொன்று வேறுபடுகின்றன.''

இயற்கை நடப்புகளையும், சம்பவங்களையும் பிரதிபலிப்பதற்கு, வெவ்வேறு கலைகளும், வெவ்வேறு முறைகளைக் கையாளுகின்றன. வர்ணம் வடிவம் இசை இனிமை குரல் வார்த்தைகள், ஆகியவற்றால் அந்தப் பிரதிபலிப்பு உண்டாக்கப்படுகிறது.

இலட்சியங்களில் உள்ள வேறுபாடுகளைப் பார்க்கலாம். அதாவது, பிரதிபலிப்பதற்குக் கலைகள் எடுத்துக் கொள்ளும் மூலப்பொருள்களில் வித்தியாசம். சாதாரணமாக மனித வாழ்க்கையின் பல்வேறு நடப்புகளே மூலப்பொருள்களாக எடுத்துக் கொள்ளப்படுகின்றன. எனவே மூன்று விதங்களாக இவற்றை நாம் கையாள முடியும். மனிதனையும் அவனது குணநலன்களையும் இயல்புகளையும், உள்ளது உள்ளவாறே எடுத்துக் காட்டலாம். அல்லது, உண்மையாக இருப்பதைவிட மோசமாக எடுத்துக்காட்டலாம். இல்லாவிட்டால் இருப்பதைவிட உயர்ந்ததாகக் காட்டலாம். துன்பியல் நாடகத்துக்கும்*, இன்பியல் நாடகத்துக்கும் இதுதான் முக்கியமான வித்தியாசம். மனித இயல்புகளை நேரில் காண்பதைவிட உயர்ந்ததாக எடுக்காட்டுவது துன்பியல் நாடகத்தின் குறிக்கோள். இன்பியல் நாடகம்-அதாவது இந்த இடத்தில், பொதுவாக நகைச்சுவை உள்ள கதைகள் என்றே கொள்ளலாம்—மனித இயல்புகளை, இருப்பதைவிட மோசமாக எடுத்துக்காட்டுகிறது. [உதாரணத்துக்குப் பிரசித்திபெற்ற அமெரிக்க ஹாஸ்ய எழுத்தாளர் மார்க் ட்வெய்னின் (Mark Twain) மேற்கோள் ஒன்றைக் கூறுகிறேன். ''பசியால் வாடும் நாய் ஒன்றை நாம் உணவூட்டி நல்ல நிலையில் இருத்தினால் அது நம்மைக் கடிக்காது. அதுதான் மனிதனுக்கும் நாய்க்கும் உள்ள வித்தியாசம்!'']

மூன்றாவதாக, வடிவத்திலுள்ள வேறுபாடு, ஒரே விஷயத்தைப் பற்றி ஒரே இலட்சியத்தோடு கலை வடிவம் அமைப்பதிலும் வடிவ வேறுபாடு உண்டு. கவிஞன் ஒருவன், யாரோ சம்பந்தமில்லாத மூன்றாம் மனிதன் கதை சொல்வதுபோல எழுதலாம். நாடக ஆசிரியர், பல்வேறு பாத்திரங்களைச் சமைத்து அதே விஷயத்தை நாடக வாயிலாகத் தெரிவிக்கலாம். கதாசிரியர், தனக்கே அச் சம்பவம் நடந்தது போலவும் வரையலாம்.

கவிதை பிறந்த விதமென்ன என்று இப்போது பார்க்கலாம். ''பிறரைப்போலத்தானும் செய்வது'' என்பது சிறுவயதிலேயே மனிதனுள் ஊறிக் கிடக்கும் இயல்பு. பெரியவர்களோ, அல்லது பிற குழந்தைகளோ, அல்லது வேறு விலங்கினங்களோ செய்வது போலச் செய்து காட்டுவதில் சிறு குழந்தை அளவிறந்த மகிழ்ச்சி அடைகிறது. அதே மகிழ்ச்சி மனித வாழ்வு பூராவும் நீடித்திருக்கிறது. அழகியதொரு இயற்கைக் காட்சியொன்றைப் படமாக வரைந்து விட்டுக் கலைஞன் மகிழ்வதும் அதனால்தான்; அதைப்பார்த்து நாம்

* கிரேக்கநாட்டில், இயல், இசை, நாடகம் என்ற மூன்று அங்கங்களில் நாடக்கலையே பெரிதும் வழக்கத்திலிருந்ததால், கலையின் முக்கிய பகுதியாக நாடகமே கொள்ளப்படுகிறது. நாடகங்களும், கவிதை வடிவில்தான் இருக்கும்.

இன்புறுவதும் அதனுல்தான். இவ்வாறு பிரதிபிம்பத்தில் ஆசை கொள்ளுவதுதான் கவிதையின் தோற்றுவாய். ஏனெனில் "கவிதை என்பது இலட்சியப் பொருள்களின் பிரதிபலிப்புதான்" (அரிஸ்டாடில்) மற்றும், அளவொத்த ஓசையில் மனிதனுக்கு என்றும் விருப்பம் உண்டு. இதுவும், ஒத்த ஓசையுள்ள கவிதைகள் பிறப்பதற்குத் துணை நிற்கின்றன. கவிதை இலக்கணம் தெரியாதவன்கூட, ஓசை சரியாக இல்லாத பாடலைப் படிக்கும்போது முகஞ் சுளிப்பான். தாள அறிவு இல்லாதவன்கூட, சங்கீத வித்துவான் தாளம் தவறிப் பாடினுல் எங்கோ, ஏதோ தவறு இருப்பதை உணர்வான். எனவே, ஒன்றைப்போல நாமும் செய்ய வேண்டும் என்ற ஆர்வம், அளவொத்த ஓசையில் ஆசை, ஆகிய இரண்டும்தான் கவிதையின் பெற்றேர் என்பது அரிஸ்டாடிலின் கொள்கை. இலட்சியப் பொருள்களின் பிரதிபலிப்பே, கவிதையின் இயல்பு. இன்பம் பயப்பதே அதன் பயன்.

ii) துன்பியல் நாடகம்:

துன்பியல் நாடக மென்பது, மனித இயல்புகளை, உள்ளதைவிட உயர்த்தி மிகைபடுத்தி எடுத்துக் காட்டுவதென்று சொன்னேம். அது ஓர் பொதுப்படையான, வரையறை. மேலும் விரிவாகச் சொல்லப்போனுல், முக்கியமான, பூரணமானதொரு சம்பவத்தை— அல்லது வாழ்க்கைப் பிரிவை— பல முறைகளாலும், இன்பூட்டக் கூடிய மொழியில் பிரதிபலிப்பதே துன்பியல் நாடகம். இரக்கம், அச்சம் என்ற இரு உணர்ச்சி—வாயில்களாலும், மக்களிடமுள்ள விரும்பத்தகாத உணர்ச்சிகளைக் களைவதே அதன் குறிக்கோள்.

துன்பியல் நாடகங்களுக்கு ஆறு அங்கங்கள் உண்டு; கதை, அமைப்பு முறை, உணர்ச்சிகள், உணர்ச்சிகளை வெளிப்படுத்தும் வார்த்தைகள், இசை, அழகுறச் செய்யும் அணி ஆகியவை அவை.

இவற்றில் முதற்கண் கூறப்பட்ட கதைதான் நாடகத்தின் ஜீவநாடி. சம்பவங்களை இணைத்துக்கூறும் கதை இல்லாமல், துன்பியல் நாடகம் இயற்றவே முடியாது என்பது வெளிப்படை. கதையைப்பற்றி அரிஸ்டாடில் கூறும்போது, ஒன்றிய தொடர்பு இல்லாத நிகழ்ச்சிகளை இடையில் திணிக்கக்கூடாது என்று வன்மையாகக் கூறுகிருர். கதாநாயகன் என்று எடுத்துக்கொண்டால், அவனைப்பற்றி, ஒன்றுக்கொன்று தொடர்பும், இசைவும் உள்ள நிகழ்ச்சிகளை மட்டுமே ஒரு கதையில் கூறலாம் என்று அவர் இலக்கணம் கூறுகிருர். [பிற்கால இலக்கிய விமர்சகர்கள் சிறு கதைக்குக் கூறிவைத்த இலக்கணம், இதே நடையிலிருப்பது குறிப்பிடத்தக்கது.] துன்பியல் நாடகத்துக்கான ஆதாரக்கதையைப் புனையும் போது, துன்பியல் நாடகத்தின் இலட்சியத்தை மனதில் கொள்ள வேண்டும். நாடகம், மக்கள் மனதில் இரக்கம், அச்சம் ஆகிய இரு உணர்ச்சி களையும் ஊட்ட வேண்டுமென்பதே குறிக்கோள். எதிர் பாராத நிகழ்ச்சிகள் விரவிவரும் கதைகள், இந்த இலட்சியத்தைஈடேற்றுவதற்கு வழி செய்யும். ஆனுல், வெறும் சந்தர்ப்பத்தால் மட்டும் அந்த நிகழ்ச்சிகள் நிகழ்வதாகத் தோன்றக்கூடாது. அது மிகவும் முக்கியம்.

எதிர்பாராது நிகழ்ந்ததாயினும் அதில் ஏதோ முன்-தொடர்பும், நீதியும் ஒருமைப்பாடும் இருப்பதாகக் காணப்படவேண்டும். அரிஸ்டாடில் ஓர் உதாரணம் தருகிருர். ஓர் நாடகத்தில் மன்னன் ஒருவனைச் சூழ்ச்சியாளன் கொன்றுவிடுகிருன். பிறகு முதலைக் கண்ணீர் வடித்து, இறந்த மன்னனுக்கும் சிலை ஒன்று வைக்கிருன். அதை அவன் மேற்பார்வையிடும்போது சிலை அவன் மேல் வீழ்ந்து, அவன் இறக்கிருன். இம்மாதிரி நிகழ்ச்சிகள் துன்பியல் நாடகத்தின் குறிக்கோள் ஈடேறப் பெரிதும் வகை செய்யும் என்பது அரிஸ்டாடில் கருத்து.

(நாடகக்) கதைகள் இரண்டு வகைப்படும்—எளிதானவை; சிக்கலானவை. நிகழ்ச்சித்திருப்பமோ புதிய விஷயங்கள் திடீரென்று கண்டு பிடிக்கப்படுவதோ இல்லாமலிருக்கும் கதைகள் 'எளிதானவை' இவற்றில் ஏதாவது ஒன்று இருந்தாலும் கதை சிக்கலானது, நிகழ்ச்சித் திருப்பம் என்பது, கதாபாத்திரம் ஏதாவது ஒரு குறிப்பிட்ட நோக்கத்தை மனதில் கொண்டு ஒரு செயலைச் செய்யப்போக, அதற்கு நேர்மாறுன விளைவு எதிர்பாராத விதமாக உண்டாகிவிடுவதே யாகும். [இராமாயண கதையில் பரதனுக்கு மகிழ்ச்சி பிறக்கும் என்று கருதிய கைகேயி அடாத செயல் செய்து அவனுக்கு அவமானம் வாங்கிவைக்கிருள், நடந்ததோ நேர்மாறுன நிகழ்ச்சி. மற்றும் சில நாடகங்களில் புதிய விஷயங்கள் திடீரென்று கண்டுபிடிக்கப்பட்டு நாடகப் போக்கை மாற்றிவிடும். சிலப்பதிகாரத்தில் கோவலன் கள்வனல்லன் என்ற விஷயம் கண்டுபிடிக்கப்படுவது தக்கதோர் எடுத்துக்காட்டு.] ஒரு நிகழ்ச்சித் திருப்பத்தை அடுத்து, உடனடியாகப் புதிய விஷயம் கண்டுபிடிக்கப்பட்டு நாடகப் போக்கு மாறுவது சிறந்தது என்கிருர் அரிஸ்டாடில்.

ஒரு துன்பியல் நாடகத்தில் தீய பண்புள்ள ஒருவன் எளிய நிலையிலிருந்து செல்வத்திலோ அந்தஸ்திலோ உயர்ந்து கொண்டே செல்வதாகக் காட்டக்கூடாது. இது, தார்மீகக் கொள்கைக்கு உகந்ததல்ல. நாடகம் படிப்பவர்களுக்கோ, காண்பவர்களுக்கோ, இதனுல் அச்சமோ இரக்கமோ உண்டாகாது. அதற்காக மிக்க தீய பண்புள்ள ஒருவன், நல்ல நிலையிலிருந்து ஒரேயடியாகச் சரிந்து விழுவதையும் காட்டக்கூடாது. இது தார்மீகக் கொள்கைக்கு ஏற்றதாக இருந்தாலும், மக்களிடத்து அச்சத்தையோ, இரக்கத்தையோ உண்டாக்காது. ஏனெனில் தகாத முறையில் ஒருவனுக்குக் கஷ்டம் வந்தால்தான் நாம் இரக்கப்படுவோம். தீயவன் இழிந்தால் இரக்கம் ஏற்படாது. மற்றும் ஏறக்குறைய நம்மைப் போன்றிருப்பவர்களுடைய இன்னல்கள்தாம் நமக்கு அச்சத்தையூட்டும். மிகத் தீயவன் ஒருவன் அழிவதை நாம் கண்டால், அத்தகைய அச்சம் இயல்பாக நமக்கு ஏற்படாது. எனவே, துன்பியல் நாடகத்தில் மிக உயர்ந்த மனிதனுக்கோ, மிக இழிந்த மனிதனுக்கோ, கதாநாயகனுவதற்குத் தகுதி கிடையாது. நன்மையும் தீமையும் விரவிய பண்புள்ளவனே தேவை. அவன் இன்னலுற நேர்ந்தால், ஏதோ சபலத்துக்கும் சூழ்நிலைக்கும் உட்பட்டு, நெறிதவறியதன் விளைவாக அது ஏற்படுவதாகவே நாடகத்தில் காண்பிக்கப்பட வேண்டும்.

அச்சத்தையும் இரக்கத்தையும் உண்டாக்கக்கூடிய நிகழ்ச்சிகள் என்னென்ன வகைகள் என்று பொதுப்படையாகப் பார்க்கலாம். உலகில் சாதாரணமான நியதிப்படி அல்லாத நிகழ்ச்சிகளே அச்சத்தை உண்டாக்கக்கூடியவை. உதாரணமாக, விரோதிகள் ஒருவரையொருவர் கொல்ல யத்தனம் செய்தாலோ, கெடுக்க முற்பட்டாலோ அதில் வியப்பொன்றுமில்லை. எனவே அச்சம் விளையாது. நண்பன், நண்பனைக் கெடுக்க முயற்ருல், அண்ணன் தம்பிக்கு விரோதமாக ஏதாவது செய்தால், அது தான் அச்சத்துக்கு அடிகோலும். இரக்கமும் பிறக்கச் செய்யும். இந்த மாதிரி நிகழ்ச்சிகளில் மூன்று விதங்கள் உண்டு. முதலாவதாகத் தெரிந்து கொண்டே, வேண்டுமென்றே நண்பன் நண்பனைக் கெடுக்க முற்பட்டு வெற்றியும் பெறலாம். அல்லது, தான் கெடுக்கவிருப்பவன் யார் என்று தெரியாமல் அவனுக்கு ஊறு விளைத்துவிட்டுப் பிறகு உண்மை தெரியுமாறு செய்யலாம். இல்லாவிட்டால், அறியாமையினுல் இத்தகைய நிகழ்ச்சியொன்று நடக்கவிருக்கையில், நல்ல தருணத்தில் உண்மை தெரிந்து அந்த நிகழ்ச்சியே தடுக்கப்பட்டுவிடலாம். இந்த மூன்று முறைகளில், கடைசி முறையைக் கையாளுவதே உத்தமம் என்கிருர் அரிஸ்டாடில்.

எப்படியிருந்த போதிலும், நாடக ஆசிரியர், கதையை வகுத்துக் கொண்டு, நாடக வடிவில் அதை எழுதுமுன், தன்னையே ஓர் வாசகனுகவோ நாடகம் பார்ப்பவராகவோ, பாவித்துக் கொள்ள வேண்டும். பல குற்றங்குறைகளை இதனுல் தவிர்க்கலாம் என்கிருர் அரிஸ்டாடில். மற்றும், நாடகத்துக்குக் கவிதை புனையும்போது, ஆசிரியர், தன்னையே நடிகராகப் பாவித்துக் கொள்ளவேண்டும். அப்போது நாடகக் கவிதைகள் இயற்கையாக அமையும். உயர்வு நவிற்சியோ, குறைபடக் கூறலோ இருக்காது.

அடுத்ததாக நாடகத்தின் அமைப்பு முறையை எடுத்துக் கொள்ளலாம். அரிஸ்டாடில் நான்கு அமைப்புகளைக் கூறுகிருர். ஒன்று, சிக்கல் நிறைந்த நாடகம். நாடகத்தின் விளைவு முழுதும், நிகழ்ச்சித் திருப்பங்களையும், புதிய விஷயங்கள் கண்டுபிடிக்கப்படுவதையும் அவற்றின் இடத்தையும் பொறுத்திருக்கிறது. இரண்டாவது வகை, கோர-நிகழ்ச்சிகளும், துன்ப-சம்பவங்களும் அதிகமாக மிஞ்சிக் கிடக்கும் நாடகங்கள். ஒருவன் துன்புறுவதாகக் காட்டும்போது, கொடிய நோயினுல் அவன் வருந்துவதைக் காட்டுவது; கொலைகள் மலிந்திருக்கச் செய்வது முதலியன இந்த அமைப்பில் சேர்ந்தவை. மூன்ருவது வகை, நீதி புகட்டும் விதத்தில் கதையையும், சம்பவங்களையும் அமைப்பது. வேறெதையும்விட நீதிபுகட்டும் அம்சத்துக்கே முதன்மை அளிக்கப்படவேண்டும், இந்த வகை நாடகத்தில். கடைசியாக, எளிதாக அமைந்த, சிக்கலற்ற துன்பியல் நாடகங்கள்.

அடுத்தபடி, உணர்ச்சிகளும், உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் மொழிகளும். உணர்ச்சிகளைப் புலப்படுத்தும் மொழிகளில், அதற்கென்று தனியாக நடிகர் சிரமம் எடுத்துக்கொள்ளாத வகையில் அந்தந்த உணர்ச்சிகள் தாமே புலப்படவேண்டும். புலியின் படம் வரைந்துவிட்டு, "இது ஒரு புலி" என்று எழுதித் தெரிவிக்கத்

தேவையில்லாத படத்தைத்தானே நாம் ஓவியம் என்று ஏற்றுக் கொள்ளுவோம்?

இசையைப்பற்றியும், அழகு செய்யும் அணியைப் பற்றியும் அரிஸ்டாடில் ஒன்றும் குறிப்பிடவில்லை. அவை நடிக கோஷ்டியின் பொறுப்பிலிருப்பவை. நாடகக் கவிஞன் அது குறித்துக் கவலைப்பட வேண்டாம், என்கிறார் அவர்.

iii) நீண்ட கவிதை—நூல்கள்

நீண்ட கவிதை நூல்களில் நாடக அமைப்பு இருக்க வேண்டும். மற்றும் துன்பியல் நாடகத்துக்கான அம்சங்களை அதுவும் பெற்றிருக்க வேண்டும்—இசையையும், நாடக ஜோடனை அணியையும் தவிர நீண்ட கவிதை நூல்கள் எளிய கதைகளாக இருக்கலாம்; நிகழ்ச்சித்திருப்பங்களுடன் சிக்கலானவையாகவும் இருக்கலாம்: நீதி புகட்டக் கூடியவையாகவும் இருக்கலாம்; வேகமும் வன்மையும் பொருந்திய நிகழ்ச்சிகளையே மிகைபடுத்திச் சித்தரிப்பவைகளாகவும் இருக்கலாம்.

துன்பியல் நாடகத்துக்கும், நீண்ட கவிதை நூலுக்குமுள்ள வேற்றுமைகள் என்ன? துன்பியல் நாடகத்தில், ஒரே சமயத்தில் நிகழும் பல சம்பவங்களை ஒரே சமயத்தில் எடுத்துக்காட்ட முடியாது. எடுத்துக் காட்டினால் குழப்பமின்றித் தெளிவாக அவற்றை மேடையில் நடித்துக் காட்ட இயலாது. ஆனால், கவிதை நூல் அப்படியல்ல. கவிஞன் தனது திறமையால், ஒரே சமயத்தில் நிகழும் நிகழ்ச்சிகளைத் திறம்பட வர்ணித்துக் கூற இடமிருக்கிறது. கவிதை நூல் படித்து இன்புறுவதற்கானதே தவிர, நடிப்பதற்கானதல்ல. கவிதை நூல் சிறப்பாக இருக்க வேண்டுமானால் கவிஞன் தனது வாய்மொழியாக அதில் அதிகம் கூறக்கூடாது. பாத்திரங்களைச் சிருஷ்டித்து, அவர்களின் வாய்மொழியாகவே தனது கருத்துக்களை நிகழ்ச்சித் தொடர்போடு ஒன்றிய வண்ணம் இருக்குமாறு கவிஞன் கவிதை புனைய வேண்டும். இந்த இடத்தில் கவி ஹோமருக்கு அரிஸ்டாடில் மகிழ்ந்து புகழ்மாலை சூட்டுகிறார்.

துன்பியல் நாடகத்தில், வியப்பூட்டக் கூடிய எதிர்பாராத சம்பவங்கள் தேவை. கவிதை நூல் இதற்கு ஒரு படி அப்பால் செல்லலாம். நம்பக் கூடாத, நடந்திருக்க முடியாத நிகழ்ச்சிகளையும் அது புனைந்து கூறலாம். அவை நாடக மேடையில் அசம்பாவிதமாகத் தோன்றுமே யன்றிக் கவிதையில் படிக்கும்போது அவ்விதம் தோன்றாது.

அடுத்த படியாக, நாடகம், கவிதை நூல் ஆகிய இரண்டில் எது சிறந்தது என்று அரிஸ்டாடில் ஆராயப் புகுகிறார்.

கவிதை நூலை அனைவரும் படித்து, அதன் சிறப்பை உணர்ந்து இன்புற முடியாது. ஒரு சிலரின் அறிவு-விருந்துக்கே அது உரியது. ஆனால் நாடகம் அப்படியல்ல. அது நடிக்கப்பட்டால், அதைப் பாமரரும் கண்டு அதன் சிறப்பை உணர்ந்து கொள்ள முடியும். இதனால் நாடகத்தின் சிறப்பை உணர்வதற்கு நடிகரின் துணையும்வேண்டியிருக்கிறது; அதனால் அது 'அத்தனை சிறந்ததும் அல்ல' என்று முடிவு கட்டிவிடக்கூடாது. கற்றறிந்தவர்கள்—அதாவது கவிதையைப்படித்துச் சுவைத்து இன்புறக் கூடியவர்கள்—நாடகப் பிரதியைப் படித்து, அதை நடிக்கக் காணும

லேயே இன்புற முடியும். எனவே, நாடகம், கற்றவர், கல்லாதவர் அனைவருக்கும் அறிவு-விருந்து ஊட்டுவதாக இருக்கிறதென்று கொள்ளு வதே பொருத்தமானது.

கவிதை நூலில் உள்ள எல்லா அம்சங்களையும் நாடகமும் பெற்றிருப் பதோடு அதிகப்படியாக இரண்டு அங்கங்களும் அதற்கு இருக்கின்றன. இசையும், ஜோடனை-அணியும். இவை இரண்டினாலும் கதையின் சிறப் பும் உணர்ச்சிகளின் பெருக்கும் மேலும் உயர்த்தப்படுகின்றன. மற்றும் கவிதை நூலைவிட அது சுருக்கமானதாக இருப்பதால் அதைப் படிப்பது அதிக இன்பம் விளைப்பதாக இருக்கும். அதன் பயனும் அதிகம். தவிர, நாடகத்தில் கவிதை நூலைவிட அதிக ஒருமைப்பாடு உண்டு. ஏனெனில் அதில் ஒரே தொடர்புடைய நிகழ்ச்சிகள்தாம் சித்தரிக்கப்படும். கவிதை நூலிலோ நாம் முன்னமே கூறியபடி ஒரே சமயத்தில் நிகழும் பல நிகழ்ச் சிகளையும் கவிஞன் ஒருசேரப் பிணைத்து வைக்கலாம்.

எனவே, கவிதை-நூலைவிடத் துன்பியல் நாடகமே மேம்பட்டது என்று முடிவு செய்ய இடமிருக்கிறது.

ஆட்சேபணைகளுக்குப் பதிலளித்தல்

ஒரு நாடகத்திற்கோ, கவிதைக்கோ விமர்சனம் செய்பவர்கள் ஐந்து காரணங்களைக் காட்டி அதை ஆட்சேபிக்க முடியும் என்கிறார் அரி ஸ்டாடில். நடக்க முடியாத நிகழ்ச்சிகள் சித்தரிக்கப்பட்டிருக் கின்றன என்பது ஒரு குறையாக இருக்கலாம். அல்லது இயற்கை நியதிக்குப் புறம்பானவை கூறப்படுகின்றன என்று கூறலாம். அல்லது ஒழுக்க நெறிக்குமாறான நிகழ்ச்சிகள் இருப்பதாக எடுத்துக் காட்டலாம். அல்லது ஒன்றுக் கொன்று முரண்பட்ட கருத்துக்கள் இருக்கின்றன என்று குறை கூறலாம். இல்லாவிடில், நாடக அல்லது கவிதை விதி களுக்கு ஒத்ததாக இல்லை எனலாம்.

நடக்க முடியாதவை அல்லது இயற்கைக்குப் புறம்பானவை சித் தரிக்கப் பட்டிருக்கின்றன என்ற ஆட்சேபணைக்குக் கவிஞன் பதிலளிக்க முடியும். ‘குறிப்பிட்ட சம்பவம் இப்படி இருந்திருக்கவேண்டும்’ என்று எனக்குத் தோன்றுகிறது” என்று கவிஞன் பதில் கூறலாம். ஒழுக்க நெறிக்கு மாறான நிகழ்ச்சிகள் இருப்பதாகக் கூறுவது, பொதுப்படை யாகக் கூறக்கூடிய ஆட்சேபணை அல்ல. ஒழுக்கம் தவறிய செய்கைகள், யாரால், எந்தச் சூழ்நிலைகளில், எந்த முறையில் ஆற்றப்படுகின்றன என்று பார்க்க வேண்டும். அவற்றால் என்ன பலன் விளைகிறது? அவ் வாறு செய்தவன் நிலை என்ன ஆயிற்று? என்பதையும் உன்னிப் பார்க்க வேண்டும். ஒரு நீதியை உணர்த்துவதற்காகச் சூழ்நிலை வசத்தால் ஒழுக்கப் பாதையிலிருந்து வழுவிய ஒருவனது செய்கைகளைத் தக்க முடி வுடன் எடுத்துக்காட்டுவது குற்றமாகாது.

நாடக நடிப்பு, இயற்கை-நியதிக்கு ஒத்ததாக இருக்க வேண்டு மென்பதை அவர் பலவாறு வலியுறுத்துவது குறிப்பிடத்தக்கது. ஒரு கதையில், தொடர்புள்ள ஒரே நிகழ்ச்சித் தொடர்தான் இருக்கவேண்டு மென்ற அவர் கருத்தை இன்று வரையில் பல விமர்சகர்களும் எடுத்துக் கூறிவருகிறார்கள். ‘தீமை செய்தவன் தீமைபெற வேண்டும்; நல்லவன் நன்மை பெற வேண்டும் என்ற கருத்தின் அடிப்படையிலேயே நாடகத்

தின் முடிவு அமைக்கப்பட வேண்டும் என்று அரிஸ்டாடில் விரும்புகிறார். "கவித்துவ-நீதி" (Poetic Justice) என்ற பெயரில் இந்த இலட்சியம் சமீப காலம் வரையில் வழுவாது கடைப்பிடிக்கப்பட வேண்டுமென்று ஒருமுகமாக வலியுறுத்தப்பட்டு வந்தது. இந்த நூற்றுண்டில் கூட, இந்த முறைக்கு மாறுக இருந்த சில சிறந்த நாவல்களும் நாடகங்களும் கடுமையான கண்டனத்துக்கு உற்பட வேண்டியிருந்தது.

அரிஸ்டாடிலின் "Poetics" என்ற நூலின் முதற்பிரிவில், துன்பியல் நாடகத்தைப்பற்றியும் கவிதை நூல்களைப்பற்றியும் விரிவாக விமர்சனம் செய்யப்பட்டிருக்கிறது. கலைநூலின் மூன்றுவது பிரிவான இன்பியல் நாடகத்தைப்பற்றிய விமர்சனம் இரண்டாம் பிரிவில் தொடங்குகிறது. ஆனால் தொடக்கத்துடன் நின்றுவிடுகிறது. அரிஸ்டாடில்தான் அத்துடன் நிறுத்திவிட்டாரோ, அல்லது அவர் எழுதிய பகுதிகள் கிடைக்கவில்லையோ திட்டமாகத் தெரியவில்லை.

கலையியல் - பொதுவிளக்கம்

உயர்ந்த கவிதை நடையில் எழுதப்பட்டதாயினும், கதை சரியாக அமைந்திராவிட்டால், அதை நல்ல நாடகமென்று அரிஸ்டாடில் ஒப்புக்கொள்ளமாட்டார். நடைமுறையில் இக்கருத்தை நாம் அப்படியே ஏற்றுக்கொள்வதற்கில்லை. கதை அம்சம் சரியாக இல்லாத பெர்னர்டு ஷாவின் எத்தனையோ நாடகங்கள் உள்ளத்தை அள்ளுவனவாக இருக்கின்றன. "ஒரு வார்த்தை போதும் கற்பனைக்கு அளவிறந்த விஷயங்களைக் கொடுக்க; நீடித்த ஒருமித்த கதை வேண்டுமென்று அவசியமில்லை" என்ற நியூமனின் (Newman) மொழிகள் ஈண்டு சிந்தித்துப் பார்ப்பதற்குரியன.

கவிதை என்பது இலட்சியப் பொருளின் பிரதிபலிப்பு என்கிறார் அரிஸ்டாடில். ஆனால் இயற்கை உலகின் வெறும் பிரதிபலிப்பு மட்டுமல்ல கவிதை; அத்துடன், இனம் காணமுடியாத இன்னதென்று திட்டமாகச் சொல்லமுடியாத நிறைவும், எழிலும் உயிர்த்துடிப்பும் அதில் கலந்திருக்கும். அதன் சிறப்பும், தன்மையும் அந்தந்தக் கவிஞரின் உள்ளப் பண்பையும், கவிதை பிறந்த சூழ்நிலையையும் பொறுத்தவை.

எம்பிடாக்ளஸ் என்ற கிரேக்க அறிஞர், பௌதிக நூலைப்பற்றி வர்ணனைபோல ஒரு கவிதை நூல் எழுதினர். ஒப்பியன் (Opplan) என்பவர், விலங்கினங்களைப் பற்றிக் கவிதை நடையில் ஒருபெரும் நூல் வரைந்தார். ஆனால் இவை இரண்டும் கவிதை வரிசையில் இடம்பெறவில்லை. ஏனெனில், அவை உண்மையின் வெறும் பிரதிபலிப்பாக மட்டுமே இருக்கின்றன. கவிதையின் துடிப்பு அவற்றில் இல்லை.

மேற்றிசைக் காற்றை நோக்கி கவிஞர் ஷெல்லி பாடும் கவியில், "காற்றே! இந்த வனத்தைப்போல், என்னையும் உன் யாழாக ஆக்கிக் கொண்டுவிடு. அதனால் அந்த வனத்து இலைகள் உன்னால் உதிர்வது போல, நான் உதிர்ந்தாலும் பரவாயில்லை" என்று தொடங்கி அவர் புகழ்பாடுகிறார். இது இயற்கையின் உண்மையான பிரதிபலிப்புத்தான். ஆனால் வெறும், உண்மை மட்டுமா இருக்கிறது அவற்றில்? அவற்றைப்

படிக்கும்போது. அழகிய காட்சியொன்றைக் கண்டதுபோன்ற இன்னுணர்ச்சி தவிர, மனதில் ஏதோ ஓர் மகிழ்ச்சி, ஏதோ ஒரு இன்ப வேதனை உருவாகிறது. அதுதான் கவிதை; அதன் உயிர்.

இனி குண நலன்களை எடுத்துக்காட்டும் கதைக் கவிதைகளைப் பார்ப்போம். உள்ளதை உள்ளவாறே அப்படியே அப்பட்டமாக எடுத்துக் கூறுவது கவிதைத்திறனல்ல. தான் எடுத்துக்கொள்ளும் பாத்திரங்களின் குண நலன்களின் உணர்வை மட்டும் எடுத்துக்கொண்டு, தன் கற்பனைக்கேற்ப அவன் அவற்றிற்கு உருவூட்ட வேண்டும் என்பது அரிஸ்டாடிலின் கருத்து. பிரதிபலிப்புக்கு ஒரு வர்ணப்பூச்சு வேண்டும். ஆனால் இதற்காக, ஒழுங்கற்ற நெறியற்ற பண்புகளுடையவர்களின் பிரதிபலிப்பு நல்ல கவிதையில் இருக்கக்கூடாது என்று பொருளல்ல. அதிலும் ஒரு நயம், ஒரு காரம், ஒரு துடிப்பு இருக்கவேண்டும்.

ஷேக்ஸ்பியரின் "மாக்பெத்" (Macbeth) நாடகத்தில், மாக்பெத் என்பவனின் மனைவி ஜீவ நாடியான கதாபாத்திரம். அவள் புரியாத சூழ்ச்சி இல்லை. செய்யத் தூண்டாத அக்கிரமம் இல்லை. அதற்கேற்ற தண்டனையையும் அவள் அடைந்து விடுகிறாள். ஆனால், அவளது குண நலனைப் பார்க்கும்போது அருசி தட்டுவதாக இல்லை. கற்பனைக்கொரு விருந்தாகத்தானிருக்கிறது.

"கருத்துக்கள், உணர்ச்சிகள், பழக்கவழக்கங்கள், ஆகியவற்றைக் கவிதை இன்பம் தோன்றக் கூறலாம். அவற்றைக் கூறும் மொழிகள் மட்டும் சரியானவையாக இருந்தால்". என்பது அரிஸ்டாடிலின் கொள்கை. சில தனிப் பாடல்களில் இதைப் பொருத்திப் பார்ப்போம்

ராபர்ட் ஸதே (Robert Southey) என்னும் கவிஞர், போர்களெல்லாம் வீண் அழிவையே பயக்கின்றன என்று ஒரு கவிதையில் எடுத்துக் காட்டுகிறார். சிறு குழந்தை யொன்றிடம், அதன் தாத்தா பெரிய போரொன்றின் விவரங்களைக் கூறுகிறான், "அநேகம் பேர் செத்துப் போயிருப்பார்களே?" என்று அச்சத்துடன் குழந்தை கேட்கிறது. கிழவன் ஓயவில்லை. "அட அதனால் என்னதான் பயன்?" என்கிறது அது. "இல்லை இல்லை. உனக்குத் தெரியாது. அது ஒரு பெரிய வெற்றி" என்று தலையசைக்கிறான் கிழவன். அருமையான கருத்து உருவகம்.

"எழுதுங்கால் கோல் காணாக் கண்ணே போல் கொண்கன்,

பழிகாணேன் கண்டவிடத்து."

என்னும் ஒரு குறட்பா இருக்கிறது. மைதீட்டும் கோல் சற்று தூரத்திலிருக்கும்போது கண்ணுக்குத் தெரிகிறது. மையிட்டுக் கொள்வதற்காகக் கண்ணிற்கு மிகமிக அருகில் கொண்டு சென்றால் அதன் உருவம் மறைந்து விடுகிறது. அதேபோலக் கணவன் சேய்மையிலிருக்கும்போது தான் அவரது குற்றங்கள் புலப்படுகின்றன. அவர் எதிரில் வந்தால் மறைந்துவிடுகின்றன!

கடைசியாக, பழக்க வழக்கங்களைப் பற்றி எடுத்துக்கூறும் கவிதைகளைப் பார்க்கலாம். 'இந்த ஜன்மத்தில் தர்மம் செய்தால் புண்ணியம் குவியும், சுவர்க்கம் நமக்குத்தான்' என்ற எண்ணத்துடன் பலர் "அறம்"

செய்கிறார்கள். இது தொன்று தொட்டு நடந்துவரும் விஷயம். இதைக் கவிஞர் எப்படிக் கூறுகிறார் தெரியுமா?

“இம்மைச் செய்தது மறுமைக் காமெனும் அறவிலை
வணிகன் ஆய் அல்லன் ”

சுமார் இரண்டாயிரமாண்டுகளாக இயற்றப்பட்ட, பல்வேறு காலங்களைச் சேர்ந்த, பல்வேறு கவிதைகள், அரிஸ்டாடிலின் கருத்துக்களுடன் ஒத்திருக்கின்றனவா என்று பார்ப்பதற்காகவே, இவ்வாறு உதாரணங்கள் கூறினேன். அரிஸ்டாடில் ஒரு கவி அல்ல. உணர்ச்சிப் பெருக்குடையவரும் அல்ல. “கடும்” விஞ்ஞானி அவர். அப்படிப்பட்டவர் கவிதைக்கும் கலைக்கும் கூறிய இலக்கணம், பெரும்பாலும் இன்று வரை சரியாக இருப்பது வியப்பே!

பிற்கால இலக்கிய விமர்சகர்கள், அரிஸ்டாடிலின் முறைக்குத் திருத்தங்கள் கொண்டு வந்திருக்கிறார்கள். ஆனால் இந்தச் சர்ச்சைகளுக்கெல்லாம் அடிப்படை அளிக்க, முதன் முதலில் கலைத்திறனாய்வுத் துறையை வகுத்தவர் அரிஸ்டாடில்தான். பிளேட்டோவுக்கு அரிஸ்டாடிலைப் போல அரிஸ்டாடிலுக்கும் திறனாய்வு-மனப்பாங்கு கொண்ட சீடர் வாய்த்திருந்தால், உலகம் இன்னும் எவ்வளவோ பயனடைந்திருக்கும்!

பாகம் ஏழு—பொது விமர்சனம்

“குணம் நாடிக் குற்றமும் நாடி அவற்றுள்
மிகைநாடி மிக்க கொளல்”

— குறள் (தெரிந்து தெளிதல்)

சாதாரணமாக ஓர் ஆசிரியரோ, சிந்தனையாளரோ, விஞ்ஞானியோ, சற்று புகழ் பெற்றுவிட்டால், அவர் கூறுவதையெல்லாம் தேவ வாக்காக எடுத்துக் கொள்ளுவதுதான் உலக வழக்காக இருந்து வருகிறது. இம்மாதிரியான வழக்கம்தான் சிந்தனைப் போக்குக்குப் பெரும் தடை. அதனால், குணங்குறைகளை அலசிப்பார்த்து அரிஸ்டாடிலின் சிந்தனைகளைப் பொதுப்பட விமர்சனம் செய்வது அவசியமாகும்.

i) பொது நோக்கம்

மனிதன் தனது பிறவிப்பயனை, சிந்தனை ஆற்றலை முழுதும் வெளிப்படுத்திக் கொள்ளும் வகையில் அறிவுத் துறைகளை வகுத்து வைத்துத் தெளிவுறச் செய்வதே அரிஸ்டாடிலின் இலட்சியம். இந்த இலட்சியத்தை அடைவதற்கு அவர் மேற்கொண்ட பல்வேறு வழிகளிலும் மூன்று இழைகள், முதலிலிருந்து கடைசிவரையில், தெளிவாக, உறுதியாக ஓடுகின்றன.

முதலாவதாக, அரிஸ்டாடில், தமது சிந்தனைகள் நெடுகிலும், “குறிக்கோள்” என்ற கொள்கையை எல்லாத் துறைகளிலும் வலியு

றுத்துகிருர். உலக இயக்கங்கள் பூராவும் ஒரு குறிக்கோள் பற்றியே நிகழ்வது என்றும், வானில் ஓடும் கிரகங்களுக்கும் குறிக்கோள் ஒன்று உண்டு என்றும் வலியுறுத்திக் கூறுகிருர். எந்தப் பொருளைப்பற்றியும் அவர் ஆராய்ந்து கருத்துக்களை உருவாக்கிக் கொள்ளுமுன், அந்தப் பொருளுக்கு ஒரு குறிக்கோள் உண்டு என்று திடமாக மனதில் கொண்டு அந்த அடிப்படையிலேயே அவர் சிந்திக்கத் தொடங்குகிருர்.

"குறிக்கோள்" என்ற சொல், மனிதனின் செயல்களுக்கு வேண்டுமானுல் பொருந்துமேயன்றி, விஞ்ஞானத்துறையில் அதை எல்லாவற்றிற்கும் பயன்படுத்துவது சரியல்ல. இந்தத் தவறை அரிஸ்டாடில் உணர்ந்து கொள்ளவில்லை.

அரிஸ்டாடிலின் சிந்தனைகளில் இரண்டாவது இழை, அவரது "தரவரிசைக் கொள்கை" ஆரம்பிக்கிறது. உலகிலுள்ள உயிரினங்கள் எல்லாம் படிப்படியாக அமைந்ததோர் தரவரிசை என்றும் ஒரு படிக்கும், அதற்கு அடுத்த படிக்கும் இடையேயான வித்தியாசம் கண்டு அறியும் விதத்தில் இல்லையென்ருலும், அதை உணர்ந்துகொள்ள முடிகிறது என்றும், உயிரினங்கள் அனைவற்றையும் ஒரு நோக்கிப் பார்க்குமிடத்து இந்த வரிசை புலப்படுகிறதென்றும் விலங்கினங்களின் சரித்திரத்தில்' அரிஸ்டாடில் கூறுகிருர். இந்தத் தரவரிசையின் உயர்படியில் நிற்பவன் மனிதன். அவன் அங்கு இருப்பதற்கேற்ற தனிப் பேராற்றல் அவனது சிந்தனைத்திறனே என்றும் கூறுகிருர். எனவே, அவர் ஞான நூல் எழுதப் புகும்போது, மனிதனின் பிறவிப்பயனைக் கூற முற்படுகையில், இந்த ஆற்றலைப் பூரணமாக வெளிப்படுத்திக் கொள்வதன் மூலம் ஆனந்த நிலை பெறுவதே, மனிதன் பிறவி எடுத்ததன் தனிப்பெரும் பயன் என்கிருர். அரசியல் நூலை வரைகையில், இந்த நிலையை மனிதன் எய்துவதற்கு வழி செய்து கொடுப்பதே அரசியலமைப்பின் இலட்சியம் என்கிருர். அறிவு நூலை எழுதுகையில், "பொருள்", "உருவம்" என்ற கருத்துக்களை அவர் விளக்கும்போதும், இந்தத் தரவரிசைக் கோட்பாடு அவரது விளக்கங்களில் பிரதிபலிக்கிறது. ஒரு வஸ்துவின் உருவப்பண்பு, அதைவிட உயர்ந்த படியிலிருக்கும் வேருெரு பொருளின் மூலப்பொருளாக அமையலாம் என்கிருர் அரிஸ்டாடில். உதாரணமாக, "மனிதன்" என்ற உருவப்பண்பு "குழந்தை" என்ற மூலப் பொருளிலிருந்து உண்டானது. "குழந்தை", "கரு" என்ற மூலப்பொருளின் உருவம். கருவோ, அண்டம் விந்து ஆகிய மூலப் பொருள்களின் உருவம். "ஒவ்வொரு உயிரினமும் அதைவிட உயர்ந்த படிக்குச் செல்லவேண்டும் என்ற உள்ளார்வத்தின் அடிப்படையிலேயே, பொருள்-உருவ வளர்ச்சிகள் தோன்றுகின்றன" என்பது அரிஸ்டாடிலின் அறிவு நூற் கொள்கை (Nichomachean Ethics) என்ற ஒழுக்க நூலிலும் அவரது தர்க்க நூலிலும் தரவரிசைக் கொள்கை கூறப்படுகிறது. இவ்வளவு தூரம் உயிரினங்களைப் பார்த்துப் பரிசீலனை செய்து தரவரிசையொன்றை நெடுகிலும் கண்டவர், பரிணமத் தத்துவத்தைக் * காணுமலே சென்றது சற்று வியப்பாகவே இருக்கிறது.

---

* ஒன்றிலிருந்து ஒன்று வளர்ச்சியடைந்தது என்கிற பரிணமத் தத்துவத்தை நவீன விஞ்ஞான யுகத்தில் டார்வின் ஆராய்ந்தார்.

மூன்றாவது முக்கியமான கொள்கை, "இடைவழிப் பண்பை" அவர் என்றென்றும் வலியுறுத்துவது தான். அதாவது 'அதி உயர்ந்தது' 'அதிகத் தாழ்ந்தது' என்னும் அமிதப் பொருள்கள் இரண்டிற்கு இடைப்பட்டதொன்றுதான் எப்போதும் எதிலும் சிறந்து விளங்கு மென்ற அவரது வாதம். "ஒழுக்க நூலில்" அவர் இரண்டு அமிதப் பண்புகளுக்கு இடைப்பட்ட இடைவழிப் பண்புகள் தாம் நற்பண்புகள் என்று வலியுறுத்தியதைப் பார்த்தோம்.

அரசியல் நூலிலும் அரிஸ்டாடில் "இடைவழியே தலைவழி" என்று உறுதியாகச் சொன்னார். ஏழைகளுக்கு அடக்கியாளத் தெரியாது, பணக்காரர்களுக்கோ, அடங்கி வாழத் தெரியாது. எனவே, ஏழைகளும், பணக்காரர்களும் அல்லாத மத்தியதர வகுப்பினரே மிகவும் சிறந்தவர்க ளென்றும், அவர்களிடமே ஆட்சிப்பொறுப்பு ஒப்படைக்கப்பட வேண்டும் என்றும் அரிஸ்டாடில் கருதுகிறார். ஆனால் உண்மை நடப்பில் மத்தியதர வகுப்பினர் இலட்சிய வாழ்வு வாழ்பவர்களாக இல்லை. "வீட்டில் ஏழைகள் வாழ்வதுபோல் வாழ்வதன்மூலம், பிறரெதிரில் பகட்டாகப் பணக்காரர்கள் வாழ்வதுபோல வாழ முயற்சி செய்பவர் களே மத்தியதர வகுப்பினர்" என்று கூறப்படுவது பொருளற்ற கிண்டல் அல்ல. பார்க்கப்போனால் இன்னல்கள் மத்தியதர வகுப்பின ருக்கே அதிகம் உண்டு. ஏனெனில் சந்தர்ப்ப வசத்தால் இனம் தெரி யாததொரு பொருளற்ற கௌரவ உணர்ச்சிக்கு ஆளாகி அதனால் அவர்களுக்கு அளவிறந்த துன்பம் உண்டாகிறது. மத்தியதர வகுப் பினர் பணக்காரர் ஏழைகள் ஆகிய இருவரையும் கண்டு பொறாமைப் பெருமூச்சு விடுகிறார்கள்! இம்மாதிரியான நடுத்தர வகுப்பினர்தான் சமுதாயத்துக்குக் கேடு பயப்பவர்கள் என்று கார்ல் மார்க்ஸ் கூறினார். அறிஞர் பெர்னார்டுஷாவுக்கு நடுத்தர வகுப்பினரைக் கண்டாலே வெறுப்பு; ஏழைகளிடம் இருக்கும் இலட்சியமற்ற துணிச்சலும் அவர்களிடம் இல்லை; 'செல்வர்களுக்கு உள்ள நம்பிக்கை வாய்ந்த துணிச்சலும் இல்லை—என்பது பெர்னார்டுஷாவின் கருத்து. போலிக் கௌரவ உணர்ச்சியால் விளையும் கேடுகளைப் பற்றி பெர்னார்ட்ஷா பின் வருமாறு குறிப்பிட்டுக் கூறுகிறார்: "நடுத்தர வகுப்பே மிகக் கேடான வகுப்பு; அந்த வகுப்பில் பெண்களுக்கு மனைவி நிலையும், தாய் நிலையும் தவிர வேறு தொழில் இல்லை. தொழில் இல்லாத பெண் களுக்கு வாழ வகையுமில்லை..." இங்கிலையில் நடுத்தர வகுப்பினரிடம் அரசியலை ஒப்படைக்கலாம் என்று அரிஸ்டாடில் கூறியது தமது இடை வழிக் கொள்கையின்மீது அவர் வைத்திருந்த அளவிறந்த தர்க்க ரீதிக்குப் புறம்பான பற்றுதான் காரணமென்று சொல்லத் தோன்று கிறது..

"பேச்சுக்கலை" பற்றிய நூலிலும் இடைவழிக் கொள்கை புகுந் திருக்கிறது. பல்வேறு மக்களுடைய பண்புகளை ஆராயும்போது, இளை ஞர்கள் "எளிதில் ஏமாந்து விடுவார்கள்; பயனற்ற அபாயம் விளைக்கக்கூடிய துடிப்பு உள்ளவர்கள். நிதானமற்றவர்கள்" என்று அவர் குற்றம் சொல்லுகிறார். முதியவர்களோ, நம்பிக்கை குன்றிக் கோபம் மிகுந்து, ஏமாற்றம் நிறைந்தவர்களாக இருப்பார்களாம். ஆனால் நடுத்தர வயதினர்தான் சிறந்த குணநலன்களைக் கொண்டவர் களாக இருப்பார்கள் என்கிறார் அரிஸ்டாடில்.

மற்றும், துன்பியல் நாடகங்களைப் பற்றி எழுதும்போதும், இந்தக் கொள்கை தலை நீட்டுகிறது. மிக உயர்ந்த பண்புள்ளவன் தீய நெறியில் வழுவி விழுந்துவிட்டதாகக் கதையில் இருக்கக்கூடாது; மிக இழிந்த வனைப் பற்றியும் அது சித்தரிக்கக் கூடாது. இரண்டிற்கும் இடைப் பட்ட பண்புகள் உள்ள ஒருவன் சந்தர்ப்ப வசத்தால் ஒழுக்கம் தவறிய தாகவே கதை இருக்கவேண்டும் என்பது அவர் முடிவு.

இவ்வாறு, குறிக்கோள், இடைவழிக் கொள்கை, தரவரிசைக் கொள்கை ஆகிய மூன்று கோட்பாடுகளே அரிஸ்டாடிலின் சிந்தனை களிடையே விரவி நிற்பதைப் பார்க்கலாம். சில சந்தர்ப்பங்களில் இவை அளவுக்கு மீறி வலியுறுத்தப்படுகின்றன, அதனால் சிந்தனைப்போக்கே மாறியும் விடுகிறது. ஆனால் இதற்காக அரிஸ்டாடிலைக் குறை சொல்லுவது கூடாது. வாழ்நாள் பூராவும் சிந்தனை செய்வதிலேயே செலவிடும் அறிஞர்கள் தாம் முதலில் கண்டுபிடித்துச் சில சமயங்களில் உண்மையென்று கண்ட கொள்கைகளை இறுதிவரையில் எல்லாவற்றிற் குமே வலியுறுத்தி விடுவார்கள். இது இயல்புதான். சிந்தனையாளர் பிராய்ட் (Freud) எந்தச் செயலும் ஆண் பெண் பால்-உணர்ச்சி பால்-கவர்ச்சி, இவற்றையே அடிப்படையாகக் கொண்டதென்று கூறி வந்தார்.

ii) அரிஸ்டாடிலும் பிற்காலச் சிந்தனைகளும்

அரிஸ்டாடிலின் சிந்தனைகள் பிற்காலச் சிந்தனையாளர்களுடைய சிந்தனைப்போக்கை எவ்வாறு பாதித்தன என்று பார்ப்போம். அரிஸ் டாடிலின் தத்துவத்தில், கடவுள் சாதாரண உலக இயக்கங்களிலிருந்து பிரித்து அப்பால் வைக்கப்படுகிறார். இது கிறிஸ்துவ மதக் கொள்கை களுக்கு உகந்ததாகவே இருக்கிறது. கிறிஸ்துவத் தத்துவ ஞானிகள், அரிஸ்டாடிலின் அறிவு நூல், ஒழுக்க நூல் முதலியவற்றைக் கொண்ட தோடு அவரது அறிவியல் நூல்களையும் அப்படியே ஏற்றுக்கொண்டு விட்டார்கள்.

இதற்கிடையே அவரது "ஒழுக்க நூல்" பிரசித்தி பெறலாயிற்று. மத-சீர்திருத்த இயக்கத்தினர் (Reformists), அரிஸ்டாடிலின் ஒழுக்க நூலை, ஜெர்மன் பல்கலைக் கழகங்களில் பாடமாக வைத்தார்கள். ஒழுக்க முறைக்கு ஓர் அடிப்படையாக அது கருதப்பட்டது. செயிண்ட் தாமஸ் அக்வினஸ் என்ற பாதிரியார், அரிஸ்டாடிலின் தத்துவத்தோடு ஒட்டிய வகையில் தமது அரசியல் சிந்தனைகளை எழுதினார். ஆயினும் அதிகப் பலன் கிட்டவில்லை. பதினெட்டாம் நூற்றாண்டில்தான் "அரசியல் நூல்" பிரபலமடைந்தது.

பதினைந்தாம் நூற்றாண்டில் இலக்கிய மறுமலர்ச்சி இயக்கம் (Renaissance) தோன்றிப் புத்தகங்கள் பெருகப் பெருக அரிஸ்டாடிலின் கலை நூல் பிரபலமடையலாயிற்று. தத்துவத் துறையில் அவரது தனிப் பெரும் ஆட்சி மங்கத் தொடங்கிய காலத்தில் கலைத்துறையில் அவரது ஆட்சி தொடங்கியது. சில விஷயங்களைத் தவிரப் பிற்கால இலக்கிய விமர்சகர்கள் அவரது கொள்கைகளிலிருந்து மாறுபடவில்லை. தர்க்க வியலில் ஒரு பிரிவைப் பயிலுவோர், அரிஸ்டாடிலின் தத்துவத்தையே ஆதாரக் கொள்கைகளாக இன்றும் கொள்கின்றனர்.

iii) நிறையும் குறையும்

அரிஸ்டாடிலின் கொள்கைகள் உலகமுழுதும் வேதவாக்காக ஏற்றுக் கொள்ளப்பட்டன என்று பார்த்தோம். கி. பி. 1215ல் அவரது நூல்களை விமர்சனமே செய்யக் கூடாதென்று போப்பின் பிரதிநிதி தடை உத்திரவு போட்டார். பதின்மூன்றும் நூற்றுண்டின் இறுதி வாக்கில் அரிஸ்டாடிலின் கொள்கைகளிலிருந்து கருத்து வேற்றுமை கொண்டவர்கள் தண்டிக்கப்பட்டார்கள்.

"இது உண்மையாக இருக்கும்" என்ற தொனியே அரிஸ்டாடிலின் நூல்களில் இல்லை. "இதுதான் உண்மை" என்ற பாவமே தொனிக்கிறது. இந்த சிந்தனைப்-பிடிவாதத்தை அறிஞர் ஜார்ஜ் ஸந்தாயனு, (George Santayana) 'விலங்கினங்களுக்கிருப்பது போன்ற அதீத நம்பிக்கை" என்று குறிப்பிடுகிருர். இது அரிஸ்டாடிலிடம் அதிகமாக இருந்ததால் பிற்காலத்தினர் அவரிடம் குற்றம் கண்டுபிடித்து மீளுவது சிரமமாகிவிட்டது.

இந்தச் சிந்தனைப் பிடிவாதம், அறிவியல் துறையில்தான் பேராபத்து. அரிஸ்டாடில் சந்திரனுக்குக் கீழே உள்ள பகுதியில்தான் மாறுதல்களும் அழிவும் இருக்குமென்றும், அதற்கு மேல் உள்ள பிரதேசத்தில் மாறுதல்களே நிகழா என்றும் கூறியது நினைவிருக்கலாம். டைக்கோ பிராஹி என்ற பதினறும் நூற்றுண்டு வானசாஸ்திரி, புதிய நட்சத்திரமொன்றைக் கண்டார். சந்திரனைவிட வெகு தொலைவில் புதிதாகக் காணப்பட்டது அது. அந்தப் பிரதேசத்தில் மாறுதல் நிகழ்ந்துவிட்டதே தவிர தொலைவில் காணப்படும் வால் நட்சத்திரங்கள் மாறிக் காணப்படுகின்றனவே' ஆனல் இதை வெளியில் சொல்லுவதற்குப் பயம்! இன்னும் கோர்னிகஸ் என்ற பதினைந்து-பதினறும் நூற்றுண்டு விஞ்ஞானி 'பூமி சூரியனைச் சுற்றிச் சுழல்கிறது என்றும், பூமியே அகில அண்டத்தின் மையம்' என்று அரிஸ்டாடில் கூறுவது தவறென்றும் கண்டார். மதச் சீர்திருத்த இயக்கத்தினருக்குக் கூட இது அதிர்ச்சியூட்டியது. "இந்த முட்டாள் வான சாஸ்திரத்தையே திருப்பப் பார்க்கிருன்!" என்று அலட்சியத்தோடும் வெறுப்போடும் கூறினராம் மார்ட்டின் லூதர்.

அடுத்தபடியாக, அரசியல் நூலில் காணும் முக்கியமான குறைபாடொன்றைக் கவனிப்போம். மனிதன் தனது அறிவாற்றலைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் இலட்சிய-வாழ்வு வாழ இடமளிப்பதே அரசியலமைப்பின் இலட்சியம் என்று அரிஸ்டாடில் கூறுகிருர். நன்று. இந்த இல்ட்சியத்தை எய்துவதற்கு அவர் சில சுதந்திரங்களைப் பிரஜைகளுக்கு வழங்குகிருர். உதாரணமாக அடிமை அல்லாத ஆண்மகனுக்கு நாட்டின் சட்டசபையில் பங்குகொள்ளச் சுதந்திரம் உண்டு. ஆனல், அரிஸ்டாடில், பிரஜைகளுக்கு உரிமைகளை (Rights) அளிக்கவில்லை. உரிமைகளில்லாவிட்டால் சுதந்திரம் எங்கிருந்து வரும்?

பேராசிரியர் லாஸ்கி (Laski) கூறுவதுபோல, மனிதன் தனது ஆற்றலை முழுதும் வெளிப்படுத்திக் கொள்வதற்கு உரிமைகள் அவசியம். "உரிமைகளே அரசியலமைப்பின் அடிப்படை" என்கிருர்

அவர். உதாரணமாக, ஒவ்வொரு பிரஜைக்கும் வேலை செய்வதற்கு உரிமை இருக்கிறது. அதாவது ஒவ்வொரு பிரஜையும் தமது தொழிலைச் செய்வதற்கு வசதிகள் அளிக்கவேண்டுவது அரசாங்கத்தின் கடமை. ஏனெனில் பிரஜைகளுக்குத் தொழில்செய்து பொருளீட்ட வசதி அளிக்காவிட்டால், அவர்கள் தமது உள்ளுறை ஆற்றலை வளர்த்துக் கொள்வதற்குரிய உரிமையைப் பறிப்பதாக ஆகிவிடும். வேலை செய்வதற்கு உரிமை என்பதில் பல்வேறு உரிமைகள் அடங்கிக் கிடக்கின்றன. அதாவது உதாரணமாக விடுமுறைகால வசதிகளுக்கான உரிமை, நியாயமான ஊதியத்துக்கான உரிமை முதலியவை. இந்த உரிமை தவிர, வேறு விதமான உரிமைகளும் உண்டு. அரசியலில் பங்கு கொள்வதற்கான உரிமை அது. மூன்றாவது வகை உரிமைகள் ' தனிப்பட்ட உரிமைகள் " எனப்படும். உதாரணமாக, நீதி முறைப்படியான பரிகாரங்கள் கிடைக்க வேண்டுமென்ற உரிமை மத சுதந்திர உரிமை முதலியவை. இந்த உரிமைகள் வரம்பிலா உரிமைகள் அல்ல. ஒரு தனி மனிதனின் உரிமை மற்றவர்களின் உரிமைகளால் கட்டுப்படுத்தப்படும். மற்றும், சமூக நிலைமைகளுக்கேற்ப, அவை மாறுதல்களுக்கும் உட்படும். ஆயினும் இந்த உரிமைகள் இருக்கவேண்டுவது அவசியம். அவை இருந்தால்தான், மனிதன் தனது ஆற்றலைப் பூர்ணமாக வெளிப்படுத்திக்கொள்ள முடியும். அந்த உரிமைகளை வழங்குவது அரசாங்கத்தின் கடமை. இந்த உண்மையை அரிஸ்டாடில் தமது அரசியலில், அறவே மறந்துவிட்டார். மனித உரிமைகளைப் பற்றி மட்டும் அவர் சிந்தித்திருந்தால், சூழ்நிலையையும் மீறிக்கொண்டு அறிவொளி பிறந்திருக்கும்.

கடைசியாக—

அறிவுத் திறன்

ஒழுங்கில் ஆர்வம்

மிதத்தில் ஆசை

ஆகிய மூன்றும் அரிஸ்டாடிலின் தாரக மந்திரங்கள். இன்றைய உலகிற்கு முக்கியமாகத் தேவைப்படுவது இவைதான். எனவே, இப்போதிருக்கும் சூழ்நிலையில் அரிஸ்டாடிலின் நூல்களைப் படித்து அவற்றின் ஜீவனை உணர்ந்துகொள்ளுவது உலகிற்குப் பயனளிக்கும்!

அரிஸ்டாடிலின் மணி மொழிகள்

1. அறத்துப்பால்

நல்லவை எவை? ஒரு பொருளை நாம் அதன்பொருட்டே விரும்பினுல், அது நல்லது. அனைவரும் விரும்பும் பொருள் நல்லது. எல்லா நற்குணங்களும் நல்லவை. அழகும், வலிமையும் புகழும் ஆற்றலும், நீதியும் நல்லவை. வாழ்க்கையே நல்லதுதான்.

நல்ல விஷயங்களைக் கிரகித்துக் கொண்டு அவற்றை நம்மிடமே நிலைபெற்றிருக்கச் செய்வதுதான் நற்பண்பு.

ஒவ்வொரு மனிதனும், சட்டப்படி தனக்கு உரியதைப் பெறுவதற்கு வகை செய்யும் நற்பண்பே நீதி.

ஒழுக்கக் கோட்பாடுகளைத் திருப்பிப் போட்டால் அதுதான் புகழ் மொழி; உதாரணமாக 'இந்தச் செயலைச் செய்; ஏனெனில் அது நல்லது' என்பது ஒழுக்கக் கோட்பாடு. 'அவன் நல்லவன்; ஏனெனில் அவன் இன்ன செய்லைச் செய்தான்' என்பது புகழ்மொழி.

இயற்கையான பொருள்களின் மீது ஆன்மாவுக்கு திடீரென்று ஏற்படும் பொருத்தமுள்ள ஈடுபாட்டையே நாம் இன்பம் என்று சொல்கிருேம்.

செய்தாக வேண்டும் என்ற நிர்ப்பந்தத்தின் பேரிலும் அவசியத்தையொட்டியும் எழுவன இன்பமற்றவை—உதாரணம் நிதிப்பொறுப்பு வகித்தல் பாடம் படித்தல் போன்றவை.

வாசாலகர்களாக இருப்பவர்களும் தொழில் - வர்த்தகத் துறைகளில் ஈடுபட்டிருப்பவர்கள், செல்வந்தர்களும் பல நண்பர்களை உடையவர்களும் எளிதில் பிறருக்குத் தீங்கு செய்யமுடியும்.

இயற்கை நீதிக்கு மாறுபட்டுள்ளவைகளை அநீதி என்று எல்லா மக்களும் கருதுவார்கள்.

பெருந்தன்மை என்பது என்ன? தனக்கு இழைக்கப்பட்ட இன்னல்களுக்கோ தீமைகளுக்கோ, கடுமையாகத் தண்டனை யளிக்காமலிருப்பது; மனிதன் சாதாரணமாகச் செய்யக் கூடிய தவறுகளை மன்னித்து விடுவது; சட்டத்தின் ஜீவனை மட்டும் உணர்ந்துகொண்டு, எழுத்துக்கு எழுத்து ஊன்றி பார்க்காமலிருப்பது; தனக்கு இழைக்கப்பட்ட இன்னலை மறந்து நன்மையையே நினைவில் கொள்வது; பொறுமையுடன் துன்பங்களைப் பொறுப்பது ஆகியவை பெருந்தன்மைக்கு அடையாளங்கள்.

சினம் என்பதில், பழிவாங்கும் உணர்ச்சியும், தான் அசட்டை செய்யப்படுவதால் (அல்லது அசட்டை செய்யப்படுவதாக எண்ணுவதால்) ஏற்படும் வருத்தமும் கலந்திருக்கும். எனவே தாம் அசட்டை செய்யப்படுவதாக எண்ணிக் கொண்டிருப்பவர்கள் எளிதில் கோபத்துக்கு உட்படுவார்கள். தாம் பிறரைவிட உயர்ந்தவர்கள் என்று எண்ணிக் கொண்டிருப்பவர்களுக்கும் எளிதில் கோபம் வரும். தம்மைப் பிறர் எதிர்க்கிருர்கள், தமது செயல்களுக்கு இடையூருக இருக்கிருர்கள், தமக்குப் பிறர் உதவி செய்யவில்லை என்று எண்ணி வருந்துபவர்களுக்கும் விரைவில் கோபம் வந்துவிடும். நன்மையை எதிர்பார்த்திருந்து,

தீமை விளைந்தபோதும் சினம் பொங்கிஎழும்...சினத்துக்குக்காரண மாக இருப்பவர்களை-அல்லது இருப் பவற்றைப் பழி தீர்த்துக் கொள்ள லாம் என்ற எண்ணத்தினுல் சினத் தில் இன்ப உணர்ச்சியும் அடங்கி யிருக்கிறது.

நமக்கு நன்மை கிட்டும்போது மகிழ்ந்து, தீமை வந்தபோது வருந் துபவன் நண்பன். மூன்றும் மனிதன் ஒருவனுக்கு நன்மையோ தீமையோ எதை நாம் விரும்புகிறேமோ, அதையே அவனும் விரும்புவான். தவிர நம் பகைவர்கள் அவனுக்கும் பகைவர்கள். நமது நண்பர்கள் அவ னுக்கும் நண்பர்கள்.

கோபத்துக்கும் வெறுப்புக்கும் வித்தியாசம் உண்டு. நமக்கு நேர்ந்த சம்பவங்களினுல் கோபம் விளைகி றது. வெறுப்பு அப்படியல்ல. கோபத்துடன் வருத்த-உணர்ச்சியும் கலந்தே இருக்கும். வெறுப்புக்கு அது கிடையாது. கோபத்துக்கு உயர்மட்ட அளவு உண்டு. வெறுப் புக்கு வரம்பில்லை. கோபம் ஆறக் கூடியது. வெறுப்பு ஆருதது.

நமக்குத் துன்பம் இழைக்க வலிமையுள்ளவர்கள்; வலிமையுள் ளவர்களின் கோபம் அல்லது வெறுப்பு; வல்லமையின் துணை பெற்ற அநீதி; தூண்டிவிடப்பட்ட வீரமும் வலிமையும் - ஆகியவை களுக்கு மக்கள் அஞ்சவேண்டும்.

தீமையையோ, இன்னலையோ எதிர்பார்க்காதவர்களும் தாங்கள் ஏற்கனவே வேண்டிய இன்னல்களை அனுபவித்தாகிவிட்டது என்று நினைப்பவர்களும் அச்சத்துக்கு இரை யாகமாட்டார்கள்.

நமது, அல்லது நமக்கு நெருங்கின வர்களுடைய கௌரவத்தையோ, புகழையோ குலைப்பதான செயல் களை எண்ணி நாம் வெட்கப்படுகி றேம்...நம்முடன் எப்போதும் வசிப்பவர்கள் வயது முதிர்ந்தவர் கள் மேன்மக்கள் நாம் செய்த தவ றைச் செய்யாதவர்கள், எளிதில் மன்னிக்காதவர்கள் நமது நட்பை விரும்புபவர்கள், இதுவரை நமது தவறுகளை அறிந்திராதவர்கள் ஆகி யோர் முன்னிலையில்தான் நமது தவறுகளுக்காக நாம் மிக அதிகமாக வெட்கப்படுவோம். நாம் மதிக்காத அல்லது விரும்பாத மக்களுக் கெதி ரில் நாம் வெட்கப்படுவதில்லை.

துன்பம் அனுபவித்தவர்கள், வயது முதிர்ந்தவர்கள் பலஹீனர் கள் கற்றுணர்ந்தவர்கள் குடும்பஸ் தர்கள் ஆகியோருக்குத்தான் இரக்க உணர்ச்சி அதிகம் இருக்கும். பெருத்த துன்பத்தில் உழன்று கொண்டிருப்பவர்களுக்கும் செல் வத்தில் திளைப்பவர்களுக்கும் நம் பிக்கை மிகுந்தவர்களுக்கும் உலகத் தில் உண்மையாக நடப்பவர்களே இல்லை என்று நினைப்பவர்களுக்கும் இரக்கமே இராது.

மிக உயர்ந்த நிலைக்கு அடுத்தபடி யில் இருப்பவர்களுக்கும் ஒரு குறிப் பிட்ட பண்புக்காக மட்டும் பெரி தும் கௌரவிக்கப்பட்டவர்களுக் கும், எப்போதும் உற்சாகமிழந்து இருப்பவர்களுக்கும் பொருமை உணர்ச்சி அதிகம் இருக்கும்.

எல்லாவற்றிலும் மிகக் கொடி யது சாவுதான். ஏனெனில் எல்லா வற்றிற்கும் அது ஓர் எல்லை. அதற்கு அப்பால் நல்லதோ தீயதோ எதுவும் இல்லை என்று கொள்ளப் படுகிறது.

வறுமை, காதலில்.. தோல்வி போன்ற துன்பங்களிலிருந்து விடு தலை பெறுவதற்காகத் தற்கொலை செய்துகொள்வது கோழையின் செயல்; அதில் வீரம் எதுவும் இல்லை. வாழ்வின் சோதனைகளையும், இடர்

களையும் கண்டு அஞ்சித் தப்பிக்க எண்ணுபவன் கோழை அல்லவா?

நமக்குத் தேவையான அளவுக்கு மீறி உண்டு குடித்துக் களிப்பது, இயற்கை - விருப்பத்துக்கு மீறிய தொன்று. அப்படிச் செய்பவர்களை வயிற்றுச் சாமிகள் என்று சொல்ல லாம்.

முகஸ்துதி செய்பவர்கள் எல்லாம் பயன் கருதியே அவ்வாறு செய்கிறார்கள்; கீழ்மகனே அவ்வாறு செய்வான்.

உலகத்தில் இரண்டு விதமான விசித்திர மனிதர்களைப் பார்க்கலாம். ஒரு வகையினர் தம்மிடம் பிறர் என்ன சொன்னாலும் தலையாட்டுவார்கள். தமதென்று ஓர் அபிப்பிராயம் அவர்களுக்கு இராது. மற்றொரு வகையினர், பிறரது மன உணர்ச்சிகளைப் பற்றிச் சற்றேனும் சிந்திக்காமல், எதையும் எதிர்த்துக் கூறுவதே தமது தொழிலாகக் கொண்டிருப்பவர்கள்.

பொய்மை தீயது; இழியதற்குரியது; மெய்மை சிறந்தது; போற்றுதற்கானது.

வாழ்க்கையில் எதிர்ப்படும் துன்பங்களைச் சமாளிப்பதற்கு நண்பர்களே உற்ற துணை. சிறுவயதினரை அவர்கள் விஷமம் செய்யாமல் தடுக்கிறார்கள்; வயது சென்றவர்களுக்கு இதமளிக்கும் துணைவர்களாக இருக்கிறார்கள்; வாழ்வின் வசந்தத்தில் இருப்பவர்களை உயர்ந்த செயல்கள் செய்யுமாறு தூண்டுகிறார்கள்.

தீய குணமுள்ளவர்களுக்கு ஒரு நிலையே கிடையாது; அவர்களுக்கிடையேகூட நட்பு நிலைத்திருக்காது. தீய குணமுள்ளவர்கள் ஒருவரது தீக்குணத்தை மற்றவர் கண்டு மகிழ்ந்துகொண்டு சிறிது காலமே நண்பர்களாக இருப்பார்கள்.

தாராள மனப்பான்மைக்கு முதலில் நமக்கு நீதி மனப்பான்மை வேண்டும். நமது நண்பனுக்குப் பண உதவி செய்வதற்கு முன்பு, நமக்கு உள்ள கடனைத் திருப்பித் தர வேண்டுவதுதான் முறை.

கடந்ததை நினைத்துப் பச்சாத்தாபம் அடைவதற்கான செயல்களையே செய்யாதவன்தான் நல்ல மனிதன்.

நல்ல மனிதர்களின் யோசனைகள் நிலைபெற்றவை; நதிப் பெருக்கைப் போல அவை உயர்ந்து தணிவதில்லை. நேர்மையானதும், தகுதியானதுமானவைகளையே அவர்கள் விரும்புவார்கள்.

கல்வியும் நன்னடத்தையுமே ஒரு மனிதனை நல்லவனாக்குகின்றன.

நற்பண்புக்கும் அறிவாற்றலுக்கும் ஏற்றபடி இருக்கும் நாம் அடையும் சந்தோஷமும்.

இயற்கையும், மரபுகளும், சிந்தனை ஆற்றலும் தான் ஒருவனைச் சிறந்தவனாகவும் பண்புள்ளவனாகவும் ஆக்குகின்றன.

அன்பில் அச்சம் கலந்திருக்க முடியாது; நாம் கண்டு அஞ்சும் மனிதனிடம் நம்மால் அன்பு செலுத்த முடியாது.

ஒருவன் தன்னைப்பற்றியே பேசிக் கொண்டிருப்பதும் தன் செயல்களைத் தானே விளம்பரப்படுத்திக் கொள்ளுவதும், பிறருடையதைத் தன்னுடையது என்று சொல்லிக் கொள்ளுவதும், செருக்கின் அடையாளங்கள்.

எல்லாப் பொருள்களிலும் இறைவன் அம்சம் கலந்திருக்கிறது.

எல்லாவற்றிற்கும் புறம்பானதொரு சக்திதான் அகில அண்டத்தையும் படைத்தது. அவ்வாறு

செய்யும்போது, நேர் எதிரான இயல்புகளை அது இணையுமாறு செய்து அனைவருக்கும் பாதுகாப்பு வழங்கியிருக்கிறது.

கடவுளுக்கு உருவமில்லை. வரம்பிலா வலிமையும் நித்தியத்துவமும், சிறப்பும் பெற்றவர் அவர். நமது கண்களுக்குத் தெரியாத அவரை, அவரது செயல்களின் மூலமே நாம் அறிந்து கொள்கிறோம்.

2. பொருட்பால்

கற்றவனுக்கும், கல்லாதவனுக்கும் இடையே, உயிருள்ளவற்றிற்கும் இல்லாதவற்றிற்கும் உள்ள வித்தியாசம் உண்டு.

சிறுவயதிலிருந்தே கல்விப் பயிற்சி ஆரம்பித்துவிட வேண்டும்; அதுதான் உண்மையான கல்விமுறை.

அரசாங்கம் கல்வி முறையில் மிகுந்த கவனம் செலுத்தவேண்டும். சரியான முறைப்படி கல்வி திட்டத்தை வகுத்து அதைச் செயலாற்ற அதற்குத் திறமை இருக்கவேண்டும்.

மன்னர் ஆட்சியின் திரிந்த உருவமே கொடுங்கோன்மை. மன்னவன் தன் பிரஜைகளின் நலன்களையே எண்ணுவான்; கொடுங்கோலனோ தன்னலமே கருதுவான்.

மனிதன் அரசியல் உணர்ச்சியுள்ள உயிரினம்.

இயற்கையிலேயே சிலர் ஏவப் பிறந்தவர்கள்; சிலர் பணியப் பிறந்தவர்கள்; முன்கூட்டியே வரவிருக்கும் நிகழ்ச்சிகளை அறிந்து கொள்ளும் ஆற்றல் படைத்தவன் ஏவுவான். அத்தகைய திறனின்றி உடலால் உழைக்க மட்டும் இயன்றவர்கள் பணிவார்கள்.

வீடு, மனைவி, ஏரில் பூட்டக் காளை ஆகியவைதான் முதன் முதலில் ஏற்பட்ட குடும்பத் தொகுதி. ஏனெனில் காளை, ஏழைகளின் அடிமை.

பல வேலையாட்களை வைத்திருப்பதைவிட ஒரு சிலரை வைத்துக் கொண்டால்தான் திறம்பட வேலை நடக்கும்.

ஆளுவோரும், ஆளப்படுவோரும், ஒரு விதத்தில் ஒன்றாக இருக்கிறார்கள். வேறொரு அம்சத்தில் வேறுபட்டிருக்கிறார்கள். எனவே அவர்களுக்கான கல்வி முறையிலும் ஒற்றுமையும், வேறுபாடுகளும் அவசியம்.

ஆணையிடக் கற்றுக் கொள்ளுபவன் முதலில் பணிவதற்குப் பழக வேண்டும்.

ஒவ்வொருவனும் தன்னிடத்திலேயே ஓரளவு அன்பு செலுத்திக் கொள்வது இயற்கைதான். ஆனால் இதற்காகத் தன்னலத்தைக் கண்டிக்கக் கூடாது என்று பொருளல்ல. தன்னலம் என்பது தேவைக்கு அதிகமான சுய-காதல்.

ஒரு நாட்டில் வேறுபட்ட இயல்புடைய மக்கள் வசிக்கிறார்கள். இவர்கள் அனைவரையும் ஒருமைப்படுத்துவதற்குக் கல்விமுறைதான் ஏற்ற சாதனம். இதை விடுத்துச் சட்டத்தின் மூலமோ, பழக்கவழக்கங்களின் மூலமோ ஒருமைப் பாட்டைச் சாதித்துவிடலாமென்று நினைப்பது அறிவீனம்.

ஒரு நாட்டின் நீதி, நிர்வாகம் இரண்டிலும் பங்கு கொள்பவன்தான் பிரஜை என்று கூறப்படுவான்.

பிரஜைகளை, மாலுமிகளுக்கு ஒப்பாகச் சொல்லலாம். மாலுமிகளுக்குப் பற்பல வேறுபட்ட அலுவல்கள் உண்டு. ஒருவன் துடுப்புப் போடுவான். மற்றவன் பாய்மரத்தைக் கவனிப்பான்; வேறொருவன் காற்றின் திசையையும், கடலின் நிலைமையையும் கவனித்துக்கொண்டிருப்பான். இவ்வாறு இவர்களுக்குள் தொழில்கள் வேறுபட்டாலும்,

இலட்சியம் ஒன்றுதான்—பத்திரமாகப் பயணத்தை முடித்துக் கொள்ள வேண்டுமென்பது ; அதே போல ஒரு நாட்டின் பிரஜைகளும் வேறுபட்ட இயல்புகளும் தொழில்களும் கொண்டிருந்தாலும் சமுதாயத்தின் நலன் என்பதே அவர்களது பொதுக் குறிக்கோள்.

அரசியல் அதிகாரம் ஒருவனிடத்தில் இருக்கலாம் ; சிலரிடத்தில் இருக்கலாம் ; பலரிடத்திலும் இருக்கலாம். அந்த ஒருவனோ சிலரோ, பலரோ பொது நன்மைக்காகப் பாடுபட்டால் அரசியல் சரிவர நடக்கிறதென்று கொள்ளலாம். ஆனால் அந்த ஒருவனது, அல்லது சிலரது, அல்லது பலரது நன்மை மட்டும் நாடப்பட்டால், நிலைமை மோசமாகிறதென்று பொருள்.

சட்டம் என்பது ஓர் ஒப்பந்தம். பிரஜைகள், ஒருவருக்கொருவர் நீதியாகவும் நேர்மையாகவும் நடந்து கொள்வதாகக் கூறும் உறுதிமொழி இருப்பினும் சட்டம், எல்லா மக்களையும் நல்லவர்களாகவும் நீதியுள்ளவர்களாகவும் ஆக்க முடிவதில்லை !

சட்டமே எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கவேண்டும். அந்த ஸ்தானத்தில் மனிதனை அமர்த்துவது ஒரு வனவிலங்கை அமர்த்துவது போலத்தான். ஏனெனில், மிக நல்ல மனிதர்களையும் உணர்ச்சி வேகம் கெடுத்துவிடும். உணர்ச்சியிலிருந்து விடுபட்ட தர்க்க ரீதியிலான சட்டமே எல்லாவற்றிற்கும் மேலாக இருக்கவேண்டும்.

சட்டங்களை ஒருமுறை வகுத்து எழுதி வைத்தாகிவிட்டதென்றால், அவற்றை மாற்றவே கூடாது என்று பொருளல்ல.

சட்டங்கள் உயர்படியில் வைக்கப்படாத நாடு சுதந்திர நாடல்ல.

சட்டங்களை அடிக்கடி மாற்றிக் கொண்டே இருந்தால் அவற்றின் ஆற்றலும், திறனும் குன்றிவிடும்.

சில உணவுப் பண்டங்களை அப்படியே தனித்து உண்டால் அவை விஷமாக இருக்கும். ஆனால், அவற்றையே நிறைய பிற உணவுப்பண்டங்களுடன் கலந்தால் சரியாகிவிடும். அதைப்போல, தனி நபர்கள் நீதித் தீர்ப்புக் கூற லாயக் கற்றவர்கள்.

முக்கியமான பதவி வகிப்பவர்கள், தமது ஆயுட்காலம் வரையிலும் அந்தப் பதவியில் நீடித்திருக்க வேண்டுமென்ற கொள்கை நல்லதல்ல. ஏனெனில் உடலைப்போலவே, மனமும் முதுமை அடைகிறது.

மேற்குடிப்பிறப்பு எல்லா நாடுகளிலும் கௌரவிக்கப்படும். ஏனெனில் பண்பும் அந்தஸ்தும் வாய்ந்தவர்களது குழந்தைகள் தமது தகப்பனரைப்போல இருப்பார்களென்று எதிர்பார்க்கலாம் உயர்ந்த தன்மை என்பது குடும்பப் பண்பு.

வாழ்க்கைத் தேவைகளை நேரடியாகப் பூர்த்தி செய்துகொள்வதற்கு நாணயங்கள் கருவி அல்ல. கை நிறைய நாணயம் வைத்திருந்தும் வேண்டியது கிடைக்காமலிருப்பதும் உண்டு. ஒரு பொருளை ஒருவன் நிறைய வைத்திருந்தும், அதனால் அவன் விருப்பத்தை நிறைவேற்ற முடியவில்லையானால் அதைச் செல்வம் என்று எப்படிச் சொல்லுவது ?

புரட்சிகளுக்கும், குற்றங்களுக்கும் வறுமைதான் தாய்தந்தை.

கீழ் நிலையிலிருப்பவர்கள், சம நிலையை அடைய வேண்டுமென்று புரட்சி செய்வார்கள். சம நிலையிலிருப்பவர்களோ, உயர்நிலை எய்த வேண்டுமென்று புரட்சி செய்வார்

கள். இதுதான் புரட்சியைத் தோற்றுவிக்கும் மனப்பான்மை.

ஒரு நாட்டில் சுதந்திர விவசாயிகள் அதிகம் இருந்தால் அது மிகச் சிறந்தது; கூலிக்கு வேலை செய்யும் தொழிலாளிகள் அதிகம் இருப்பது மோசமானது.

சிறந்தவர்களும், பண்புள்ளவர்களும் ஒரு சிலரே இருக்கிறார்கள். இதற்கு எதிர்ப்பட்ட இயல்புடையவர்களோ பலர் உண்டு.

தத்தம் தகுதிக்கு ஏற்றபடி, சட்டத்தின் முன் சமத்துவமும் தங்களுடையவற்றை இடையூறின்றி ஆண்டு அனுபவிக்கச் சுதந்திரமும், எந்த நாட்டில் மக்கள் பெற்றிருக்கிறார்களோ, அதுவே நிலைபெற்ற அரசியலமைப்பு.

சட்டத்துக்கு எதிராக எதையுமே செய்யக்கூடாது. ஒரு குடும்பத்தில், சிறு சிறு அதிகப்படிச் செலவுகள் அடிக்கடி செய்யப்பட்டால் அவை சொத்து முழுவதையுமே விழுங்கி விடும். அதைப்போல சட்டத்தைச் சில்லறை விஷயங்களில் மீறினால் அந்த வழக்கம் படிப்படியாக வளர்ந்து கெடுதி விளைக்கும்.

பண்பு, விருப்பம், நேர்மை ஆகிய மூன்றும், அரசியலில் ஈடுபட்டுப் பதவி வகிக்க விரும்புவோருக்குத் தேவையானவை.

சட்டத்தாலன்றி மனித சமுதாயத்தை ஒருசேர ஒருமைப்படுத்தி வைக்க முடியாதென்றால், அதற்குத் தண்டனைகளும் அவசியம் என்றுதான் கொள்ளவேண்டும்.

மக்களின் ஆரோக்கியம் மிக முக்கியமாதலால் குடிநீர் விஷயம் மிகவும் முக்கியமானது···திறமை வாய்ந்த அரசாங்கத்தில்—போதிய அளவு நல்ல தண்ணீர் இல்லாவிட்டால்—குடிநீர் தனியாக மக்களுக்கு அளிக்கப்படவேண்டும்.

பொதுவாக மக்களிடம், மரியாதையைவிட, அச்சமே அதிகமாக ஆதிக்கம் செலுத்துகிறது. மக்கள் தீய செய்கையைச் செய்யாததற்குக் கண்ணிய உணர்ச்சி காரணமல்ல; தண்டனை கிடைக்குமே என்ற அச்சமே காரணம்.

எந்தச் செயலைச் செய்யும்போதும் எந்தக் கருத்தை ஏற்றுக்கொள்ளும்போதும் ஆறு ஊழியர்களைத் துணைக்குக் கூப்பிடு—என்ன? ஏன்? எங்கே? எப்படி? எப்போது? எது? என்ற ஆறு கேள்விகளே அந்த ஊழியர்கள்.

பேரறிஞர்கள் யாருமே, ஒரு சிறிதாவது மூளைக் கலக்கம் இல்லாமல் இருந்ததில்லை.

சுதந்திரம் அன்பைத் தூண்டுகிறது; அன்பு எந்த உழைப்பையும் தள்ளி விடுவதில்லை; உழைப்போ, தான் வேண்டுவனவற்றையெல்லாம் அடைந்து விடுகிறது.

நடந்துவிட்ட செயலொன்றை, நிகழாததாகச் செய்து விடுவதற்குத் தான் கடவுளுக்குக்கூட வலிமை இல்லை என்பது உண்மைதான்!

3 இன்பத்துப்பால்

இன்பத்தின் உண்மையான இயல்பு இன்னதென்று திட்டமாகக் கூற முடியாது. ஒவ்வொருவரும் வெவ்வேறு கருத்துக்கள் கொண்டிருக்கிறார்கள். அதுதவிர ஒரே நபர்கூடச் சமயத்துக்கேற்றபடி விதவிதமான கருத்துக்கள் கொள்ளுவதுண்டு. ஒருவன் உடல்நலம் குன்றியிருக்கும்போது, ஆரோக்கியமே இன்பம் என்று கருதுவான். செல்வ நிலை தாழ்ந்தபோது, செல்வமே இன்பம் என்பான்···

வசந்தம் ஒரே நாளில் மலர்ந்து விடுவதில்லை. அதேபோல, இன்பமும் ஒரே நாளில் கிட்டிவிடாது.

ஆண்மகனை உயர்ந்த இனமாகவும் பெண்களைத் தாழ்ந்த இனமாகவும் இயற்கை அமைத்திருக்கிறது. ஆண்கள் ஆளவேண்டும்; பெண்கள் அடங்கவேண்டும்.

ஆண்களின் துணிவு ஆளுவதில் இருக்கிறது. பெண்களின் துணிவு பணிவதில் இருக்கிறது. மௌனமே பெண்ணின் புகழ்.

கணவனுக்கும் மனைவிக்கும் குடும்பப் பொறுப்பில் வேற்றுமை உண்டு. கணவன் பொருள் தேட வேண்டும்; மனைவி தேடிய பொருளைக் காக்கவேண்டும்.

புத்திசாலியான மனைவி, தன் கணவனது வாழ்க்கை-முறையும், பழக்க-வழக்கங்களுமே தான் பின்பற்றுவதற்கானவை என்றும், அது தான் அவளது வாழ்வு விதிக்கும் சட்டமென்றும் உணர்ந்து கொள்ளுவாள். ஏனெனில் தன் கணவனுடைய வாழ்க்கை முறையைப் பொறுமையுடன் ஏற்றுக்கொண்டால் குடும்பப் பொறுப்புக்களை நிர்வகிப்பது அவளுக்கு எளிதாக இருக்கும். இல்லாவிடில், இருக்காது.

கணவன், குழந்தைகளைப் பெறுவதற்கான வலிமை பெற்றிருந்து, மனைவி அந்தப் பருவத்தைத் தாண்டிவிட்டால்—அல்லது இதற்கு எதிரான நிலைமை ஏற்பட்டால்—சச்சரவுகளும், வேற்றுமைகளும் எழும்.

ஆணும் பெண்ணும் சிறுவயதாக இருக்கையில் குழந்தைகளைப் பெற்றால், அது தக்கதல்ல. எல்லா விலங்கினங்களிலும் வயது முதிராத விலங்குகளின் குட்டிகள் வளர்ச்சியடையாதவையாகவும், பொதுவாகப் பெண் பாலாகவுமே இருக்கும்.

காதலைவிட உடல் ஆரோக்கியமே முக்கியமானது.

பெண்கள் விரைவில் திருமணம் செய்துகொண்டால் இச்சை மிகுந்தவர்களாக இருப்பார்கள், ஆண்களுக்கும், உடல் வளரும் பருவத்தில் மணம் செய்துகொள்வது வளர்ச்சியைக் குறைக்கும்.

பெண்ணைப் பொருளாகவும், ஆண்மகனை உருவப் பண்பாகவும் கொள்ளலாம். பெண் நிலத்திருக்கும் களிமண்ணைப்போல. அதை ஆண்தான் உருவாக்கவேண்டும். அவ்வாறு உருவாக்கப்பட இசைந்து கொடுப்பவள் பெண். ஆணெனும் உருவப்பண்பு பெண்ணெனும் பொருளை முழுதும் ஆட்கொள்ள முடியாதபோதுதான் பெண்மகவு பிறக்கிறது.

திருமண விஷயங்களை இளைஞர்களின் தீர்மானத்துக்கு விட்டுவிடக் கூடாது. அதற்கு அரசாங்க மேற்பார்வையும் கட்டுபாடும் வேண்டும்.

குழந்தைகளிடம், தந்தையரை விடத் தாய்மார்கள்தாம் அதிக வாஞ்சையுடன் இருப்பார்கள். ஏனெனில் குழந்தைகளைப் பெறுகிற கஷ்டம் தாய்களுக்கே தெரியும். தவிர, குழந்தைகள் தங்களுடையவைதான் என்று தாய்மார்களுக்கே அதிக நிச்சயமாகத் தெரியும்.

பெற்றோர்கள், தங்கள் குழந்தைகள் பின்பற்றுவதற்கு எடுத்துக்காட்டாகத் தாங்களே நடந்து வர வேண்டும். இல்லாவிட்டால் குழந்தைகள் பெரியவர்களானதும், தங்கள் பெற்றோரை வெறுப்பதற்கு ஏதுவாகிவிடும்.

கலைச் சொற்களைப் பற்றி

[இந்த நூலில் கையாளப்பட்டிருக்கும் ஆங்கிலக் கலைச்சொற்களும் அவற்றிற்கு நேரான தமிழ்ச் சொற்களும் கீழே தரப்பட்டுள்ளன.]

(i) அறிவு நூல் :

Cause	...	***காரணம்***
Efficient cause	...	காரண மூலம்
Final cause	...	காரண இறுதி ; குறிக்கோள்
Formal cause	...	காரணக் கரு
Material cause	...	காரணப் பொருள்
Class-names	...	வர்க்கப் பெயர்கள்
Contemplation	...	சிந்தனை
Epistemology	...	அறிவு நூல்
Form	...	உருவம் ; உருவப் பண்பு
Happiness	...	ஆனந்த நிலை
Idea	...	கருத்து
Idealism	...	இலட்சிய வாதம்
Knowledge	...	அறிவு
Materialism	...	பொருள் முதல் வாதம்
Matter	...	பொருள்
Metaphysics	...	ஞான நூல்
Movement	...	இயக்கம்
Mysticism	...	மாயா வாதம்
Philosophy	...	தத்துவம்
Pleasure	...	இன்பம்
Purpose	...	குறிக்கோள்
Realism	...	நிதர்சன வாதம்
Substance	...	வஸ்து
Truth	...	உண்மை; மெய்ப்பொருள்

Unity ... ஒருமைப் பாடு
Universals ... அனைத்துலகப் பொருள்கள்
Unmoved mover ... இயங்கா இயக்கி

(ii) விஞ்ஞானம்:

Arithmetic ... எண் கணக்கு
Astronomy ... வான சாஸ்திரம்
Axiom ... ஆதாரத் தேற்றம்
Biology ... உயிர் நூல்
Cube ... கனம்
Cylinder ... உருளை
Element ... மூலப் பொருள்
Geometry ... க்ஷேத்திர கணிதம்
Graduation ... தரவரிசை
Heredity ... பாரம்பரியம்
Inorganic ... அசேதனம்
Latent ... உள்ளுறை
Lung ... காற்றுப்பை
Mathematics ... கணித சாஸ்திரம்
Medicine ... மருத்துவம்
Nervous System ... நரம்பு மண்டலம்
Physics ... பௌதிகம்
Planets ... கிரகங்கள்
Science ... அறிவியற்கலை ; விஞ்ஞானம்
Sex-urge ... பால் உணர்ச்சி
Species ... உயிரினம்
Square ... வர்க்கம்
Sub-Conscious mind ... மறை மனம்
Theorem ... தேற்றம்
Theory of Evolution ... பரிணாமத் தத்துவக் கொள்கை
Universe ... அகில அண்டம்

(iii) அரசியல்:

Aristocracy ... மேன்மக்களாட்சி
Citizenship ... பிரஜா உரிமை

Communism ... பொது உடைமை
Community ... சமுதாயம்
Council of Elders ... ஆன்றோர் சபை
Constitution ... அரசியலமைப்புச் சட்டம்
Constitutional Government ... அரசியலமைப்புச் சட்டப்படியான ஜனநாயகம்
Democracy ... ஜனநாயகம்
Economy ... பொருளாதார அமைப்பு
Equality ... சமத்துவம்
Justice ... நீதி முறை
Middle Class ... மத்தியதர வகுப்பினர்
Monarchy ... மன்னர் ஆட்சி
Oligarchy ... ஒரு சிலர் ஆட்சி
Plutocracy ... செல்வர் ஆட்சி
Political Philosophy ... அரசியல் தத்துவம்
Public Education ... பொதுக் கல்வி முறை
Rights ... ***உரிமைகள்***
  Absolute rights ... வரம்பிலா உரிமைகள்
  Civil rights ... குடிமை உரிமைகள்
  Fundamental rights ... ஆதார உரிமைகள்
State ... ராஜ்யம் ; நாடு
City state ... நகர ராஜ்யம்
Welfare state ... க்ஷேமநல ராஜ்யம்
Totalitarianism ... எதேச்சாதிகார ஆட்சி முறை
Tyranny ... கொடுங்கோன்மை

(iv) தர்க்க நூல்:

Assumption ... அனுமானம்
Deduction ... பகுப்பு முறை
Definition ... வரையறை
Dialectic ... தர்க்க ஆய்வு முறை
Induction ... தொகுப்பு முறை
Instrument ... கருவி
Logic ... தர்க்க நூல்

Premiss	...	கோட்பாடு
Major Premiss	...	முதற் கோள்
Minor Premiss	...	இரண்டாம் கோள்
Syllogism	...	தர்க்கயூகக் கொள்கை
Term	...	உருபு
Middle term	...	நடு உருபு
Common term	...	பொது உருபு

(v) கலை இயல்:

Comedy	...	இன்பியல் நாடகம்
Creative faculty	...	ஆக்கும் திறன்
Criticism	...	விமர்சனம்
Culture	...	கலாசாரம்
Intellectual faculty	...	அறிவாற்றல்
Life force	...	உயிராற்றல்
Literary criticism	...	இலக்கிய விமர்சனம் ; திறனாய்வு
Mental faculty	...	மன ஆற்றல்
Poetic justice	...	கவித்துவ நீதி
Professor	...	பேராசிரியர்
Reformists	...	மதச் சீர்திருத்த இயக்கத்தினர்
Renaissance Movement	...	மறுமலர்ச்சி இயக்கம்
Super-man	...	உயர்நிலை மனிதன்
Tragedy	...	துன்பியல் நாடகம்

சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், அவருடைய சிந்தனைகளும், அவர் எழுதிய நூல்களின் சுருக்கங்களும், பொன்மொழிகளும் ஏராளமான விளக்கப் படங்களும் அடங்கிய நூல் வரிசை.]

1. டார்வின்

'குரங்கினமும் மனித இனமும் ஒரு பொதுவான மூதாதை இனத்திலிருந்து உண்டாயின' எனக் கூறிச் சிந்தனைப் புரட்சி செய்து விஞ்ஞான ரீதியாக ஆராய்ந்தார் டார்வின்.

— ஜெகசிற்பியன் எழுதியது

2. பிளேட்டோ

புரட்சிகரமான சிந்தனைகள் அனைத்திற்கும் மூலவேர் என உலகம் முழுதும் கருதப் படுபவர் பிளேட்டோ.

— அரு. ராமநாதன் எழுதியது

3. கார்ல் மார்க்ஸ்

பொருளாதார விடுதலையே மனித குல மாண்பு என பொதுவுடைமைப் பொருளாதாரப் புரட்சி செய்தவர் மார்க்ஸ்.

— ரா. தணலன் எழுதியது

4. ரூஸோ

பிரெஞ்சுப் புரட்சிக்கு மூல காரணமானவர் எனவும், சுதந்திரத்தின் தந்தை எனவும் புதுமையைச் சிருஷ்டிக்கப் பிறந்தவர் எனவும் உலகம் போற்றிப் புகழும் சிந்தனையாளர் ரூஸோ.

— கோமேதகவேலு எழுதியது

5. பெஞ்சமின் பிராங்ளின்

அமெரிக்கக் குடியேற்ற நாடுகளின் சுதந்திரப் புரட்சியின் போது விடிவெள்ளியாக விளங்கியவர் பெஞ்சமின் பிராங்ளின். தனி மனிதனின் முன்னேற்றத்தையும் தேச முன்னேற்றத்தையும் பற்றிச் சிந்தித்தவர்.

மார்கரெட் கசின்ஸ்—அரு. ராமநாதன் எழுதியது

6. அரிஸ்டாடில்

[சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிரேக்க தத்துவ ஞானியான அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கி வருகின்றன. சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.]

—கிருஷ்ணன்பாலா எழுதியது

ஒவ்வொன்றும் விலை ரூபாய் 1—4—0

புதுமுறைத் துப்பறியும் நாவல்கள்

துப்பறியும் காதலி 'மேதாவி' எழுதியது

[குறும்புக்காரியான லீலா பயங்கரச் சதிக்கூட்டத்தைத் துப்பறியப் புறப்படுகிறுள். ராயபுரம் கடற்கரையில் அடையாளம் தெரியாத பெண்ணின் பிரேதம் ஒன்று மிதக்கிறது! கடைசியில்...?] ரூ. 1-8-0

கொலைப்பித்தன் வேலவன் எழுதியது

[இரண்டு ரகக் காதலிகளுக்கிடையே திண்டாடும் கதாநாயகனுக்காகப் பன்னிரண்டு வருஷங்களுக்குமுன் நடந்த கொலையை மறு விசாரணை செய்து பிரமிக்க வைக்கிறுர் துப்பறியும் கேசவன்] ரூ. 1-4-0

பேய் வீடு சிரஞ்சீவி எழுதியது

[மாலதியின் கணவன் காட்டுப்பாதையில் ஒரு சூனியக்காரக் கிழவியைச் சந்திக்கிறுன் — ஒரு பேய் வீட்டிற்குள் மாலதியும் துப்பறியும் ராஜாமணியும் அகப்பட்டுக் கொள்கிறுர்கள். முடிவு என்ன?] ரூ. 1-8-0

ரகசிய அறை 'மேதாவி' எழுதியது

[காதலுக்காக நடிகையாக மாறும் மனோரமாவிற்கு இரு பயமுறுத்தல் கடிதங்கள் வருகின்றன. ஒன்றை எழுதியவன் கொலைப்படுகிறுன், இன்னொருவன் அவளைத் தூக்கிச் செல்ல முயல்கிறுன்.] ரூ. 1-4-0

ரத்தப் பசி சிரஞ்சீவி எழுதியது

[சிறைஇருளுக்குள்ளே, இராவணன் முடி, மாயா ஜாலத் திருடன் மாலி முதலிய பயங்கர அத்தியாயங்களை உடையது.] ரூ. 1-4-0

மர்மத் தீவு சிரஞ்சீவி எழுதியது

[மனிதவாடை தட்டுப்படாத மாயத் தீவிலே, மர்மக்குரல், மாய மனிதன், குறளி வித்தை, குமரி ஆசை, இவற்றிடையே அடுத்தடுத்து மர்மக்கொலைகள் நிகழ்கின்றன] ரூ. 1-4-0

காதலன் கொலை வழக்கு சிரஞ்சீவி எழுதியது

[தத்ரூபமான கோர்ட் நடவடிக்கைகளுள்ள முதல் பாகமும் துப்பறிபவரின் புலன் விசாரணையுள்ள இரண்டாவது பாகமும் அடங்கியது] ரூ. 1-4-0

இரட்டைக் கொலை ஜெகசிற்பியன் எழுதியது

['அபாய அறிவிப்பு' பத்திரிகாசிரியர் படுகொலை செய்யப் பட்ட மர்மத்தின் முடிவு திடுக்கிடக்கூடியது. யாரும் எதிர்பார்க்க முடியாதது] ரூ. 1-4-0

துப்பறியும் ராஜு மேதாவி எழுதியது

[அக்காள் மரணத்தைக் கண்டுபிடிக்கப் பிராணபத்தான, மர்மங்களிலெல்லாம் புகுந்து புறப்படுகிறுன் தம்பி ராஜு] ரூ. 1-0-0

மர்மக் கொலை சிரஞ்சீவி எழுதியது

[பலரின் நெஞ்சைக் கவர்ந்த மூன்ருவது பதிப்பு] ரூ. 1-0-0

நீதி மயக்கம் சிரஞ்சீவி எழுதியது

[கணவன் கொலையுண்டு கிடந்தான். காதலன் குற்றவாளியாகக் கருதப்பட்டான். ஆனல் முடிவு என்ன? இரண்டாம் பதிப்பு] ரூ. 1-0-0

சுவையான புத்தகங்கள்

சிந்தனையாளர் வரிசை

[ஒவ்வொரு சிந்தனையாளரின் வரலாறும், நூற் சுருக்கங்களும் சிந்தனைகளும், சித்திரங்களும் அடங்கிய நூல் வரிசை ; ஒவ்வொன்றும் விலை ரூ. 1-4-0]

1. டார்வின்
   (ஜெகசிற்பியன்)
2. பிளேட்டோ
   (அரு. ராமநாதன்)
3. கார்ல் மார்க்ஸ்
   (ரா. தணலன்)
4. ரூஸோ
   (கோமேதகவேலு)
5. பெஞ்சமின் பிராங்ளின்
   (அரு. ராமநாதன்)

அரிஸ்டாடில்
(கிருஷ்ணன் பாலா)

ஆராய்ச்சி :

1. ரேடியோ நாடகம் எழுதுவது எப்படி?
2. நீங்கள் உயரமாக வளர்வது எப்படி?
3. இலாகிரிப் பொருள்களா? எமதூதர்களா?

ஒவ்வொன்றும் விலை. ரூ. 1-8-0

4. புதுமணத் தம்பதிகளுக்கு விலை ரூ. 2-4-0

கதைக் களஞ்சியங்கள் :

1. எதிர்வீட்டு ஜன்னல்
   (காதல் நாவல்) ரூ. 1-0-0
2. சிலந்திக் கூடு
   (பாலர் நாவல்) ரூ. 1-0-0
3. ஆசை வெள்ளம்
   ('சுகி'யின் நாவல்)
4. உறவு முள்
   (ஜெகசிற்பியன் நாவல்)

ஒவ்வொன்றும் ரூ. 0-12-0

5. நானாவின் தாய்
   (எமிலிஜோலாவின் நாவல்) ரூ. 4-0-0

அரு. ராமநாதன் கதைகள்

1. கதாநாயகி
2. அம்பிகாபதி

(ஒவ்வொன்றும் ரூ. 1-4-0)

பொன்மொழிகள் வரிசை

1. ஔவையார்
2. விவேகசிந்தாமணி
3. பைபிள்
4. குர்ஆன்
5. பஞ்சதந்திரம்
6. புத்தர்

(ஒவ்வொன்றும் 0-8-0)

பிரேமா பிரசுரம் :: சென்னை-24

3362

பிரேமா

பிரசுரம்

உள்ளே

முதற் பகுதி

சிந்தனை ஏன் ?
பூர்வகதை
வாழ்க்கை வரலாறு

இரண்டாம் பகுதி

[சிந்தனை விளக்கமும் நூற்சுருக்கங்களும்]
பாகம் ஒன்று : அறிவியல்
பாகம் இரண்டு : ஞான இயல்
பாகம் மூன்று : ஒழுக்கவியல்
பாகம் நான்கு : அரசியல்
பாகம் ஐந்து : தர்க்கவியல்
பாகம் ஆறு : கலை இயல்
பாகம் எழு : பொது விமர்சனம்
அடிஸ்டாடிலின் மணிமொழிகள்
கலைச்சொற்களைப்பற்றி

இந்த நூல்

சுமார் 2400 ஆண்டுகளுக்கு முன் தோன்றிய கிரேக்க ஞானியான அரிஸ்டாடிலின் சிந்தனைகள் உலக வளர்ச்சிக்கு உரமாக விளங்கின. நவீன சிந்தனையாளர்கள் உட்பட அனைவருக்குமே அவர் துருவ நட்சத்திரமாக விளங்கி வருகிறார். சிந்தனை ஏன் என்பதைப் பற்றியும் சிந்தித்த மாபெரும் சிந்தனையாளர் அவர்.................

அரிஸ்டாடிலின் வாழ்க்கை வரலாறு; அவர் எழுதிய அறிவியல், ஞான இயல், ஒழுக்க இயல், அரசியல், தர்க்கவியல், கலை இயல் முதலான நூல்களின் சுருக்கங்களும் விமர்சனங்களும்; அவற்றிற்கு இணையாக ஆராயப்படும் திருவள்ளுவர், ஷா, ரஸ்ஸல் முதலான பல்வேறு சிந்தனையாளர்களின் கருத்துகள்; அறத்துப்பால், பொருட்பால், இன்பத்துப்பால் என மூன்று தலைப்புகளின் கீழ் திரட்டித் தரப்படும் அரிஸ்டாடிலின் மணிமொழிகள்; கலைச்சொற்களைப் பற்றி — இவையனைத்தும் ஒருங்கேயுள்ள அருமையான நூல்.

JACKET PRINTED AT THE ASIAN PRINTERS, MADRAS-5.